எஸ். வையாபுரிப் பிள்ளை

காவிய காலம்

தமிழ்ப் புத்தகாலயம்

தமிழ் இலக்கிய சரிதத்தில்

காவிய காலம்

பேராசிரியர் :
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் 1926-1936
சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் 1936-1946
திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் 1951-1954

தமிழ்ப் புத்தகாலயம்
திருவல்லிக்கேணி : : சென்னை-5

முதற்பதிப்பு : ஜனவரி 1957

விலை ரூ. 5 8 0

தமிழன் அச்சகம், பாலாசிநகர், சென்னை-14

பதிப்பகத்தார் குறிப்பு

இந்தக் "காவிய காலம்" என்ற நூல் பேராசிரியரவர்களின் சிறந்த சிருஷ்டிகளுள் ஒன்று. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தாம் செய்து வந்துள்ள தமிழ் ஆராய்ச்சிகளின் பயனையும், தாம் கற்றுத் தெளிந்த உண்மைகளையும் இந் நூலிலே திரட்டித் தந்துள்ளார்கள் பேராசிரியரவர்கள். இந் நூலைக் கற்பதின் மூலம் நமது சந்தேகங்களில் பல தெளிவடையும். நாம் விஷயங்களைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்கவும், இலக்கியத்தின் நெறிகளையும்—வளர்ச்சியையும் புரிந்துகொள்ளவும் இந் நூல் பேருதவி புரியும்.

இந் நூல் 3-4 வருடங்களுக்கு முன்பே வெளிவந்திருக்க வேண்டும். பேராசிரியரவர்கள் மூன்று ஆண்டுக்காலம் திருவனந்தபுரத்தில் தங்க நேர்ந்தமையாலும், திருவனந்தையிலிருந்து வந்த பிறகு அவர்கள் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டமையாலும், நூல் அச்சாகாமலேயே நின்று விட்டது. இப்போது அவர்கள் குறிப்புகள் கொடுத்துத் திருத்தி வைத்துள்ள பிரதிப்படி அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். பேராசிரியரவர்களின்

மேற்பார்வையிலேயே அச்சாகியிருப்பின் இன்னும் பல திருத்தங்களை இந்நூல் பெற்றிருத்தல் கூடும்.

இந்நூலின் அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கி உதவிய பேராசிரியரவர்களின் மருகர் திரு எஸ். எஸ். ராமசாமிப்பிள்ளையவர்கட்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி.

தமிழ்ப் புத்தகாலயத்தார்

பொருளடக்கம்

அடியார்க்கு நல்லார் கருத்து; சுமார் கி. பி. 800; பௌத்த காவியம்; இலக்கியச் சுவை.

கலியாண கதை.

இலக்கிய நெறியில் சமயச் சச்சரவு இன்மை; திவாகரத்திற் கண்ட இராமாயணமும் பாரதமும்; சுமார் கி. பி. 850.

தகடூர் யாத்திரை: காவியம்; காலம்; இயல்பு; தென்னாட்டுப் பாரதம்; இலக்கியச் சுவை.

சைன புராணக் கதைகள்; சிந்தாமணி; காலம் சுமார் கி. பி. 930; சூளாமணி; காலம் சுமார் கி. பி. 950.

சிந்தாமணி: வடமொழி மூலம்; சிறப்புக்கள்; முந்து நூலாட்சி; பெரு நலன்கள்; இலக்கிய மதிப்பு.

சூளாமணி: ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று? அரங்கேறிய காலமும் இடமும்; இலக்கியச் சுவை; நல்ல பதிப்பின் தேவை.

குண்டலகேசி: இலக்கியம் பற்றிப் பௌத்த சைனப் போட்டி; காப்பியக் கதை; வடமொழி மூலம்; ஆசிரியர்; காவியத்தின் இயல்பு; இதனைச் சார்ந்த செய்யுட்கள்; பிரதி கிடைக்கலாம்; முயற்சி.

வளையாபதி: கதை தெரியமாட்டாது; வைசிய புராண கதை அன்று; ஒரு சைன காவியம்; நூலைச் சார்ந்த செய்யுட்கள்; காலம் கி. பி. 950; இலக்கியச் சுவை.

தருக்க காவியம்: நீலகேசித் தெருட்டு; கதை; தருக்க நெறி; காலம்; சக்கரவர்த்தி நயினார் துணிபு; சான்றுகள், சுமார் கி. பி. 1000; பிற தருக்க காவியங்கள்; காலகேசி; பிங்கலகேசி; அஞ்சனகேசி; சைனச் சார்பின போலும்.

சாசனத்தால் அறியும் சில காவியங்கள்: ஸ்ரீ ராஜராஜ விஜயம்; கி. பி. 11-ம் நூற்றாண்டின் முற்பகுதி;

நூலின் இயல்பு; ராஜராஜேஸ்வர நாடகம்; இயல்பு; வீரணுக்க விஜயம்; குலோத்துங்க சோழன் சரிதை; சுமார் கி. பி. 1080; சாசனம்; அஷ்டாதச புராணம், சாசனம். கன்னிவனப் புராணம்; சாசனம்.

இராமாயணம்: யாப்.வி. குறிக்கும் பஃறொடை வெண்பா; வீரசோழியவுரை குறிக்கும் இராமாயண வெண்பா; சென்னை அரசாங்க நூல் நிலேபத்துள்ள இராமாயண வெண்பா.

புராணசாகரம்: இயல்பு; காலம் கி. பி. 1125.

இடையறவுக் காலம், பிற முயற்சிகள்: இலக்கணங்கள், உரைகள்; யாப்பருங்கலம்; காரிகை; இவற்றின் உரைகள்; களவியலுரை; காலம்; வீரசோழியம்; தண்டியலங்காரம்; நேமிநாதம்; வயிரமேக விருத்தி.

சிற்றிலக்கியங்கள்: கலிங்கத்துப் பரணி; மூவருலா.

தத்துவ நூல்கள்: சித்தாந்த சாஸ்திரங்கள்—இவை காவியத்திற்கு உரமாக உதவின.

பக்தி: சமயப் பிரசாரம்; மடங்கள்.

பெரிய புராணம்: ஆசிரியர்; காலம்; இலக்கியச் சான்றுகள்; சிலாசாசனச் சான்றுகள்; சுமார் கி. பி. 1140; சைவ சமயச் சரித்திரத்திற்கு இன்றியமையாதது; ஆசிரியர் சிறந்த சரிதகாரர்; இலக்கிய மதிப்பு; இலக்கியச் சுவை; சிந்தாமணி பற்றிய கதை உண்மையா? இப் புராணமும் கம்பராமாயணமும்.

கம்ப-ராமாயணம்: நூற் பெயர்; காலம் கி. பி. 1178; இதற்கும் வால்மீகி ராமாயணத்திற்கும் உள்ள தொடர்பு; ஒரு புதிய சிருஷ்டி; தமிழ்க் கவித்துவத்தின் பேரெல்லை; ஆரியப் பண்பாடும், தமிழ்ப் பண்பாடும் கலந்ததின் விளைவு.

அருணிலை விசாகன் பாரதம்; கி. பி. 13-ம் நூற்றாண்டின் தொடக்கம்.

முன்னுரை

நன்றி

திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையின் ஆதரவிலே இந்தத் தொடர்-சொற்பொழிவை* ஆற்றுமாறு என்னை நியமித்த ஸர்வகலாசாலையாருக்கு எனது நன்றியைத் தெரிவிப்பது எனது முதற் கடமை. இந்நியமனத்தை ஒரு பெருங் கௌரவமாகப் போற்றுகிறேன். தமிழ்மொழி பற்றியும், தமிழ்-இலக்கியம் பற்றியும் ஆராய்வதே நான் இளமை தொட்டுச் செய்துவந்த செயல். சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ்-லெக்ஸிகன் பதிப்பாசிரியனாகவும், பின்னர் தமிழ் ஆராய்ச்சித் துறையில் தலைமையாசிரியனாகவும் இருந்து பணியாற்றியதும் நான் இளமையில் செய்துவந்த ஆராய்ச்சியின் தொடர்ச்சியேயாம். ஸர்வகலாசாலையினின்றும் ஓய்வு எடுத்துக் கொண்ட பின்பும் நான் வெகுகாலமாகச் செய்து வந்த ஆராய்ச்சியையே நிகழ்த்தி வருகின்றேன். ஆராய்ச்சிகளின் வகைகளை யெல்லாம், நாகபுரியில் 1946-ல் நிகழ்ந்த கீழைக்கலை மகாநாட்டில் திராவிட மொழிப் பகுதியில் நான் தலைமை தாங்கிய பொழுது ஆற்றிய எனது தலைமையுரையில் விவரித்துள்ளேன். அது நூல் வடிவில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சியின் வகைகளில் ஒன்றை இப்பொழுது சொற்பொழிவு முறையில் வெளியிடுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்த திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையாருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையின் ஆதரவில் 1949 ஜனுவரி, 24 முதல் 29 வரையில் நிகழ்ந்த சொற்பொழிவுகள்.

இந்நியமனம் எனக்கு மட்டும் செய்த ஒரு கௌரவம் என்ற அளவில் நான் கருதவில்லை. இந்நாடு இப்பொழுது மலையாளமும் தமிழும் வழங்கும் ஒரு பிரதேசம். ஒருகாலத்தில் தமிழ் மட்டுமே இப்பிரதேசத்தில் வழங்கி வந்தது. பின் தோன்றிய மலையாள மொழியை பிரம்மாண்ட புராணத்தில் ராமப்பணிக்கர் 'தமிழ்' என்றே பெயரிட்டழைக்கிறார். எனினும், சென்ற ஒரு நூற்றாண்டாக, தமிழ் இங்கே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. 'தமிழ்' என்றால் அந்நிய மொழி என்ற வேறுபாட்டுணர்ச்சி தலையெடுத்துவருகிறது. அதுமட்டும் அன்று; 'பகைமொழி' என்றுகூடக் கருதத் தொடங்கி விட்டார்கள். இவ்வுணர்ச்சி இங்குள்ள அரசியலார் ஒரு சிலரிடத்தும் பரவி வருவது வருந்தத்தக்கது. இம்மொழிப் பகைமை சமுதாயப் பகைமையாக விளைந்துவிடலாம் என்ற அச்சமும் எனக்கு உண்டு. உத்தியோக நியமன விஷயத்தில் இப் பகைமையை எளிதிற் காணுதல் கூடும்.

திருவிதாங்கூரில் தமிழ்

ஆனால், இந் நாட்டினை யாளும் மாட்சிமை தங்கிய மன்னரவர்களுக்கு இரண்டு மொழிகளும் இரண்டு கண்களே யாகும். இரண்டையும் ஒருப்போலப் பாதுகாத்து வருகிறார்கள். இது தர்ம ராஜ்யம். தர்மம் என்பதற்குக் கடமை என்பது ஒரு பொருளாகும். குடி-ஜனங்களுக்குத் தாய் போன்றவர்கள் அரசர்கள். அரசனது பாதுகாப்பின்றி, பகைவரால் துன்புற்று வருந்தும் நாட்டை,

அரசினரின் கடமை

> தாயில் தூவாக் குழவி போல
> ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடு
>
> (புறம். 4)

என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த புலவரொரு

வர் வருந்தி இரங்குகின்றூர். தாய் போன்ற அரசருக்கு லட்சியமூர்த்தியாய் விளங்குபவன் திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீ இராமபிரான். இவனைக் குறித்து,

தருமமும் ஞானமும தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள்நெறி யெய்திச்சென் றடிவணங்கினான்.

(விபீடண. 50)

என்று கம்பன் கூறுகிறான். இத் தர்ம ராஜ்யத்தை ஆண்டு வருகின்ற நம் அரசரை நாம் திருமாலின் பிரதிநிதியாகக் கொண்டு போற்றக் கடமைப்பட்டுள்ளோம். நமது முன்னோர்கள் அரசர்களைத் திருமால் எனவே கொண்டு பூஜித்து வந்திருக்கிறார்கள். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்' என்ற திருவாய்மொழி (4, 4, 8) இதற்குச் சான்று. அரசரும் தாம் சரீரமாகவும், தம் குடிகள் உயிராகவும் கொண்டு ஆட்சிபுரியக் கடமைப்பட்டுள்ளார்கள். இவ் வியல்பினையே,

வையம் மன்னுயி ராக அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு

(மந்தரை. 17)

என்று கம்பன் குறித்திருக்கிறான். இங்கே குறித்த உயர்ந்த லட்சியத்தினின்றும் ஒருபொழுதும் தவறாத நம் மன்னர் அவர் கண்களுள் ஒன்றாகிய தமிழ்மொழியை நன்கு போற்றிவருவது வியப்பாகமாட்டாது. 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்ற முதுமொழியைச் சிறிதும் கைநெகிழவிடாது, அரசர் திருவுள்ளத்தையே பின்பற்றி, அரசியல் ஸ்தாபனங்கள் முதலியன தமிழைப்போற்றும் கடப்பாடு உடையன. ஆகவே நான் மேற்கொண்டது போன்ற பணிகளை நியமிப்பது தமிழ்மொழிக்குச் செய்துள்ள ஒரு கௌரவம் என்றே கருதுகின்றேன்.

சிறப்பாக, நமது மன்னரது ஆட்சிக்குக் கீழடங்கிய நிலயங்களுள் மிகமுக்கியமானது இந்த ஸர்வகலாசாலை.

ஸர்வகலாசாலை யும் தமிழும்

இது உயர்தரக் கல்வியையும் ஆராய்ச்சியையும் கலைகளையும் வளர்க்கும் பெருங் கடமையை மேற்கொண்டது; எல்லாவற்றையும் அறிவின் வளர்ச்சி என்ற ஒரு நோக்கங்கொண்டே நோக்கும் இயல்பினது.

> அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
> என்உடைய ரேனும் இலர்

(குறள், 430)

என்ற வள்ளுவரது பொன்மொழிப் பொருளையே ஸர்வகலாசாலை தனது லட்சியமாகவுடையது. ஒரு தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் இருக்குமானால், ஒரு குழந்தைக்கு ஒரு மார்பினின்று நீரும் பிறிதொரு குழந்தைக்கு மறு மார்பினின்று பாலும் சுரந்து ஊட்டுவது இயல்பன்று.

> முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்
> இறைதிரியான் நேரொக்கல் வேண்டும்—முறைதிரிந்து
> நேரொழுகா னாயின் அதுவாம் ஒருபக்கம்
> நீரொழுகிப் பாலொழுகு மாறு.

(பழமொழி, தி.செ. 243)

என்பது நமது பண்டைப் பழமொழி. இச்செய்யுள் கூறுமாறு நடுவுநிலைமையே தனக்குச் சிறந்த ஆபரணமாக அணிந்தது இந்த ஸர்வகலாசாலை. ஆகவே, தமது மலையாள மொழியைப் போலவே, தமிழையும் போற்றவேண்டும் என்ற நேர்மையான நோக்கோடு, தமிழ்ச் சொற்பொழிவுகளை ஆண்டுதோறும் நிகழ்த்துவிக்கக் கருதியுள்ளது. இங்ஙனம் நமது தாய்மொழியைக் கௌரவம் செய்ததற்காக இந்த ஸர்வகலாசாலைக்குத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் மிகுந்த நன்றியுடையரா யிருக்கின்றோம்.

எனக்கு என்றும் மகிழ்ச்சி விளைத்துவரும் ஒரு தொடர்பு ஸர்வகலாசாலை நிலைநிற்கும் இந்நகரத்திற்கும் எனக்கும் உண்டு. அதனையும் இங்கே எடுத்துக்கூறும் கடப்பாடு உடையேன். நான் சட்டப் பரிக்ஷையில் 1914-ல் தேறியது இங்குள்ள சட்டக் கல்லூரியிலிருந்துதான். தேறிய பிற்பாடு, இங்கே உயர்தர நீதிமன்றத்தில் வழக்கறிஞனாகவும் சில ஆண்டுகள் இருந்தேன். அவ்வாறு இருந்த காலத்தில்தான் எனது தமிழ்-ஆராய்ச்சியைத் தொடங்கினேன். 1900-ல் தோன்றி, மிகச் சிறந்த மாதப் பத்திரிகையாக விளங்கி வரும் 'செந்தமிழில்' எனது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவரலாயின. தமிழ்நாட்டுப் பெரும் பேராசிரியர் என்று கூறத் தகும் ஸ்ரீ ரா. ராகவையங்கார் முதலானோர்களின் அன்புக்குப் பாத்திரமானேன். இப்பொழுது தமிழ் நாட்டில் ஈடும் எடுப்புமற்ற பெரும் கவிஞராக ஒளிர்ந்து வரும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் நட்பும் கிடைக்கப் பெற்றேன். எனக்குப் பெருந்துணையாக இருந்தவர்கள் திருவாளர் கே. என். சிவராஜபிள்ளை, கே. என். குமரேசபிள்ளை, தி. லட்சுமண பிள்ளை முதலானோர்கள். இலக்கிய முயற்சியில் என்னை ஊக்கிவந்தவர் எனது பள்ளித் தோழர் ஸ்ரீ கே. ஜி. சங்கர ஐயர். ஆராய்ச்சிகளுக்கு நிலைக்களமாகி விளங்கிய இடம் புத்தன்சந்தையில் சைவப் பிரகாச சபையாகும். இச் சபையில் வைத்துத்தான் தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியைக் காணும் பேறு எனக்குக் கிடைத்தது. மலையாளவுலகிற் பெரியோராகிய திவான்பகதூர் கோவிந்தப் பிள்ளை அவர்களும், எம். ஸி. நாராயண பிள்ளை அவர்களும் இளைஞனாயிருந்த என்னோடு நட்புரிமை கொண்டு மிகவும் பாராட்டி ஊக்கிவந்தார்கள். திருக்குறள் ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வந்தது. இடையிடையே வேறு வகை இலக்கிய இலக்கண ஆராய்ச்சி

நகரத்தொடர்பு

களும் நிகழ்ந்தன. ஆராய்ச்சிகளும் விவாதங்களும் நிகழும் காலங்களில் மௌன சாட்சியாக விளங்கியவர்கள் ஸ்ரீ பி. எஸ். நடராஜ பிள்ளை, ஸ்ரீ எஸ். குளத்தூரான் முதலிய நண்பர்கள். என் கட்டுரைகள் தமிழ் நாட்டிலுள்ள தமிழறிஞர்கள் பலர்க்கும் என்னை அறிமுகம் செய்தன. நான் முதன்முதலாக நன்கு ஆராய்ந்து உரையுடன் வெளியிட்ட நூல், இக்கலாசாலையில் பேராசிரியராய் விளங்கி வந்த சுந்தரம் பிள்ளையவர்களது மனோன்மணீய நாடகமாகும். இதனைப் பதிப்பிக்கும் காலத்து உடனிருந்து உதவியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

இங்ஙனமாக, நான் ஊக்கத்தோடு தமிழ்-ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதும், தமிழ்-நூல்களைப் பதிப்பிடத் தொடங்கியதும், தமிழ்-அறிஞர் உலகில் ஓர் இடம் பெற்றுக்கொள்ளத் தொடங்கியதும் இந்தத் திருவனந்தபுரத்தில் வைத்துத்தான். தமிழ்-ஆராய்ச்சியிலும், சரித ஆராய்ச்சியிலும் பெரும் புகழ் பெற்று விளங்கிய நீதிபதி ஸ்ரீ கே. ஜி. சேஷையர் அவர்கள், 'நீ காலேஜ்களிலேனும் ஸர்வகலாசாலையிலேனும் தமிழாசிரியனாக அமர்ந்தால் நலமாகும்' என்று என்னிடம் பல முறை வற்புறுத்திக் கூறி ஆசிமொழிந்தார்கள். ஒருவரும் எதிர்பாராத விதமாக, அந்த ஆசி மொழி உண்மையாகப் பலித்துவிட்டதை அவர்கள் உயிர்வாழ்ந்த காலத்தேயே தெரிந்து பெரிதும் மகிழ்ந்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளையெல்லாம் மீண்டும் என் மனத்திரையில் காணும்போது என் உணர்ச்சிகளை வசப்படுத்த முடியவில்லை. அக்காலத்தில் என்னுடனிருந்த நண்பர்களிற் சிலர் இப்பொழுது மறைந்துவிட்டார்கள். சிலர் தூரதேசத்தில் உள்ளனர். இவர்களை எண்ணும்போது என் உள்ளம் மிகவும் கனிவுறுகிறது. திருவனந்தபுரத்தோடு எனக்கு அன்று இருந்த தொடர்பை எத்தனை

பெரிதாக நான் கருதியுள்ளேன் என்பது இப்பொழுது உங்களுக்குச் சிறிது புலனுகலாம். இந்த ஸந்தர்ப்பத்தில் அதனை மிக்க அன்போடும் நன்றியோடும் நினைவுறுத்திக் கொள்கின்றேன்.

சொற்பொழிவின் வரலாறு

இத்தொடர்பு, இன்று இந்த ஸர்வகலாசாலையார் எனக்கு அளித்துள்ள கௌரவத்தால் இன்னும் வலியுறுகின்றது; சிறிதும் நெகிழ்ந்து விட்டு விலகாதபடி, என்னைப் பொற்சங்கிலியால் பிணித்துவிடுகின்றது. சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்னுல், தத்துவப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் அறிவு வளர்ச்சி குறித்து அரசினர் ஆதரவில் பொதுப் பிரசங்க முறையொன்று நிறுவினுர்கள். அதிற் பலபல ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சுந்தரம் பிள்ளையவர்களே விஞ்ஞானங்களின் பாகுபாடு என்ற பொருள்பற்றிச் சில சொற்பொழிவுகள் ஆற்றி, அவற்றைத் திரட்டி 'நூற்ருகை விளக்கம்' என்ற ஓர் நூலாக வெளியிட்டனர். இப்பொதுப் பிரசங்க முறையும் சில காலம் நடைபெற்றுப் பின்னர் நின்றுவிட்டது. இதற்குப் பின் இன்றுவரை திருவிதாங்கூர் அரசினர் ஆதரவில் தமிழ்ச்சொற்பொழிவுகள் நிகழ்ந்தனவாகத் தெரியவில்லை. இவற்றை நிகழ்த்துதற்குரிய பொறுப்பு இப்பொழுது திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையார்பால் ஆகிவிட்டது. ஸர்வகலாசாலை தோன்றிச் சில ஆண்டுகள் கழிந்துவிட்டபோதிலும், தமிழ் பற்றிய அளவில் இன்று வரை இதன் அதிகாரிகள் சொற்பொழிவுக்குரிய ஏற்பாடுகள் செய்யவில்லை. நான் இப்போது ஆற்றுவதுதான் ஸர்வகலாசாலையார் முதன் முறையாக ஏற்படுத்தியுள்ள தொடர்-சொற்பொழிவாகும். எனது உறவினராகிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் தொடங்கப்பெற்றுப் பின் நின்றுவிட்ட தமிழ்ச் சொற்

பொழிவுகளைச் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தொடங்கும்படி எனக்கு வாய்த்த பேற்றை எண்ணி மகிழ்கின்றேன். இப்பேற்றை எனக்கு நல்கிய திருவிதாங்கூர் ஸர்வகலாசாலையாருக்கு எனது மனமார்ந்த நன்றி.

1. காவியம்

'தமிழ்-இலக்கிய சரிதத்தில் காவிய காலம்' என்பது நான் சொற்பொழிவிற்கு எடுத்துக் கொண்ட பொருள்.

ஐம்பெருங் காப்பியம்

அது பற்றிப் பொதுப்படச் சில சொல்ல எண்ணுகின்றேன். 'காவியம்' என்பதனுல் நான் கருதும் நூல்கள் யாவை எனத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். தமிழிற் 'பஞ்ச காவியம்' என்றும், 'பஞ்ச காப்பியம்' என்றும், 'ஐம்பெருங் காப்பியம்' என்றும் வழங்குதலை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'பஞ்ச காவியம்' என்ற தொடர்,

வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்த பஞ்ச
காவியந் தேர்கின்ற நீத்நானின் கீதத்திற் காவலர்தம்
ஓவிய சாலை யெல்லாம் கொல்லியா வுள்ளுருகும் ரத்ந
மேவிய கூடமெல்லாம் திரிகூடத்தின் மேற்படுமே.

(பெருந்தொகை, 1259)

என்பதில் உள்ளது. 'பஞ்ச காப்பியம்' என்றது தமிழ் விடுதூது என்ற பிரபந்தத்தில் காணப்படுகின்றது.

பற்றும் இலக்கணநூற் பாவும்நூற்பா அறிந்து
கற்றூர் வழங்கு பஞ்ச காப்பியமும்

என்பது இந்நூலகத்துள்ள ஒரு கண்ணி. 'ஐம்பெருங் காப்பியம்' என்பது நன்னூலுக்கு மயிலைநாதர் இயற்றிய வுரையில் (சூ. 387) வந்துள்ளது:

இவ்வாறே ஆண்பாற் பொருட் பெயரும் பெண்பாற் பொருட்பெயரும் ஏனைப்பாற் பொருட் பெயரும் இடப்பெயரும் காலப்பெயரும் சினைப்பெயரும் பண்புப்பெயரும் தொழிற் பெயரும் மரபுப்பெயரும் வழுவாமல் ஐம்பெருங் காப்பியம்,

> எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற் பனுவல் களுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக

என்பது இவ்வுரைப்பகுதி.

ஐம்பெருங் காப்பியங்கள் இன்ன என்பது

> சிந்தா மணியாஞ் சிலப்பதிகாரம் படைத்தான்
> கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
> வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
> திளையாத குண்டலகே சிக்கும்

என்று வரும் திருத்தணிகையுலாப் பகுதியால் விளங்கும். எனவே சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையா பதி, குண்டலகேசி என்ற ஐந்து நூல்களும் நான் கருதி யுள்ள காவியங்களுள் அடங்கும்.

பிற காப்பியங்கள்

இவையே அன்றி, இவற்றுடனும் இவற்றிற்கு முன் னும் பின்னுமாகத் தோன்றியுள்ள வேறுசில காவியங் களும் எனது இச்சொற்பொழிவுத் தொடரில் ஆராயப்படும். அவையாவன: சூளாமணி, உதயணன் பெருங்கதை, தகடூர் யாத்திரை, பெருந்தேவனாரது பாரத வெண்பா, பெரிய புராணம், கம்ப-ராமாயணம், நீலகேசி என்ற காவியங்களாம். விம்பசாரகதை, அமிர்த பதி, கலியாணன் கதை, அஞ்சன கேசி, கால கேசி, பிங்கலகேசி என்ற ஆறு நூல்கள் உரைகளால் தெரிய வருகின்றன. இவைகளும் காவியங்கள் எனவே உய்த் துணரத் தக்கன. விம்பசார கதை ஒரு பௌத்த காவியம்; இது நீலகேசி யுரையில் ('முன் கொன்றான்' 190), கொடுக்கப்பட்டுள்ளது. விம்பசாரன் என்பவன் பெயர் சிறந்த அரசருள் ஒருவன்; புத்தபிரான் காலத்தவன்; இவன் பௌத்த சமயத்தைத் தழுவிய வரலாற்றினைக் காவியமாக அமைத்து இந்நூல் கூறுகிறதென்று கருத லாம். இது பெருங் கதையைப்போல அகவலால் இயன்

றது என்று எண்ண இடமுண்டு. அமிர்தபதி, பிங்கல கேசி, என்பனவும் அஞ்சன கேசி, கால கேசி என்பனவும் யாப்பருங்கல விருத்தியில் (பக். 487, 540) தரப்பட்டுள் ளன. இவற்றுள் 'கேசி' என்று முடிவன நீல கேசியைப் போலத் தருக்கம் பற்றிய காவியங்களாம். கலியாணன் கதையும் இவ்விருத்தியுரையிலேயே (பக். 195) வந் துள்ளது. இந்தக் காவியங்கள் ஆறனையுங் குறித்து அறியக்கூடியன மிகச் சிலவே யாதலின், இவை பற்றிச் சிற்சில குறிப்புக்களே இச்சொற்பொழிவுத் தொடரில் கொடுத்துள்ளேன். பஞ்ச காவியங்களுள் வளையாபதி, குண்டலகேசி என்ற இரண்டு காவியங்களும் இன்றுவரை அகப்படவில்லை. இவற்றுடனும் முன்னும் பின்னுமாகவும் தோன்றிய காவியங்களுள் தகடூர்யாத்திரை பெரும்பாலும் மறைந்துவிட்டது. உதயணன் பெருங்கதையிலும் பெருந் தேவனார் பாரதத்திலும் சில பல பகுதிகளே இன்று நமக்குக் கிடைத்துள்ளன; கிடைத்த பகுதிகள் அச்சில் வெளிவந்துள்ளன. ஆகவே, சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை, சூளாமணி, உதயணன் கதை, பெருந்தேவனார் பாரதம், பெரிய புராணம், கம்ப-ராமாய ணம், நீலகேசி என்ற ஒன்பது காவியங்களைக் குறித்தே பெரும்பாலும் எனது சொற்பொழிவுகள் நிகழும். பிற வற்றைக் குறித்தும் உறுதியாய்த் தெரியவரும் செய்திகளை உரிய இடங்களில் கூறிச்செல்ல விரும்புகிறேன்.

மேலே சுட்டிய ஒன்பது நூல்களுள்ளும் மூன்றே ஐம்பெருங் காப்பியங்களுள்[1] அடங்கியவை. பாரதம்,

---

[1] பஞ்ச காவியம் என்ற வழக்கு வடமொழியிலும் காணப் படுவதே:

पञ्चमहाकाव्यानि — रामायण, रघुवंश, कुमारसम्भव, माघ, किरातार्जुनीयरूपाणि (कविकल्पलता, 78)

ராமாயணத்தை நீக்கி நைஷதத்தைச் சேர்த்துக் கூறுதல் பெருவழக்கு.

ராமாயணம் என்ற இரண்டும் இதிஹாஸங்கள் எனப் படும் வகையைச் சார்ந்தவை. சூளாமணி, **பெருங்காப்பியம்** உதயணன் கதை, நீலகேசி என்ற மூன்றும் சிறு காப்பியங்கள் என்று கருத வைத்தனர் திரு. தாமோதரம்பிள்ளை. பெரிய புராண மாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பெருங்காப்பிய மாம் என்பர் சைவப்பற்றுடைய அறிஞர்கள்.

இங்கே பெருங்காப்பியம் என்றும், காப்பியம் என்றும், புராணம் என்றும் மூன்றுவகை நூல்களைச் சொன்னேன். இவை தம்மிலுள்ள வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளு தல் அவசியம். பெருங்காப்பியத்தைக் குறித்து முதன் முதலில் வெண்பாப் பாட்டியலும், தண்டியலங்காரமும் கூறுகின்றன.

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றி னொன்று
ஏற்புடைத் தாகி முன் வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப (8)

என்பது தண்டியலங்காரம். வடமொழியில் தண்டியாசிரியர் இயற்றிய காவ்யா தர்சத்தில் முதற் பரிச்சேதத்தில்,

"ஸர்க்க பந்தோ மஹா காவ்ய முச்யதே தஸ்ய லக்ஷணம்[1]"

என்ற 14 முதல் 19 முடியவுள்ள ஸ்லோகங்களின் மொழி பெயர்ப்பு. இங்கே கூறிய உறுப்புக்களில், ஒரு சில குறைந்து வரினும் பெருங்காப்பியமே யாகும்.

ஆனல், அறமுதல் நான்கில் குறைந்து வந்தால் பெருங் காப்பியம் ஆகமாட்டாது; பொதுப்பட்ட காப்பியமே யாகும். இவ்வேறுபாடு முதலியன,

காப்பியம்

கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர் (9)
அறமுத னான்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே (10)

என்ற தண்டியலங்காரச் சூத்திரங்களால் விளங்கும். சிலப்பதிகாரம் சிறிதாயினும் விடு கூறுமையினலே, அது பெருங்காப்பியம் அன்றென்பதும், அறனும் வீடுங் கூறும் மணிமேகலையையும் சேர்த்து ஒரு பெருங்காப்பியமாகக் கருதவேண்டுமென்பதும் அடியார்க்கு நல்லார் கொள்கை. இதனல், அறம் முதலிய நான்கும் பெருங்காப்பியத்திற்கு இன்றியமையாதன என்ற கருத்து தமிழ் மரபில் வேரூன்றி யுள்ளது.

பெருங்காப்பியத்திற்கும், காப்பியத்திற்கும், புராணத் திற்குமுரிய வேறுபாடு வெண்பாப் பாட்டியலில்,

புராணம்

கருதுசில குன்றினுமக் காப்பியமா மென்பர்
பெரிதறமே யாதி பிழைத்து—வருவதுதான்
காப்பிய மாகும் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம். (43)

---

[1] सर्गबन्धो महाकाव्य मुच्यते तस्य लक्षणम् ।

என்ற வெண்பாவிற் கூறப்படுகிறது. 'குலவரவு முதலாயினவற்றைக் காட்டுவது புராண கதையாம்' என்பது பழையவுரை. இந்த லக்ஷணம் வடமொழியிலும் காணப்படுவதே. 'புராணம் பஞ்ச லக்ஷணம்' என்பது அமரம். பஞ்ச லக்ஷணம் யாவை என்பதை

ஸர்க்கஸ்ச ப்ரதி ஸர்க்கஸ்ச வம்ஸோ மந்வந்தராணி ச
வம்ஸாநு சரிதம் சைவ புராணம் பஞ்சலக்ஷணம் [1]

என்ற ஸ்லோகத்தில் கண்டுகொள்க. இதுபற்றித் திவாகரத்தில்,

காவிய விபற்கை விரிக்குங் காலை
ஆரியம் தமிழால் நேரிதி னடக்கி
உலகின் தோற்றமும் ஊழியின் இறுதியும்
அலகுசால் தொன்னூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதிய ரொழுக்கமும்
ஆதிக் காலத் தரசர தியற்கையும்
அவ்வவர் நாட்டால் அறியு மாற்றலும்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல் (176)

என்றொரு சூத்திரம் யாதோர் இயைபுமின்றியே காணப்படுகின்றது. இதிற் கூறப்படுவனவற்றை நோக்கினல் புராணத்தின் இலக்கணத்தை இது கூறுவதாகத் தோற்றுகிறது. இங்ஙனமிருப்ப, 'காவிய இயற்கை' என்று தொடங்கியிருப்பது பொருத்தமற்றதெனல் வேண்டும். 'விளம்பிய இயற்கை' என வேறொரு பாடம் காணப்படுகிறது. இப் பாடத்தை மேற்கொண்டு, புராணங்களையும் உப புராணங்களையும் எண்ணிட்டுக் கூறும் 162, 163-ம் சூத்திரங்களின் பின் இச்சூத்திரத்தைப் படித்துக் கொள்ளுதல் வேண்டும் போலும். ஆனல் இங்ஙனம் கொள்ளு

---

[1] सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।
वंशानुचरितं चैव पुराणं पञ्चलक्षणम् ॥

தலினும் சிறந்தது 'விளம்பனத்தியற்கை' யென யாப்பருங் கல விருத்தியுரையிலும் (பக். 526) வீரசோழியத்திலும் (பக். 280) வரும் பாடத்தைக் கைக்கொண்டு, 'விடம்பனம்' என்ற கூத்து வகையைக் கூறியது என்று துணிதலே யாம்.

இது எவ்வாறாயினும் புராணம் என்பதன் கருத்து நாளடைவில் விரிந்துகொண்டே வந்து, பெரியோர்களது வரலாற்றையும் ஸ்தலமான்மியங்களையுங்கூடத் தற்காலத்தில் உட்படுத்துகிறது.

இங்குக் கூறிய வேறுபாட்டினைப் போலவே, பிறிதொரு வேறுபாட்டினையும் உணர்ந்துகொள்ளுதல் நலம். பிரபந்தம், காவியம்: இவ்விரண்டிற்குமுரிய தொடர்பு பற்றியதே இவ்வேறுபாடு. தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று காப்பியம்; பிறிதொன்று பெருங்காப்பியம். எனவே 'பிரபந்தம்' இலக்கியச் சுவைபட இயற்றிய நூல்களுக்கெல்லாம் ஒரு பொதுப் பெயர் என்பது விளங்கும். இது முற்கால வழக்கு. தற்காலத்தில் காப்பியமும் பெருங்காப்பியமும் புராணமும் ஒழிந்த ஏனைச் செய்யுள்-இலக்கியங்களுக்கே இப்பெயரை வழங்குகிறோம். உதாரணமாக, சிந்தாமணியைப் பிரபந்தமென்று சொல்லமாட்டோம்; காப்பியம் அல்லது பெருங்காப்பியம் என்றே வழங்குவோம். இவ்வாறே பரணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலியவற்றைக் காப்பியம் என்று தமிழில் வழங்குதலில்லை; பிரபந்தமென்றே கூறுவோம். கவி இயற்றிய அனைத்தும் காவியம் என்ற பெயர்க்கு உரியதே எனினும், தமிழ் வழக்கிற் சுருங்கிய பொருள் ஏற்பட்டுவிட்டது. ஆதலால், பிள்ளைத் தமிழ், பரணி முதலியன எனது சொற்பொழிவுத்தொடரில் விரிவாய் ஆராயப்பட மாட்டா.

காவியம் என்பது கவி என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. கவிஞர்களிடமிருந்து தோன்றியது என்பது

இதன் பொருள். இதுவே காப்பியம் என்று தமிழில் திரிந்து வரலாயிற்று. அடியார்க்கு நல்லாரும் 'காப்பியம் என்னும் வடமொழிப் பெயர்' என்றனர்.

காவியம்: சொற்பொருள்

தொன்றுதொட்டு வரும் இச்சொல் வரலாற்றினைப் புறக்கணித்து ஒதுக்கி, காப்பு-இயம் எனப் பிரித்து, ஏதோ தமக்குத் தோற்றியதோர் பொருள் கண்டு, அது தமிழ்ச் சொல்லே யாமெனச் சிலர் சாதிக்க முயன்றனர். இங்ஙனமே 'நாடகம்' என்பதனை நாடு-அகம் எனப்பிரித்து வினோதமான சொல்-வரலாறு கற்பித்தனர். இவையெல்லாம் அறிஞர்கள் எள்ளி நகையாடுவதற்குரியனவே. நமது தாய்மொழியாகிய தமிழுக்கு ஏற்றங் கற்பிக்கும் நன்னோக்கங்காரணமாக இவை போன்ற சொல்-வரலாறுகள் தோன்றி வருகின்றன என்பது நாம் தெரிந்ததே. ஏற்றம் என்பது உண்மை என்னும் அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பெற்றதாதல் வேண்டும். பொய்மீது கட்டப்பெற்றதாயின், அது நிலைநிற்க மாட்டாது; கட்டியமறுகணத்திலேயே சரிந்து விழுந்து விடும். அது நம் தமிழன்னைக்கு உகந்ததாகாது; அதனை முற்றும் வெறுத்து ஒதுக்கி விடுவாள். நம்மவர்கள் இவ்விஷயத்தை நன்குணர்தல் வேண்டும். தமிழன்னைக்கு மறுக்கவொண்ணாத, தர்க்கத்தினால் தகர்க்கவொண்ணாத ஏற்றங்கள் எத்தனையோ உள்ளன. போலியான ஏற்றங்களைக் கற்பித்து அவளது பெருமைக்கு இழுக்குத் தேடுதல் அவள் மக்களாகிய நமக்குச் சிறிதும் தகாத செயலாகும்.

காவியம், புராணம் முதலிய கருத்துக்களும் இலக்கிய நெறிகளும் வடமொழியிலிருந்து கொள்ளப்பட்டனவே. இவையிரண்டின் இலக்கணங்களும் வடமொழி நூல்களிலுள்ளனவற்றைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளன. இதை மேலே தெரிவித்துள்ளேன். நன்மையும் இவற்றால் விளைந்ததுண்டு; தீமையும் விளைந்ததுண்டு. ஆனால், இவற்றால்

தமிழிலக்கியங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்பது உறுதி. தமிழிலக்கிய சரித்திரமே வடமொழியிலுள்ள அலங்கார சாஸ்திரத்தின் வசப்பட்டு, பழைய நெறியைக் கைவிடுத்துப் புதிய நெறிகளை மேற்கொண்டு விட்டது. எனவே காவியம், புராணம் முதலியவற்றைஆராய விரும்புவோர் வடமொழியிலுள்ள காவியம், புராணம் முதலியவற்றின் கருத்துக்களையும் சரித்திரங்களையும் உடனுணர்ந்து ஒப்புநோக்குங் கடப்பாடு உடையர்.

ஒப்புநோக்கின் அவசியம்

ஒப்புநோக்கி ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிவதனாலேயே மக்களது அறிவு வளர்கின்றது. இது மேனாட்டு அறிஞர்கள் அனைவரும் ஒத்துக்கொண்டுள்ள ஓர் உண்மை. அறிவுக்கு விஷயமான எல்லாப் பொருள்கள் பற்றியும் இவ்வுண்மை பொருந்துவதாகும். மொழிபற்றியும் இலக்கியம் பற்றியும் நமது அறிவு விசாலிப்பதற்கும் மேன்மேலும் வளர்ந்தோங்குவதற்கும் ஒப்புநோக்குதல் இன்றியமையாததாகும். உதாரணமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளை எடுத்துக் கொள்வோம். இவற்றிலுள்ள அடிப்படையான சொற்களையும், மொழி-அமைப்புக்களையும் ஒத்து நோக்கிய பின்னரே, இவை ஒன்றோடொன்று தொடர்புடையன என்று கண்டு, திராவிடமொழியினம் என்ற ஓர் தனியினத்தை இவை சார்ந்தவை என்று துணியப்பட்டது. இவ்வாறு துணிந்தவர் பிஷப் கால்ட்வெல்; இது நாம் அனைவரும் அறிந்த ஒரு செய்தி. ஒப்புநோக்குதல் நிகழாமற் போனால் திராவிடப் பொதுமொழியைப் பற்றி நாம் எவ்வகையாகவும் அறிந்துகொள்ள முடியாது. இந்த ஒப்புநோக்கு மிகச் செவ்வையாய், பூரணமாய் நிகழாமையினால்தான் திராவிட-மொழிநூலாராய்ச்சி இன்னும் சிறந்து மேம்படவில்லை.

மொழி: ஒப்புநோக்கு

இங்ஙனமே வடசொற்களுக்கும், லத்தின் சொற்களுக்கும் பல பல ஒற்றுமையிருத்தலை முதல் முதலில் கோர்டோ என்ற பிரஞ்சு பாதிரியார் 1767-ல் கண்டுபிடித்தார். பின்னர் ஸர் வில்லியம் ஜோன்ஸ் இம்முயற்சியில் தலையிட்டனர். இவர் தமது 24-வது வயதிலேயே பத்து அன்னிய மொழிகளில் வல்லவரானுர். கீழைத்தேச மொழிகளிலே இவரது மனம் விரைந்து சென்றது. 1783-ல் கல்கத்தாவில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாக இவர் நியமனம் பெற்றதும், இவரது ஆவல் எளிதாக நிறைவேறிற்று. 1784-ல் 'ஏஷியாடிக் ஸொஸைடி' கல்கத்தாவில் இவரால் ஸ்தாபிக்கப்பெற்றது. 'வடமொழியிலுள்ள வினையடிகளுக்கும் இலக்கண நியதிகளுக்கும், லத்தின் கிரிக் மொழிகளிலுள்ளவற்றிற்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இத்தொடர்பு தற்செயலாய் நேர்ந்ததன்று; இம்மொழிகளெல்லாம் ஒரே மொழியினத்தைச் சார்ந்தவையாதல் வேண்டும்' என்று கூறி ஒப்புநோக்கு மொழியாராய்ச்சி "ஒரு சாஸ்திரம்" ஆகும் என்ற கருத்தை முதல் முதலில் வெளியிட்டவர் இவரே. இவர்க்குப் பின்னர் ப்ரெடெரிக் ஷிலீகல், ராஸ்மஸ் ராஸ்க், க்ரிம், பாப், மாக்ஸ் முல்லர், உவிட்னி முதலானேர் இத்துறையில் உழைத்து இந்த சாஸ்திரத்தைச் செம்மைப்படுத்தியது உலகறிந்த செய்தி. ஒப்புநோக்குதலின்றி, மொழிநூலறிவு நமக்கு உண்டாவதற்கு வழி யாதும் இல்லை.

மொழிநூலிற் போன்றே, இலக்கியங்கள் பற்றியும் ஒப்புநோக்கு-ஆராய்ச்சி இன்றியமையாதது. தமிழறிஞர்கள் ஆங்கிலங் கற்பதில் பேராவல் உடையராயிருக்கின்றூர்கள். வடமொழி முதலிய இந்திய மொழிகளைக் கற்பதிலும் இவற்றிலுள்ள இலக்கியங்களைக் கற்றுணர்வதிலும் இவர்களில் பெரும்பாலார்க்கு ஊக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இதுபற்றி 1946-ல் எனது

இலக்கியம்: ஒப்புநோக்கு

[1]தலைமையுரையொன்றில் யான் வெளியிட்ட கருத்துக்கள் இங்கே இயைபுடையன.

'கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற மூன்று மொழிகளிலும் முறையே நல்ல பயிற்சியுடைய கன்னடரும், தெலுங்கரும், மலையாளிகளும் வடமொழியிலக்கியம் பற்றிய அளவில் தகுதியுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனால், தற்காலத்துள்ள தமிழறிஞர்களைக் குறித்து இவ்வாறு சொல்லமுடியாதென்று அஞ்சுகிறேன். தமது தாய்மொழியைத் தவிர, பிற திராவிடமொழிகள் பற்றிய அளவில், இந்த அறிஞர்களில் ஒவ்வொருவரும் அறியாமையாற் பிடிக்கப்பெற்று, தம் நிலையுணராது இருக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும். வடமொழியோ இவர்களுக்கு வேம்பாகவுள்ளது. வியாசர், வால்மீகி, காளிதாஸன் என்பவர்களைப் பற்றியும், வள்ளுவர், கம்பன் என்பவர்களைப் பற்றியும், திக்கண்ணா, நன்னய்யா என்பவர்களைப் பற்றியும், பம்பா, ரன்னா, பொன்னா என்பவர்களைப் பற்றியும், எழுத்தச்சனைப் பற்றியும், அறியாதவனைத் திராவிட மொழிகளிலொன்றிலேனும் வல்லவனென்று எவ்வாறு கூற முடியும்? இந்த அறியாமை நமது நாட்டில் நீடித்திருக்கும்படியாக விடக்கூடாது. திராவிட இலக்கியங்களையும் இந்திய இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ளதாயும் செழிப்புள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இந்த ஒப்பு நோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மை என்னும் திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்துவிடும். அச் சுவரை அரணாகக் கொண்டு நம் அறிஞர்கள் மறைந்து வாழ முடியாது. இவ்வகைக் கல்வியின்மேல் எழுந்த ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மை

1 நாகபுரி அகில-இந்திய கீழ்நாட்டுக் கலைஞரின் மகாநாடு: திராவிட மொழிப்பகுதி.

யும் புதிய பெருமையும் ஏற்படும். நம்முள் ஒவ்வொரு மொழியாளரும் பிற திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த இலக்கியங்களையும் வடமொழி-இலக்கியங்களையும் கற்று அனுபவித்துப் பரஸ்பரம் நன்மதிப்பைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.'

காவியம்: ஒப்பு நோக்கு

பொதுப்படவே இலக்கியப் பயிற்சி ஒப்புநோக்கு முறையில் நிகழவேண்டியது அவசியம். காவியங்கள் பற்றிய அளவில், இம் முறை மிகமிக இன்றியமையாததாம். காவியலக்ஷணமே வடமொழியினின்று கொள்ளப் பட்டுள்ளது என்பதை முன்னரே கூறியுள்ளேன். சிந்தாமணி, உதயனன் கதை என்ற காவியங்கள் வடமொழியிலுள்ள நூல்களின் வழிநூல்களே. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற தமிழ்க் காவியங்களிற்கூட வடநூற் கருத்துக்கள் நிரம்ப வந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் நாட்டிய சாஸ்திரக் கருத்துக்கள் வந்துள்ளமை கல்வியாளர்கள் நன்கு அறிந்ததே. இக் காவியத்தில் ஓரிடத்தில் (15, 58) 'வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு' என வடமொழிப் பஞ்சதந்திர ஸ்லோகமொன்று குறிக்கப் பட்டுள்ளது. எனவே, இக் காவியங்களைப் பயிலுதற்குத் தானும் வடமொழியுணர்ச்சி வேண்டுதல் கவனிக்கத் தக்கது. ஒப்பு நோக்கு முறை மிகுதியும் பயனளிக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டா. வடமொழி நூல்களோடு மட்டும் இவ்வகை ஒப்பு நோக்கு அமைந்துவிடக் கூடாது. ஆங்கில முதலிய முற்போக்கு மொழிகளிலும் 'காவியம்' என்ற கருத்தோடு ஒத்துள்ள இலக்கியங்கள் உள்ளன. இவற்றின் தோற்றமும் வரலாறும் தமிழ்க் காவிய வரலாறு முதலியவற்றை உணர்தற்குப் பயன் படுவனவாம். ஆகவே, ஒப்பு நோக்கு-முறை மிக விரிந்து செல்லுதல் வேண்டும். இம் முறையை உரிய இடங்களில்,

என்ற அளவு இச் சொற்பொழிவில் கையாளுதலும் எனது கருத்தாகும்.

இனி, இச் சொற்பொழிவுகளுக்குரிய காவியப் பொருளை நான் பகுத்துக்கூற எண்ணியுள்ளவாறு இங்கே ஒருசேரத் தொகுத்து முற்படக்கூறுதல் நலமென்று தோன்றுகிறது.

காவியங்கள்

- காவியகாலம்
- காவியங்களின் வரலாறு
- காவியங்களின் பொதுவியல்புகள்
- காவியங்களின் ஒடுங்கு தசை

காவியகாலம்

முதலாவது 'காவிய காலம்' என்ற பொருள் பற்றிப் பேச எண்ணுகின்றேன். தமிழிலக்கிய சரிதத்தில் 'காவிய காலம்' எனத் தனித்து வரையறைப்பட்ட காலப்பகுதியொன்று உண்டா? எனப் பலரும் ஐயுறுதல் கூடும். எல்லாக் காலத்திலும் காவியம் உண்டாதல் இயல்புதானேயென இவர்கள் வினவுவார்கள். கவிதைகள் எல்லாக் காலத்தும் இயற்றப்படலாம். ஆனால், காவியமென்பது அங்ஙன மன்று. அது ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையாகும். இதிஹாஸங்கள், பெருங்காப்பியங்கள், காப்பியங்கள், புராணங்கள் என்பனவற்றையே காவியம் என நான் குறிப்பிடுகிறேன்.

இதிஹாஸங்கள் பற்றிய அளவில், தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும், வடமொழியொழிந்த ஏனை இந்திய மொழிகளிலும், உண்மையான இதிஹாஸங்கள் உளவோ என்பது பெரிதும் ஐயுறவிற்கு இடமானதே; இல்லையென்றே நாம் துணிந்துவிடலாம். பாரதம், இராமாயணம் என்பனவே இதிஹாஸங்கள். இவை வட

மொழியில் முதல் முதல் உண்டாயின. இவை தோன்றிய சூழ்நிலைகள் மிகப் பழங்காலத்திற்கே யுரியன. பிற்பட்ட காலத்தில் இச்சூழ்நிலைகள் வாய்க்கமாட்டா. இவை மீண்டும் வருதலும் இல்லை. தமிழ் முதலிய பிறமொழி களில் பாரதம், இராமாயணம் என்பன உளவே யெனின், அவை வழிநூல்களேயென நாம் ஒப்புக் கொள் வதில் நமக்குக் கூச்சம் சிறிதும் வேண்டா. வழி நூல்கள் என்றும் இவற்றிற்கு ஒரு மதிப்பும் இல்லையென்று நாம் கருதுதல் கூடாது. ஆங்கிலத்தில் Paradise Lost (சுவர்க்க நஷ்டம்) என்ற இதிஹாஸம் உள்ளது; மில்டன் என்ற பெருங் கவிஞர் இயற்றியது. இது பைபிளின் கதையைப் பின்பற்றி யெழுதிய ஒரு வழிநூலேயாகும். எனினும், இதற்கு மதிப்பில்லையென்று யாரேனும் கூறத் துணிவார் களா? இவ்வகை இலக்கியங்களை 'ஸெகண்டரி எபிக்' என்று ஆங்கில ஆராய்ச்சியாளர் கூறுவர். நாம் இவற்றை 'வழிமுறை இதிஹாஸம்' என்று வழங்கலாம். இவை பிறக்கும் சூழ்நிலைகள் வேறு. பெருங் காப்பியங்கள் பிறக்கும் சூழ்நிலைகளுக்கும் இவற்றிற்கும் ஒற்றுமை பெரிதும் உண்டு. ஆகவே, இப்பெருங் காப்பியங்கள் பிறந்த காலத்திற்குச் சற்று முன்பின்னாகத்தான் வழி முறை இதிஹாஸங்கள் பிறத்தல் இயலும்.

பெருங்காப்பியங்களும், காப்பியங்களும் ஓர் இனத் தாரிடையே தோன்றவேண்டுமாயின், அவை தோன்றுதற் குரிய ஸமுதாயநிலை ஆராயத்தக்கது. ஒரு ஸமுதாயம் ஒரு குறித்த காலத்தில் எவ்வகை இலக்கியத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்குமோ, எவ்வகை இலக்கியத் தைக் கற்று மகிழ்ந்து இன்புறுமோ, அவ்வகை இலக்கியம் தான் அக்காலத்தில் உண்டாவது இயல்பு. ஸமுதாயத்தின் நிலைக்கும் சூழ்நிலைக்கும், அவற்றில் உண்டாகும் இலக்கி யத்திற்கும் மிக நெருங்கிய, விட்டுவிலகாத தொடர்பு உண்டு. தற்காலத்து உள்ள இலக்கியங்களை வைத்து

மேலே உண்மையை விளக்குவோம். தற்காலத்தில் கவிதையைக் காட்டிலும் வசனத்தையே நமது மக்கள் விரும்புகின்றனர். வசனத்திலும் கதைகளையே பெரிதும் வேண்டுகின்றனர். வசனத்தில் அமைந்த பெரிய கதைகளிலும், சிறுகதைகளையே மிகமிகப் பாராட்டுகின்றனர். இவ்விருப்பத்திற்கு அனுகூலமாகப் பலவகைச் சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றன. எனவே, தற்காலத்தை இலக்கியநெறியில் நின்று நோக்கும்போது 'சிறுகதை யுகம்' என்று கூறவேண்டும். 'பூர்வ காலத்தில் சிறுகதை யுகம்' என்று கூறத்தக்கபடி ஏதேனும் ஒரு காலப்பகுதியைக் குறிப்பிட முடியுமா? முடியாதெனவே நினைக்கிறேன். இங்ஙனமே காப்பியகாலமென்று தனிப்பட்ட காலப்பகுதியொன்று இருந்ததென்று கொள்ளுவதில் சிறிதும் வியப்பதற்கில்லை.

இவ்வாறு துணிவதை 'ஏப்ரியோரி ரீஸனிங்' (a priori reasoning) என்று ஆங்கிலத் தர்க்கபரிபாஷையிற் கூறுவர். காரணத்திலிருந்து காரியத்தை அனுமானித்தலே இம்முறை. நான் கையாண்டிருப்பது இம்முறையன்று. தமிழிலக்கிய வரலாற்றின் காலப்பகுதிகளையெல்லாம் முதலாவதாகப் பாகுபடுத்திக் கொண்டுள்ளேன். பின்னர், காவியங்கள் என்று கணிக்கப்படுவன ஒவ்வொன்றன் காலத்தையும் சுருங்க ஆராய்கின்றேன். ஆராய்ந்து, இக்காவியங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இயற்றப்பட்டன என்பதைக் காட்டுகின்றேன். சுமார் கி. பி. 750 முதல் 1200 வரையுள்ள காலப்பகுதியைக் காவியகாலம் எனத் துணிகின்றேன்.

இக்காலப் பகுதியில் பிறவகை நூல்கள் தோன்றவில்லையென்பது எனது கருத்தன்று. சில அணிநூல்கள் தோன்றியுள்ளன. சில இலக்கணநூல்கள் இயற்றப்பட்டுள்ளன. தோத்திர நூல்கள் சிலவும் பிறந்துள்ளன.

ஒரு சில பிரபந்தங்களும் அக்காலத்தனவாகத் தெரிகின்றன. ஆனால், இவற்றுள் பெரும்பாலனவும் காவிய அமைப்புக்கு அநுகூலமாயுள்ள கருவி நூல்களாம். ஒரு சில காவியப் பொருளுக்கு வளமளிப்பன. கலிங்கத்துப் பரணி முதலிய ஒரு சில காவியம் உண்டாகும் சூழ்நிலையை வளர்ப்பன. தத்துவ நூல்கள் பலவும் இக்காலத்தில் பிறந்தன. ஆனால் முக்கிய நெறியில் விளைந்தவை காவியங்களேயாம். இப்பொருள்களையும் இம் முதற்பகுதியில் விளக்க எண்ணுகின்றேன்.

காவியங்களின் வரலாறு

இரண்டாவதாக, காவியங்களின் வரலாற்றினைப் புலப்படுத்தக் கருதியுள்ளேன். இங்கே காவியங்களின் கதைகளைக் கூறுவது எனது நோக்கமன்று. காவிய வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும் சென்றுள்ள நெறியை விளக்குவதே எனது முக்கிய நோக்கமாகும். படிப்படியாக காவியவுணர்ச்சி வளர்ந்துள்ள நெறி நன்கு கவனித்தற்குரியது. இவ்வுணர்ச்சியின் விளைவுகளையும், ஒவ்வொரு காவியத்திற்குமுரிய மதிப்பீடுகளையும் (critical estimate) இப்பகுதியில் கூறலாமென்பது எனது கருத்து. காவிய மொவ்வொன்றினையும் இந்நெறிபற்றி ஆராய்வதால் இப்பகுதி மிக விரிவாகவுள்ளது.

காவியங்களின் பொதுவியல்பு

இனி மூன்றாவதாக, காவியங்களின் பொது-இயல்புகளைக் குறித்துப் பேச எண்ணுகிறேன். இப் பொதுவியல்புகள் தண்டியலங்காரம் முதலியவற்றில் உள்ளன அல்லவா என்று சிலர் வினவுதல் கூடும். அலங்கார சாஸ்திரங்களிற் கூறப்படுவன உண்மையான பொதுவியல்புகள் அல்ல என்பதே எனது துணிபு. ஒரு வீட்டின் இயல்பை ஒருவன் விவரிக்க எடுத்துக்கொண்டான் எனக் கருதிக் கொள்வோம். வீட்டில் செங்கற்

களைக் காணலாம்; தீற்றியிருக்கும் சுண்ணத்தைப் பார்க்கலாம்; இவைகளும் மரத்தாற் செய்த ஜன்னல்கள், கதவுகள் முதலியனவும் காணப்படுவதே வீடு என்று அவன் விவரித்தால் அது வீட்டின் பொதுவியல்பைக் கூறியதாகுமா? இவ் விவரணத்தை ஒத்ததே தண்டியாசிரியர் முதலியோர் தந்துள்ள காவிய லட்சணம். ஆகவே, இம் முறையைக் கைவிடுத்து, காவியங்களின் தோற்றத்தையும் அவற்றிலுள்ள மொழியியல்பு முதலியவற்றையும் ஆராய்ந்து, காவியப் பொது-இயல்புகளை வகுத்துள்ளேன். இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாயிருந்தன ஆங்கில நூல்களே. கார் (W. Kerr), அபெர்க்ராம்பி (Lascelles Abercrombie), லியூயிஸ் (C. D. Lewis) முதலிய ஆசிரியர்கள் இயற்றிய ஆராய்ச்சி நூல்கள் மிகுதியும் பயன் பட்டன. காவிய ஆராய்ச்சி செய்வோர் இந்நூல்களையும் இவை போன்ற பிறநூல்களையும் கற்க வேண்டுவது மிக அவசியம் என வற்புறுத்துவேன்.

காவியங்களின் ஒடுங்கு தசை

கடைசியாக, காவியங்களின் ஒடுங்கு தசையைக் குறித்துச் சில சொல்ல எண்ணுகிறேன். எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், நிலை, ஒடுக்கம் என்பன உண்டு. இலக்கியங்களும் காவியங்களும் இப் பொதுவிதிக்கு விலக்கல்ல. சூழ் நிலைகள் மாறின. பிற்பட்ட காலத்துக் காவியம் கைக்கொண்ட நெறியில், இலக்கியக் கேட்டிற்குரிய தன்மைகள் இருந்தன. அதன் தோற்றத்திலேயே கேட்டுக்குரிய வித்தொன்று கிடந்து வரவர வலிமை மிகுந்து, காவியத்தை அழித்து விட்டது. மக்கள் மனநிலை மாறிவிட்டது. சமுதாய நிலையும் அரசியல் நிலையும் காவியத்தின் க்ஷீணத்திற்குக் காரணமாய் முடிந்தன. இவற்றைக் குறித்து விவரிக்க வேண்டியனவற்றைக் கூறி இத்தொடர் சொற்பொழிவை முடிக்கலாமென்று கருதுகிறேன்.

2. காவியகாலம்

தமிழ் இலக்கிய சரித்திரத்தை ஆதிமுதல் இன்று வரை நன்குணர்ந்து அதன் முக்கிய நெறியை அறிந்து கால-அடைவின்படி அதனைப் பகுத்துக் கொள்ளுதல் மிக இன்றியமையாததாம். இம்முயற்சி திருப்திகரமாய் இப்பொழுது நிறைவேறி விட்டதென்று சொல்வதற்கில்லை. இதற்குப் பேரிடையூருக நிற்பது மூன்று தலைசிறந்த நூல்களின் காலங்கள் வரையறைப் படாமையே; தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பனவே அம் மூன்று நூல்களும். எனினும் அறிஞரது முயற்சிகளிற் குறைவேயில்லை. பலரும் இத் தமிழிலக்கிய சரிதத்தைக் கால முறைப்படி பாகுபாடு செய்ய முயன்றிருக்கிருர்கள். ஒரு சிலரது பாகுபாடுகளை இங்கே நோக்குவோம்.

முதலாவது சி. வை. தாமோதரம் பிள்ளை செய்துள்ள பாகுபாட்டினைக் கருதுவோம். இது

தாமோதரம் பிள்ளை அவருடைய வீரசோழியப் பதிப்புரையிற் காணப்படுகிறது. ஒன்பது பகுப்பாக இப்பாகுபாடு செல்கின்றது; வருமாறு:

1. அபோதகாலம்: வரிவடிவின்றி ஒலிவடிவு மாத்திரமாய்த் தமிழ் நிகழ்ந்த காலம். இது அகத்தியர்க்கு முன் சென்ற காலம்.
2. அக்ஷரகாலம்: அகத்தியரால் நெடுங்கணக்கு ஏற்பட்டது முதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்கும் சென்ற காலம்.
3. இலக்கண காலம்: அகத்தியரது மாணுக்கர்கள் பன்னிருவரும் இலக்கணங்கள் இயற்றிய காலம். மாணுக்கராவார் தொல்காப்பியர் முதலியோர்.

[இக்காலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழிற் புகுந்தன: தொல்காப்பியத்திற்போல]

4. ஸமுதாய காலம்: இதுவே மதுரைச் சங்கத்தார் காலம். தமிழ் ஸம்ஸ்கிருத நாயகனை மணந்தது இக்காலத்தில்தான்.

முதற் சங்கம்	4500	ஆண்டுகள்
இரண்டாம் சங்கம்	3500	,,
மூன்றும் சங்கம்	2000	,,
சங்ககாலம்	10,000	,,

5. அநாதர காலம் அல்லது புத்தர் காலம்: கி. மு. 150—கி. பி. 50. வள்ளுவரால் கடைச் சங்கம் அழிந்த பிற்பாடு, 200 ஆண்டுகள் தமிழ் ஆதரவற்றிருந்தது.

6. சமணர் காலம்: கி. பி. 50–350. சிந்தாமணி, வீர சோழியம் முதலியன தோன்றிய காலம்.

இக்காலத்தில் அநேக ஸம்ஸ்கிருத பதங்கள் தமிழில் வந்து கலந்தனவாயினும், வண்டு கைக் கொண்ட கிருமிபோலவும் வேரின்வாய்ப் பட்ட எருப்போலவும் ஸம்ஸ்கிருத நிறமும் மணமுமின்றி, ஆர்த்தபம், மயிடம், பகுதி, விகுதி முதலிய சொற்கள் போலச் சுத்தத் தமிழுருவமாகவே திரிந்துவந்தன.

[பிராகிருத வழியாய் வடசொல் வந்துள்ளது]

7. இதிஹாஸ காலம்: கி. பி. 350—1150. நைடதம், பாரதம், இராமாயணம், இரகுவமிசம் என்பன தோன்றிய காலம்.

வடமொழியிலிருந்து புராணேதிகாசங்கள், சமய சாஸ்திர ஸ்தலமான்மியங்கள், சுத்த ஸம்ஸ்

ரூதாகாரமாய்த் தமிழில் மொய்க்கத் தலைப்பட்டதும், வடமொழிப் பிரளயத்தைக் கண்டு தமிழ் சகிக்கலாற்றாது மூழ்கியதும் இக்காலத்தேதான். போகர் முதலிய ஆயுள் நூலாரும்...செந்தமிழணங்கின் திருமேனியெல்லாம் புண்படச் செய்ததும் இக்காலமே. [இது ஓரளவில் உண்மை. உதாரணம், வில்லி பாரதம். ஆனால் தமிழ் மூழ்கிவிடவில்லை]

8. ஆதினகாலம்: கி. பி. 1150—1850 சித்தாந்த சமய சாஸ்திரங்கள், கோயிற் புராணம், இலக்கணக் கொத்து, பறியலூர்ப் புராணம், காஞ்சி புராணம், திராவிட மகாபாஷ்யம் முதலிய தோன்றின. [ஆதின காலம் கழிந்து போய்விட்டது; புராண காலமும் அப்படியே.]

9. தற்காலம் : கி.பி. 1850—

மேலே காட்டிய பாகுபாடு சி. வை. தாமோதரம் பிள்ளை வகுத்தது என்ற ஒரு பெருமைதான் உடையது. அவரது காலம் மொழி நூலுணர்ச்சி பரவாத காலம்; சரித்திரவுணர்ச்சியில்லாத காலம்; சிலாசாசன அறிவு அப்பொழுதுதான் தொடங்கியுள்ளது. இலக்கியங்களுக்கெல்லாம் முற்பட, இலக்கணகாலம் இருந்ததென்றலும், 11-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய வீரசோழியம் அநாதர காலத்தில் (கி.பி. 50–350) தோன்றியதென்றலும், 16-ம் நூற்றாண்டில் தோன்றிய நைடதம் கி.பி. 1150 வரையுள்ள காலப் பகுப்பில் இயற்றப்பட்டதென்றலும் மொழி நூலுணர்ச்சிக்கும் சரித்திரவுணர்ச்சிக்கும் முற்றும் விரோதமாம். ஆராய்ச்சியின் ஆதி நிலையை இது தெரிவிக்கின்றது. இப்பாகுபாட்டை ஆராயவேண்டும் அவசியமே இல்லை.

இதனை ஒதுக்கிவிட்டு, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தந்துள்ள பாகுபாட்டை நோக்குவோம். இது அவரது தமிழ்மொழிவரலாற்றிற் காணப்படுகிறது.

வி. கோ. சூ. சாஸ்திரியார்

1. ஆதிகாலம்: கி.மு. 8000—கி.பி. 100. மூன்று சங்கங்களும் இருந்த காலம்.

2. இடைக்காலம்: (i) முற்பகுதி கி.பி. 100–600. ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் திருவாசகம், திவாகரம், முத்தொள்ளாயிரம் முதலியன தோன்றிய காலம். (ii) பிற்பகுதி கி.பி. 600–1400. தேவாரம், கல்லாடம், திருவாய்மொழி, அகப்பொருள், புறப்பொருள், இராமாயணம், நளவெண்பா முதலியன தோன்றிய காலம்.

3. தற்காலம்: கி.பி. 1400 முதல்—அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், அருணகிரி, பரஞ்சோதி, சிவப்பிரகாசர், தத்துவராயர், தாயுமானவர், வீரமாமுனிவர் முதலினோர் காலம்.

இங்குக் குறித்த சாஸ்திரியாரது பாகுபாடும் பயனற்றதே. மூன்று பெரும் பகுதியாகப் பிரித்தல் இலக்கிய சரித்திரத்தின் கதியை நன்கு புலப்படுத்துவதன்று. கர்ணபரம்பரைச் செய்திகளை இப்பாகுபாடு மிகவும் மேற்கொண்டு விடுகிறது. சரித்திரவுணர்ச்சியும் இதில் விசேஷமாகக் காணப்படவில்லை. முச்சங்க வரலாறுகளை முற்றும் ஒப்புக்கொண்டுள்ளது. இப்பாகுபாடு ஆராய்ச்சி முறைகளைச் சாஸ்திரியார் கைப்பற்றவில்லையென்பதைத் தெரிவிக்கின்றது. சிந்தாமணி முதலியன கி.பி. 600 வரையுள்ள காலப்பகுதியில் இயற்றப்பட்டன என்பது ஆதாரமற்ற வெற்றுரகமே. திவாகரம் முதலிய சில நூல்கட்கு இவர் கொடுத்

துள்ள காலம் ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

கால்ட்வெல்

இப் பாகுபாட்டினையும் ஒதுக்கிவிட்டு, டாக்டர் கால்ட்வெல் முதலிய மேனாட்டு ஆசிரியர்கள் தந்துள்ள பாகுபாடுகளை நோக்குவோம். கால்ட்வெல் கூறுவது வருமாறு:

1. ஜைன காலம்: கி.பி. 800 அல்லது 900 முதல் 1200 அல்லது 1300. குறள், நாலடியார், சிந்தாமணி, திவாகரம், நன்னூல் முதலியன தோன்றிய காலம்.
2. இராமாயண காலம்: கி.பி. 1200—1300. கம்பன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலினோரது காலம்.
3. சைவ மீட்சிக் காலம்: (Saiva Revival): கி.பி. 1200—1400. தேவாரம், திருவாசகம் முதலியவற்றின் காலம்.
4. வைஷ்ணவ காலம்: கி.பி. 1200—1400. நாலாயிர திவ்யப் பிரபந்தம் தோன்றியது.
5. இலக்கிய மீட்சிக்காலம் (Literary Revival): கி.பி. 1400—1600. ஞானவாசிட்டம் முதலிய வேதாந்த நூல்களும், சைவ சித்தாந்த நூல்களும் தோன்றின. அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர் முதலினோர் காலம்.
6. பிராமண எதிர்ப்புக் காலம்: கி.பி. 1600—1700. அகஸ்தியர், சிவவாக்கியர், திருமூலர், பத்திரகிரியார், பதினெண் சித்தர்கள் முதலினோர் காலம்.
7. தற்காலம்: கி.பி. 1700—1900: பட்டினத்தார், தாயுமானவர், சிவப்பிரகாசர், வீரமாமுனிவர் முதலினோர் காலம்.

இங்கே தந்துள்ள பாகுபாட்டில், இலக்கியங்களின் காலத்தைச் சரித்திரத்தோடு இயைத்து நுணுகியுணரும் முயற்சி சிறிதேனும் காணப்படவில்லை. தமிழிலக்கியங்களின் தொன்மையை ஒப்புக்கொள்வதில் ஆசிரியரது மனம் பொதுப்பட உடம்படவில்லை. இது தேவாரம், திவ்வியப் பிரபந்தம், முதலியவற்றிக்குக் கொடுக்கப்பட்டுள்ள காலவரையறையால் நன்கு புலனாகிறது. சங்க இலக்கியங்களையும், தொல்காப்பியத்தையும் இப்பாகுபாடு அறவே புறக்கணித்து விட்டது. இவை போன்ற பல காரணங்களால் இப் பாகுபாடும் ஒப்புக்கொள்ளத் தக்க தன்று. ஸர் வில்லியம் ஹண்டர்[1], டாக்டர் க்ரையெர்ஸ்ன் டாக்டர் ரோஸ்ட் முதலியோர்களும் பெரும்பாலும் டாக்டர் கால்ட்வெல்லின் பாகுபாட்டினையே பின் பற்றியிருக்கின்றனர். ஆசிரியர் ப்ரேஸர் சிலாசாசன ஆராய்ச்சி முதலியவற்றால் துணியப்பட்டுள்ள பல முடிபுகளை மேற்கொண்டு வேறொரு பாகுபாடும்[2] செய்துள்ளார். ஆனால், இவற்றிலெல்லாம் தக்க சான்றுகளால் நிறுவப்பட்டுள்ள காலவரையறைகள் பெரும்பாலும் கைக்கொள்ளப்படவில்லை; நமது தமிழ்மொழியின் வரலாறும் உணரப்படவில்லை.

ஜூலியன் வின்ஸன்

உதாரணமாக, ஆசிரியர் ஜூலியன் வின்ஸன் பாகுபாட்டை நோக்குவோம். இவர் 'கி. பி. 7-ம் நூற்றாண்டுக்கு முன் தமிழிலக்கியம் தோன்றியுள்ளதாக நான் ஒப்புக்கொள்ள முடியாது' என்று கூறி, ஐந்து காலப் பகுப்புக்களைத் தருகின்றார் :

1. 6 அல்லது 7-ம் நூற்றாண்டுகள் : தொகை நூல்கள் தோன்றிய காலம்.

---

1. W. W. Hunter's Gazetteer.
2. His article on Dravida in the Encyclopaedia of Religion and Ethics.

2. 8-ம் நூற்றாண்டு: ஜைனர்கள் மேம்பட்டு விளங்கிய காலம்.

3. 9-ம் நூற்றாண்டு: ஜைனர்களும், சைவர்களும் வாது புரிந்த காலம். ஈழத்திலிருந்து பௌத்தர்கள் இவ்வாதத்திற் கலந்து கொண்டனர்.

4. 10-ம் நூற்றாண்டு: சைவர்கள் மேம்பட்ட காலம்.

5. 15, 16-ம் நூற்றாண்டு: வைஷ்ணவர்கள் காலம்.

இது போன்ற பாகுபாடுகள் சிறிதும் கொள்ளத் தக்கன அல்ல. புராதன சரித்திரவுணர்ச்சியும், சமய சரித்திரவுணர்ச்சியும் இவற்றில் இல்லை.

எம். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

இவற்றையெல்லாம் ஆராய்ந்து மதிப்பிட்டு, எம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் தமது 'தமிழ் ஸ்டடிஸ்' (Tamil Studies, p. 211) என்ற ஆங்கில நூலில் புதுவதாக ஒரு காலப் பாகுபாடு தந்திருக்கின்றனர். இந்தப் பாகுபாடு வருமாறு:

காலம்	மதம்	இலக்கியம்	இலக்கணம்
1. கி. மு. 600-200 கி.மு. 200-கி.பி. 150	i ஸர்வாத்துமம் ii பௌத்தம்	i சங்க-இலக்கியம்: (தொல்காப்பியம், குறள் முதலியன)	i ஆதி இலக்கணங்கள்.
2. கி. பி. 150-500	iii ஜைனம்	ii பேரிலக்கியம்: (சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, முதலியன)	அகஸ்தியம், தொல்காப்பியம்

3. கி. பி. 500-950	iv பிராம்மண மதம்	iii பக்தி-இலக்கியம் (தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி முதலியன)	ii மத்தியகால இலக்கணங்கள்: தொல்காப்பியம், கல்லாடம்(?) வீரசோழியம்
4. கி. பி. 950-1200	v சமய பேதங்கள்	iv மொழிபெயர்ப்பு: (கம்ப ராமாயணம் கந்தபுராணம் முதலியன)	
5. கி. பி. 1200-1450	vi பரிஷ்காரம்	v வியாக்கியானங்கள் நச்சினர்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலியோர்	iii தற்கால இலக்கணம்: வீரசோழியம், நன்னூல்
6. கி. பி. 1450-1850	vii தற்காலத்துக்குரியது	vi பலதிற இலக்கியங்கள்	

இப் பாகுபாட்டில், கி. மு. 600 முதல் கி. பி. 500 வரை யுளவாகக் கருதும் பாகுபாடுகளைத் தவிர, மற்றைப் பகுதிகள் பொதுப்பட ஒப்புக்கொள்ளக் கூடியனவே. இப் பகுதிகள் சிலாசாசனம் முதலிய சான்றுகளால் துணியப் பட்ட முடிபுகளுக்கு இணங்கவே பெரும்பாலும் அமைந்துள்ளன. ஆனால், முதலிரண்டு பகுதிகள் தற்கால ஆராய்ச்சியின் முடிபுகளுக்கு ஒத்து நிற்பனவாகக் கருத முடியாது.. கல்லாடம் ஓர் இலக்கணம் அன்று.

சங்க காலத்தைக் குறித்தும், சிலப்பதிகாரத்தின் காலத்தைக் குறித்தும் முதன் முதல் ஐயத்தை உண்டு பண்ணியவர் பேராசிரியர் மு. இராகவையங்கார். இவர் தாம் தந்த சேரன்—செங்குட்டுவன் என்ற நூலின் முதற் பதிப்பில் கி. பி. 5-ம் நூற்றாண்டே செங்குட்டுவனும் சங்கத்துச் சான்றோரும், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் வாழ்ந்தகாலமாதல் வேண்டுமென்று

முடிபுகட்டியவர். சிலப்பதிகாரம் செங்குட்டுவன் காலத்து இயற்றப்பட்டதன்று என முதன்முதல் துணிந்தவர் கே. வி. சுப்பிரமணிய ஐயர். இதனை இவர் இயற்றிய ஆங்கில நூலிற் காணலாம்.[1]

தமிழ் மொழி வரலாற்றிற்கும் தமிழ் நாட்டு வரலாற்றிற்கும் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. மிக நீண்ட காலமாக, சங்க இலக்கியங்கள் திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் இவைகளின் காலம் முதலியவற்றைக் குறித்து, ஆராய்ந்து சிந்தித்து எழுதி வந்துள்ளேன். எனது ஆராய்ச்சியில் நான் கண்ட முடிபுகளுக்கு ஏற்ப, ஒரு பாகுபாடு செய்திருக்கிறேன். சங்ககாலத்தை இரண்டாகப் பிரித்துள்ளேன்: முற்சங்ககாலம், பிற்சங்காலம் என.

எனது துணிவு

முற்சங்ககாலம் சுமார் கி. பி. 100-ல் தொடங்கியிருக்கலாம். இவ்வாறு நான் துணிந்திருப்பது சிலருக்கு வியப்பாக இருக்கும். ஆனால், கி. மு. 5-ம் நூற்றாண்டில் நூல்களை எழுத்தால் எழுதி வைக்கும் கருத்துத்தானும் இந்தியா முழுமையிலும் உண்டாக வில்லைபோலும் என்றனர் விண்டர்நீட்ஸ்.[2] தமிழ்நாட்டில் எழுத்துக்கள் எப்போது வழக்கில் வந்தன? எப்போது நூல்களைத் தமிழ் மக்கள் எழுதி வைக்கத் தொடங்கினர்? இக்கேள்விகளுக்கு விடை காணும்போது நான் கொடுத்துள்ள காலம் பொருத்தமாதல் அறியலாம். கிரீஸ் முதலிய அந்நிய நாட்டுச் சான்றுகள் இக்காலவரையறையைப் பெரிதும் ஆதரிக்கின்றன. முற்சங்கநூல்களிற் காணப்படும் வடநாற்கதைக் குறிப்புக்களும் கருத்துக்களும் இக்காலவரையறையை வற்புறுத்துகின்றன. செங்குட்டுவனும் கஜ

1. Historical Sketches of Ancient Dekhan, pp. 91—99.
2. History of Indian Literature, Vol. I, pp. 33—35.

பாகுவும் ஸமகாலத்தினர் என்ற வரலாறும் இங்குக் கருதத்தக்கது. நெடுநல்வாடை (160—62), புறநானூறு (229) முதலியவற்றிற்காணும் வான நூற்குறிப்புக்களால் இச் செய்யுட்கள் கி.பி. 300-க்கு முற்பட்டன அல்ல என்பர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை (Indian Ephemeris, I, pt I, p. 496) முற்சங்ககாலத்தின் பின்னெல்லையை இது சுட்டுகிறது. எனது பாகுபாடு வருமாறு:—

1. முற்சங்க காலம்: கி. பி. 100—350. தொகைச் செய்யுட்கள், பத்துப் பாட்டிற் பல. (பண்டைத் தமிழ்)
2. தொகைசெய் காலம்: கி. பி. 400—500. முற்சங்கப் பாடல்களைத் தொகையாகத் தொகுத்தது. நற்றிணை, குறுந்தொகை; ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகம், புறம் என்பன.
3. பிற்சங்க காலம்: கி. பி. 600—750. கலித்தொகை, பரிபாடல்.
4. பக்திநூற் காலம்: கி. பி. 600—900. தேவாரம், திவ்யப் பிரபந்தம், முருகாற்றுப்படை, திருவாசகம் முதலியன.
5. நீதிநூற் காலம்: கி. பி. 600—850. திருக்குறள் முதலிய கீழ்க் கணக்கு நூல்கள். (3, 4, 5 முன்-இடைக்காலத்தமிழ்)
6. முற்காவிய காலம்: கி. பி. 750—1000. பஞ்சகாவியங்கள்.
7. பிற்காவிய காலம்: கி. பி. 1100—1300. பாரதம், இராமாயணம் முதலியன.
8. தத்துவநூற் காலம்: கி. பி. 1000—1350. மெய்கண்டதேவர், வைஷ்ணவப் பெரியார்கள் முதலியோரது தத்துவநூல்கள்.

9. வியாக்கியான காலம் அல்லது உரையியல் காலம்: கி. பி. 1200—1500. இளம்பூரணர், குணசாகரர், பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலினோரது உரைகள். (6, 7, 8, 9 பின்-இடைக்காலத் தமிழ்.)

10. புராண-பிரபந்த காலம்: கி. பி. 1500—1850. குமர குருபரர், பிள்ளைப்பெருமாளையங்கார், சிவப்பிர காச முனிவர் முதலினோரது நூல்கள், கந்த புராணம், திருவிளையாடற் முதலியனவும் தோன்றின. (பிற்காலத்தமிழ்)

11. தற்காலம்: கி. பி. 1850—(தற்காலத் தமிழ்) இராம லிங்கசுவாமிகள், நாவலர், சுந்தரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர், பாரதி முதலியோர்.

சங்க காலத்தை இரண்டாகப் பிரித்துப் பிற்சங்க காலம் என ஒன்று கொண்டதற்கும் தக்க காரணம் உண்டு. இப் பிற்சங்ககாலத்தில் வழங்கிய தமிழ் பிற்கால வழக்குக்கள் பல உடையது, உதாரணமாக, கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டும் இசையோடு பாடுதற்கு ஏற்றவாறு அமைந்தன: பரிபாடற் செய்யுட்களுக்குரிய பண்களும் கொடுக்கப் பட்டுள்ளன. கலித்தொகையில் 'ஈங்கே தலைப்படுவன்' (64) என அன் ஈறு தன்மையொருமையில் வந்துள்ளது. இளம்பூரணரும் (தொல். சொல். 200), நேமிநாத உரைகாரரும் (சொல், 39) 'இக்காலத்து அல் ஈறு அன் ஈறாகத்திரிந்து வழங்கும்' என்றனர். 'அல்லால்' என்ற சொல்லும் இக்கலித்தொகையில் (15, 67, 82, 83, 88, 102, 109) பல இடங்களில் காணப் படுகிறது. உதாரணமாக,

> ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா,
> என்கண் எவனோ தவறு (88)

என வருகின்றது. 'அல்' என்ற வினைக்குறிப்படியாக

'ஆல்' என்ற எச்சவீறு புணர்ந்து வந்ததென்றேனும், அல்லது, 'அல்லாமை' என்பது 'அல்லாமல்' எனத்திரிந்து பின் மகரம் கெட்டு 'அல்லால்' என நின்றது என்றேனும் கொள்ளுதல் வேண்டும். முற்சங்க நூல்களில் இவ்வழக்குக் காணப்படுமாறில்லை. 'ஆல்' என வரும் ஓர் எச்சவீறு தொல்காப்பியத்தில் தரப்படவில்லை. இவ்வழக்குப் பிற்பட்ட காலத்தில்தோன்றி இன்றளவும் நிலைத்து நிற்கிறது. தேவாரத்தில் இவ்வழக்கு மிகுதியும் காணப்படுகிறது.

நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே

என்றனர் அப்பர். இங்ஙனமே 'மல்' என்ற விகுதி, 'கூருமற் குறித்ததன் மேற் செல்லுங் கடுங் கூளி (கலி. 1), 'ஏல்' என்ற ஈறு (இல்லேல்: கலித். 60, அன்ன
தேல்: கலித். 91), உயர்திணைப் பன்
கலித்தொகை மையில் வரும் 'கள்' விகுதி (கேளிர்கள்
கலித். 149) போழ்து என்ற சொல், (4, 82, 93, 94, 108, 117, 143, 145), 'ஆனல்' என்ற சொல், (சான்றவர்க்கெல்லாம் கடனானல் கலித். 139; ஆயர்எமரானல் கலித். 108), 'உமக்கு' என்ற சொல் (கலித். 139), முன்னிலைப் பன்மையில் வரும் 'உம்' விகுதி (கொள்ளும்: கலித். 32) முதலிய பல பிற்கால வழக்குக்களும் கலித்தொகையில் உள்ளன. முற்சங்க[1] காலத்து இலக்கியங்களில் இவை காணப்படாதன.

---

1. கலித்தொகை 38-ஆம் செய்யுளில்

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
யெடுக்கல் செல்லா துழப்பவன் போல

என்று வரும் அடிகள் இராமாயணத்தின் உத்தரகாண்டச் செய்தி யொன்றைத் தெரிவிப்பன. உத்தரகாண்டம், இவ் ஆதிகாவ்யத்தில் மிகப்பிற் படச் சேர்க்கப்பட்டதாகும். இதுவும் கலித்தொகை பிற்பட்ட இலக்கியமென்பதற்கு ஒரு சான்று.

அன்றியும் குறுந்தொகை முதலியவற்றிலுள்ள சில செய்யுட்களை அடியொற்றிக் கலித்தொகை எடுத்தாளுகிறது. உதாரணமாக,

விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே (கலித். 130)

என்பது,

ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவழித் தொடுவழி நீங்கி
விடுவழி விடுவழிப் பரத்தலானே (குறுந். 399)

என்றதனைத் தழுவி வந்துள்ளது.

பரிபாடலில் வடசொற்களும் வடநாற்கருத்துக்களும் மிகுதியாய்ப் பயின்றுள்ளன. யாத்திரை, பிரமம், இரதி, கௌதமன், சோபனம் என்பன ஒரே பரிபாடல் செய்யுளில் (பரி. 19) வருகின்றன. வந்திக்க, சிந்திக்க, வச்சியம் என்பன 20-ம் செய்யுளிலும், மிதுனம், புன்னாகம், சண்பகம், குந்தம், மல்லிகாமாலை என்பன 11-ம் செய்யுளிலும், புங்கவம், நாதர், குடாரி, அருச்சிப்போர், அமிர்தபானம் என்பன 8-ம் செய்யுளிலும், கவிதை, ஆராதனை 6-ம் செய்யுளிலும் வருகின்றமை காணலாம். 'நான்' என்ற தன்மையொருமைப் பெயரும் பயில்கின்றது.

நல்லாள் கரைநிற்ப நான் குளித்த பைந்தடத்து

என்பது 6–ம் செய்யுளில் ஓர் அடி.

மேற்கூறிய அனைத்தும் நோக்குவார்க்கு, கலித்தொகையும், பரிபாடலும் பிற்சங்ககாலத்து நூல்கள் என்றலில் ஐயப்பாடு சிறிதுந் தோன்ற இடமில்லை. இவற்றிற்குக் கொடுக்கப்பட்ட காலமும் பொருத்தமாதல் உணரலாம். 11-ம் பரிபாடலில் வரும் சோதிடக்

குறிப்புக்களை ஆராய்ந்த திவான் பகதூர் எல். டி. சுவாமிக் கண்ணு பிள்ளை இந்நூல் பிற்பட்ட காலத்ததாகவே கருதுவர். இவர் கூறும் காலம்[1] கி. பி. 634.

இன்னுமொரு முக்கியமான அமிசத்தில், இரு காலத்து நூல்களும் வேறுபடுகின்றன. பிற்சங்க இலக்கியங்களில், புராண உணர்ச்சியும் சமயவுணர்ச்சியும் மிகுந்துள்ளன. கலித்தொகையின் முதற் செய்யுளிலேயே சிவபெருமானது ஆடல்கள் குறிக்கப்படுகின்றன. 'உயிர்களெல்லாம்...பிறந்திறந்து தடுமாறித் திரியும் படி அயனாய் நின்று...அரனாய் அவ்வுயிரெல்லாம் தன்னிடத்தே வந்து தொகுதலை விரும்பும் ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக்கொள்கின்றவனைப் போலே' என்று (கலித். 129-ல்) வருகின்றது. இதனையொத்த கருத்து பரிபாடல் 2-ம் செய்யுளிலும் உள்ளது. திருமால் மதியைக் கோள்விடுத்தது (104), அவர் மூன்றுலகையும் அளந்தது (124), கண்ணன் கேசியைப் பிளந்தது (103), அவர் மல்லரை மறஞ்சாய்த்தது (134) முதலியன கலித்தொகையில் காணப்படுகின்றன. பரிபாடலில் வரும் புராணக் கருத்துக்களும் சமயக் கருத்துக்களும் மிகப்பல. அகலிகையின் வரலாறுகூட

இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்: சின்னுறக்[2]கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரை செய்வோரும் (19, 50—52)

என்ற அடிகளிற் குறிப்பிடப்படுகிறது. இவள் கல்லுருவெய்தியதைக் காளிதாஸர் கூறியுள்ளார் (ரகு. 11, 24). வால்மீகி முனிவர் 'உயிர்களது கண்ணுக்குப் புலப்

1. An Indian Ephemeris Vol. I, Part I, pp. 109—112
2. प्रत्यपद्यत चिराय यत्पुनश्चारुगौतमवधूः शिलामयी ।
स्वं वपुः स किल किल्बिषच्छिदां रामपादरजसामनुग्रहः ॥

படாமல் வாயுபக்ஷிணியாய்ச் சாம்பரிற் கிடந்து உழல்வாய்' என்று சாபம் பெற்றதாகக் கூறினர் (பால. 48, 30).

இங்ஙனமே முருகாற்றுப் படையிலும், புராணம், சமயம் என்ற இருவகைக்குரிய கருத்துக்களும் பல உள்ளன. வைதிக சமயச் சார்பான இக் கருத்துக்கள் நாட்டிற் பரவவே, பக்தி நூற்காலம் தோன்றுவதாயிற்று. இந் நூல்களின் காலவரையறை பொதுவாக அனைவரும் உடம்பட்டதே.

முருகாற்றுப்படை

இதே காலத்தில் அருக சமயத்தினர் வேறு வகை நூல்கள் இயற்றி, தமிழ்மக்களது உள்ளத்தைக் கவர்ந்தனர். சங்ககாலத்தேயே இச்சமயத்தினரது கொள்கைகள் சில, தமிழ் நூல்களிற் காண்கின்றன. உதாரணமாக,

ஜைன நூல்கள்

> விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
> திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
> உலக விடைகழி யறைவாய் நிலைஇய
> மலர்வாய் மண்டிலத் தன்ன

எனப் புறத்தில் (176) வருகின்றது. இவ்வடிகள் அருக சமயத்தினரது புராண வரலாறு ஒன்றினை உட்கொண்டது என்பது உரை நோக்கியறியலாம்.

> உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
> அமிழ்தம் இயைவதாயினும் (புறம். 182)

என்றதில் இந்திரர் பலர் கருதப்படுகின்றனர். இப்பன்மைக் கருத்தும் ஆருகத[1] பௌத்த சமயத்தினர்க்குரியதாகும். 'சங்கம்' என்ற பெயர்தானும் இவர்கள்

1. cf. சிலப். 16, 173 உரை.

வழங்கி வந்த தொன்றும். ஆருகதப் பள்ளியும், பௌத்தப் பள்ளியும் மதுரையில் இருந்தனவாக மதுரைக்காஞ்சி (467, 487) கூறும். ஆகவே, முற்சங்க காலத்தில் தானே தமிழ்நாட்டிற் புகுந்து வாழ்ந்து வந்த அருக சமயத்தினர் நாளடைவில் பெருகினர். கி. பி. 470–ல் வச்சிர நந்தி ஒரு ஜைன சங்கம் நிறுவி, தமது சமயத்தையும், சமயச் சார்பான நூல்களையும் பரவச் செய்தனர். கி. பி. 600 அளவில், வைதிக சமயத்தினரோடு முரண்பட்டு அவரோடு வாதுபுரிந்து வென்று தமிழ்நாட்டரசர்களும் தமது சமயத்தை மேற்கொள்ளச் செய்தனர். எனினும், பக்தியை அடிப்படையாகக் கொண்ட சமயங்களுக்கு முன் அருகசமயம் எதிர் நிற்றல் அரிதாய் முடிந்தது. தாம் அருமையாய் வளர்த்துக்கொண்டிருந்த நீதிநூற் கருத்துக் களால், தமது சமயத்தைத் தமிழ்மக்கள் போற்றலாம் என்று கருதினர். இக்கருத்திற் கிணங்கப் பிறந்தனவே கீழ்க்கணக்கு நூல்களுள் நீதிபற்றியன. வள்ளுவ ரொழிந்த ஏனைக் கீழ்க்கணக்கு நூலாசிரியர்கள் இக்காலப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். வள்ளுவர் மட்டும் கி. பி. முதல் நூற்றாண்டி

திருக்குறள்

னர் என்பர். இதற்குச் சான்று இவரது திருக்குறள் சிலப்பதிகாரத்திலும், மணி மேகலையிலும் எடுத்தாளப்பட்டுள்ளது என்பதே. ஆனால், இவ்விரண்டு காவியங்களும் மிகப் பிற்பட்ட காலத்தன. இது மேலே காட்டப்படும். வள்ளுவர் சுமார் கி. மு. 1250-ல், அதாவது 3200 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவர் என்ற ஓர் அரிய முடிபு கலைக் கதிரில் (சர்வதாரி; தை) வெளிவந்துள்ளது. ‘மலர்மிசை யேகினான்’ (அருகன், மகாவீரர்) தோன்றியதற்குச் சுமார் 750 ஆண்டுகள் முற்பட்டவர் வள்ளுவர் என்றல் வியப்பே! இவர் காலத்தைக் குறித்து ‘தமிழ்ச் சுடர் மணிகள்’ என்னும் எனது நூலில் ஆராய்ந்து எழுதியுள்ளேன்.

முதலாவது கீழ்க்கணக்கு நூல்களை நோக்குவோம். பொதுப்பட இந்நூல்கள் சங்க காலத்துக்குப் பிற்பட்டன. இவைசங்க காலத்தன என்பதற்குச் சான்றே இல்லை. களவியலுரை காரரின் கற்பனு சக்திகூட இவற்றைச் சங்க நூல்களில் உட்படுத்தவில்லை. இவற்றின் ஆசிரியர்களைப் பிற்சான்றோர்[1] என்று கூறுவது வழக்கு. எனவே இவர்கள் சங்ககாலத்துக்குப் பிற்பட்டவர்கள் என்பது தெளிவு. இவர்களது பெயர்கள் சங்கப் புலவர் வரிசையிற் காணப்படவில்லை. இன்னு நாற்பது இயற்றிய கபிலரும் களவழி நாற்பது இயற்றிய பொய்கையாரும் இப்பெயர்கள் கொண்ட சங்கப் புலவரினும் வேருவர். கபிலர் என்பதற்கு மாருக, கபிலதேவர் என ஒரு பிரதியில் காணப்படுகிறது. பொய்கையார். தஞ்சை விஜயாலயன் (850-875?) காலத்தவர். இது, களவழி கொண்டவன் தஞ்சை விஜயாலயன் எனக் குலோத்துங்க சோழன் உலாவின் பழைய உரைகூறுவதால் விளங்கும். பிற காரணங்கள், இன்னு நாற்பது, திரிகடுகம்-சிறுபஞ்சமூலம் இந்நூற்பதிப்புக்களிலுள்ள எனது முன்னுரைகளில் காணலாம்.

மேற்கூறியவையே யன்றி, கீழ்க்கணக்கு நூல்கள் பிற்பட்டன என்பதற்கு வேறு சான்றுகளும் உள. பழமொழிநூல் முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் அளித்தமை முதலிய சங்காலச் செய்திகளைப் பண்டைக் காலத்து நிகழ்ந்தன வாகக் கூறும்.

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க் கணி. (74)

1. தொல். செய்யுளியல், 158 பேரா, உரை; ஷை 175 நச். யாப். காரிகை 38, உரை

அன்றியும், சங்காலத்து இன்றி, பிற்பட்டு வழக்கில் வந்த மனுநீதிச் சோழன் வரலாற்றையும்[1] இந்நூல் பழங்காலத்து நிகழ்ச்சியாகவே கூறும்.

சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலைக் கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்ததனைத் தந்தையும் மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில் (242)

இங்ஙனமே கரிகாலன், பாரிமகளிர், பொற்கைப் பாண்டியன் முதலியோரைப் பற்றிய புதுக் கதைகளும் இதில் தோன்றியுள்ளன.

மேலும், வடமொழியிலுள்ள நியாயவசனங்கள் பலவும் இந்நூலில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஓர் உதாரணம்:

உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதாழ் இலங்கருவி வெற்ப, அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு (122)

अबुनि मज्जन्त्यलावूनि ग्रावाणः प्लवन्ते[2] ॥

இக்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றில் பிற்காலத் தமிழ் வழக்குகள் காணப் படுகின்றன. உன்னை (திணைமொழியைம். 36), ஆட்டை (= ஆண்டை: திணைமாலை. 141), போது (காணு எப்போதுமே கண்: திணைமாலை. 153), மரிசாதி (பழமொழி, 118) என்பன உதாரணங்கள்.

---

1. இவ்வரலாறு சோழநாட்டினனான எளாரா என்னும் சிங்கள அரசனைப்பற்றியதாக முதன்முதலில் மஹாவம்சம் (கி. பி. 5-ம் நூற்.) கூறும். Winternitz: Hisory of Indian Literature, Vol. II, p. 215.

2. Sabara Bashya 1, 1, 5; Bharatam, Sabha 44 end.

அன்றியும், வடமொழி ஸ்மிருதிகள் முதலியவற்றைக் கீழ்க் கணக்கு நூல்கள் தழுவியுள்ளன. ஆசாரக் கோவை முழுதும் ஸ்மிருதிகளைப் பின்பற்றியது. ஏலாதி(30, 31) அவைகளில் வரும் பன்னிருவகைப்புத்திரர்களை உணர்த்து கின்றது. இங்ஙனம் பல.

கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார் தோன்றிய காலத்தைக் குறித்துச் சிறிதும் ஐயுறவிற்கு இடமில்லை. இது பெருமுத்தரையரை இரண்டு செய்யுட்களிற் 200, 296) கூறுகிறது. முத்தரைய வம்சம் கி. பி. 7-ம் நூற்றாண் டின் இறுதியிலிருந்து 9-ம் நூற்றாண்டு முடிய ஆட்சி புரிந்துள்ளது. இரு செய்யுட்களிலும் பெரும்பிடுகு முத் தரையர் குறிக்கப் படுகின்றனர் எனக் கொள்ளலாம். இவரது காலத்தில் இச்செய்யுட்கள் தோன்றி, சுமார் கி. பி. 700-ல் நாலடி தொகுக்கப் பட்டுள்ள தெனத் துணி யலாம். ஏனைய கீழ்க்கணக்கு நூல்களும் இக்காலத்துக் குச் சற்று முன்பின்னாக, ஒரே காலப்பகுதியில், தோன்றின எனலே அமைவுடைத்து.

இனி, திருக்குறளை நோக்குவோம்.

இது சங்க நூல்களை எடுத்தாளுகின்றது :

விழவிற், கோடியர் நீர்மை போல முறைமுற
ஆடுநர் கழியுமிவ் வுலகத்து: புறம், 29; குறள், 332
ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தியில்லென :
புறம், 34; குறள், 110
குறித்து மாறெதிர்ப்பை: புறம், 333; குறள், 221
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே:
நற்றிணை, 32; குறள், 791
ஈர்மட் செய்கை நீர்படு பசுங்கலம்

பெருமழைப் பெயர்க் கேற்ருங்கு : நற்றிணை, 308; குறள்,660

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே : புறம், 278;குறள்,69

வில்லே ருழவின் : புறம், 371; குறள், 872

அருகிய சங்ககால வழக்குக்கள் குறளில் பெருகி வருகின்றன :

வினையடி முன்னிலையேவலாதல் : ஓம்பு 1149;
உரை 1151; விடு 1247

ஐ, ஆய்(முன்னிலை யேவல் விகுதி) : புலத்தை 1301 ;
சொல்லாயோ 1241

கள் (பலவின்பால் விகுதி) : 271, 347, 1045, 1100

அரோ : 1153, 1256, நற்றிணை, 145

கால் (வினையெச்ச விகுதி) : 14, 127, 301, 305; புறம், 311

வி, பி (பிறவினை விகுதி) : அறிவிப்ப, 1233; 938

சங்க இலக்கியங்களில் பயின்று வராமல், பிற்பட்ட தேவாரம் முதலிய பக்தி நூல்களில் காணப்படும் புதிய சொற்களும், புதிய சொல் வடிங்களும், புது வழக்குக்களும், புது விகுதிகளும், புதிய இடைநிலைகளும், புதிய உருபுகளும், புதிய அசைநிலைகளும், புதிய விகாரங்களும் திருக்குறளிற் காணப்படுகின்றன :

புதிய சொற்கள் :

ஒப்பாரி : 1071 ; ஒப்பாரியில்லாத வெம் அடலுளானை
(அப்பர். 5, 3, 1)

பட்டி : 1074 ; பட்டி யேறுகந் தேறி(அப்பர். 5 5, 1)

ஆராய்-தல் : குறள், 584, 586 ; என்னுக் கென்ருராய்வோம்
(அற்புதத்திருவந். 25)

பொச்சா-த்தல் : 199, 246, 285, 537

அவ்வி-த்தல் : 167, 169

சோகாப்பர் : 127 வீற்றிருத்தல் : 789

அமைச்சு : 381 மாடு : 400

கழகம் : 935 காரிகை : 571, 777, 1262, 1272

புதிய சொல்-வடிவங்கள் :

கள்ளம் : 1275; கள்ளமுள்ள வழிக் கசிவானலன் (அப்பர், 5, 82, 4)

போழ்து : 412, 539, 569, 930, 1229

வழுத்தினுள் : 1317

காதன்மை : 507; காதன்மை யென்னும் பாசம் (அப்பர். 4, 26, 7)

ஆனுல் : 53; தமக்கவர்தாஞ் சார்வரிய ரானுல் (நம்மாழ்வார் பெரிய திருவந், 9, எத்துணையு மாற்றப் பலவானுல் (நாலடி. 37)

அல்லால் : 7, 8, 16, 233, 235, 377, 406, 497, 515, 762, 1095 , 1188; பரவுநின் பாதமல்லாற் பரமநான் பற்றிலேனே (அப்பர். 4,63,7)

ஏனும் (எனினும்) : 430; ஆவுரித்துத் தின்றுழலும் புலேய ரேனும் (அப்பர். 6, 95, 10)

கொடு (கொண்டு) : 1264; காலனுருயிர், பண்டுகால் கொடு பாய்ந்த பரமனுர் (அப்பர். 5, 5, 8)

புது வழக்குக்கள்:

உணரா[1](எதிர்மறை வினையெச்சம்) : 1172; செய்யா : 203

---

1. உண்ணுவந்தான் என்பது இப்போழுது வழக்கினுள் உண்ணுவந்தான் என நடக்கும் என்றனர் இளம்பூரணர் (வினை, 31, உரை)

இருந்தேமா (இருந்தேமாக) 1312

கவ்விது : 1144 அருங்கேடன் : 210

புது விகுதிகள்:

கள் (உயர்திணைப் பன்மை) : பூரியர்கள் 919; மற்றையவர்கள் 263; 1075

ஆல் (வினையெச்ச விகுதி) : அற்ருல் 943, வாழவுற்ருல் (அப்பர். 4, 1, 3)

ஏல் (வினையெச்ச விகுதி): அல்லனேல் 386; இன்றேல் 556; உண்டேல் 368; செய்வானேல் 665; வல்லேயேல் 1118: யானேல் (அப்பர் 6,27,1)

கடை (வினையெச்ச விகுதி): 53, 230, 315, 372

மல் (எதிர்மறை யெச்சவிகுதி): சூழாமல் 1024; செய்யாமல் 101 313; துன்பே கவலே பிணியென்றிவற்றை நணுகாமற் றுரந்து கரந்து மிடீர் (அப்பர். 4,1,9)

கொடாமை வல்லராகுக எனப் புறத்திலும் (27), வரம் பறியாமை வந்தீண்டி எனப் பட்டினப்பாலேயிலும் (132), பாகத்தன் காணுமே பண்டு என அற்புதத்திருவந்தாதியிலும் (54), புக்கழுந்தி வீழாமே போதவாங்கி என அப்பர் தேவா ரத்திலும் (6, 84, 7) வருவனவற்றை நோக்கினல் 'மை' என்ற தொழிற் பண்பு விகுதி எச்சவிகுதியாயும் வழங்கிப் பின் இவ்விகுதி மே, மல் எனப் பிற்காலத்துத் திரிந்து வந்ததென விளங்கும்.

புதிய இடை நிலைகள்:

கில் (ஆற்றலுணர்த்துவது): 515, 1170; யார்காண்கிற்பார் சிலப். 16, 83,

ஆநின்று (நிகழ்காலம்) இறவாநின்ற 1157; படிறுமே பேசா நின்ருர் (அப்பர்) 6, 9, 3; சுரநனி வாராநின்றனள் (ஐங்குறு. 397)?

புதிய உருபுகள்:

மாடு (ஏழன் சொல்லுருபு) பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு 5, 188, 211, 995, 1054, 1110, 1199 அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம் (நாலடி. 2) மெய் பிரிந்தன்னவர் மாட்டு (கலித். 87)

பொருட்டு (நான்கன் சொல்லுருபு): 81, 256, 784; வென்றிப் பொருட்டால் (நாலடி. 315); உழுதசால்வழியே உழுவான் பொருட்டு (அப்பர். 5, 90, 8)

புதிய அசை நிலைகள்:

ஆம்: பணியுமாம், அணியுமாம் 978, 1270 ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை ஒருபால் உமையவளாம் என்றால் (அற்புதத். 41)

இருந்து: இழைத்திருந்து 530; துண்ணென்றெழுந்திருந்தேன் சொல்ல மாட்டேன் (அப்பர் 6, 13, 6)

இருப்பர்: விழைதகையான் வேண்டியிருப்பர் 804; (ஒரு சொன்னீர்மைத்து பரி. உரை)

புதிய விகாரங்கள்:

பெற்றத்தால்: 524; எத்தை நான் பற்றி நிற்கேன் (அப்பர். 4, 69, 1);

முன்னின்றானைப் பெற்றத்தாற் பெறுஞ் செல்வம் (கம்பன். குகப் 64)

திருக்குறளில் வரும் சில தொடர்கள், கருத்துக்கள், சொற்கள் முதலியன பிற கீழ்க்கணக்கு நூல்களில் வருவனவற்றோடு பெரிதும் ஒற்றுமையுடையன. சங்கநூல் வழக்கில் இவை காணப்படாமையும் இங்கு அறியத்தக்கது,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வார் பயன் தெரிவார் குறள்: 104; நாலடி; 344

கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்: குறள் 575; திரிகடு. 53

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்: குறள், 679; இனியவை. 18

கிழமையைக் கீழ்ந்திடா நட்பு: குறள், 801, இன்னா. 28

கொன்றன்ன இன்னா செயினும்: குறள், 109; நாலடி, 186

நாணுத்தாழ் வீழ்த்த கதவு: குறள், 1251; ஐந்திணையைம். 10

நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு: குறள், 782; நாலடி, 125

ஊதிய மன்றோ வுயிர்க்கு: குறள், 231; ஐந்திணையெழு,57

கூற்றங் குதித்தலும் கைகூடும்: குறள், 269; நாலடி, 6.

என்போடியைந்த: குறள். 73; நாலடி, 210

ஊராண்மை[1]: குறள், 773, நாலடி, 240, 384; ஐந்திணையெழு. 54; திரிகடு. 6; பெருங்கதை, 1-36-281, 2-7-74, 2-16-61; கலித். 89; திவாகரம், 9,56

ஒருவந்தம்: குறள், 563, 593: திணைமாலை. 103

அன்றியும், திருக்குறளுக்கும் பழமொழிப் பகுதிகள் பலவற்றிற்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ 1293

கெட்டார்க்கு நட்டாரோ இல்: பழ. 134

யானையால் யானை யாத்தற்று 678; பழ. 29

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் 319

முற்பகற் கண்டான் பிறன் கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்: பழ[2]. 46

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் 706

---

1. Ardhamagadhi उराल, औराल < Skt. उदार
2. ஒப்பிடுக: சிலப். வஞ்சினமாலை, 3-4

ஒளிப்பினும் உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்: பழ. 144

களவினலாகிய வாக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும் 283

தீயன ஆவதே போன்று கெடும்: பழ. 213

முதலிலார்க்கு ஊதியம் இல்லை 449

முதலிலார்க்கு ஊதியம் இல்: பழ. 232

பாம்போடுடன் உறைந்தற்று 890

ஓரறையுள் பாம்போடுடன் உறையுமாறு: பழ. 253

அச்ச முடையார்க்கு அரணில்லை 534

யார்க்கானும் அஞ்சுவார்க் கில்லை அரண்: பழ. 255

யாப்பினுள் அட்டிய நீர் 1093. பழ. 311

சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை. 57

நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்த லாகா. பழ. 336

தொட்டனைத் தூறு மணற் கேணி 396

இறைத்தொறு மூறும் கிணறு. பழ. 378

வெள்ளத் தனைய மலர் நீட்டம் 595

நீர்வரைய வாநீர் மலர். பழ. 379

மற்றுந் தொடர்ப்பா டெவன் கொல். பழ. 345

துறந்தார் தொடர்ப்பா டெவன் கொல். பழ. 395

அன்றியும், இவ் இரு நூல்களிலும் பல கருத்தொற்றுமைகள் காணப்படுகின்றன.

குறள்	137 = பழ.	15		குறள்	408 = பழ.	89
”	140 = ”	195		”	521 = ”	352
”	217 = ”	350		”	752 = ”	199

குறள்	363	=	”	273	”	759	=	”	196
”	372	=	”	228	”	879	=	”	286

இவற்றை யெல்லாம் நோக்கினுல் கீழ்க்கணக்கு நூல்கள் பொதுப்பட ஒரே காலப் பகுதியில் தோன்றின என்பத னேடு திருக்குறளும் அந்தக் காலப் பகுதியில்தானே தோன்றியதாதல் வேண்டு மென்பதும் வெளிப்படை.

வேறு சான்றுகளும் உள்ளன. தமிழ் மொழியின் சரிதத்தை உணர்ந்தார்க்குக் கால அடைவில் வட சொற்கள் அம்மொழியில் பெருகிக்கொண்டே வந்துள் ளமைபுலப்படும். சுமார் 750 மூலச் சொற்கள் உள்ள திருக் குறளில் சுமார் 150 சொற்கள் வடமொழிக்கும் பிராகிரு தத்திற்கும் உரியவை. எனது 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்ற நூலைக் காண்க (பக். 71-72). இவற்றுள் சில திருக்குறட் காலத்திலேயே புதியவாய் வழக்கிற் புகுந்தன என்று எண்ணுதற்கு இடமுண்டு. உதாரணமாக,

அகரம்	குறள்	1	அங்கணம்	குறள்	720	அதி	குறள்	636
அங்கம்	”	563	அமைச்சு	”	381	அவம்	”	266
ஆசாரம்	”	1075	ஆசை	”	266	ஆதி	”	1
கஃசு	”	1037	காரணம்	”	270	கழகம்	”	935
காமன்	”	1197	காரிகை	”	571	சிவிகை	”	37
நத்தம்	”	235	நாமம்	”	360	பகவன்	”	1
பாக்கியம்	”	1141	பூசனை	”	18	மந்திரி	”	639

இவ் வட சொல்—ஆட்சியே யன்றி, வட சொற்ருெடர் களும் வடமொழிக் கலவைச் சொற்களும், வடமொழிச் சொற்கள், தொடர்கள் முதலியவற்றின் மொழிபெயர்ப்புக் களும் திருக்குறளில் காணப்படுகின்றன.

வடசொற்ருெடர்கள்:

ஆதிபகவன்: 1

தானந்தவம்: 19

காமக்கணிச்சி: 1251

வடமொழிக் கலவைச் சொற்கள்:

ஒருவந்தம்: 563, 593

மதிநுட்பம்: 636

அதிநுட்பம்: 636

வடசொல், தொடர்களின் மொழிபெயர்ப்பு.

அறவாழி: 8 धर्मचक्रम्

பிறவிப்பெருங்கடல்: 10 संसारसागरम्

சேர்ந்தாரைக்கொல்லி: 306 आश्रयाशः

யான் எனது: 346 अहङ्कारः, ममकारः

காமம் வெகுளிமயக்கம்: 360 कामः, क्रोधः, मोहः

படை குடி கூழமைச்சு நட்பரண் 381:
स्वाम्यमात्यसुहृत्कोशराष्ट्रदुर्गबलानि

அறம் பொரு ளின்ப முயிரச்சம் 501;
धर्मार्थकामभयोपधा

பிரித்தல் . . பொருத்தல் 633 विग्रहं, सन्धि

உழையிருந்தான் 639 अमात्यः

வலியறிதல் அதி. 48 शक्तिदेशकालबलाबलज्ञानम्

இடனறிதல் „ 50

காலமறிதல் „ 49

இங்ஙனம் மொழிபெயர்த்ததேயன்றி, வடநூற் கருத்துக்

களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். உதாரணமாக அறத்துப்பாலில்

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (41)

இயல்பினன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை (47)

என்ற குறள்களில் நம் ஆசிரியர் நால்வகை ஆச்சிரமங்களி லுள்ளாரைக் குறிப்பிட்டு, அவர்களில் இல்லறத்திலுள்ள வன் ஏனை மூன்று நிலைகளிலு முள்ளார்க்குத் துணை யெனவும், அவனே தலை சிறந்தவனெனவும் கூறுகின்றனர். இக்கருத்து மனுதர்ம சாஸ்திரத்தில்[1] III, 78, உள்ளது. பஞ்சமகா யக்ஞங்கள்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை (43)

என்ற குறளில் குறிக்கப்படுகின்றன. இவைகள் மனு விலும் (III, 72) பாரதத்திலும்[2] (வன. 314, 59-60) உள்ளன. நீத்தாரது பெருமை தத்துவவுணர்வின் ஏதுவாக விளங்குமென்பது

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு. (27)

---

1. यस्मात्त्रयो ऽप्याश्रमिणो ज्ञानेनान्नेन चान्वहम् ।
गृहस्थेनैव धार्यन्ते तस्माज्ज्येष्ठाश्रमो गृही ॥

2. देवतातिथिभृत्यानां पितॄणामात्मनश्च यः ।
न निर्वपति पञ्चानामुच्छ्वसन् न स जीवति ॥

என்ற குறளிற் கூறப்படுகின்றது. இது சாங்கியகாரிகையில்[1] (22) உள்ளது. அவித்தை பிறப்பிற்குக் காரணமாகுமென்னும் தத்துவம்

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு (358)

என்ற குறளுல் சுட்டப்படுகிறது. இது பௌத்த ஜைன மதங்களிலும்[2] சங்கரரது மதத்திலும் காணப்படுவது. கல்லாதவர்களை

> உளர்என்னு மாத்திரையர் அல்லால் பயவாக்
> களர் அனையர் கல்லா தவர் (406)

என உவர்நிலத்துக்குக் குறள் ஒப்பிடுகிறது. இவ்வுவமை மனுவில்[3] (III, 142) கண்டது. இங்ஙனமே, கற்கக் கற்க அறிவு ஊறும் என்பதனை

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு (396)

எனத் திருக்குறள் நயம்பட ஒப்பிடுகின்றது. இவ்வுவமையும் மனுவில்[4] (II, 218) கண்டது. ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்கு மாறுபோல, ஒருவன் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்க வேண்டுமென்பதை

---

1. Das Gupta: History of Indian Philosophy I, pp. 251—252
2. do do I, pp. 84—89, 99—100
3. यथेरिणे बीजमुप्त्वा न वप्ता लभते फलम् ।
   तथानृचे हविर्दत्वा न दाता लभते फलम् ॥
4. यथा खनन्खनित्रेण नरो वार्यधिगच्छति ।
   तथा गुरुगतां विद्यां शुश्रूषुरधिगच्छति ॥

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (126)

என்று குறள் கூறுகின்றது. இது பகவத் கீதையில்[1] (II, 58) உள்ள ஒரு கருத்தாகும் 'கூர்மாங்க நியாயம்' என்று வடமொழியாளர் வழங்குவதில் இதுவும் அடங்கும். உண்மையான அந்தணரது இயல்பினை

அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான் (30)

எனக் குறள் தெளிவித்துள்ளது. இக்கருத்து மனுவில்[2] (XI, 35) காணப்பட்டதாம்.

சாணக்கியம், காமந்தகம்,[3] இவற்றிலுள்ள கருத்துக்கள் பல குறளில் உள்ளன.

அங்கங்கள் ஏழு (குறள். 381) காமந்தகம் 4, 1

வேந்தன் பொருள் (குறள். 756) காமந்தகம்.

ஒற்றர் இயல்பு (குறள். அதி. 59) சாணக்கியம்

தூதர் இயல்பு (குறள். அதி. 69) சாணக்கியம்

அமைச்சரைத் தேர்தல் (குறள். 501) சாணக்கியம் (அதி 1, அத். 10) அறுவகைக் குற்றம் குறள். 431, 432) காமந்தகம் 1, 57

ஆயுர்வேத நூற் கருத்துக்கள் குறளில் ஆளப்பட்டுள்ளன:

---

1. यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥

2. 'सर्वभूतमैत्रीप्रधानः ब्राह्मणः उच्यते'

3. தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெளிகளது துணிவு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறிய வாறு கூறுகின்றமையின்-பரிமேலழகர் (குறள் 662, உரை)

வளிமுதலா எண்ணிய மூன்று (குறள் 941) -சுசுருதம்.

வாத்ஸ்யாயனர் காமசூத்திரக் கருத்துக்களும் குறளில் வந்துள்ளன.

கண்டு கேட்டு (குறள் 1101) காமசூத்திரம் 1, 2; 11
ஊடி யிருந்தேமா (குறள் 1312) காமசூத்திரம் 6, 2, 15.

இவை திருக்குறள் பிற்பட்டதென்பதைப் பொதுவாக உணர்த்துகின்றன. குறள் வெண்பாவினைத் தொல்காப்பியர் 'குறுவெண்பாட்டு' என்றே கூறினர். இதற்குக் 'குறள்' என்ற பெயர் யாப்பருங்கலத்தில் உள்ளது; முந்து நூல் மேற்கோள் யாதும் இல்லை. எனவே 'குறள்' என்ற வழக்குப் பிற்பட்ட காலத்தது. காமந்தகம் கி. பி. 5-ம் நூற்றுண்டில் தோன்றியதென்றும் (பக். 463), காமசூத்திரம் சுமார் கி. பி. 500-ல் தோன்றியதென்றும் (பக். 469) துணிந்துள்ளார் ஆசிரியர் பெரிடேல் கீத். இவர் ஆங்கிலத்தில் எழுதிய வடமொழி இலக்கிய வரலாற்றை நோக்குக. இக்கால வரையறை பெரும்பாலார்க்கும் உடன்பாடே. எனவே, திருக்குறள் சுமார் கி. பி. 600-ல் இயற்றப் பெற்றதெனல் தெளிவாகின்றது.

தொல்காப்பியர் ஜைன சமயத்தினர். தென் திருவிதாங்கூரிலே விளவங்கோட்டுத் தாலுகாவிலுள்ள "அதங்கோடு" என்னும் ஊரிலேவாழ்ந்த ஓர் ஆசிரியரின் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. தொல்காப்பியரும் தென் திருவிதாங்கூர்ப் பிரதேசத்தில் பிறந்தவர் எனவும், பாண்டி நாடு சென்று பின் வதிந்தவர் எனவும் ஊகிக்க இடமுண்டு. இவரைப் பற்றியும், இவரது காலத்தைப் பற்றியும் எனது 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்னும் நூலில் விரிவாகஎழுதியுள்ளேன். சுமார் கி. பி. 500-ல் இவர் தமது பேரிலக்கணத்தை இயற்றியிருக்கவேண்டும் என்பது எனது துணிபு. இவர் பாணினிக்கும், பதஞ்சலிக்

கும் மனுவிற்கும் பிற்பட்டவர். கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்தை அறிந்தவர்; அந்த நூலின் இறுதியிற் காணும் முப்பத்திருவகை உத்தியையும் இவர் எடுத்தாளுகின்றார். பரதநாட்டிய சாஸ்திரத்தைத் தமது இலக்கணத்தில் நன்றாகப் பயன்படுத்தியுள்ளார். 'ஓரை' என்னும் கிரேக்கச் சொல்லை எடுத்து வழங்குகின்றார். வாத்ஸ்யாயனரது காமசூத்திரமும் இவர் அறியாததன்று. இக்காரணங்களை நோக்கிய அளவில் கி. பி. 500-க்கு முன்னர் தொல்காப்பியம் தோன்றியிருக்க முடியாதென்பது தேற்றம். இது பாணினீயத்திற்கு முற்பட்டது என்போர் காட்டும் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற பாயிரப் பகுதி அவர் கொள்கையை நிறுவும் வன்மையுடைய சான்றாக மாட்டாது. சங்க நூல்களுக்கெல்லாம் இந்நூல் முற்பட்டதெனலும் ஆதாரமற்ற கர்ணபரம்பரைக் கதையேயாம்.

கி. பி. 470-ல் நிறுவப்பட்ட வஜ்ரநந்தியின் சங்கத்தைக் குறித்து முன்பு கூறினேன். இச்சங்கத்தின் முதல் விளைவு தொல்காப்பியம் என்று கொள்ளலாம். ஜைனர்கள், தாம் வாழும் நாட்டுக்குரிய மொழிகளையும் இலக்கியங்களையும் நன்கு கற்று, தங்கள் வடமொழியுணர்ச்சியையும் பிராகிருதவுணர்ச்சியையும் நன்கு பயன்படுத்தி மொழிகளுக்குரிய இலக்கணங்களை வகுப்பதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். பெரும்பாலும் துறவுபூண்டு சங்கமாகக் கூடியிருந்து, மொழியாராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சி முதலிய பலவகை ஆராய்ச்சிகளைச் செய்து, மக்களது அறிவு பலவகையிலும் பெருகும்படியாக முயன்றவர்கள் இந்த ஜைனர்கள். கன்னடத்திலும், பிராகிருதத்திலும், வடமொழியிலும் பற்பல அறிவுத்துறைகள் பற்றி இவர்கள் செய்துள்ள நூல்கள் மிகப் பலவாம்.

மேற்கூறியவாறு நீதி நூல்கள் மூலமாயும், இலக்கணம் முதலிய நூல்கள் மூலமாயும் தங்கள் அறிவைப்

பரப்பி, தங்கள் சமயத்தையும் பொதுமக்கள் போற்றி வருமாறு செய்தற்கு ஜைனர்கள் முயன்று வந்தனர். ஆனல், உணர்ச்சி வேகத்தால் பக்தியியக்கம் மக்களை வசீகரித்ததுபோல், ஜைன சமயம் செய்ய முடியவில்லை. பக்தியியக்கம் புராணக் கதைகளால் வலிமைபெற்று விளங்கியதை நோக்கி ஜைனரும் புராணக் கதைகளைத் தமிழ்நாட்டிலே பரப்ப முயன்றனர். இம்முயற்சி காரணமாகவே பஞ்ச காவியங்கள் தோன்றத் தொடங்கின. ஆனல், ஜைனர்கள் இலக்கண இலக்கியம் முதலிய அறிவியல்—துறைகளிலே எப்பொழுதும் மிகவும் ஈடுபட்டவர்கள். இக் காரணத்தால் இவர்கள் இயற்றியன இலக்கிய நயம்மிகுந்து செந்தமிழ்ச் செல்வங்களாய் மிளிர்வனவாயின. ஜைனர்கள் மட்டுமேயன்றி, ஏனைத் தமிழ் மக்களும் இச்செல்வங்களைப் போற்றி வரலாயினர். இச்செல்வங்கள் தோன்றத் தொடங்கிய காலம் சுமார் கி. பி. 750 முதல் என்று சொல்லலாம். இப்பொழுது காவியகாலம் தமிழுலகில் பிறந்துவிட்டதாகக் கருதலாம். சுமார் நான்கு நூற்றாண்டுகட்கு மேலாக, காவியங்களே தமிழ்நாட்டில் செழித்துத் தலைமைபெற்று வந்தன.

3. காவியங்களின் வரலாறு

பண்டைத் தமிழகத்தில் பாணர் என்ற ஒரு வகுப்பினர் இருந்தனர். புறநானூற்றிலே,

> பாணன் பறையன் துடியன் கடம்பனென்று
> இந்நான் கல்லது குடியுமில்லை (335)

என வருவதனுல் இதனை அறியலாம். இவர்கள் குடியிருந்த சேரி பாண்சேரி எனப்பட்டது. மதுரையைச் சார்ந்த மருதநிலத்தில் இப்பாண்சேரி யொன்றிருந்ததெனத் தெரிகிறது. (மதுரைக்காஞ்சி, 268-9). மீன் பிடிப்பதும் பெரும் பாண். 284-6) மீனைத் திருத்துதலும் (மதுரைக். 268) இவர்கள் தொழில். இத் தொழிலில் வாழ்க்கை ஊக்கம் பெறமுடியாதல்லவா? ஆகவே, இவர்கள் சமுதாயப்படியில் மிகவும் கீழ்நிலையிலிருந்தனர் இவர்கள், பெண்டுபிள்ளைகளோடு கூட்டங் கூட்டமாய்க் குறுநில மன்னர் முதலிய ஆதரவாளர்கள் இருக்குமிடங்களுக்குச் சென்று, பாடியும் ஆடியும் பரிசில் பெற்று ஓரளவு இன்பவாழ்க்கை நடத்தினர். இவ்வாறு செல்லுகையில் பல சுரங்களைக் கடந்து போக நேரிடும் (புறம், 141). விறலியர் பின்வர, வள்ளல்களது புகழ் வரலாற்றைக் கேட்டுக் கேட்டுச் செல்லுவர் (புறம், 135) செல்லும் வழியில் இலந்தைச் செடிகளுள்ள வெளியிடங்களில் தங்கி, வரகுச் சோறும் தேனும் கலந்து, வாய்க்கு வந்தன பேசி உண்டு மகிழ்வர் (புறம்,34). இவர்களும் இவர்களுடைய சுற்றமும் மிக்க ஏழையர்கள்; பசியினுல் வாடி வருந்துதல் இவர்களுக்கு அடிக்கடி நேரிடும். பைதற் சுற்றம் (புறம், 212) என்றும் கடும்பினது இடும்பை (புறம், 173)

என்றும், இவர்கள் வறுமை குறிக்கப்படுகின்றது: யாரேனும் ஒரு குறுநில மன்னனையோ, அரசனையோ, அல்லது வள்ளலையோ அடைவர். மன்னன் முதலியோரும்.

பாணன் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக (மதுரைக். 749—750)

என்று அன்புடன் அழைத்து உபசரிப்பர். இவ்வுபசாரம் பெற்று, உபகாரிக்கு உரியவராகவே தம்மைக் கருதி 'நீர் யாவிர் பாணர்?' எனக் கேட்பின், உபகாரியின் பெயரைக் கூறிக்கொள்வர் (புறம், 141); (பெரும்பாண் 103). மன்னனை அடைந்ததும், பசியாறிய பின்பு அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாண்மகளிர் பாட, பாண்மகனும் பின்பாடுவன் (புறம், 11; பொருந. 47) இவரோடு உடன் சென்று பாடும் மகளிர் பாடினி (புறம், 11) எனவும், பாட்டியர் (மதுரைக். 749) எனவும், பாணிச்சியர் எனவும் பெயர் பெறுவர். இங்ஙனமே இவரோடு சென்று ஆடும் மகளிர் விறலியர் (புறம். 135) எனப் படுவர். இங்ஙனம் பாடி ஆடிய அளவில், அரசன் மகிழ்ந்து இவர்களுக்குப் பரிசில் நல்கி அனுப்புவன். தொண்டைமா னிளந்திரையன் பரிசில் நல்கும் சிறப்பு.

பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேரொக்கலொடு ஒருங்குடன் உடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் காப்புடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனு விருப்பிற் ருன்நின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்
ஆடுவண்டு இமிரா அழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக் கடல் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயர் றுளியின் மின்னு நிமிர்ந்தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளை கண்டன்ன வாலுளைப் புரவி
துணை புணர் தொழில் நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியும் அமையான் செருத்தொலைத்து
ஒன்னர்த் தெவ்வர் உலைவிடத் தொழித்த
விசும்புசெல் இவுளியோடு பசும் படைதரீஇ
அன்றே விடுக்கும் அவன் பரிசில்

(பெரும்பாண். 468—493)

என விரிவாகப் பெரும்பாணாற்றுப் படையிற் கூறப்பட்டுள்ளது. 'உடுத்து வந்த கந்தலை நீக்கி, மெல்லிய பூந்துகிலைத்தரிப்பித்து, அமுதம் போன்ற உணவைத் தானே அருகில் நின்று முறைபாராட்டி உண்பித்து, பாணர்க்குப் பொன்னாலாகிய தாமரைப்பூவைச் சூட்டுவித்து, விறலியர்க்குப் பொன்னரி மாலை கொடுத்து அணியச் செய்து, நான்கு குதிரைகள் பூட்டிய தேரையளித்து, மேலும் பல குதிரைகள் சம்மட்டியுடன் கொடுத்து காலம் நீட்டியாது சென்ற அன்றைக்கே விடை கொடுத்து அனுப்புவன்' என்கின்றார் புலவர். பாணர் களிறுகளைப் பரிசிலாகப் பெறுதலும் (மதுரைக். 102), பட்டுடை பெறுதலும் (பொருந. 155) பாண்மகளிர் பொன்தொடி முதலிய கனகாபரணங்கள்

(புறம், 244) பெறுதலும் உண்டு. இவர்களுக்கு விருந்து செய்வதில் மதுபானமும் காணப்படுகிறது.

பெறலருங் கலத்திற் பெட்டாங்கு உண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர

எனப் பொருநராற்றுப் படையில் (156-7) வருகின்றது. பாணர்கள் மண்டையென்ற உண்கலத்தில் கள்ளுண்ணுதலும் (புறம், 115) தாம் உண்ணு முன் வள்ளல் முதலினோர் பாணரை யூட்டுதற்கு விரைதலும் (புறம், 235) இப்பாணர்களுக்கு அவர்கள் காட்டிய இரக்கத்தையும் மரியாதையையும் புலப்படுத்துகின்றன. பாடினியும்சேர்ந்து கள் குடிப்பாள் (புறம், 361). வள்ளலது குடும்பத்தினர் அனைவரும் இங்ஙனம் விருந்து செய்வதில் மகிழ்ச்சி கொண்டனர்.

'மனையோள் பாணரார்த்தவும் கைதூவாள்' எனப் புறநானூற்றுச் செய்யுளொன்று (புறம், 334) கூறுகிறது. அரசனது நாளோலக்கத்தில் பாணர்க்கு இடம் கொடுக்கப் பட்டுள்ளது (புறம் 29).

இசைபெறு திருவின் வேத்தவை யேற்பத்
துறை பல முற்றிய பைதீர் பாணரொடு

என்பது மலைபடுகடாம் (39—40).

இவ்வாறெல்லாம் இவ் ஏழைகள் போற்றப்படுதற்குக் காரணம் யாது? இவர்கள் வள்ளல் முதலினோரைப் புகழ்ந்து பாடினமை மட்டும் காரணமன்று. இவர்களிடத்தில் ஓர் அரிய கலையிருந்தது. அது யாது என்றால், இசைக் கலையாகும். கண்டம், கருவி என்ற இருவகையாலும் இசைப்பயிற்சி இவர்களுக்கு உளதாயிருந்தது. கண்டத்தாற் பாடியவர்கள் பாடினிகள்; கருவியால் இசை வளர்த்தவர்கள் பாணர்கள். கருவியும் பேரியாழ் சிறியாழ் என்று

இருவகை யிருந்தன. வள்ளுயிர்ப் பேரியாழ் அமைவரப் பண்ணி (மலைபடு. 37—8) எனவும், சீறியாழ்ப்பாணன் (புறம், 70, 127) எனவும் வருதல் இதனைப் புலப்படுத்தும். குழல் முதலிய பக்கவாத்தியங்களோடு கூடியது பேரியாழ். இது

குழலினும் யாழினும் குரல்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும் பெறல் மரபிற் பெரும் பாணிருக்கையும்

என்று வரும் சிலப்பதிகாரப் பகுதியாலும் (5, 35-37). அதன் உரையாலும் விளங்கும். பக்கவாத்தியங்களுள் ஒரு கண்ணுள்ள பறை தனிப்படக் கூறத்தக்கது.

கயத்து வாழ் யாமை காழ் கோத்தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை (புறம், 70)

என இக்கிணை வர்ணிக்கப்படுகிறது இங்ஙனமாக, இசைக் கலையை வளர்த்துத் தம்மை இன்புறுத்தியமை பற்றிப் பாண்மக்களை அரசர்கள் பெரிதும் ஆதரித்தனர். மன்னர் வாழிடங்களில் வைகறை பாடுவோரும் பாணராயினர் (மதுரைக், 224, உரை). தங்கள் நாளோலக்கத்தில் இவர்கள் இடம் பெற்றமை முன்னரே கூறப்பட்டது. இவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அரசர் முதலினோர் வருவிருந்தயர்ந்தார்கள் (புறம், 326). தாமும் 'பாண் பசிப் பகைஞர்' (புறம். 180) எனவும், 'பாணர் நாளவை' (பதிற்றுப்: 38) எனவும், 'பாணர் புரவல' (பதிற்றுப். 65) எனவும் பாராட்டப் பெறுதலில் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். நெருங்கிய தொடர்பினால் மன்னர் முதலானோர்க்கு மெய்ச்சேவகராகும் நிலையும் இப்பாணர்க்கு உண்டாயிற்று. போரில் வேல், கேடகம் முதலியவற்றைத் தாங்கிச் சென்றனர்.

பாணன் கையது வேலே (புறம். 285)

என வருதல் காண்க.

இங்ஙனம் தலைவன் பொருட்டுத் தம் வாழ்வை அர்ப்பணம் செய்யும் நிலையை எய்தியவுடன், அவனது வாயிலாயமைந்து அவன் பரத்தை யொழுக்கம் முதலியவற்றிலும் பாணர்கள் உதவுவராயினர். (தொல். கற்பியல், 52; செய்யுளியல், 182) இத் தொழிலை யுணர்த்தும் செய்யுட்கள் அகநானூறு முதலியவற்றில் மிகப் பலவாயுள்ளன.

இப்பாண்மக்களுக்குள்ளே பெருஞ் சிறப்பு வாய்ந்த புலவரும் இருந்தனர். சங்ககாலத்தில் அதியமான் அஞ்சியுடன் பெரு நட்புப் பூண்டிருந்த ஔவையார், இவ்வினத்தைச் சார்ந்தவரென்று கொள்ள இடமுண்டு. இவ்வாறு கொண்டாலன்றி, நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தானை இவர் கோபித்துப் பாடியதாக அமைந்துள்ள புறநானூற்றுச் செய்யுள் (206) நன்கு விளக்கமுறாது. டாக்டர் சாமிநாத ஐயர் கூறும் கவிமரபு (புறநானூறு: பாடினோர் வரலாறு) இங்கே பொருந்தாது. பாண்சாதிப் புலவராகிய ஔவையார், பெருஞ்சேரலிரும் பொறையின் வேலால் எறியுண்டு அதியமான் இறந்தபொழுது பாடிய கையறு நிலைச் செய்யுளில் பாணர் புலவர்களைக் குறித்துக் கூறுவது நோக்கத்தக்கது:

அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்று வீழ்ந்தன்றவன்

அருநிறத் தியங்கிய வேலே (புறம். 235), சோகம் நிரம்பிய இப்பகுதியில் 'அழகிய சொல்லை ஆராயும்

நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவாளர்' எனப் புலவர்கள்குறிக்கப்படுகின்றனர். இவரே புலவராதலோடு பெரும்புலவர்களது அருங் கவிதைகளைக் கேட்டுப் பண்பட்ட மனத்தினர் என்பதையும் இவ்வடிகள் உணர்த்துகின்றன.

சங்ககாலத்தில் பாணர்க்கும் புலவர்க்கு மிடையே வேற்றுமை மிகச் சிறியதோ ரளவேயென்பதற்கு ஔவையார் சான்றுவர். இருவரையும் வேறுபாடின்றி ஒருப் போலவே மன்னர் முதலியோர் வரவேற்றனர் என்பது

பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக (749—750)

என மதுரைக்காஞ்சி கூறுவதனுல் அறியலாம். ஒரு சிறிது வேற்றுமை யுண்மை

பொருநர்க்காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்......
அடையா வாயில் (203—6)

என்ற சிறுபாணாற்றுப்படைப் பகுதியால் அறியலாம். பாணரைப் போலவே புலவரும் ஆற்றுப்படுத்தற்குரியரென்பது புறநானூற்றில் [48] புலவராற்றுப்படைச் செய்யுள் வருதலால் உணரலாம். இவரும் பொன்னணி முதலிய பரிசில் பெற்று வாழ்ந்தன ரென்பது

புலவர் பூண்கட னாற்றி (பெரும்பாண். 450)
புலவர் பூறுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
(புறம். 12)

என்று வருவனவற்றால் தெரிகின்றது. ஆனல் இப்புலவர்கள் பிறப்பினுல் அந்தணர் முதலிய பல வகுப்பினரையும் சார்ந்தாராயிருப்பார்கள். கபிலர் அந்தண சாதிப் புலவர்; இவர் தம்மைக் குறித்து.

... ... யானே
தந்தை தோழன் இவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே (புறம். 201)

எனக் கூறுகின்றார். வேற்றுமை மிகுதியும் இல்லையெனில், புலவர்கள் மன்னர்க்குத் தோழராயும், வேற்றரசர்கள் பால் செல்லும் தூதுவராயும், மன்னர் முதலியோர்க்கு அறிவுரை கூறுவோராயும் அமைந்தது எங்ஙனம் என்று ஐயுறலாம். இப்பெருமைகளெல்லாம் ஒரு சில புலவர்கள் தத்தம் அறிவாற்றலால் பெற்றுக் கொண்டனவேயொழிய வேறில்லை. புலவர் என்ற நிலையில் இவையேற்பட்டன வல்ல. எனினும் பண்டைக் காலத்தரசர்கள் புலவர்களைப் பெரிதும் மதித்து அவர்களால் பாடப் பெறுதல் அரிய பேறெனவும், பாடப் பெறாமை தமக்குப் பெரியதோர் இழுக்கெனவும் கருதினர்.

உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி எய்துப என்ப (புறம். 27)

எனவும்

உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக என் நிலவரை (புறம். 72)

எனவும் வருவன காண்க.

இந்நிலையில் மன்னன் முதலியோரது வீரச் செயல் முதலியவற்றைப் புகழ்ந்து பாடும் செய்யுட்களே தோன்றின. மன்னர்கள் இவ்வகைப் பாடல்களையே விரும்பினர். இசையுடனும் தனிப்பட்டும் பாடுதற்கமைந்த பாணரும் புலவரும் மன்னர்களையே சார்ந்து அவர்களையே நம்பி வாழ்ந்தமையால், அவரது வீரம்பற்றிய பாடல்களையே பாடுவாராயினர். சான்று யாதெனக் கேட்கலாம்: பத்துப்

பாட்டிலும், புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் வரும் ஆற்றுப்படைகளில் உட்பொதிந்த பொருள்களே தக்க சான்றாகும். இப்பொதி பொருள்கள் ஆற்றுப்படைகள் தோன்றிய காலத்திற்கு முற்பட்ட நிலையை உணர்த்துவன வாகலாம். இவை கவி மரபுகளாய்க் கால அடைவில் இறுகிவிட்டன. ஆற்றுப்படைகளும் மற்றைச் சங்கச் செய்யுட்களும் தோன்றிய சூழ்நிலை தனிப்பட ஆராயத் தக்கது. ஹோமர் என்ற கிரேக்க மகாகவி அவரது இலியத் காவியத்தில் வருணிக்கும் சூழ்நிலைகளும், இலியத் முதலி யன தோன்றிய சூழ்நிலைகளும் வெவ்வேறாகக் கொள்ளத் தக்கன என ஸி. எஸ். லியூயிஸ் என்ற ஆங்கிலப் பேராசிரி யர் தமது சுவர்க்க நஷ்டத்தின் முன்னுரையில் (பக். 12) கூறியுள்ளது இங்கே ஒப்பிடற்பாலது.

பாணர்களும் புலவர்களும் ஒப்ப மதிக்கப்பெற்ற சூழ் நிலையில் மன்னர் முதலியோரது வள்ளல்-தன்மை பெருகி யது. யாது வேண்டினும் வரையாது கொடுத்தலில் இம் மன்னர்கள் மகிழ்ச்சி கொண்டனர். வறுமையுளெல்லாம் வறுமை இரப்போர்க்கு இல்லாமையென ஓரரசன் கூறு கின்றான்

புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையானுறவே

என்பது புறம். (72). இரந்து கேட்டால் உயிரையும் கொடுப்பேனென வேறோர் அரசன் வீறுபேசுகின்றான்.

மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவ ராயிற் சீருடை
முரசு கெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினும் கொடுக்குவன்

என்பது பிறிதொரு புறப்பாட்டு [73]. இவ்வள்ளன்மை யால் இசைக்கலையும் கவிதைக் கலையும் வளர்ந்தன.

பாரியது நாடுங் குன்றும் பெறுதற்கு உபாயமாகக் கபிலர் பாடிய செய்யுள் இங்கே நோக்கத்தக்கது.

யானறிகுவெனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சிறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
காடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறம். 109)

இச்சூழ்நிலையில் இசைக்கலை வளர்தல் உறுதி. இவரது கவிதைக் கலையும் வளர்ந்தமை முரசு கட்டில் அறியா தேறிய மோசிகிரன் என்ற புலவனைத் தண்டித்தல் செய்யாது அவன் துயிலுணர்ந்து எழுமளவும் சேர அரசனொருவன் கவரி கொண்டு வீசியதாக அமைந்த செய்யுள் புலப்படுத்துகிறது:

அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉம் சாலுந்நற் றமிழ்முழு தறிதல் (புறம். 50.)

இங்கே நல்ல தமிழ் முழுவதும் அறிந்தமை கூறப்படுகின்றது. கவிதைக் கலையின் வளர்ச்சிக்கு இது தக்க சான்றாதல் காணலாம்.

வள்ளல்களாகவும் கலைகளின் கொள்கொம்பாகவும் மன்னர்கள் அமைந்ததற்கு முற்பட்டு இவர்கள் வீரப் பெரு மக்களாகத் திகழ்ந்தனர். புறநானூற்றில் பல செய்யுட்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.
பேகன்

கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான் பிறர் படைமயக்குறினே (புறம். 142)

எனப் புகழப்படுகின்றான். மாந்தரஞ் சேரலிரும்பொறை என்ற சேரவரசன்,

திறனறி வயவரொடு தெவ்வர் தேயஅப்
பிறர்மண் ணுண்ணும் செம்மல் நின்னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா அருமண் ணினையே
அம்பு துஞ்சும் கடியர ணால்
அறந் துஞ்சுஞ் செங்கோலையே (புறம். 20)

என்று கூறப்படுகின்றான். அரசன் தான் வீரனாயிருந்தமையினால் வீரமக்கள் பெருகுதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆமூர் மல்லன் என்ற ஒரு வீரனோடு ஓர் அரசன் மற்போர் புரிந்ததை வர்ணிக்கும் சேய்யுள் இது:

மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே...
பசித்துப் பணை முயலும் யானை போல
இருதலை யொசிய எற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே. (புறம். 80)

அதியமானது பெருந் திறலைக் குறித்து,

வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டிற்குத் துறையு முண்டோ?
எழுமரங் கடுக்கும் தாடோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே (புறம். 90)

என ஔவையார் பாடுகின்றனர். வீரர்கள் முதுகிற் புண்ணேற்றலைப் பழியென்று கருதினர்; இதனைப் 'புறப் புண்' என்பர் (புறம். 65, 66). மார்பில் தைத்து உருவின புண்ணும் புறப்புண்ணோடு ஒக்குமென்று கருதி நாணினர்.

மார்பிற் புண்ணேற்றுப் போர்புரிதலையே விரும்பினர். மார்பிற் புண்ணை 'விழுப்புண்' என்றல் வழக்கு.

இரும்பா ணொக்கற் றலைவன்பெரும் பூட்
போரடு தானை யெவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே (புறம். 233)

என வருதல் காண்க. வீர வாழ்க்கை 'வில்லேர் வாழ்க்கை' (புறம். 331) எனவும், 'வில்லேருழவு' (புறம். 371) எனவும் கொண்டாடப்பட்டது. போரில் மடிந்தோர்க்கு அவரது பீடும் பெயரும் எழுதிக் கல் நடுதல் மரபு. இக் கல்லினை மக்கள் வணங்கி வழிபடுவர்.

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை யறியாது
இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே (புறம். 264)

எனவும்,

நடுகற் கை தொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே (புறம். 306)

எனவும் வருதல் சான்றும். இச் செய்திகள் நிகழ்ந்த முற் சங்க காலத்தை, 'வீரயுகம்' (ஹிரோயிக் ஏஜ்) என்று நாம் குறிப்பிடலாம். 'வீரயுகம்' என்று குறித்த அளவில், இந்த யுகத்திற்குரியனவாய் கிரேக்க தேசத்து ஹோமர் செய்தவை போன்ற (எபிக்ஸ்) இதிகாசங்கள் இருத்தல் வேண்டுமென்று நினைத்தல் சரியன்று. இந்த யுகத்தில் இலியத் போன்ற இதிகாசங்களின்றி, கதைகளேயின்றி, குறுநில மன்னரை மரபு வழுவாமல் மீண்டும் மீண்டும்

புகழ்ந்து பாடும் செய்யுட்களே பல தேசத்தாரிடையிலும் உள்ளன. இங்ஙனம் ஆசிரியர் டபிள்யு. பி. கார் இதிகாசமும் காவியமும் (எபிக் அன்ட் ரொமான்ஸ்) என்ற தமது நூலிற் (பக். 13) கூறியுள்ளார். நமது தமிழ்நாட்டிலும் இவ்வாறேயுள்ளது. முற்சங்க காலத்தில் இதிகாசம் போன்ற பெருங்காவியங்கள் இருந்தன எனற்குச் சான்றில்லை. தகடூர் யாத்திரையைச் சிலர் கூறலாம். இதனைத் 'தொன்மை' என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தருதலால் இது சங்க காலத்து நூலாக மாட்டாது. தொல்காப்பியர் கூறும்.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கத முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர் (செய். 75, 79)

என்ற சூத்திரத்துள்ளுங் காவியம் காணப்படவில்லை. 'பாட்டு'என இச் சூத்திரத்துள் பொதுப்படவே கூறப்பட்டுளது. முற்சங்க வரலாறுபற்றிக் கதையளக்கும் இறையனார்களவியலுரையிலும் அவ்வரலாறுகளில் பெருங்காவியம் யாதுங் குறிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சங்க இலக்கியங்கள் சான்ருகும் அளவில், மேற்கண்ட முடிவே கொள்ளத்தக்கது. வீரயுகத்திற்கு உரியனவாகச் சில இயல்புகள் சாட்விக் பேராசிரியரால் தமது 'ஹீரோயிக் ஏஜ்' என்ற நூலில் (அதி. 15) கூறப்பட்டுள்ளன. அவையாவன:

1. புகழ்ச்சி விருப்பத்தை அடிக்கடி வெளியிடல்.
2. தாமே தனிப்படப் போர்புரியும் தனிச் சேவகத்தைப் பாராட்டுதல்.
3. தமது முந்தையோர் வீரத் திறங்களை வியத்தல்.

4. வமிசம் அற்றுப்போகுங் காலத்தும் பிற சமயத்தும் தம் உயர் குடிப் பிறப்பை எண்ணிப் பெருமைகொள்ளுதல்.
5. மன்னர் முதலியோர் தம் படையாளர்கள் ஊக்கமுறப் பேசுதல்.
6. மன்னரும் சேனுபதிகளும் "நாட்டுக்காக" அன்றி "மன்னன்" வெற்றிக்காகப் போரிடுதல்.
7. காதலியின் பொருட்டும், பழி வாங்குதற் பொருட்டும், வீரம் புலப்படுவதற் பொருட்டும் போர் புரிதல். இவையனைத்தும் முற்சங்க இலக்கியங்கள் சித்திரிக்கும் சமுதாயத்தில் உளவாதல் காணலாம்.

தனிப்பட்ட நிலையில் தமிழ்நாட்டரசரும் குறுநில மன்னரும் ஒருவரோடொருவர் போர்புரிந்து தமது தனிச் சேவகத்தைப் புலப்படுத்தி வந்தனர். இதனை

வேந்துடைத் தானை முனைகெட நெரிதலின்
ஏந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்கு
ஆழி யனையன் மாதோ (புறம். 330)

எனவும்,

செம்முது பெண்டின் காதலஞ் சிறா அன்
மடப்பா லாய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்கு நோயெல்லாந் தானா யினனே (புறம். 276)

எனவும்,

மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை
நடுகற் பிறங்கிய உவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்

குடியு மன்னுந் தானே கொடி யெடுத்து
நிறையழிந் தெழுதரு தானைக்குச்
சிறையுந் தானேதன் இறைவிழு முறினே (புறம். 314)

எனவும் வருவன நன்குணர்த்தும். ஆனால் இந்நிலைமை விரைவில் மாறிவிட்டது. வடவாரியர்கள் தென்னாட்டிற் புகத் தொடங்கினர். முதலில் வந்தவர்கள் வேதவேள்விகள் இயற்றும் அந்தண வகுப்பினர் என்று கருதலாம். தொகை நூல்களுள், முற்சங்க இலக்கியங்களுள், ஆரியரது கூட்டுறவு காணப்பெறாத நூல்களே இல்லை. சங்க இலக்கியங்கள் அனைத்திலும் இது காணப்படுகின்றது. இது நன்கு மனங்கொள்ளத் தக்கது. உதாரணமாக, புறநானூற்றில் 2-ம் செய்யுளில்

அந்தி யந்தணர் அருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியிலும் போன்றே

என வருகின்றது. ஒரு சோழன்,

செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
அறுதொழி லந்தணர் அறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கும் நாடன் (புறம். 397)

என வருணிக்கப்படுகின்றான், ஓர் அந்தணன் வேள்வியொன்று இயற்றிய வரலாறு 'நன்றாய்ந்த நீணிமிர் சடை' (புறம். 166) என்ற பார்ப்பன வாகைச் செய்யுளிற் காணலாம். வேள்வியந்தணர் மிகவும் போற்றப்பட்டனர் என்பது

கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்கு
அருங்கலம் நீரொடு சிதறி (புறம். 361)

என்றதனால் அறியலாம்.

ஈண்டெல்லாம் 'அந்தணர்' என்றது தமிழ்நாட்டிலுள்ள ஒரு மரபினரைக் குறிப்பதாம் என்று தற்காலத்

தார் சிலர் கூறுவர். இக் கூற்றைச் சரித்திரம் அறிந்தார் ஒப்புக்கொள்ளார்.

அந்தணரடைந்த பெருவெற்றி யென்று கூறத் தகுவது ஒரு பாண்டியனைப் பல யாகங்கள் இயற்றும்படி செய்து அவனைப் 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்ற பெயராற் சிறப்பித்ததும், (புறம். 15), ஒரு சோழனை இராஜசூய யாகம் புரியும்படி செய்து அவனை 'இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்ற பெயராற் சிறப்பித்ததும், (புறம். 16), பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்ற சேரனிடமிருந்து பாலைக் கௌதமன் தானும் தன் பத்தினியும் சுவர்க்கம்புகுதற்காக ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பெரும் பொருள் பெற்று, பின் அவனைத் துறவு பூண்டு காடுசெல்லும்படி செய்ததும் (பதிற்றுப்பத்து. 3 பதிகம்) ஆம். இவ்வுதாரணங்களிலிருந்து ஆரியரது கலைப்பண்பாடு தமிழ்நாட்டில், தமிழ சமுதாயத்தில், உயர்ந்த படியிலுள்ள அரசர் முதலிய பெருமக்களையே முதன் முதலாக வசீகரித்தது என்பது விளங்கும்.

இவற்றிற்கும் மேலாக தமிழ் நாட்டரசர்கள் பாரத வீரர்களுக்கு உறவு எனவும் கருதிவந்தார்கள். அருச்சுனன்[1] பாண்டியன் மகள் சித்திராங்கதையை மணந்தனன் என்ற வரலாறும் இதனை வற்புறுத்தும். 'பஞ்சவர்' (புறம். 158) 'சவுரியர்' (புறம். 3) என்னும் பெயர்கள் பாண்டிய மன்னர்களுக்கு வழங்கி வந்தமையால் இவ்வுறவு அறியப்படும்.

1. நீயே, தண் புனற் காவிரிக் கிழவனை இவனே......
செருமாண் பஞ்சவரேறே (புறம். 58)

---

1. அருச்சுனன்: இது போன்று வட நாட்டில் ஒரு கதையுண்டு. Assamese Literature (P. E. N.) p. 2. ஆராய்ச்சித் தொகுதி (மு. இராகவையங்கார்) பக். 72, 78.

2. நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற் றவிரா வீகைக் கவுரியர் மருக (புறம். 3)

3. வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கு முன்றுறை (அகம். 70)

4. கவுரியர் நன்னாட்டுள்ளதை (அகம். 342)

இங்ஙனமே ஐரோப்பிய அரசர்களும் பூர்வத்தில்தாம் திரோஜன் யுத்தத்திற் போர்புரிந்த வீரர்களது வழியில் தோன்றியவர்கள் என்று கருதினர் என்பர் ஆசிரியர் உவிண்டர்நிட்ஸ் (வால்யூம் 1, பக் 523, அடிக் குறிப்பு, 2).

பாணினியத்துக்கு வார்த்திகம் இயற்றிய காத்தியாயனர் தத்திதப் பெயர்களை விரித்துணர்த்து மிடத்து, 'பாண்டு என்னும் மரபினரின் வழித் தோன்றல்' அல்லது அம்மரபினரது நாட்டின் அரசன் என்ற பொருளில் 'பாண்டியன்' என்ற தத்திதத் திரிவு பெற்ற பெயர் வழங்கப் படல்வேண்டும் எனக் கூறினர் (வார்த்திகம்; பாணினி 4. 1, 168). 'சோட' என்ற சொல் தத்திதத்திரிவு யாதுமின்றி சோழ வமிசத்தினரையும் சோணாட்டு அரசரையும் குறிக்கும் என்றனர். கி. மு. 302-ல் சந்திரகுப்தமௌரியனது அரசவைக்குத் தூதராக வந்த மெகாஸ்தனீஸ் என்பவர் தமிழ்நாட்டைப்பற்றிச் சில எழுதியுள்ளார். அவர் எழுதியதன் சுருக்கம் பின்வருமாறு:

'பாண்டிய நாட்டினர் பெண்ணரசிகளால் ஆளப்படுகின்றனர். இவ்வரசிகளுள் முதலரசி ஹிராக்ளீஸின் (ஹெர்க்குலிஸின்) புதல்வியென்று சொல்லப்படுகிறாள். நைஸா நகரம் இப்பாண்டிப் பிரதேசத்திலுள்ளது எனக் கூறுவர். ஜுபிடரின் புண்ணியஸ்தலமாகிய மேரு மலையும் இங்குள்ளதாகவே கருதப்படுகிறது. இதன் குகை ஒன்றில் பாக்குஸ் வளர்ந்து வந்தனனென்று பண்டைக் காலத்து இந்தியர்கள் உறுதியாய் நம்பினர்.

'ஹிராக்ளீஸ் இந்தியாவில் ஒரு பெண்ணைப் பெற்றுப் அவளுக்குப் "பாண்டியா" என்று பெயரிட்டான். இந்தியாவின் தென்பகுதியாகக் கடல்வரையுள்ள பிரதேசத்தை அவளுக்கு ஆளக் கொடுத்து, அப்பிரதேசத்தை 365 கிராமங்களாகப் பகுத்து அவளது குடி-ஜனங்களை அக்கிராமங்களில் வசிக்கும்படி செய்தான். ஒவ்வொரு கிராமத்தாரும் வருஷத்திற்கு ஒருநாள் முறைவைத்து, அந்நாளில் அரசிக்குரிய இறைத்தொகையைக் கொண்டுவந்து செலுத்த வேண்டும். இவ்வாருக யாரேனும் முறைகாரர்கள் ஆண்டுமுழுவதும் அரசிக்குத் துணையாக இருப்பார்கள். முறைப்படி இறை செலுத்தத் தவறியவர்களை இவர்கள் தண்டித்துச் செலுத்தச் செய்வார்கள்.' இக்குறிப்புகளிலிருந்து பாண்டி நாட்டிற்கும், வட இந்தியாவிற்கும், அக்காலத்தில் தொடர்பு இருந்த தென்றும், பாண்டிநாடு குறித்த பல கதைகள் வடநாட்டிற் கேட்கப்பட்டு வந்தன வென்றும் அறியலாம்.

நிற்க, பாரத யுத்தத்தில் தமிழ் மன்னர்கள் இருதிறப் படைகளுக்கும் உணவு நல்கினர் என்றும் (புறம். 1) கூறி அவர்களது பூர்வோத்தரம் விளக்கினர். இவற்றையெல்லாம் பூர்வமக்கள் நம்பவும் செய்தனர். பாரதக் கதையும் சங்ககலாத்துத் தமிழ்நாட்டில் உலவி வரலாயிற்று. இதிகாசத் தகுதிவாய்ந்த அரும்பெருங் கதையொன்று முதன் முதலாகத் தமிழ் மக்களுக்குக் கிடைத்தது இப் பாரதம்தான். முற்சங்க இலக்கியங்களிலே காணும் பாரதம் பற்றிய குறிப்புக்களிற் சிலவருமாறு:

1. முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை (அகம். 233.)

2. காவெரி யூட்டிய கவர் கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழா அப் பல்வேறடிசில் (சிறுபாண்238-241)

3. போர்தலை மிகுத்த ஈ ரைம் பதின்மரோடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
அக்குர னனைய கை வண்மையையே (பதிற்று. 14)

4. அலங்குளைப் புரவியைவரொடு சினை இ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
(புறம். 2)

5. அறவோன் மகனே மறவோர் செம்மால் (புறம். 366)

6. ஈரைம்பதின்மரும் பொருது களத் தவியப்
பேரமர்க் கடந்த கொடிஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவி னைவர் போல (பெரும்பாண். 415—7)

இவற்றால் பாரதக் கதை எத்துணையளவு தமிழ் நாட்டிற் பரவியுள்ளது என்பது உணரலாகும். அடிசில் ஆக்குவதில் பீமபாக சாஸ்திரம் என்று வழங்குவதுகூட இங்கே காணப்படுகிறது. தருமபுத்திரன் என்ற பெயர்கூடத் தமிழ்மகனொருவன் பெற்றிருந்தமை புறம். 366-ம் செய்யுளால் வெளியாகின்றது. ஆனால் இக்காலத்தில் பாரதம் தமிழில் வடமொழி நூலைத் தழுவி இயற்றப்பட்டுள்ளதாக யாதொரு குறிப்பும் இல்லை. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகம், புறம், என்ற ஐந்து தொகை நூல்களிலும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று காணப்படுவது உண்மையே. ஆனால் இத் தொகைகளைத் தொகுத்தவரல்லர். அவர் வாழ்த்துச் செய்யுட்கள் புறநானூற்றில் தவிர ஏனையவற்றில் நூலுக்குப் புறம்பாக உள்ளன. புறநானூற்றின் அச்சுப் பிரதியில் 267, 268 எண்களுள்ள செய்யுட்கள் முழுதும் மறைந்துவிட்டன என்று சொல்லப்படுகிறது. மேலுள்ள செய்யுட்களும் பலவாறு சிதைந்துள்ளன. எனவே சுத்தமான பிரதி கிடைக்கவில்லை. புறநானூற்றிலும் பெருந்தேவனார் வாழ்த்து நூற்குப் புறம்பாகவே

இருத்தல் கூடும். இத்தொகை நூல்கள் தொகுக்கப்பெற்ற காலத்திற்குப் பின்னரே இவ் வாழ்த்துக்கள் சேர்க்கப் பெற்றிருத்தல்வேண்டும்.

பாரதம் இவ்வாருக, இராம சரிதம் பற்றிய குறிப்புக் கள் மிக மிகச் சிலவேயுள்ளன. முற்சங்க இலக்கி யங்களுள்,

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கு முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவிந்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே (அகம். 70)

என இராமன் தனுக்கோடியில் மந்திராலோசனை செய்த அரிய செய்தியைக் குறித்து அகநானூற்றிலும்,

தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன் மா விலங்கை (சிறுபாண். 119, 120)

என இலங்கையைக் குறித்துச் சிறு பாணாற்றுப் படை யிலும்,

கடுந்தெறல் இராம னுடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந் தாஅங்கு
(புறம். 378)

எனக் கலன்காண் படலச் செய்தியைக் குறித்துப் புற நானூற்றிலும்,

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற்
பொருந (மதுரைக். 40—42)

என அகத்தியர் இராவணனைக் கந்தர்வத்தால் பிணித்த

தொரு கதையைக் குறித்து மதுரைக் காஞ்சியிலும் வருவனவே நமக்குக் கிடைப்பனவாம். இறுதியிற் காட்டிய செய்யுட் பகுதியில் தென்னவன் கூற்றுவனைக் குறிப்பதாலுங்கூடும். நச்சினுர்க்கினியர் இவ்வாறு பொருள் கூறினும் அமையும் என்பர். அடியார்க்கு நல்லார் (சிலப். 12 இறுதி) 'தொன்முது கடவுள்' என்பதனேடொத்த 'மறைமுது முதல்வன்' என்பதற்கு 'பிரமன்' என்றும், அரும்பதவுரைகாரர் 'மாதேவன்' என்றும் பொருள் கொண்டுள்ளார்கள். எனவே ஐயப்பாட்டிற்கிடனின்றி மூன்று குறிப்புக்களே காணப்படுகின்றன. இவ்வாறு அருகி வருதலை நோக்கினுல், இராம சரிதம் முற்சங்க காலத்தில் அத்துணையாகப் பரவவில்லையென்பது விளங்கும். இதற்குரிய காரணம் ஊன்றி யாராய்தற்பாலது.

இங்ஙனம் வேள்விகள் முதலிய பற்பல உபாயங்களால் தமிழ்மக்களது உள்ளத்தைக் கவர்ந்த அந்தணர் ஒரு புறமிருக்க, அவரைப் பின்பற்றி வந்த ஆரிய மக்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தோடு பெருந்திரளாய் வரத் தொடங்கினர். இவர்களை எதிர்த்து ஓட்டும் பொறுப்பு தங்களைச் சார்ந்ததென தமிழரசர்கள் கருதினுர்கள். ஆரியப்படைகளைப் பல இடங்களில் போர்புரிந்தழித்தசெய்தி சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. ஒரு சேரன்,

> ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
> தொன்று முதிர் வடவரை வணங்கு விற்பொறித்து
> வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் (அகம். 396)

என்று குறிக்கப்படுகின்றுன். சோழர் படையொன்று வல்லம் என்ற இடத்திலே ஆரியர் படையை அழித்தது (அகம். 336). மலையன் என்பவன் முள்ளூரிலே ஆரியர் பலரை வேலினுல் வெருட்டி ஓட்டினுன் (நற்றிணை. 70). ஆனுல் எவ்வளவு முயன்றுலும், ஆரியரது மேல்வரவைத்

தடுக்க முடியவில்லை. வரவர, காலஞ் செல்லச் செல்ல, இவர்கள் கூட்டுறவு மிகுதியாய்ப் பெருகியுள்ளதென்று இலக்கியச் சான்றுகளும் பிற சான்றுகளும் உணர்த்து கின்றன. இவர்கள் தமிழ் மக்களோடு தமிழ்மக்களாய் கலந்து ஒன்றிவிட்டனர். தங்கள் கொள்கைகளினாலும், ஆசாரங்களினாலும், கலைப் பண்பாட்டினாலும் தமிழ் மக்களை முற்றும் வசிகரித்து விட்டனர். தங்கள் சமயத் தைத் தமிழ் நிலத்தில் நன்றாக வேரூன்றச் செய்தனர். இந்திரன், வருணன் முதலிய வேதத் தெய்வங்கள் தமிழ் நாட்டிலும் இடம்பெற்றன. தமிழ் நாட்டில் அநாதிகாலந் தொட்டு வணக்கம் பெற்று வந்த சிறு தெய்வங்களைத் தங்கள்தெய்வகோஷ்டியில் சேர்த்து ஒற்றுமை யுண்டுபண் ணினர்; தங்கள் நாற்குலப் பாகுபாட்டைத் தென்னாட்டி லும் கைக்கொள்ளச்செய்தனர். தங்கள் மணச்சடங்கு முத லிய வற்றைத் தமிழ் மக்களும் விரும்பி மேற்கொள்ளச் செய்தனர். இவை யிரண்டினாலும் தமிழ சமுதாயம் பலவகையில் சிர்திருந்தி நலம் பெற்றது. அரசருக்கு நிமித்திகராகவும், புரோகிதராகவும், மந்திரிகளாகவும் இவர்கள் அமைந்தனர். பதிற்றுப்பத்தில் குமட்டூர்க் கண்ணனார் தமது பாடற்குப் (2-ம் பத்து) பரிசிலாக உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயமாகப் பெற்று, முப் பத்தெட்டு ஆண்டுகள் தென்னாட்டு வருவாயில் பாகமும் பெற்றனர்; காப்பியாற்றுக் காப்பியனார் தாம் பாடிய நான்காம் பத்துக்குப் பரிசிலாக நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு பெற்று, அரசன் ஆண்ட நாட்டிற் பாக மும் பெற்றனர்; கபிலர் தாம்பாடிய ஏழாம் பத்துக்குப் பரிசிலாகச் சிறுபுறமென நூறாயிரம் காணம் பெற்று, நன்றா' என்னும் குன்றேறி நின்று அரசன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் அடைந்தனர். இப் பரிசில் வரலாற்றில் உயர்வு நவிற்சி (அதிசயோக்தி) மிக நிரம்பி யுள்ளதென்பது வெளிப்படை. எனினும் அந்தணர்கள்

தமிழ்நாட்டிற் பெற்றிருந்த ஆதரவினையும் கௌரவத்தையும் இவை நன்கு புலப்படுத்துகின்றன.

அரசர்கள் ஆரியரது உறவில் மகிழ்ந்ததுபோலவே தமிழ்ப்பொது மக்களும் நாளடைவில் அவர்களது வைதிக சமயநெறிகளில் ஈடுபட்டுப் பெரிதும் மகிழ்ச்சியெய்தினர். சமயச் சடங்குகளும் கிரியைகளும் மிக விரிவாய் அமைக்கப்பட்டன. வழிபாடு செய்யும் இடங்களும் அங்கங்கே தோன்றலாயின. கடவுளர் சரிதங்களும் புராண சரிதங்களும் கேள்வி வாயிலாக நாட்டிற் பரவலாயின. இச்சரிதங்களில் பொது ஜனங்கள் ஈடுபடுதல் முற்றும் இயற்கையே. சிவ சரித்திரங்களும் திருமால் சரித்திரங்களும் முருகன் சரித்திரங்களும் முக்கியத்துவம் அடைந்தன. வடநாட்டில் தோன்றிய கிருஷ்ண சரித்திரம் ஆண், பெண், இளையோர், முதியோர் முதலிய அனைவரது உள்ளங்களையும் திறை கொண்டது. தமிழ்நாட்டுப் பெருந்தெய்வங்களுள் ஒருவனாகக் கிருஷ்ணன் கொண்டாடப்பட்டான். இத்தெய்வப் பெயர் மாயோன் எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

மாயோன் மேய காடுறை யுலகமும் (அகத்திணை. 5) எனத் தொல்காப்பியர் கூறினர். இப்பெயர்க்கும் மாயன் என்ற பெயர்க்குமுள்ள ஒற்றுமை கிருஷ்ண சரித்திரத்தின் மீதுள்ள ஆர்வத்தை மிகச் செய்தது. இச்சரித்திரங்களால் பக்தி—இயக்கம் தமிழுலகில் வலிமை பெறுவதாயிற்று. பக்தி-இயக்கம் சுமார் கி. பி. 500 அளவில் தென்னாட்டில் தோன்றியது எனக் கொள்ளலாம். சுமார் கி. பி. 650 அளவில் இவ்வியக்கம் செழித்தோங்கித் தன் உச்ச நிலையை அடைந்தமை உறுதி. மகாபாரத மொழிபெயர்ப்பு ஒன்று இவ்வியக்கத்தின் ஓர் விளைவாகும். சின்னமனூர்ச்சாசனம் ஒரு மகாபாரத மொழிபெயர்ப்பைக் குறிப்பிடுகின்றது. இச்சாசனம் கி. பி. 10-ம்

நூற்றுண்டின் தொடக்கத்தில் வரையப்பட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வீரச் செயல் நினைவூட்டப்படுகின்றது.
பின்

மஹாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும்
மகாராஜரும்சார்வபௌமரும் மகிமண்டலங் காத்திகந்தபின்

என வருகின்றது. இதன் பின்னர்

வில்லவனை நெல்வேலியிலும் விரிபொழிற் சங்கரமங்கைப்
பல்லவனையும் புறங்கண்ட பராங்குசன் பஞ்சவர்தோன்றலும்

என்றஅடிகள் உள்ளன. இவ்வடிகள் சம்பந்தர் காலத்தவனை நெல்வேலி வென்ற நெடுமாறனைக் குறிப்பன. சம்பந்தர் சுமார் கி.பி. 625 முதல் 650 வரை வாழ்ந்தவராதலால், சாசனம் குறிக்கும் பாரதம் சுமார் கி. பி. 600 அளவில்— இயற்றப் பட்டிருக்கலாம்.

இக்காலம் பக்தி-இயக்கத்தின் உச்ச நிலைக்காலத் தோடு ஒத்திருத்தலால், இப்பாரத மொழிப் பெயர்ப்பு, இவ்—இயக்கத்தின் விளைவென்று கொள்ளுதல் மிகவும் பொருத்தமாம். தொல்காப்பியப் பொருளதிகார வுரையில் (சூ, 54)

பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரமு லாற்று தைஇ யோகியிற்
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முந்நீ முழங்கழற் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே

என ஒரு செய்யுளை நச்சினுர்க்கினியர் மேற்கோளாக ஆளுகின்றனர். இச்செய்யுள் மேற்குறித்த பாரதத்தைச்

சார்ந்ததெனக்கொள்ளலாம். வில்லிபுத்தூரருக்குமுன்பு ஒரு சில பாரதங்கள் தமிழிலிருந்தன. இவைபற்றிப் பின்னர்க் கூறுவேன். தமிழ்மக்கள் பாரத சரிதத்தில் எத்துணையளவாக ஈடுபட்டிருந்தன ரென்ப தொன்றே நாம் இங்கே நோக்குதற்குரியது[1].

முதற் பாரதத்துக்குச் சிறிது பிற்பட்ட காலத்தில் சுமார் கி. பி. 700-ல் ராம சரிதமொன்றும் தமிழில் இயற்றப் பட்டதென்று கருத இடமுண்டு. யாப்பருங்கல விருத்தியில், பரதம் பலவரில் பஃறொடைவெண்பா என்ற சூத்திரவுரையில் ஓர் இராமாயணம் குறிக்கப்பட்டுள்ளது. 1
நச்சினார்க்கினியர் ஓர் இராமசரிதச் செய்யுளை மதியுடம் படுத்தலாகக் குறித்துள்ளார். புறத்திரட்டில் ஆசிரிய 2
மாலைச் செய்யுட்களாகக் கொடுக்கப்பட்டவற்றுள் நான்கு செய்யுட்கள் இராமசரிதம் பற்றியன. நச்சினார்க்கினியர் குறித்துள்ளதும் புறத்திரட்டில் தொகுத்துள்ளனவும் பிறிதோர் இராமாயணத்தைச் சார்ந்தவையாக, இருக்கலாம். இந்நூலிலிருந்து உதாரணமாக ஒரு செய்யுள் தருகின்றேன்:

---

1. தென்னாட்டிலுள்ள பலகோயில்களில், வடமொழிப் பாரதம் வாசிப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த விவரம் சிலாசாசனங்களால் தெரியவருகிறது.

1. மாபாரதத்தினும் கைக்கூலி கொள்ளப்பெறார் (T. A. S. Vol II. p. 36, பாஸ்கர ரவிவர்மன் காலம், A. D. 978)
2. பாரதவிருத்தி (The Cholas Vol I. p. 595, 598)
3. பாரத ராமாயண வாசிப்பு (ibid. Vol II. p. 309, 464, 468)

நாட்டுப்புறங்களிலுள்ள சாதாரணமக்கள் பாரத அம்மானை வாசிப்பதிலும் கேட்பதிலும் மிக்க விருப்பமுடையவர்களாயிருந்திருக்கிறார்கள்.-S. D. P.

மேலது வானத்து மூவா நகரும்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
கொள்ளை சாற்றிக் கவர்ந்து முன்தந்த
பல்வேறு விழுநெதி யெல்லாம் அவ்வழிக்
கண்ணுதல் வானவன் காதலி யிருந்த
குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
தோலாத் துப்பிற் றுணிமழல் வாழ்க்கை
வலம்படு மள்ளற்கு வீசி இலங்கையில்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை அரக்கர் கோவே.

(புறத்திரட்டு, 1343)

பாரதம் போலவே, ஆனால் அதற்கு அடுத்தபடியாக முற்காலத்தில் இராமசரிதமும் பெருவழக்காயிருந்தது. கம்பனுக்கு முன்பாக ஒரு சில இராமாயணங்கள் தோன்றியமைக்கு மேற்கூறியது தக்க சான்றாகும்.

இங்ஙனமாக அந்தணர்களாலும், அவர்கள் வழி நின்ற அரசர்களாலும், அவர்களுடைய சீலாசாரங்களாலும் அவர்களது கல்விப் பெருமையாலும் வைதிக சமயம் மேம்பாடுற்று விளங்கியது. ஆனால் வேறு சமயங்கள் சிலவும் வைதிக சமயத்தோடு இகலிப் போட்டியிட்டு நின்றன. இவற்றுள் மிக முக்கியமானது ஜைன சமயமாகும். ஜைனர்களும், அந்தணர்களைப் போலவே, சீலாசாரங்களை வற்புறுத்தி வந்தனர். ஒழுக்க நூல்கள் பலவற்றை இயற்றியவர்களும் இவர்களே. கல்வித் துறைகள் பலவற்றிலும் பேரார்வங்கொண்டவர்கள்; அவை பற்றிப் பெருநோக்கு உடையவர்கள். தங்கள் சமயத்தை அனைவரும் கைக்கொள்ள வேண்டுமென்றும், கல்வித் துறைகள் பலவற்றையும் செழிக்கச் செய்து அவற்றை மக்களிடையே பரப்புதல் வேண்டுமென்றும் கொண்ட கொள்கையினர். இவற்றின் பொருட்டுத் தன்னலமற்ற துறவொழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகி வந்த

வர்கள். இவ்விரண்டின் பொருட்டும் தம்மையே அர்ப்பணம் செய்தவர்கள். பொதுமக்களைத் தங்கள் கல்வி முதலியவற்றின் பெருமையினாலும், அரசர்களைத் தங்கள் வாத வன்மையினாலும் மந்திரங்களினாலும் தங்கள் சமயத்தைத் தழுவச் செய்தனர். ஞானசம்பந்தர், அப்பர் இவர்கள் காலத்தில் பாண்டியனும் பல்லவ அரசனும் முதலில் சைனர்களாயிருந்தமை இவர்களது சமய வெற்றியை நன்கு உணர்த்துகிறது. இவர்களுக்கும் அந்தணர்களுக்கும் கொள்கையிற் பல வேறுபாடுகள் உண்டு. இரண்டு வேறுபாடுகள் சிறப்பாகக் கூறத்தக்கன. முதலாவது வேத வேள்வியை ஜைனர்கள் ஒத்துக்கொள்ளவில்லை; அதனை நிந்தனை செய்தார்கள்.

> வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
> ஆத மில்லி யமணர்

என்றனர் ஞானசம்பந்தர். இரண்டாவது, பிறப்பினால் மக்களுள் வேற்றுமையில்லை யென்றனர்.

> பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்,சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமையால்

என்றனர் வள்ளுவர். ஆனால் வெகு விரைவில் ஜைனர்கள் பிறப்பினால் மக்களுள்ளே உயர்வுதாழ்வு உண்டு என்ற கொள்கையை மேற்கொண்டு விட்டனர். முற்பிறப்பும் மறுபிறப்பும் உள்ளன என்று கருதுவார் பிறப்பினால் வேற்றுமையை ஒத்துக்கொண்டே தீரவேண்டுமென்பதை எளிதில் உணரலாம். ஆயினும் உயர்ந்த குலத்தினராகக் கருதப்பட்ட அந்தணர் சாதியைச் செவ்விய ஒழுக்கத்தால் ஒருவன் எய்துதல் கூடுமென்றனர்.

> அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்

என்பது திருக்குறள்.

மேலே குறித்த இரண்டு வேறு பாடுகளினாலும், இலக்கியம் பெற்றுள்ள வேறுபாடுகளை நாம் இங்கே

கவனித்தற்குரியன. வேத வேள்வியின் சிந்தனையும் ஒழுக்கமும் அவைபற்றிய கதைகள் பலதோன்றுவதற்குக் காரணமாயின. கதைகளின் சிருஷ்டி தத்துவத்தை இயக்கி வந்த ஆற்றல்சான்ற சக்திகளாக இவை பரிண மித்தன. இவை முற்றுப் பெறுவதே கதைகளின் நோக்க மாகவும் அமைந்தது; கதைகளின் உட்பொதி பொருளும் இவை தாமேயாக முடிந்தது. யசோதர காவியத்தின் கதையை ஈண்டு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இக்கதை வேள்வியில் உயிர்ப் பலி கொடுத்தலைப்பற்றித் தோன்றிய தாகும். நீலகேசிக் கதையும் பிடாரிக்கு உயிர்ப்பலி கொடுப்பதனோடு தொடுத்து வைக்கப் பெற்றுள்ளது.

பல பிறப்புண்மையும், கரும விளைவுக் கொள்கையும் நமது தேசத்திலுள்ள சமயங்களனைத்திற்கும் பொதுப் பட உரியனவே. ஆனால் ஜைனர்கள் தருக்க நுண்ணறிவு பெரிதும் படைத்தவர்கள். இவர்களுடைய சப்தபங்கி நியாயம் இதற்குச் சான்று. காரணம் உண்டேல் காரியம் உண்டு. நம் கண்ணெதிரில் நிகழும் காரியங்களுக் கெல்லாம் முற் பிறப்புக்களில் காரணங்கள் இருத்தல் வேண்டும். இக்காரணங்களை நுட்பமாகக் கூறுதலும், முற்பிறப்புக்களின் நிகழ்ச்சிகளை நுண்ணிதாக உணர்த்து தலும், கர்ம பலன்களை அநுபவித்தற்கு வேண்டும் லோக விபாகங்களைக் கடைபோக அறிவித்தலும்: இவை முதலி யன ஜைன நூல்கள் மேற்கொண்ட நோக்கங்களாகும். இவை பற்றிக் கூறுத ஜைனக் கதைகளே இல்லையென்று கொள்ளலாம். எனவே இவையும் கதைகளின் உட் பொதி பொருளாகவும், இடையிற் கலந்துவரும் பொரு ளாகவும் அமைந்துவிட்டன.

பிறப்புக்கள் பற்றிய இக் கொள்கைகளால் வேறொரு விளைவும் உண்டாயிற்று. உபகதைப் பெருக்கம் இதனால் விளைந்தது.

ஒன்றுக்குள் ஒன்ருகவும் கதைகள் பெருகின. பஞ்ச தந்திரக் கதைகள் இம்முறையைப் பின்பற்றி அமைந் தனவே. ஒரு சிறிய உதாரணம் தருகிறேன். 'நாய் தேவனுயிற்று' என்று இலக்கணங்களில் உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வரலாறு குணமாலையார் கதையில் வருதல் பலர்க்கும் ஞாபகமிருக்கலாம். சிந்தா மணியில் 934 முதல் 960 முடியவுள்ள செய்யுட்களேக் காண்க. சீவகன் நீர் விளையாட்டணி காணச் சென்றனன். அங்கே அந்தணர்க்கு ஆக்கிவைத்த சோற்றுத் திரளில் ஒரு நாய் வாய் வைத்துவிட்டது. அவர்கள் அந் நாயை அடித்து ஓட்ட, அது ஓடி ஒரு குளத்தில் விழுந்துவிட்டது. அப்போது ஒரு கட்குடியன் வந்து தன் நாயைக் கொன்றுவிட்டதாகக் கூறிக் கலகம் விளைத்தனன். சீவகன் கலகத்தைத் தீர்த்து வலியற்றுக் குற்றுயிராய்க் கிடந்த நாயைக் கண்டதும் கண்ணீர் விட்டுப், பஞ்ச நமஸ்கார மந்திரத்தை நினைத்தால் தெய்வ உடம்பு எய்துவாய் என்று கூறி, அம் மந்திரத்தை அதன் செவியில் ஓதினன். ஓதியதும் நாயுடம்பு நீங்கித் தெய்வவுடம்போடு ஓர் அமரன் தோன்றினன். அவன்தான் சுதஞ்சணன் என் னும் வித்தியாதர வேந்தன் என்றும், தனக்குச் செய்த நன்றிக்குச் சீவகன் இடுக்கணுற்றபொழுது நினைத்த வுடன் தான் வந்து உதவுதல் உறுதி என்றும் கூறி விடை பெற்று மறைந்தான். இது குணமாலையாரிலம்பகக் கதையில் பிறப்புப் பற்றிய ஓர் உட்கதை. இவ்வகை உட்கதையின் உட்கதையாய் வருவன ஸ்ரீபுராணத்தில் பல காணலாம்.

தருக்கத்தில் ஜைனர்கள் சிறந்து விளங்கினர்கள் என்று மேலே கூறினேன். வாத நூல்கள் பலவும் இவர் கள் இயற்றினர்கள். பொதுவாக இந்நூல்கள் பலவும் கற்போர்க்குக் கடினமாயும் சுவை முதலிய நயங்கள் ஒன் றேனுமில்லாதனவாயுமிருப்பது இயல்பு. இவற்றில் இந்

நயங்களை எதிர்பார்ப்பது மலட்டுப் பசுவைக் கறந்து பால் பருக நினைப்பதுபோலத்தான். ஆனால் இவற்றிலும் ஜைனர்கள் இலக்கியச் சுவையை உண்டுபண்ணினர்கள். இவ்வகை நூல்கள் எத்தனையோ முற்காலத்தில் இருந்தன. தற்போது எஞ்சி நிற்பது நீலகேசித்தெருட்டு ஒன்றே. இதனை நோக்கினால் கதையென்ற அளவில் சுவையற்றதாகிய ஒரு பொருளை எடுத்துக்கொண்டு பலவகைச் சுவைகளையும், வர்ணனைகளையும், அலங்காரங்களையும் புகுத்தி இலக்கியமாக அமைக்க வல்லவர்கள் ஜைனர்கள் என்பது விளங்கும். நீலகேசித் தெருட்டின் பூர்வபட்ச நூலாகவுள்ளது குண்டலகேசி என்ற பௌத்த நூல். அதாவது குண்டலகேசியின் வாதத்திற்கு மறுப்பாகத் தோன்றியது நீலகேசி. இதனால் வாத நூல்களை இலக்கியமாக அமைக்கும் முறையில் பௌத்தர்களும் வல்லவர்களாயிருந்தமை புலப்படும்.

தருக்கத்திற்போலவே, இலக்கணம் அலங்கார முதலிய துறைகள் பலவற்றிலும் ஜைனர்கள் பயிற்சிபெற்றுப் பேராற்றல் வாய்ந்தவர்களா யிருந்தார்கள். இவற்றால் இவர்களது மொழியுணர்ச்சியும் இலக்கிய உணர்ச்சியும் பெருஞ்சிறப்பு எய்தின. வடமொழி, பிராகிருதம் முதலிய பன்மொழியறிவும் இவர்களுக்குப் பெருமையளித்தன. இம் மொழிகளிலும் தமிழிலும் இலக்கணங்கள் பலவற்றை இவர்கள் இயற்றினர்கள். தமிழ் மொழிக்கு விளக்கு என்று போற்றப்படும் தொல்காப்பியப் பேரிலக்கணத்தைச் செய்தவர் ஒரு ஜைனர். யாப்பருங்கலத்தையும் அதன் அருமையான விருத்தியுரையிற் காணப்படும் இலக்கணங்களில் பெரும்பாலானவற்றையும் இயற்றியவர்கள் இவர்களே. இவ் விலக்கணக் கல்வியை நன்கு பயன்படுத்தி இலக்கியத்தை ஒரு தனிப்பட்ட கலையாகச் செய்த பெருமை ஜைனர்களுக்கே உரியது.[1]

1. தமிழ்ச்சுடர்மணிகள் பார்க்க.

இவ்வகை இலக்கிய முயற்சியிலே முதலாவதாக, பெரும்பாலார் கற்றுவந்தவையும் வடமொழியிற் பிரசித்த மாகவழங்கியவையுமான கதைகளை எடுத்துக்கொண்டு அவற்றை இலக்கியமாகப் புனைந்தனர்; இதில் தங்கள் சமயக் கொள்கைகளையும் இடையிடையே அமைத்துச் ஜைன சமயத்தையும் இவர்கள் பேணுவாராயினர். தமிழி லுள்ள பெருங்கதை என்ற பேரிலக்கியம் இங்ஙனம் அமைக்கப்பட்டதொன்றே. உதயணன் கதையெனவும் இது வழங்கும். இதன் பெருமையைக் குறித்து ஒரு புலவர்,

> திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
> விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
> கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
> எங்கெழிலன் ஞாயி றெமக்கு

என்று கூறினர். 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத் தின் இடைச் சங்கத்து......பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை' என்றனர் அடியார்க்கு நல்லார். இதனை இயற்றியவர் கொங்குவேளிர் என்ற பெரும் புலவர். இப் புலவர் கொங்குநாட்டு விசயமங்கலத்தில் வாழ்ந்தவர். பைசாசி மொழியில் குணாட்டியர் என்பவர் செய்த பிருகத் கதையைக் கங்க அரசனான துர்விநீதன் வடமொழியில் மொழிபெயர்த்தியற்றினன் என்பர். துர்விநீதனது மொழிபெயர்ப்பே தமிழ்ப் பெருங்கதையின் மூலமென்று கருதப்படுகிறது. இவ்வரசனது ஆட்சியின் தொடக்கம் கி. பி. 6-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி யாகும். இவன் மொழிபெயர்த்தியற்றியது சுமார் கி. பி. 600 என்று கொள்ளலாம். இம் மொழிபெயர்ப்புப் பிர சாரமெய்திய பின்னரே தமிழ் மொழிபெயர்ப்பு இயற்றப் பட்டிருத்தல்கூடும். தமிழ்ப் பெருங்கதையில்

வல்லுந ளல்லேன் நல்லோய் நானென (3, 14, 251)

என்று வருகின்றது. இங்கே 'நான்' என்றது பிற்கால வழக்கு. இதுபோன்றே.

இப்படி நிகழ்ந்த காலை (3, 27, 116)

என்ற அடியில் 'இப்படி' என்றதும் பிற்கால வழக்கு. இப் பிற்கால வழக்குக்களேயன்றி, திருக்குறள் முதலிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களின் கருத்துக்கள் இந் நூலில் வந்துள்ளன.

நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனிய பண்புடைக் கிழமை (5, 7, 148—9)

என்ற அடிகள்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

என்ற குறளைப் பின்பற்றியது.

வான்மயிர் துடக்கிற் றனுயிர் வாழாப்
பெருந்தகைக் கவரியன்ன பீடழிந்து (உஞ்சைக். 35, 234—5)

என்ற அடிகள்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்ற திருக்குறளை நோக்கின.

மாரியும் திருவும் மகளிர் மனமும்
தக்குழி நில்லாது பட்டுழிப்படுமெனும் கட்டுரை
(உஞ்சைக். 35, 156—8)

என்ற அடிகள்

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின் வேறல்ல—புதுப்புனலும்
மாரி யறவே யறுமே அவரன்பும்
வாரி யறவே யறும் (நாலடி, 370)

என்ற நாலடிச் செய்யுளைக் கருதின. இங்ஙனமே

உட்கும் நாணும் ஊரா ணொழுக்கமும்
கட்கின் கோலமும் கட்டிரையாகா

(இலாவாண. 7, 74—75)

என்ற அடிகள்

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையா ளூரா ணியல்பினள்

என்று வரும் நாலடிச் செய்யுளைப் (384) பின்பற்றின. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, சுமார் கி. பி. 750-ல் பெருங்கதை தோன்றியிருக்கலாம் என்று கொள்ளலாம். இவ்வரிய நூல் முற்றும் கிடையாதது நமது துரதிர்ஷ்டமே. இலக்கியச்சுவை இதில் நிரம்பியுள்ளது. பந்தடித்தலை இந் நூல் வருணிக்குந் திறத்தை இங்கே காட்டுதல் தகும்.

சுழன்றன தாமம்; குழன்றது கூந்தல்;
அழன்றது மேனி; அவிழ்ந்தது மேகலை;
எழுந்தது குறுவியர்; இழிந்தது சாந்தம்;
ஓடின தடங்கண்; கூடின புருவம்;
அங்கையி னேற்றும் புறங்கையி னோட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்
இடையிடை யிருகால் தெரிதர மடித்தும்
நித்திலக் குறுவியர் பத்தியிற் றுடைத்தும்
பற்றிய கந்துகம் சுற்றுமுறை யுரைத்தும்
தொடையுங் கண்ணியும் முறைமுறை இயற்றியும்
அடிமுதல் முடிவரை இழைபல திருத்தியும்
படிந்தவண் டெழுப்பியும் கிடந்தபந் தெண்ணியும்

ஆழியென உருட்டியும் தோழியொடு பேசியும்
சாரிபல ஓட்டியும் வாழியென வாழ்த்தியும்...
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணாயிரங்கை யேற்றின ளேற்றலும்

(4, 12, 225—245)

என்ற அடிகளைக் காண்க. மொழியின் அழகும், அகவற் பாவினை ஆளுந் திறமும், பொருளுக்கேற்ற ஓசை வேறு பாடுகளும், பந்தாடுதலின் பகுதி ஒவ்வொன்றினையும் நுட்பமாக அறிவுறுத்திக் கற்பவர் உள்ளத்தில் ஆழ்த்தும் பாவனை மேம்பாடும், பெரிதும் இன்புறுத்தத் தக்கன. காதிகர்மம், பஞ்சமந்திரம், அராந்தாணம், பவணலோகம், சோதிடர் விமானம் முதலிய ஜைனசமயக் கூறுபாடுகளை நூலகத்தே அமைத்தலில் ஆசிரியர் பெருவிருப்புடையரே யெனினும், அவை கதையின் செவ்விய ஒழுக்கில் ஆழ்ந்து அடங்கியுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கது. இந்த அமைப்பின் இலக்கியச் சிறப்பு மேருமந்தர புராண முதலியவற்றை நோக்கினால் எளிதிற் புலனாகும்.

கொங்குவேளிரின் பெருங்கதையைப் போலவே, வேறொரு நூலும் குணாட்டியரது பெருங்கதையைத் தமிழில் அமைத்துள்ளதெனச் சமீபத்தில் நான் செய்த ஆராய்ச்சியால் விளங்கிற்று: யாப்பருங்கலத்தில் (பக்கம் 350) 'குடமூக்கிற் பகவர் செய்த வாசுதேவனார் சிந்தம்' என ஒரு நூல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தந்துள்ள சந்தர்ப்பத்தினின்றும் இஃது ஆரிடச் செய்யுட்கள் நிரம்பிய நூல் என்பது மட்டும் புலனாகின்றது. ஒரு சிலர் பாகவதம் போன்ற நூலாக இருத்தல் வேண்டுமென ஊகித்தனர். ஆனால், 'வாசுதேவ ஹிந்தி' என்றொரு நூல் பிராகிருதத்தில் உளதென்றும், அது குணாட்டியரது பிருஹத் கதையைப் பொருளாகக் கொண்ட தென்றும், மேலும் அது ஜைனர்களுக்குரிய தருமகதை யென்றும்

அதன் ஆசிரியர் தருமகதைகள் பயன்பட வேண்டுமாயின், அவற்றில் காதற்கதைகள் விரவிவரல் வேண்டுமென வற்புறுத்துகிறாரென்றும் ஸ்ரீ கே. எம். முனிஷி எழுதிய 'குஜராத்தும் அதன் இலக்கியமும்' என்ற நூலிற் காணப் படுகிறது. வாசுதேவ ஹிந்தி என்ற இப் பிராகிருத நூல் குஜராத்தியில் பி. ஜே. ஸந்தேஸரா என்ற ஆசிரியரால் மொழிபெயர்க்கப்பட்டு, பம்பாயிலுள்ள பாரதிய வித்யா பவனத்தால் வெளியிடப்பட்டுள்ளதென தி. இந்தியன் பி. இ. என். (ஏப்பிரல், 1949) பத்திரிகை தெரிவிக் கின்றது. தமிழிலுள்ள வாசுதேவனார் சிந்தமும் பைசாச மொழியில் குணாட்டியர் எழுதிய பிருஹத் கதையைத் தழுவி யியற்றிய ஒரு நூலாகவே பெரும்பாலும் இருத்தல் கூடும்.

இனி, யாப்பருங்கல விருத்தியின் அச்சுப் பிரதியின்றி ஏட்டுப் பிரதியில் மட்டும் ஒரு வாக்கியம் காணப்படுகிறது: 'குடமூக்கிற் பகவர் செய்த வாசுதேவர் சிந்தமும் வெள்ளோசை கொண்டுங் கொள்ளாதும் மிக்குங் குறைந்தும் வரலானும், இருடிகளாற் பாடப்படுதலானும் ஆரிடச் செய்யுளேயாம்' என்பது இவ்வாக்கியம். இதனால் இந்நூல் எவ்வாறு ஆரிடச்செய்யுளாயிற்றென ஒருவாறு விளங்குகிறது.

இந்நூலே யன்றி அறிவுடைய நம்பியார் செய்த சிந்தமொன்று உண்டெனவும் யாப்பருங்கல விருத்தியால் (பக். 352) புலனாகிறது. ஆனால், இச்சிந்தத்தைக் குறித்து யாதும் அறியக்கூடவில்லை.

வடமொழியிற் பொதுவழக்கிலிருந்த உதயணன் கதையை மொழி பெயர்த்த இலக்கிய முயற்சியின் பின்பு, தமிழ்நாட்டில் உலவிய பழங்கதை யொன்றினை யெடுத்து அதனை ஒரு சிறந்த அழகிய இலக்கியமாகச் ஜைனர்கள் அமைத்தனர். இதுதான் சிலப்பதிகாரம் எனப்படும்.

பேரிலக்கியம். பெயரை நோக்கிய அளவிலேயே, இது அழகுணர்ச்சி நிரம்பிய ஒரு காவிய முயற்சியென்பது விளங்கும். கோவலனது அநீதியான கொலையும் கண்ணகியின் நீதி பற்றிய வெற்றியும் கதையின் முடிபாகும். இம்முடிபு காற்சிலம்பு ஒன்றினால் விளைகின்றது. எனவே சிலம்பு-அதிகாரம் என்ற பெயர் நயம் பெற அமைந்ததாகும். இதில் கட்டுப்படுத்துதற்குரிய முன்னூல் முதலியன இல்லாமையால், மனோபாவனை யதேச்சையாய்க் கவித்வவானிற் பறந்து சென்று கவிஞனின் பெருமையை நன்கு புலப்படுத்துகிறது. கதையின் அளவு மிகச் சுருங்கியது. இதனால் அழகுக் கலையின் நோக்கில், ஏகபாவம் அல்லது ஒருமை நயம் வாய்ப்பதற்குப் பெரிதும் ஏற்பது. வஞ்சிக்காண்டம் முன் காண்டங்களோடு நன்றாக இயைய மாட்டாது ஒருமை நயத்தைச் சிதைப்பது போலத் தோன்றும். இதுபற்றி ஆராய்ச்சியாளர் ஒரு சிலர் இக்காண்டம் பிற்காலத்தில் வேறொரு புலவர் எழுதிச் சேர்த்ததாதல் வேண்டு மென்று கருதுவர். ஆனால், உண்மையில் இக்காண்டத்தின் வருங்கதை முற்காண்டங்களிலுள்ள கதைப் போக்கிலிருந்து விளையும் நேர் முடிவேயாகும். கண்ணகி வரலாறு கூறப்புகுந்த நூல் அவள் பத்தினித் தெய்வமாகப் பிரதிஷ்டிக்கப்பட்ட செய்தியையும் விவரித்தல் தக்கதேயாகும். மக்கள் வழி பட்டு வரும் ஒரு பெண் தெய்வத்தின் பூர்வ சரித்திரத்தை உணர்த்துவதே ஆசிரியரது நோக்கமாகும். இவ்வாறு நாம் கருதினால், வஞ்சிக்காண்டக் கதையும் ஒரு முக்கிய உறுப்பாக அமைந்து விடுதல் காணலாம். எனவே, இது கதை யொருமையைச் சிதைப்பதாகாது. பதிகத்தில்,

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்

ஆகிய இம்மூன்று பகுதியும் சிலம்பு காரணமாகப்

பிறந்தன என்று கூறப்படுகின்றது. இங்கு, கண்ணகியைக் குறித்து அவளைத் தெய்வமாக மக்களேயன்றி உயர்ந்தோ ராகிய தேவரு முனிவரும் சென்றேத்துதலொன்றே எடுத்துச்சொல்லியிருப்பதும் எனது கருத்தை வலியுறுத்து கின்றது. நூலின் அகத்தேயும் இறுதிக் காதையில்

இமையோ ரிளங்கோடி
தன்றிற முரைத்த தகைசால் நன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்

என வருகின்றது. இங்கும் கண்ணகி தெய்வமாகி நின்று வணங்கினூர்க்கு வரமருளுஞ் செய்தியே குறிப்பிடப் படுகிறது. எனவே கோவலன் மாதவி முதலினோரது வாழ்க்கை வரலாறு கூறுவது ஆசிரியரது பிரதான நோக்க மன்றென்பதும் பத்தினித் தெய்வத்தின் வரலாறு உரைத் தலே பிரதான நோக்கமென்பதும் எளிதில் உணரத் தக்கன. உங்கள் சேரநாட்டிலே வஞ்சி நகரிலே பத்தினித் தெய்வ வழிபாடு தோன்றியதன் பின்னர், அத்தோற்றத் தின் வரலாறு உரைக்கப் புகுந்ததே சிலப்பதிகார மென் பது உணரலாகும். ஆனுல், ஆசிரியரது கலையுணர்ச்சி அவரது உத்தேசியத்தை வென்று விட்ட தென்று நாம் கருதுதல் வேண்டும்.

இக்காப்பியம் முத்தமிழும் விரவப் பெற்றதென்பர். 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்றதன், உரையில் 'பல பாக்களோடு உரைப் பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய இயலிசை நாடகப் பொருட் டொடர் நிலைச் செய்யுள்' என விளக்கினர் அடியார்க்கு நல்லார். இசை நாடகப் பகுதிகளை நாம் சிறிது கவனித்தல் வேண்டும். முற்சங்க காலத்தில் இவையிரண்டும் பாணர், விறலியர் இவர்களிடத்தே விளங்கின. இது முன்னர் உணர்த்தப்பட்டது. பாணர் முதலினோரை ஆதரித்து வந்த அரசரும் குறுநில மன்னர் முதலினோரும் ஆரிய

நாகரிகத்தைக் கைப்பற்றினர். அந்தணர்களது செல்வாக்கு மிகுந்தது.

பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே (பதிற்று. 63)

என்றனர் கபிலர்,

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே (புறம். 6)

எனப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நோக்கிக் காரிகிழார் கூறுகிறார். ஆரியரது நால்வகை வருணங்களையும் அரசர் முதலியோர் ஏற்றுக்கொண்டனர். அவருடைய ஆசார அனுஷ்டானங்களையும் மேற்கொண்டனர். அரசர் முதலியவர்களை இசையினாலும் கூத்தினாலும் மகிழ்வித்து, அவர்களுக்குத் தோழர் என்ற நிலையில் பல சந்தர்ப்பங்களிலும் உதவி வந்த பாணர்கள் தங்கள் பதவியை இழந்துவிட்டார்கள். இவர்களாற் பேணப் பட்டு வந்த இசையும் கூத்தும் ஆதர விழந்தன. இவ்விரு கலைகளையும் பேணுவார் பிறராயினர். சமுதாயத்திலுள்ள பொது மகளிர்கள் தங்களை அரசர் முதலியோர் நயந்து விரும்பும் வண்ணம் இக்கலைகளை உபாயமாகக் கொண்டனர். இரு கலைகளும் வளர்ச்சியுற்றன. நாளடைவில் இக்கலைகளிற் பயிற்சி மிக்க பொதுமகளிர் 'கணிகையர்' என்ற பதவி பெற்றனர். இவர்கள் பயின்ற கலைகள் அரசர் முன்பு அரங்கேற்றப் பட்டன. தலைக்கோல்-தானம் முதலிய வரிசைகளையும் இவர்கள் அரசர்பாற் பெறலாயினர். கலைகளின் நிலைக்களமே பாணரிடமிருந்து கணிகையரிடம் மாறிவிட்டது. முற்சங்க காலத்தில் கணிகையர் என்ற சொற்போலும் இல்லை. தலைக்கோல் என்பது வருகின்றது (மலைபடு. 370); ஆனால் பொருள் மேற்குறித்ததன்று. இசை நூலும் நாட்டிய நூலும் விரிவடைந்தன. சிலப்பதிகாரத்தில் கணிகையரே இக்கலைகளில் வல்லவரா யிருந்தனர்.

இவர்கள் தலைக்கோல்-தானம் பெற்றனர். அரங்கேற்று காதை முழுவதும் நான் கூறியதற்குச் சான்று. ஒரு சில இடங்களில் பாணர்கள் கூறப்படுகிறார்கள்

அரும்பெறன் மரபிற் பெரும்பாணிருக்கையும் (5, 37)
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொடு
எண்ணருஞ் சிறப்பி னிசை சிறந்தொருபால் (5, 184—6)
கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்தமுன்றில் நிறைந்தன (12. 156)
பாடும் பாணர் (13, 105)

இவற்றுள் இரண்டாவது காட்டிய ஓரிடத்தில்தான் பாணரது இசை நிகழ்ச்சி வருணிக்கப்படுகின்றது. நகரங்களில் விழா நிகழுங்காலத்து மக்கள் கண்டும் கேட்டும் மகிழ்தற் பொருட்டு நடைபெறும் விநோதங் களுள் ஒன்றாகவே இவ்இசை குறிக்கப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்து, புறநானூறு முதலியவற்றிற் சிறந்து காணும் பெருமை இங்கே காணப்படவில்லை. இக்காவியத் தில் இசைப்பாட்டு வகைகளும் பெரிதும் விரிவடைந்து விளங்குகின்றன. ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி, குரவைப்பாட்டுக்கள் முதலியன சான்றுகளாம். இயற் றமிழ்ச்செய்யுள் வகைகளும் மிகப் பலவாகப் பெருகி யுள்ளன. விருத்தவகைகள் தேவாரப்பாட்டுக்களின் அமைப்பைப் பெற்றுள்ளன. அரசியல் நிலையும் மக்கள் வாழ்வும் முற்றும் வேறுபட்டு, நாகரிகம் மிகுந்து அதனுடன் வளர்ந்து வரும் செல்வச்சூழலிலும் இன்பச் சூழலிலும் ஆழ்ந்துள்ள சமுதாய நிலையிலே சிலப்பதிகாரம் தோன்றியதாகும். பெண்களின் ஆடையாபரணாதிகள் இந்நிலையை நன்கு விளக்க வல்லன.

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை யோமா லிகையினும்

ஊறின நன்னீ ருரைத்தநெய் வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சேறூட்டி
அலத்தக மூட்டிய அஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்
பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை
அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக்கணிந்து
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து
சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத் தகவயின் ஆரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்கு
இந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
அங்காத் தகவயின் அழகுற அணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி

தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற அணிந்து (6, 76—108)

இந்த அணிகலன்களால் விளங்கும் செயற்கையழகு பெண்களின் நாகரிகநிலை முற்சங்ககாலத்திற்குப் பின்னர் எவ்வளவாக உயர்ந்துவிட்டது என்பதைப் புலப்படுத்துகிறது.

பஞ்ச காவியங்களுள் தலைசிறந்த காவியமாகவுள்ளது சிலப்பதிகாரம்.

இதனை,

நெஞ்சை யள்ளும் சிலப்பதிகார
மென்றோர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு

எனத் தேசீய கவி பாரதி புகழ்ந்துள்ளது நாம் அனைவரும் அறிவோம்.

தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதிகாரமதை

என உங்கள் நாட்டுப் பெருங் கவிஞராகிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அருமையாய்ப் பாராட்டி யுள்ளதும் கற்றோர் அறிவர். இச்சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ வடிகள் சேரன் செங்குட்டுவனது தம்பியாரெனக் கூறப்படுதலால் செங்குட்டுவன் காலமாகிய கி. பி. 2-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இக்காவியம் தோன்றியிருக்க வேண்டுமென்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை முதலியோர் கருதுவாராயினர். முதன் முறையாக இக்காவியம் முழுதும் உரையுடன் 1892-ல் டாக்டர் சாமிநாதையரால் அச்சிடப் பெற்றது. எனவே, மேற்குறித்த பேராராய்ச்சியாளர் இருவரும் இந்நூலின் பெருமையிலும் அழகிலும் தம்மைப் பறிகொடுத்து நின்றனர். தமிழ் மக்களின் பண்டை நாகரிகத்தை இந்நூல் நன்கு காட்டுகிறது எனவும்

கருதினர். இந்நூலின் காலத்தைக் குறித்து ஐயங்கொண்ட வரும் பெரும்பாலும் அக்காலத்து இல்லை. யாரோ இரண்டொருவர் இருப்பினும் அவர்கள் அக்காலத்து முதன் முதல் எழுந்த ஆரிய திராவிடப் போரினாலும், வடமொழி தென்மொழிப் போரினாலும் மனமாறு பட்டு உண்மை காணமாட்டாதவர்களெனவும், தமிழ நாகரி கத்தின் தொன்மையை மறுப்பதெனவே கங்கணங் கட்டிக் கொண்டவர்களெனவும் கணிக்கப்பட்டனர். ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் மட்டும் பொதுப்படத் தமிழிலக் கியங்கள் 7 அல்லது 8-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டன வல்ல என்று கூறி வந்தனர். அவர்கள் கூற்று, சரித்திரச் சான்றுகளுக்கு மாறுபட்டிருந்தமையாலும், தமிழிலக் கியத்தில் நல்ல பயிற்சி அவர்களிடத்தில் எதிர்பார்க்க இயலாதாகையாலும், அவர்கள் கொள்கை புறக்கணித்தற் குரிய தாகவே இருந்தது.

சேரன் செங்குட்டுவன் காலமும், சிலப்பதிகாரத்தின் காலமும் கி. பி. 5-ம் நூற்றாண்டு என முதன்முதல் துணிந்து எழுதியவர் உங்கள் தமிழ்ப் பேராசிரியர் மு. ராகவையங்கார் அவர்களே. இதனை முன்னரே கூறி யுள்ளேன். ஆனால், செங்குட்டுவன் காலத்தில் தோன்றி யதே சிலப்பதிகாரம் என்பது இவர்களுக்கும் முற்றும் உடம்பாடே. சமகாலமன்றென முதன் முதல் எழுதியவர் திருவிதாங்கூர் சிலாசாஸன இலாக்காத் தலைவராயிருந்த கே. வி. சுப்பிரமணிய ஐயர். இச்செய்தியையும் முன்னே குறிப்பிட்டுள்ளேன். இவர் சிலப்பதிகாரம் செங்குட்டு வன் காலத்தது என்பதற்குப் போதிய சான்றில்லை என்ற அளவில் அமைந்துவிட்டனர். நூலினுட் புகுந்து பலவகைச் சான்றுகளையும் முறையே எடுத்துக் காட்டித் திட்டமான ஒரு முடிவுக்கு இவர் வரவில்லை. திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை சிலப்பதி காரத்தில் வரும் சோதிடக் குறிப்புக்களை ஆராய்ந்து

8-ம் நூற்றுண்டின் இறுதியில் இக்காவியம் தோன்றிய தாதல் வேண்டும் என்றனர் (அன் இந்தியன் எப் வெமிரிஸ். வால்யூம்-1, பகுதி-1, பிற்சேர்க்கை 3). சென்னை ஸர்வகலாசாலையில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவனுக நான் இருந்த காலத்தில் சிலப்பதிகாரத்தின் காலத்தைக் குறித்து ஆராயும் படி நேர்ந்தது. இந்த ஆராய்ச்சித் துணுக்குகளிற் சிலவற்றைக் 'கலைமகள்' பத்திரிகையில் வெளியிட்டேன். இந்நூல் செங்குட்டுவன் காலத்தது அன்று என்பது பல சான்றுகளால் தெளிவாயிற்று. இச் சான்றுகளை எனது நண்பர் சரித்திரப் பேராசிரியர் கே. ஏ. நிலகண்ட சாஸ்திரியாரோடு பலமுறை விவாதித்து ஆராய்ந்ததுண்டு. செங்குட்டுவன் காலத்திற்குப் பிற்பட்ட நூலென்பதில் என்னேடு அவர் முற்றும் உடம்படு கின்றனர். ஆனுல், நான் குறிப்பிடும் காலத்திற்குச் சிறிது முற்பட்டதாகலாம் என்று கருதுகின்றனர். இப்பொருள் பற்றி ஸிலோன் ஸர்வகலாசாலைப் பத்திரிகைக்கு சென்ற நவம்பரில் ஒரு கட்டுரையும் எழுதி அனுப்பி யிருக்கின்றனர்.

எனது ஆராய்ச்சிகளையெல்லாம் திரட்டி வெளியிடு வதற்கு ஒருவாய்ப்பும் கிடைத்தது. என் நண்பர் டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சிலப்பதி காரம்-புகார்க் காண்டத்திற்குத் தமது புத்துரையுடன் ஒரு பதிப்பு வெளியிட்டனர். அப்பதிப்பிற்கு ஒரு முன்னுரை வேண்டுமென்று என்னைக் கேட்டனர். அவ்விருப்பத்தைக் காரணமாகக்கொண்டு ஒரு விரிந்த ஆராய்ச்சியுரை எழுதி அனுப்பினேன். நண்பர் செட்டி யாரது பதிப்பில் இவ்வாராய்ச்சி வெளியிடப்பட்டுள்ளது. இதுபோலவே, சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் வித்வான் சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் எழுதிய சிலப்பதிகார ஆராய்ச்சி நூலுக்கு நான் அளித்த முன்னுரையில் எனது சான்றுகளை யெல்லாம் சுருங்க

உரைத்துள்ளேன். இச்சான்றுகளை மீண்டும் இங்கே தெளிவுறச் சுருக்கிக் கூறவேண்டும் அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

1. நச்சினார்க்கினியர் தமது செய்யுளியலுரையில் (சூ. 237) சிலப்பதிகாரத்தைத் 'தொன்மை' என்பதற்கு உதாரணமாகக் காட்டினர். தொன்மை யாவது உரைவிரவிப்பழமையாகிய கதையைப் பொருளாகக் கொண்டு செய்யப்படுவது.

"தொன்மைதானே உரையொடு புணர்ந்த
பழமை மேற்றே"

என்பது தொல்காப்பியம். எனவே, சிலப்பதிகாரத்துக் கதை பழமையானது; இக்கதை இளங்கோ, கூலவாணிகன் சாத்தனார் என்பவர்கள் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியதன்று.

இங்கே கதை என்று நச்சினார்க்கினியர் மட்டும் கூறினாரெனக் கருதக்கூடாது. "சிலப்பதி காரக் கதையைச் சாரமாய் நாவேதரி" என்று வரும் அரும் பதவுரைக் காப்புச் செய்யுளை நீங்கள் அறிவீர்கள். அரும்பதவுரைகாரர் 30-வது வரந்தரு காதையில் 174 முதல் 185 வரையுள்ள அடிகளுக்கு உரையெழுதுமிடத்து 'இமையோரிளங்கொடி தன்றிற முரைத்த கதையைத் தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்' என்றனர். கதை என்பதன் வழக்கையும் நன்றாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். 'கதை யென்பது பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது: என்னை? கதையெனக்கருதல் செய்யான், மெய்யெனத் தானுங் கொண்டான் (சிந்தா. 2144) என்றமையாலும் வழக்கினுள்ளும் இஃது ஒரு கதையென்ப வாகலானும்' என அடியார்க்கு நல்லாரது உரைப்பாயிரம் தெரிவிக்கிறது. இதனால் சிலப்பதிகாரக் கதை உண்மை நிகழ்ச்சிகளைப் பற்றியது அன்று என்பதும், இளங்கோவடிகட்கு

முன்பே பழங்காலத்து வழங்கிய ஒரு கதை யென்பதும் விளங்கும். இப் பழங்கதையை எடுத்துக்கொண்டு இதனை இளங்கோவடிகள் தமது மனோபாவனையால் சித்திரித்துள்ளதே சிலப்பதிகார காவியமாகும். சிலப்பதிகாரக் கதையின் அம்சங்கள் பண்டை நூல்களில் உளவோ என நோக்குவோம்.

சிலப்பதிகார காவியத்தின் கதா நாயகியான கண்ணகி வரலாற்றில் இரண்டு முக்கியமான செய்திகள் உள்ளன. ஒன்று அவளைத் துறந்து கோவலன் வேறொருத்தியோடு இன்பந் துய்த்து வாழ்ந்தமை. இச்செய்தி புறநானூற்றில் வரும் கண்ணகி யென்பவளின் சரித்திரத்தோடு ஒற்றுமையுடையது. வையாவிக் கோப்பெரும் பேகன் என்ற வள்ளலொருவன் தனது மனைவியாகிய கண்ணகியென்பாளைத் துறந்து வேறொருத்தியோடு வாழ்ந்தனன் என்பது,

கிளையை மன் எங் கேள் வெய் யோற்கென
யாம்தற் றொழுதனம் வினவ, காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாம்அவன் கிளைஞரே மல்லேம்; கேளினி
எம்போல் ஒருத்தி நலனயந் தென்றும்
வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே. (புறம். 144)

என்ற செய்யுட் பகுதியால் அறியலாம். பேகன் வரலாற்றில் அவனால் துறக்கப்பட்டவள்து பெயர் 'கண்ணகி' யென்பதே ஈண்டு நாம் கவனித்தற்குரியது. பேகனையும் கண்ணகியையும் ஒன்றுகூட்டுதற் பொருட்டு, பரணர், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்ற புலவர்கள் முயன்றார்கள் என்பது புறநானூற்றால் நன்கு அறியப்பட்டதாகும்.

பிறிதொரு செய்தி கண்ணகி தனது காதலனைப் பிரிந்த துயராற்ற மாட்டாது, ஒரு முலையைத் திருகி யெறிந்தாள் என்பது. இதுவும் நற்றிணையிற் காணப்படும் ஒரு செய்தியோடு ஒத்துள்ளது.

எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத் தாங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி (நற். 216)

என அந்நூற் செய்யுளொன்று கூறுகின்றது. இங்குக் குறித்த வரலாறு மறைந்துவிட்டது. எனினும், தன் மீது அன்பு அற்றுத் துறந்து தனக்கு அயலான்போ லாகிவிட்ட காதலனைப் பற்றிக் கவலை கொண்டு வருந்தி, தனது ஒரு முலையை அறுத்தெறிந்த ஒருத்தியின் சரித்திரமே அது வெளிப்படுப்பது என்பது புலனாகின்றது. நற்றிணையடிகளை ஞாபகத்திற் கொண்டு,

போலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினி.

என்ற பதிகத்தின் அடிகள் தோன்றின என்பதும் எளிதில் ஊகிக்கக் கூடியதே. கண்ணகி இறுதியில் மலைநாடு சென்றாள் என்ற கதையைப் போலவே, நற்றிணைச் செய்யுள் வரலாறும், அம்மலைநாட்டுத் தொடர்புடைய தாதல் 'உண்ணி' என்ற பெயரால் அறியலாம். இன்றும் மலைநாட்டில் வழங்கும் மக்கட் பெயர்களுள் இவ்வுண்ணி யென்பதும் ஒன்றாம். வேங்கை நிழற்கீழ்க் கண்ணகி வந்து நின்றாளென்பது, மேலைப்பதிக அடிகளாலும்,

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
(கட்டுரை காதை, 191—2)

எனவும்,

நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே

*　　　　*　　　　*

பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்
　　ஒருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே
(குன்றக் குரவை 14—22)

எனவும்,

பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனத் துள்ளாளே.

*　　　　*　　　　*

வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே.
(குன்றக் குரவை-இறுதிப் பாட்டுமடை)

எனவும் வருவனவற்றாலும் உணரலாகும். நற்றிணை அடியிலும் இவ்வேங்கை பயின்று வருதல் காணலாம். இங்ஙனம் வரும் ஒற்றுமைகளை மனத்துக் கொண்டு நற்றிணையுரைகாரர் 'திருமா வுண்ணியென்பது கண்ணகி கதையைக் குறிக்கின்றது போலும்' என்றெழுதினர். இவர் துணிபு எவ்வாறாயினும், மேற்குறித்தன போன்ற செய்திகளே காலவடைவிற் கண்ணகி வரலாறாக வளர்ந்து பரிணமித்தது எனக் கொள்ளுதல் தவறாகாது.

இவ்வரலாறு சிலப்பதிகாரத்திற்கு முன்புதானே வளர்ச்சி நிரம்பி ஒரு நூலில் அமைந்திருக்கவேண்டும் என்பதற்கு ஆதாரம் உளது. ஒருத்தி, தன் கணவன் கொலையுண்டு கிடந்தநிலை கண்டு பாடியதாக ஒருசெய்யுள் யாப்பருங்கல விருத்தியிலும், பேராசிரியர் உரை முதலிய வற்றிலும் காணப்படுகிறது. அது வருமாறு:

கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க
ஒண்செங் குருதியி னோடு கிடப்பதே-கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந் தூடப் பன்னாள்
அழுத கண்ணீர் துடைத்த கை. (யாப். வி. பக். 351)

இரண்டாமடி ஐஞ்சீராய் மிக்கு வந்துள்ளது. ஆரிடப் போலி அல்லது ஆரிட வாசகம் என்று இதனைக் கூறுவர். ஆரிடம் அல்லது ஆர்ஷம் என்பதனால் இது மிக்க பழைமை வாய்ந்ததெனல் துணியப்படும். இச்செய்யுள் பத்தினிச் செய்யுளென வழங்கப்படுதலினாலே, பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வரலாறு பற்றியதென்றே கொள்ளத் தக்கது. பழங்கதைகளுக்கு ஓர் உயிர்த் தத்துவம் உண்டு. அது பலவாறாக வளர்ந்துகொண்டே செல்லும் இயல்பினது. சிலப்பதிகாரத்திற்குப் பின்னும் அது வளர்ச்சியுற்றிருப்பது கோவலன் கதை என்ற அம்மானையால் அறியலாம். எனவே அக்காவியத்திற்கு முன்னும் அது வளர்ந்து வந்திருக்கிறது என்று தெளிந்துகொள்ளலாம். உண்மை வரலாற்றிற்கு இவ்வளர்ச்சியில்லை.

இங்ஙனமாகப் பழையதொரு வரலாறு பற்றியே சிலப்பதிகாரக் கதைப் பொருள் தோன்றியதாகும்.

2. இம்முடிபை மணிமேகலையாசிரியர் நன்கு தெளிவுறுத்துகின்றார். 'கோவலனும் கண்ணகியும் கபிலவஸ்துவில் புத்ததேவன் அவதரித்துச் செய்யும் தருமோபதேசத்தைக் கேட்டு, வீடு அடைவார்கள்' என்று அறிந்தோர் கூறக் கேட்டேன் எனக்கோவலன் தந்தையாகிய மாசாத்துவான் உரைக்கின்றான். இதனை,

பூங்கொடி முன்னவன் போதியி னல்லறந்
தாங்கிய தவந்தால் தான்தவந் தாங்கிக்
காதலி தன்னொடு கபிலையம் பதியில்

நாத னல்லறங் கேட்டுவீ டெய்து மென்று
அற்புதக் கிளவி அறிந்தோர் கூறச்
சொற்பய னுணர்ந்தேன்.

(மணிமே. 28, 141—146)

என்ற அடிகளால் உணரலாம். இதனை உண்மையெனக் கொள்ளின், கோவலனும் கண்ணகியும் புத்தபிரான் தோன்றுதற்கு முன், அதாவது கி. மு. 650-க்கு முன் வாழ்ந்தனராதல் வேண்டும். சிலப்பதிகார வரலாறு பழங்காலத்துக் கன்ன பரம்பரைச் செய்தி என்பதற்கு இதனைக் காட்டினும் சிறந்த சான்று வேண்டுமா?

3. மேலும், கண்ணகியின் கணவனான கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்பாக அவனது மூதாதையர்களுள் ஒருவனான வேறொரு கோவலன் இருந்தனன். இவன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு உற்றதோழன். இச் செய்தி,

குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் முன்னாள்

* * *

இப்பொழில் புகுந்தாங் கிருந்த வெல்லையுள்

* * *

நின்பெருந் தாதைக் கொன்பது வழிமுறை
முன்னோன் கோவலன் மன்னவன் றனக்கு
நீங்காக் காதற் பாங்க னாதலின்

(மணிமே. 28, 103.)

என மணிமேகலைக்கு மாசாத்துவான் கூறியதால் உணரலாம். நெடுஞ்சேரலாதனுக்கு மகனானவன் சேரன் செங்குட்டுவன் (பதிற்றுப்பத்து, 5-ம் பத்து, பதிகம்). எனவே, இவனுக்கு எட்டுத் தலைமுறைக்குப் பின் தோன்றியவர்கள் கண்ணகியும் கோவலனும். இது முற்கூறிய வரலாற்றோடு முரணும். இதனை உண்மையெனக்

கொள்ளின், இவர்கள் வரலாறு கூறும் சிலப்பதிகாரமும் செங்குட்டுவனுக்கு எட்டுத் தலைமுறை பிற்பட்டது; இக்காவியத்தை இயற்றிய இளங்கோவடிகளும் எட்டுத் தலைமுறைக்குப் பிற்பட்டவர்; எனவே இவ்வாசிரியர் செங் குட்டுவனுக்குத் தம்பியாதலும் இல்லை, கண்ணகிக்குச் செங்குட்டுவன் கோயிலெடுப்பித்தான் என இவர் கூறினராயின், பழங்காலத்துக் கதை ஒன்றனை மனத்துட் கொண்டு அங்ஙனம் உரைத்தார் எனக் கோடலே அமைவுடையது.

4. அன்றியும் மணிமேகலை மீது காதல் கொண்ட உதயகுமரன் சோழன் கரிகாற் பெருவளத்தானது வழி வந்தவன் என்றுசொல்லப்படுகிறது.
இது.

இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வுரவோன் மருகற்கு
அறிவுஞ் சால்பும் அரசியல் வழக்கும்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ

(மணிமே. 4, 107—110.)

என்ற சுதமதி உரையால் அறியலாகும். உதயகுமரனின் தந்தை நெடு முடிக்கிள்ளியென்பான். ஆகவே, இக்கிள்ளி யின் வழிவந்தவன் என்று சொல்லுதற்கில்லை. 'மருகன்' என்ற அளவில் உதயகுமரனுக்குச் சில பல தலைமுறை களுக்கு முன் கரிகாலன் வாழ்ந்தவனாதல் வேண்டும். ஆனால், மணிமேகலையின் தாயாகிய மாதவி, இக் கரிகால னது அவையில் அரங்கேறிப் பரிசு பெற்றாள் என்பர் அடியார்க்கு நல்லார்.

சூழ் கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி

(சிலப். 3., 11.)

என்றதன் உரையில், 'வீரக் கழலினையுடைய சோழன் கரிகாற் பெருவளத்தான் அவை யரங்கேறிக் காட்டல் வேண்டி' என்றும்,

வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை

(சிலப். 15. 21 - 22)

என்ற அடிகளின் உரையில் 'கரிகாலன் கொடுத்த மிக்க தலைவரிசையாற் சிறந்த புகழினைப் பெற்ற மாவின் தளிர் போலும் மேனியையுடைய மாதவியாகிய மடந்தை' என்றும் அடியார்க்கு நல்லார் எழுதினர். எனவே, இது நெடுமுடிக் கிள்ளிக்குச் சில தலைமுறைகளேனும் முன்பு நிகழ்ந்ததாகக் கருதிய செய்தியாகும். ஆதலால், இந்நெடு முடிக்கிள்ளியின் சமகாலத்தவரெனக் கொள்ளவேண்டும். கூலவாணிகன் சாத்தனாரும் இளங்கோவடிகளும் தமக்கு வெகு காலத்திற்கு முன்பு நிகழ்ந்த பண்டைவரலாற்றைத் தம் நூல்களுள் அமைத்துள்ளார்கள் என்பது வெளிப்படை.

5. இளங்கோவடிகள் தம் காலத்து நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளைத் தம் நூற்பொருளாகக் கொள்ளவில்லை. இயற்கையில் நிகழமுடியாத பல விஷயங்களை நிகழ்ந்தன வாக அவர் கூறுவதால் இது விளங்கும். அவற்றுட் சில வருமாறு:—

1. கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப் பேசிய ஒரு பரத்தையையும் ஒரு தூர்த்தனையும் கவுந்தி நரிவடிவங் கொள்ளும்படி சபித்து, அவ்வடிவு ஒரு வருடத்தில் நீங்கும்படி சாப விடை செய்தமை.

2. 'கதிர்ச் செல்வனே! நீயறிய என் கணவன் கள்வனோ' என்று கண்ணகி கேட்க, சூரியன் அசரீரியாக, 'இல்லை, இவ்வூரைத் தீயுண்ணும்' என்றமை.

3. கோவலன் வெட்டுண்டு மரித்தபின், அவன் உடம்பைக் கண்ணகி தழுவிக்கொள்ள, அவன் உயிர்பெற்றெழுந்து அவளுடன் பேசியது.

4. கண்ணகி, தனது இடக் கொங்கையை வலக்கையால் திருகியெடுத்து மதுரைநகர் மீதெறிய, அக்கினிதேவன் பார்ப்பனக் கோலத்தில் வந்து, தான் முன் பெற்ற ஏவலைத் தெரிவித்து, ஆணை பெற்று நகரை யழித்தல்.

5. காவல் காக்கும் வருணப்பூதங்கள் பெயர்ந்து நீங்கியமை.

6. மதுராபதி தெய்வந்தோன்றிப் பூர்வ வரலாறு கூறுதல்.

7. சாத்தன் மதுராபதித் தெய்வத்தின் கூற்று முதலியவற்றை நேரில் கேட்டதாகக்கூறல்.

8. கண்ணகி செங்குன்றின் மீதேறி அங்குள்ள வேங்கை நிழலில், தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனுடன் விமானமேறிச் சுவர்க்கமடைதல்.

9. கண்ணகி தெய்வவடிவத்தோடு தோன்றிச் செங்குட்டுவனை வாழ்த்துதல்.

10. மூன்று இளம் பெண்கள்மீது நீர் தெளிப்ப, அவர்கள் கண்ணகி நற்றாய், கோவலன் நற்றாய், மாதரி என்ற மூவருடைய பிறப்பினராக அறிந்து, செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்தை வணங்குதல்.

11. கண்ணகி அசரீரியாகத் தோன்றி, கயவாகு முதலியோர்க்கு வரங் கொடுத்தல்.

ஒரு கவிஞன் இங்ஙனம் கூறவேண்டுமாயின், அதனை விளக்குதற் குரியது ஒன்றேயுளது. அவன் காலத்து

வழங்கிய கன்ன பரம்பரை வரலாற்றை அவன் கதைப் பொருளாகக் கொண்டான் என்பதேயாகும். அல்லது, முழுதும் கற்பிதமென்று கொள்ளவேண்டும். அங்ஙன மாயின் பதிகத்தில்,

'யான் அறிகுவனது பட்டதென் றுரைப்போன்'.

* * *

' வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன் '

* * *

'கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென'

என்று சாத்தனுரும், வரந்தரு காதையில்,

யானுஞ் சென்றேன்; என்னெதி ரெழுந்து
தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி,
வஞ்சி மூதூர் மணிமண் டபத் திடை
நுந்தை தாணிழ லிருந்தோய்! நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித் தேர்த் தானைச்
செங்குட்டுவன் தன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லா சேணெடுந் தூரத்து
அந்தமி லின்பத் தரசாள் வேந்து என்று
என்திற முரைத்த இமையோ ரிளங்கொடி

என்று இளங்கோவடிகளும் தங்களைக் கதையோடு தொடர்பு படுத்தியது உண்மையன்றுவெனச் சிலர் வினவ

லாம். இதுபோன்று தொடர்பு படுத்துதல் உலகமுழுவதும் கதாசிரியர்கள் கையாளும் ஒரு மரபே.[1]

---

1. 'நாஞ்சிநாட்டு மருமக்கள் வழி மான்மியம்' சுமார் 30 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது. அதை எழுதின காலத்தில்தானே பண்டித முத்துசுவாமிப்பிள்ளையவர்கள் 'தமிழன்' பத்திரிகையில் வெளியிட்டார்கள். அப்பொழுது முகவுரையில் இது ஒரு பழைய நூலென்றும், அதன் ஏட்டுப்பிரதியொன்று தனக்குக் கிடைத்ததென்றும், அதைத்தான் இப்பொழுது வெளியிடுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பழைமையான தென்று நம்புவதற்காகச் செய்தவேலையே இது. ஒரு சிலரைத் தவிர, பலரும் சிலகாலம் அப்படியே நம்பியிருந்தார்கள். நூல் அச்சிட்டு ஆசிரியர் பெயர் வெளிவராமற் போனால், இன்னும் உண்மை தெரிந்திருக்காது. இன்னும் 500 வருஷங்களுக்கப்புறம், இந்தநூலைப் பற்றிய கால ஆராய்ச்சி வருமானல், இரண்டு கட்சி ஏற்படும். முகவுரையை ஆதாரமாகக்கொண்டு, பழைய நூல் என்பர் ஒரு கட்சியார். இன்னொரு கட்சியார் நூலின் அகச்சான்றுகளைக் கொண்டு, வெளியிட்டகாலத்தைச் சரியான காலமென்று ஸ்தாபிக்கமுயல்வர். ஆசிரியர் பெயரோடு புஸ்தகம் வெளிவந்ததனால், இனி அந்தத் தர்க்கத்துக்கு இடமில்லை.

மனோன்மணியம் கதையைப் படித்துக் கொண்டு, அதைச்சரித்திரக்கதையென்று நம்புகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள்.

திருவள்ளுவமாலையை யாரோ ஒருவர் பாடிச் சங்கப்புலவர்கள் பாடினதாகக் கற்பித்திருக்கிறாரல்லவா? நாமகளும் இறையனாரும் பாடினதாக யாராவது ஒப்புக்கொள்வார்களா?

'கொங்குதேர் வாழ்க்கை' என்ற தருமிக்குப் பொற்கிழி அளித்தபடலப்பாடல் சிவபெருமானால் பாடப் பட்டதென்பதை யாரேனும் நம்புவார்களா?

ஆகவே தாம்சொல்வதை உலகம் உண்மையென்று ஒப்புக்கொள்ளவேண்டி, கதாசிரியர்கள் சில பொய்யும் சொல்வார்களென்று நம்ப இடமுண்டு. நோக்கம் நல்லதாயிருப்பதால் அவர்களைக் குறை கூறுதற்கில்லை. 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்கு மெனின்' என்றபடி இளங்கோ பாடினார் என்பதைவிட 'இளங்கோ' என்ற புனைபெயரில் வேறொருவர் பாடியிருக்கக் கூடும் என்று நினைக்கவும் இடமுண்டு—S. D. P.

Also P.S. Sivaswami Iyer's Kamala's lectures, p. 105,f.n.3.

இம்மரபை மேற்கொள்வது கதை உண்மை நிகழ்ச்சி தான் என்று தோன்றுமாறு செய்வதே யன்றி வேறில்லை. கதையைக் கேட்போர் அதில் ஆழ்ந்து ஈடுபடுவதற்குக் கவிஞன் கையாளும் ஓர் உபாயமேயாகும். இளங்கோவடிகளைப் போன்ற பல பெருங் கவிஞர்கள் இவ்வுபாயத்தைக் கையாண்டிருக்கின்றனர். சாஸர், ஸ்விவ்டு முதலினோர் எழுதிய ஆங்கில நூல்களைக் கற்றோர் இதனை நன்கறிவர். உங்களில் பலர் சிலப்பதிகார மூலத்தைக் கற்றிருக்க மாட்டீர்கள். ஆனால் சாஸர் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய காண்டர்பரி டேல்ஸ் என்ற நூலைப் படித்திருப்பீர்கள்; அல்லது கதையையேனும் தெரிந்திருப்பீர்கள். இந்நூலில் ஆசிரியர் ஒவ்வொரு வகுப்பினரிடமிருந்தும் ஒவ்வொருவராக இருபத்தெண்மரைச் சிருஷ்டித்து, அவர்களை ஒரு உண்டிச் சாலையிற் சந்திக்கவைத்து, தாமும் அக்கூட்டத்தில் ஒருவராகப் பாவித்து, அனைவரும் காண்டர்பரி என்ற க்ஷேத்திரத்திற்குப் பிரயாணம் போய் மீளவேண்டும் என்ற சங்கற்பத்தை மேற்கொள்ள விதித்து, போம் வழியிலும் வரும் வழியிலும் ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்லவேண்டுமென்று நியமனம் பண்ணி, அந்நியமனத்தின்படி ஒவ்வொருவரும் சொல்வதாக அமைந்த கதைகளைத் திரட்டி வெளியிட்டிருப்பதாகக் கற்பனை செய்திருக்கிறார். இங்கே ஆசிரியருக்கும் பாத்திரங்களுக்கு முரிய தொடர்பு நேரே கூறப்படுகின்றது. ஆனால், இத்தொடர்பு முதலியன முழுக் கற்பனையென்பது நாம் நன்கறிந்ததே. இது போன்றதொரு கற்பனையே இளங்கோவடிகள், செங்குட்டுவன், கோவலன் சாத்தனார் முதலினோர்க்கிடையிலுள்ள தொடர்பும் என்று கொள்ளலாம்.

அஃது எவ்வாறாயினும் சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் கூறுவது கொண்டு இத்தொடர்பு உண்மையென்றும் துணிதல் இயலாது.

இக்கதை மரபில் இளங்கோவடிகள் தம்மைச்சேரன் செங்குட்டுவனது தம்பி யென்று கூறுவதாக வந்துள்ளது. இது உண்மைதானு என்பதை நோக்குவோம்.

செங்குட்டுவனுக்கு எட்டுத் தலைமுறைகள் பிற்பட்டவர் இளங்கோவடிகள் என்பது முன்னரே கூறப்பட்டது. அன்றியும், சேரன் செங்குட்டுவனைப் பற்றியது பதிற்றுப் பத்தில் 5-ம் பத்து.

பதிகக்காரர் தாமும் செங்குட்டுவனுக்கு இளங்கோ என்றொரு தம்பியுண்டென்று கூறவில்லை. எனவே, சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் செங்குட்டுவனது தம்பியென்றல் கற்பிதமேயாகும்.

மேலும் இப்பத்துச்செய்யுட்களில் ஓரிடத்தேனும் கண்ணகிவரலாறு காணப்படவில்லை. பிற்காலத்தொருவர் செய்த பதிகத்தில்தான் 'கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி' என வருகிறது. 'சிலப்பதிகாரத்தைக் கற்றவர் ஒருவரால் இப்பதிகம் செய்யப்பட்டது. டாக்டர் சாமிநாதையர் 'பதிகங்கள் உரைப் பிரதிகளில் மட்டும் காணப் படுகின்றமையால் அவற்றை இயற்றினோர் நூலாசிரியரும் தொகுத்தோரும் அல்லரென்று தெரிகின்றன' எனத் தமது முகவுரையிற் கூறுகின்றார். ஆகவே, செங்குட்டுவனையும் கண்ணகி வரலாற்றையும் இயைப்பது உண்மையொடு பொருந்தமாட்டாது.

இவ்வாறாயின், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தோன்றிய காலந்தான் யாது?

1. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையிற் பெரும் பகுதி வடமொழிப் பரதசாஸ்திரத்தைத் தழுவியியற்றப் பட்டது என்பது உறுதி. இந்த சாஸ்திரம் சுமார் இ. பி. 300 அளவில் எழுதி முற்றியிருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர் (பெரிடேல் கீத்: பக் 31). எனவே, இ. பி. 300-க்குப் பிற்பட்டது சிலப்பதிகாரம்.

2. அடைக்கலக் காதையில் (சிலப் 15, 54-74) பிராம்மிணியும் கீரிப்பிள்ளையும் பற்றிய கதை வருகிறது.

பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்நூண் வாழ்க்கை
வடமொழி வாசகம் செய்த நல்லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மினோ வெனும்
அருமறை யாட்டியை அணுகக் கூய்...
தானஞ் செய்தவள் தன்துயர் நீக்கிக்
கானம்போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வா

என்பது அப்பகுதி. இக்கதையில் பிராம்மிணிக்குப் பொருள் கொடுத்து, தானம் பண்ணுவித்து அவள் பாவத்தைப் போக்குவித்தவன் கோவலன் என்று கூறப் படுகின்றது. சிலப்பதிகாரத்தில் வரும் பல நிகழ்ச்சிகளும் கற்பிதமே என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று. இது ஒருபுறமிருக்க, காலவரை யறைக்கு இக்கதை பயன்படு கிறது. இக்கதை வடமொழிப் பஞ்சதந்திரத்தில் வருவது. இங்குக் குறித்த வடமொழி வாசகம்,

அபரீக்ஷ்ய நகர்த்தவ்யம் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம்
பச்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா

என்ற ச்லோகம். இது 5-ம் தந்திரத்தில் முதற்கதையின் இறுதியில் வருகிறது. தென்னாட்டில் வழங்கிய வடமொழிப் பஞ்சதந்திர மூலம் கி. பி. 500-க்கு முற்பட்டதன்று

என்பர் பெரிடேல் கீத் (பக். 262). இங்ஙனமே பல ஆராய்ச்சியாளரும் கூறுவர். இது தெள்ளத் தெளிந்த உண்மை. எனவே, சிலப்பதிகாரம் கி. பி. 500-க்குப் பிற்பட்டதாதல் தெளிவு.

3. பழந்தமிழ் நூல்களைப் பல இடங்களிலும் சிலப்பதிகாரம் எடுத்தாளுகின்றது.

1 அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழு தன்றே

என 20-வது வழக்குரை காதையிளிறுதி வெண்பாவொன் றில் வருகின்றது. இது நான்மணிக்கடிகையில் (84) காணப்படுகிறது. இந்நூலின் காலம் சுமார் கி. பி. 600. எனவே, சிலப்பதிகாரமும் கி. பி. 600-க்குப் பிற்பட்டது.

2 முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்

என 21-வது வஞ்சின மாலையில் (3-4). வருகின்றது. இது பழமொழியில்

முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்

என வந்துள்ளது. (130: தி. செ. 46).

இங்ஙனமே,

... ... மேலைக்
கறவைக் கன்றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில் (93: தி. செ. 242)

என்ற பழமொழியில் வரும் மனுநீதி கண்ட சோழன் கதை, சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையில்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
(53—55)

எனவும் வாழ்த்துக் காதையில் அம்மானை வரியில்,

கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை

எனவும், கட்டுரை காதையில்

கறவைமுறை செய்தோன் (58)

எனவும் வந்துள்ளது. இக்கதை சங்க காலத்து இலக்கியங்களில் காணப்படவில்லை. பழமொழி 'மேலை' என்ற சொல்லுக்கு, 'முன்பு ஒரு காலத்து' என்ற பழைய உரை அறியத்தக்கது. பிற்பட்ட இச்சரிதங்கூட மிக முற்பட்ட காலத்துச் செய்தியாகப் பழமொழி அறிவிக்கின்றது. கறவை, முறைமை என்று பழமொழியில் வரும் சொற்களையே சிலப்பதிகாரமும் எடுத்தாளுதலாலும், மேலே காட்டியபடி பிறிதொரு பழமொழியை எடுத்தாண்டிருத்தலாலும் இச்செய்தி அந்நூலிலிருந்தே சிலப்பதிகாரம் எடுத்துக்கொண்டது என்றல் பொருந்தும். முதன்முறையாக இக்கதை 5-ம் நூற்றூண்டின் இறுதியில் இயற்றப்பட்ட மஹாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது; ஏலாரா என்ற சிங்களத்தரசன் இவ்வாறு முறை செய்தான் என்று அந்நூலிற் குறிக்கப்பட்டுள்ளது. (உவிண்டர்நீட்ஸ், 2-ம் வால்யூம் பக். 215 பார்க்க).

பழமொழி இயற்றப்பெற்ற காலம் சுமார் 650 என்று எனது திரிகடுகம் சிறு பஞ்சமூலம் பதிப்பின் (சென்னை ஸர்வகலாசாலை) முன்னுரையில் அறுதியிட்டுள்ளேன். ஆகவே, சிலப்பதிகாரம் கி. பி. 650க்குப் பிற்பட்டதாதல் வேண்டும்.

3. சிலப்பதிகாரத்தில் 21-வது வஞ்சின மாலையில்,

பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு (53—54)

என வருகின்றது. இது

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு (64)

என்ற ஆசாரக் கோவையடிகளைப் பின்பற்றியதெனக் கொள்ளலாம். இந்நூல் வடமொழியிற் பிற்பட்ட ஸ்மிருதிகளைப் பின்பற்றியதெனவும், இதன் காலம் சுமார் கி. பி. 750 எனவும் மேலே சுட்டிய எனது முன்னுரையில் துணிந்துள்ளேன். எனவே, சிலப்பதிகாரம் சுமார் கி. பி. 800 அளவில் இயற்றப்பெற்ற தென்று துணிதல் பொருந்துவதாம்.

4. இளங்கோவடிகள் பண்டைநூல்கள் பலவற்றையும் நன்கறிந்துள்ளார் என்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர் (11, 99)

என்று ஐந்திரத்தைக் குறித்து ஓர் இடத்தில் வருகின்றது. பதிகத்தில்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரந்தரு காதையொடு (பதிகம். 84—88)

என வருவது தொல்காப்பியத்தை அடியொற்றியதாகும். புறத்திணை இயல் 5-ம் சூத்திரத்தில்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல்

என வருதல் நோக்குக. வரந்தருதலைக் கூட்டியிருப்பது சிலப்பதிகாரம் பிற்பட்டது என்பதை நன்கு வலியுறுத்துகிறது. காட்சிக் காதையில் வருகிற, (முது) காஞ்சி, மகட்பாற் காஞ்சி, எதிரூன்று காஞ்சி, குடைநிலை வஞ்சி, கொற்றவஞ்சி, பெருவஞ்சி, கொற்றவள்ளை பற்றிய விஷயங்களில் பெரும்பாலன தொல்காப்பியம் புறத்திணை இயலிலும் (சூ. 7, 19,) சிறுபான்மை புறப்பொருள் வெண்பாமாலையிலும் வந்துள்ளன. வெண்பாமாலை தொல்

காப்பியத்திற்குப் பிற்பட்ட பன்னிருபடலம் என்ற நூலைத் தழுவி இயற்றப்பட்டதாகும். எதிரூன்று காஞ்சியும், குடைநிலைவஞ்சியும், கொற்ற வஞ்சியும், பெருவஞ்சியும் பன்னிரு படலத்தில் கூறப்பட்டன வாதல் வேண்டும். தொல்காப்பியர் கருத்தில் காஞ்சி நிலையாமையையே உணர்த்தும். எதிரூன்று காஞ்சி என்பது பிற்பட்ட வழக்காகும். இங்ஙனமே பின்றேர்க் குரவை, முன்றேர்க்குரவை (சிலப். 26. 240-241) முதலி யனவும் தொல்காப்பியத்தில் காணப்படுவனவே.

பதிற்றுப்பத்து என்ற நூலினையும் இளங்கோவடிகள் நன்கு கற்றுள்ளார். இது நடுகற்காதையில்,

> கடற்கடம் பெறிந்த காவல னயினும்
>
> *　　　*　　　*
>
> சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
> மதுக்கொள் வேள்வி வேட்டோ னயினும் (135—148)

என்று வரும் சேரர் வரலாற்றைப் பற்றி வரும் பகுதியால் விளங்கும், மலைபடுகடாம், அகநானூறு, புறநானூறு, நெடுநல்வாடை முதலிய நூல்களிலிருந்தும் ஒரு சில அடிகள் ஆங்காங்கே சிலப்பதிகாரத்தில் புலப்படுகின்றன. மதுரைக் காண்டத்து இறுதி வெண்பாவில்,

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுவாளைத்
> தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்

என வருவது திருக்குறளை அடியொற்றியது.

பண்டை நூல்களே யன்றிப் பிற்கால வரலாறு சிலவும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. மநு நீதிச் சோழன் சரித்திரத்தைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். பத்தினிப் பெண்டிர் அறுவரைக் குறித்து 21-வது வஞ்சினமாலையில் வருகின்றது. இவ் அறுவருள் ஐவரைப் பற்றிய கதைகள் பிற்பட்டன. ஆதிமந்தியின்

வரலாறு மட்டும் சங்கநூல்களில் உள்ளது. ஆனல், அவள் கரிகாலனுடைய மகள் என்று ஓரிடத்தும் கூறப்படவில்லை. சிலப்பதிகாரம் தான் அவ்வாறு முதன் முதலாகக் கூறுகின்றது. எனவே பண்டை வரலாறு வளர்ச்சியுற்ற பிற்காலத்தது சிலப்பதிகாரம் என்பது விளங்கும். இளங்கோவடிகளே இப்புது வரலாற்றை அமைத்தனராயின், இங்ஙனம் புதுக்குதல் இவரது முறையென்பதும், கண்ணகி வரலாற்றையும் இவர் புதுக்கியமைத்தனரென்றலில் வியப்பில்லை யென்பதும் அறியலாகும்.

வன்னி மரமும் மடைப்பளியும் சான்ருக
முன்னிறுத்திக் காட்டிய மொய் குழலாள்

என்பதில் குறிக்கப்படும் கற்புக்கரசியின் சரிதம், திருவிளையாடற் புராணத்தில் 'வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்' என்ற பகுதியில் வருகின்றது.

5. நமது தேசத்திலுள்ள பல நாடுகளையும் நாட்டினரையும் பற்றி இளங்கோவடிகள் அறிந்துள்ளார்.

கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடார்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்

என்பன சிலநாட்டினரைக் குறிக்கின்றன. இவர்களுள் கங்கர், கட்டியர் என்ற பெயர்களொழிய ஏனைப்பெயர்கள் சங்கநூல்கள் அறியாதன. பங்களர் என்பது வங்க தேசத்தினருக்கு 7, 8-ம் நூற்ருண்டளவில் சாஸனங்களில் வழங்கும் பெயர். இது மேலே இளங்கோவடிகளது காலம் பற்றித் துணிந்த முடிவை வற்புறுத்துகிறது.

வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய (28, 86)
மத்திம நன்ஞட்டு வாரணந் தன்னுள் (15, 178)
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும் (30, 160)

என்பனவும் கவனிக்கத் தக்கன.

இத்தனை விவரங்களெல்லாம் வடநாட்டோடு நெருங்கியதொடர்பும் அந்நாட்டு இலக்கியக் கல்வியில் மிகுந்த பயிற்சியும் ஏற்பட்ட காலத்தில்தான் பெரும்பாலும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

6. இளங்கோவடிகள் தம் நூலில் தந்துள்ள நகரம் முதலியனவும் பிற்பட்ட காலத்தையே குறிக்கின்றன. வேங்கடம் (11,41) ஸ்ரீரங்கம் (11,39), அழகர்மலை (11,91), திருவனந்தபுரம் (26, 62; 30, 51) இவை நான்கும் வைஷ்ணவம் பற்றியதோர் பெருமையைப் பிற்காலத்து எய்தின. சங்ககாலத்தில் வேங்கடத்திற்கு எவ்வகையான சமயத் தொடர்பும் இல்லை. ஸ்ரீரங்கமும் அக்காலத்தில் சமயத்தாற்பெருமை பெற்றதில்லை. அழகர் மலை பரிபாடலில் வந்துள்ளதேயன்றி வேறு நூல்களில் காணவில்லை. திருவனந்தபுரம் என்ற இத் திருப்பதி 'ஆடக மாடம்' எனச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன் (26, 62) எனவும், 'ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்' (30, 51) எனவும் வருகின்றன. இங்குள்ள விமானம் 'ஹேமகூட விமானம்' என்பர். பதிற்றுப்பத்து (31) உரை 'செல்வன் என்றது திருவனந்தபுரத்துத் திருமால்' என விளக்குகிறது. ஆனால் இப்பதியைக் குறித்துச் சங்கநூல்களில் ஒரு குறிப்பும் கிடையாது. ஆழ்வார்கள் பன்னிருவருள் நம்மாழ்வாரால் மட்டுமே மங்களாசாசனம் செய்யப்பெற்றது. எனவே, ஆழ்வாராதிய வைஷ்ணப் பெரியோர்கள் தோன்றிய பிற்காலத்தை ஒட்டியே சிலப்பதிகாரம் இயற்றப்பட்டிருக்கவேண்டும்.

'ஆடகமாடம்...இரவிபுரம் என்பாருமுளர்' என்றனர் அரும்பதவுரைகாரர். இரவிபுரம் என்பதும் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியேயாமென்று சாஸனங்கள் அறிவிக்கின்றன.

காவிரிப்பூம் பட்டினம் பட்டினப் பாலையிலும் சிலப்பதிகார காவியத்திலும் (5, இந்திர விழவூரெடுத்த காதையில்), வருணிக்கப்பட்டுள்ளது. ஆனால் காவியத்திற் காணும் வருணனை அப்பட்டினம் செழித்து வளர்ந்து, மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பலவகை அமைப்பு நலன்களும் எய்திய நிலையினை உணர்த்துகிறது. இக்காவியம் பிற் பட்டதெனற்கு இதுவும் ஒரு சான்று.

இப்பிற்பட்டகாலத்தில் பட்டினம் காகந்தி என்ற பெயரைவும் (மணி. XII 25-39) காவிரியாறு காவேரி (கவேரமுனியின் கன்னி) என்ற பெயரையும் (மணி, III 55-56; IX, 52) பெற்றன.

சிலப்பதிகாரத்தில் 'தொண்டி' என்ற ஒரு கடற்கரைப் பட்டினத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இது சேரர்களுக்குரியதாய்ச் சங்கநூல்களிலே படிக்கப்பட்டுள்ள தொண்டி அன்று. பாண்டியர்களுக்குரியதாய் இப்பெயர்கொண்டதோர் ஊர் ஒன்று ராமநாதபுரம் ஜில்லாவில் உண்டு. இதனைக் குறித்து இறையனுர் களவியலுரையில் வரும் பாண்டிக் கோவையிலே சில செய்யுட்கள் உள்ளன. சேரர் தொண்டியினின்றும் இதனை வேறு பிரித்து உணர்வதற்கு இதனை 'மீனவன் தொண்டி' என்றும், 'மாறன் தொண்டிக் கானம்' என்றும் பாண்டிக் கோவை கூறும். இந்நகரம் ஒன்பதாவது நூற்றுண்டில் சிறந்து விளங்கியது என்பது 'வரகுணன் தொண்டியின் வாய்' என்று வரும் யாப்பருங்கலக் காரிகையின் மேற்கோட் செய்யுள் புலப்படுத்தும். சேரர், பாண்டியர் என்ற இருவருக்கும் தொண்டி என்று அவ்வவர் தேசத்தில் ஒரு கடற்கரைப்பட்டினம் இருந்ததுபோலவே, சோழர்களுக்கும் ஒரு பட்டினம் இருந்தது. ஆனல், இது கீழ்த் திசையிலே கடலுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் நிலையுற்றது என அறிகின்றேம்.

ஆங்க தன்றியும் ஓங்கிரும் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசு. (சிலப். 14, 106—112)

எனச் சிலப்பதிகாரம் கூறுவதனால் இது விளங்கும். இத்தொண்டி சுமாத்திரா, ஜாவா முதலிய பிரதேசங்களில் சோழர் குலத்தவரால் அமைக்கப்பட்ட ஒரு நகரமாதல் வேண்டும். பிற்காலச் சோழர்களே சுமாத்திரா, ஜாவா முதலிய பிரதேசங்களோடு தொடர்பு கொண்டிருந்தவர்கள். 8-ம் நூற்றாண்டில் இந்நகரம் தோன்றியது எனக் கருதுதல் தகும். எனவே, சிலப்பதிகாரமும் இந்நூற்றாண்டின் இறுதியிலே தோன்றியதெனல் பொருத்த முடைத்தாகும்.

7. சிலப்பதிகாரத்தில் பக்கம், வாரம், திதி என்பன கொடுக்கப்பட்டுள்ளன.

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென (5, 64)

'ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து அழல் சேர் குட்டத் தட்டமி ஞான்று வெள்ளி வாரத்து' (23, 133-135) என்று வருதல் காண்க. இங்கே 'வெள்ளி வாரத்து' என்பது குறிப்பிட்டு உரைத்தக்கது. வாரப் பெயர்கள் கிரேக்க ஜோதிஷத்தினின்றும் பெறப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள், உவிண்டர் நிட்ஸ் 2, 351; கீத். 531) இந்தியாவில் வாரப்பெயர் கி. பி. 471-ல் தான் முதன்முதலாகச் சிலாசாசனத்தில் பயின்றுள்ளது. சுமார் கி. பி. 800-ல் பொதுவழக்கில் வந்ததாகும். சுமார் கி. பி. 650-ல் சம்பந்தர் 'வேயுறு தோளி பங்கன்' என்ற பதிகத்தில்,

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டு முடனே

என வருவது மேற்கூறியதனோடு மாறுபடுகின்றது எனச் சிலர் காட்டக் கூடும். ஆனால், இப்பதிகத்தில் கூறுவது கோள்களை அதாவது கிரகங்களை யென உணர்க. ஆகவே, வாரப் பெயரைக் குறித்தலாலும் சிலப்பதிகாரத்தின் காலம் சுமார் 800 என்று கொள்ளுதல் பொருந்தும்.

8. சங்ககாலத்தில் காணப்பெருத சில தெய்வங்களும் இந்நூலிலே கூறப் பெற்றுள்ளன. உதாரணமாக கலைமகளாகிய தெய்வத்தைக் கூறலாம். சங்க நூல்களில் இத்தெய்வத்தைப் பற்றிய குறிப்பே இல்லை. வடமொழியிலும் அமரத்தில் இத்தெய்வம் குறிக்கப்படவில்லை. நாயன்மார்கள் காலத்தில்தான் முதன் முதலாக இத்தெய்வத்தைக் குறித்து வந்துள்ளது. சம்பந்தர்,

'கலைமகள் தலைமகன் இவனென வருபவர் (1,124,3) என்றனர் இவள் பிரமதேவனது மனைவி; அவனது நாவிலே வீற்றிருப்பவள்; அது பற்றி நாமகள் என்ற பெயர் இவளுக்கு ஏற்பட்டது; வீணையைக்கையில் தரித்தவள்; வெள்ளை வஸ்திரத்தை அணிந்தவள்; வெண்டாமரையில் வீற்றிருப்பவள்: என்பன முதலாகிய வரலாறுகள் பிற்பட்டெழுந்தன என்று கொள்ளலாம். சிலப்பதிகாரத்தில் 'ஆய்கலைப் பாவை' (12, 71) எனவும்,

மாமகளும் நாமகளும்[1] மாமயிடற் செற்றுகந்த
கோமகளும் தாம்படைத்த கொற்றத்தாள்
(22, இறுதி வெண்பா)

எனவும் வருகின்றது. இதனாலும் இந்நூல் சுமார் கி. பி. 800-ல் தோன்றியது என்பதே பொருந்துகின்றது. மணி

1. The Jaina Iconography—by B. C. Ehattacharya Ch. VI. Srutadevi and Vidya Devi: Sarutadevi-Saraswati.

மேகலையிலும் சிந்தாதேவி (பதிகம், 60), நாமிசைப் பாவாய் (14,18), செழுங்கலைப் பாவாய் (25, 139), உணர் விற்றேன்றி யுரைப் பொருளுணர்த்தும், அணிதிகழவி ரொளி மடந்தை (25, 148), சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து (13,106) எனவும் கலைமகள் குறிக்கப்பட்டுள் ளாள்.

9. இந்நூல் பத்தினிக் கடவுள் வழிபாடு தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் ஏற்பட்டபொழுது அதனை விளக்குதற்கும், அது மக்களிடையே பரவுதற்கும் எழுந்த சரித்திரமாக உள்ளது. முதல் இரண்டு காண்டங்களும் கோவலன் கண்ணகி வரலாற்றை முற்றக் கூறுகின்றன. இறுதியிலுள்ள வஞ்சிக்காண்டம் பத்தினிக் கோயிற் பிரதிஷ்டையையே தலைமைப் பொருளாகக் கொண்டுள் ளது. இப்பத்தினி வழிபாடு எப்பொழுது தோன்றியது என்பது சரித்திரவாயிலாக நன்கு அறிதற்கு இல்லை. ஆனால், சங்ககாலத்தில் இவ்வழிபாடு இருந்ததெனற்குச் சான்று கிடையாது. அங்ஙனமே நாயன்மார் ஆழ்வார் காலத்தும் சான்று காணப்படவில்லை. இலங்கைச் சரித் திரம் கூறுவனவாக மகாவம்சம் முதலிய பலநூல்கள் உள்ளன. அவற்றுள் 16-ம் நூற்றாண்டில் தோன்றிய 'ராஜாவளியில்' தவிர, வேறொன்றிலும் பத்தினிக்கடவுளைப் பற்றி யாதொரு குறிப்பும் கிடையாது.

ராஜாவளியிலும் கஜபாகு சோழ தேசம் சென்று சோழ அரசனைப் பயமுறுத்தி, 24,000 குடிகளையும் பத்தினி தேவியின் காலணிகளையும், நான்கு தெய்வங்களின் ஆயுதங் களையும் தன் நாட்டுக்குக் கொணர்ந்தான் என்று மட்டுமே யுள்ளது. இது 16-ம் நூற்றாண்டிற்கு முன்பு சோழ தேசத்தில் பத்தினி வழிபாடு இருந்ததெனற்கு ஒருவேளை சான்றாகலாம். சிலப்பதிகாரக் கதையை ஏதோ ஒருவகை யிற் கேள்வியுற்ற 'ராஜாவளி'யின் ஆசிரியர் இக்கதையைப்

பின்பற்றி இங்ஙனம் எழுதியிருத்தலும் கூடும். இதினின்று பத்தினி வழிபாட்டின் காலத்தை வரையறுத்தல் இயலாது. இப்போது அகப்படும் பத்தினிப் படிமங்களாலும் இவ்வழிபாடு தோன்றிய காலம் துணிதற்கில்லை. நிகவேவா விஹாரத்துக் குகையிலுள்ள இரண்டு மரப் படிமங்கள் கண்ணகியும் கோவலனுமாம் எனக் கருதுவர். ஆனால், இவை 11-ம் நூற்றாண்டினவாம் என்பர். இலங்கையிற் கண்டெடுக்கப் பெற்ற ஒரு வெண்கலப் படிமமும் உண்டு. இதனை 1830-ல் பிரிட்டிஷ் காட்சிச் சாலைக்கு அளித்துவிட்டனர். 'பத்தினி தேவி' என்று இதனைக் கொள்ளுதற்குரிய காரணம் புலப்படவில்லை. இதன் காலமும் தெரியமாட்டாது. ஆனால், சக்தி வழிபாடுகளும் அவை பற்றிய நூல்களும் தோன்றிப் பெருகிய காலம் கி. பி. 500 முதல் 900 வரை என்பர். ஆராய்ச்சியாளர் (அன் அவுட்லைன் ஆப் தி ரிலிஜியஸ் லிட்டெரேச்சர் ஆப் இந்தியா: ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிட்டி பிரஸ்). இந்நெறியே நோக்கினும் சிலப்பதிகாரம் சங்க காலத்து நூல் அன்றாம். கி. பி. 800 அளவில் தோன்றியதெனல் பெரிதும் பொருத்தமாம்.

10. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரு காலத்தன என்று இவ்விரண்டு நூல்களின் பதிகமும் வற்புறுத்துகின்றது. மணிமேகலை சிறிது முற்படவும், சிலப்பதிகாரம் பிற்படவும் இயற்றப்பட்டதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார் (உரைப்பாயிரத்தின் இறுதி). இரண்டு நூல்களும் ஏறத்தாழ ஒரே காலத்தில் பிறந்தன என்பதில் ஐயமில்லை.

மணிமேகலை ஒரு பௌத்த நூலாகும். இதன் கண்ணே கி. பி. 5-ம் நூற்றாண்டில் 'திங்நாகர்' இயற்றிய நியாயப் பிரவேசத்திலிருந்து தருக்க நூற் பகுதிகள் எடுத்தாளப்பட்டுள்ளன. சிலர் தர்மகீர்த்தியின் (7-ம் நூற்

ருண்டு) நூலிலிருந்து இவை கொள்ளப்பட்டன என்பர். இவற்றை 27-ம் காதையாகிய 'சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை'யில் காணலாம். எனவே, முற்பட்ட நியாயப் பிரவேசத்திலிருந்து இவை கொள்ளப்பட்டன என்று துணிந்தாலும், மணிமேகலை 5-ம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டதென்பதும், சிலப்பதிகாரமும் அங்ஙனமே பிற்பட்டதென்பதும் பெறப்படும்.

11. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்பொய்யில் புலவன் (மணி. 22, 59, 61) எனத் திருக்குறளை மணிமேகலை எடுத்தாளுகின்றது. சிலப்பதிகாரமும் இக்குறளை எடுத்தாண்டுள்ளமை முன்னரே காட்டப்பட்டது. திருக்குறள் சுமார் 6-ம் நூற்றுண்டளவில் தோன்றியது (தமிழ்ச் சுடர்மணிகள் பக். 78). எனவே, இக்காலத்திற்குப் பிற்பட்டனவே இரண்டு நூல்களும். கி. பி. 800 அளவில் இரண்டும் தோன்றின என்பதற்கு இச்சான்றும் பொருந்தியதாதல் காணலாம்.

12. இரண்டு நூல்களிலும் காணும் மொழிநிலையும் இக்காலத்தையே வற்புறுத்துகின்றது. மிகப் பிற்பட்ட காலத்தனவாகிய பல சொற்கள் இவற்றின்கண் வந்துள்ளன:

இந்த (சிலப். 21 51; மணி 23, 61; 26, 63; 28, 198); அந்த (மணி. 29, 30); நான் (29, செங்குட்டுவற்குக் கண்ணகி கூற்று, தேவந்திசொல், காவற்பெண்டின் சொல், அடித்தோழி சொல்; மணி. 28, 92) நீர் (27, 239; 16, 21); வார்த்தை (25, 186, 187); பட்டாங்கு (21, 36); பிற்பாடு (13, 1); உவாத்தி (மணி. 13, 46), நாத்தூண் (16, 19); கிராமம் (மணி. 13, 46); காவதம் (10, 36; 42); முங்கி (மணி. 29, 16); செட்டி (சிலப்; 30, 49, 129; மணி. 21, 6; 16. 107) குடும்பி (30, 52); உன் (மணி. 23, 80); காறும் (சிலப். 14, 22, 30, 65; மணி. 21, 167) மார்க்கம் (மணி. 21, 164); போக்குவன் (16, 129); உறுவன் (19, 6) 'அன்' ஈறுபற்றி இப்பொழுது

இதனை உன்பன் தின்பன் என அன் ஈறாக வழங்குப' என்றனர் (இளம்பூரணர் தொல். சொல். இளம். 200); நேமிநாத வுரைகாரரும் (சொல். 39) இவ்வாறே கூறினர். கேட்குவன் (மணி. 20, 18); உன்னை (மணி. 22, 71); மைத்துனன் (மணி. 22, 86); காவேரி தமிழில் பிற்பட்ட வழக்கு (சம்பந். 67, 5); தன் (ஆறன் உருபு) கணவன்றன் (19, 60), உடைய 6-ம் வேற்றுமையுருபு. தம்முடைய தண்ணளியும் (கானல் 32), தனை (இரண்டன் உருபு) மணிமேகலை தனை (18, 155); தன்னால்: மாதவன் தன்னால் (16, 83.)

இவைகளெல்லாம் பிற்பட்டகாலத்து வழக்குச் சொற்கள். தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களில் இவை மிகுதியாய்க் காணப்படுகின்றன. இவற்றின் காலத்தை ஒட்டியே சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் இயற்றப் பட்டனவாதல் வேண்டும்.

13. சிலப்பதிகாரத்தில் வரும் செய்யுள் விகற்பங்களும் வரிப்பாட்டுக்களும் மிகப் பல; உரைப்பாயிரமும் 'பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலைச் செய்யுள்' என்று கூறுகின்றது.

1. குட்டச் செந்தூக்கு
2. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
3. நிலைமண்டிலம்
4. பலவகை வரிப்பாட்டுக்கள்
5. கலிவெண்பாட்டு
6. கட்டுரை
7. பஃறாழிசைக்கொச்சகக் கலிப்பா
8. குரவை
9. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
10. அயன்மடங்கிசைக் கொச்சகக் கலிப்பா

(ஊர்சூழ்வரி.)

20 முதல் 30 முடியவுள்ள காதைகளுக்கு அடியார்க்கு நல்லாருரை அகப்படவில்லை. இக்காதைகளிலும் கீழ்வரும் செய்யுள் விகற்பங்கள் காணப்படுகின்றன:

21. கலிவெண்பாட்டு
22. } நிலைமண்டிலம்
23.
24. குன்றக்குரவை
25. நிலைமண்டிலம்
26. ,,
27. ,,
28. ,,
29. வாழ்த்துக் காதை: அம்மானை வரி, கந்துகவரி, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு
30. நிலைமண்டிலம்.

இங்கே காட்டிய கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக் காதையில் வரும் அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு முதலிய செய்யுள் வகைகள் தேவார காலத்தும் திருவாசக காலத்தும் காணும் செய்யுள் வகைகளோடு ஒப்பிடற்பாலன. இங்ஙனம் ஒப்புநோக்கினால் சிலப்பதிகாரம் கி. பி. 800-ல் தோன்றியதென்ற துணிவு பொருத்தமாதல் தெளிவு. முற்சங்க இலக்கியங்களில் இவ்வகைச் செய்யுட்கள் காணப்பெறுமை நன்கு மனங்கொள்ளுதற்குரியது.

14. இருபெருங் காப்பியங்களிலும் வரும் பெயர்களும் இங்கே ஆராயத்தக்கன:

1. மாசாத்துவான்
2. கோவலன்
3. மாநாய்கன்
4. கண்ணகி

5. மாதவி
6. தேவந்தி
7. கவுந்தி
8. கௌசிகன்
9. மாடலன்
10. மாதரி
11. ஐயை
12. நெடுஞ்செழியன்
13. சித்திராபதி
14. மதுராபதி
15. வசு
16. குமரன்
17. சங்கமன்
18. பரதன்
19. நீலி
20. கனகன்
21. விசயன்
22. உத்தரன்
23. வில்லவன்கோதை
24. நீலன்
25. செங்குட்டுவன்
26. கரிகாலன்

இவை சிலப்பதிகாரத்தில் வருகின்றன. இவற்றுள் நெடுஞ்செழியன், கரிகாலன், செங்குட்டுவன் முதலிய சங்க காலப் பெயர்களும், மாதவி, தேவந்தி, சித்திராபதி, மதுராபதி, வசு, குமரன், கனகன், விசயன் முதலிய பிற்காலப் பெயர்களும் விரவி வந்துள்ளமை காணலாம். மணிமேகலையில் வரும் பெயர்களை நோக்குக,

1. துச்சயன்
2. அசலன்
3. இரவிவர்மன்
4. அத்திபதி
5. நிலபதி
6. இராகுலன்
7. அபஞ்சிகன்
8. சாலி
9. அமரசுந்தரி
10. பூமிசந்திரன்
11. அமுதபதி
12. தாரை
13. விரை
14. இலக்குமி
15. அறவணர்
16. ஆதிரை
17. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
18. இரத்தினதிவம்

19. இராசமாதேவி
20. இலங்காதீவம்
21. இளங்கிள்ளி
22. உச்சயினி
23. உதயகுமரன்
24. எட்டிகுமரன்
25. சுகந்தன்
26. காந்தன்
27. கண்ணகி
28. கபிலை
29. சம்பாவதி
30. மயன்
31. துவதிகன்
32. கரிகால்வளவன்
33. கவேரர்
34. காகந்தி
35. காஞ்சனன்
36. காயசண்டிகை
37. காலவேகம்
38. கிள்ளிவளவன்
39. கேசகம்பளர்
40. கோதமை
41. கோமுகி
42. கோவலன்
43. கௌசிகன்
44. சங்கதருமர்
45. சந்திரதத்தன்
46. சனமித்திரன்
47. சாதுசக்கரன்
48. சாதுவன்
49. சார்ங்கலன்
50. சித்திராபதி
51. சிந்தாதேவி
52. சிருங்கி
53. சீதரன்
54. சீர்த்தி
55. சுதமதி
56. செங்குட்டுவன்
57. தருமசாவகன்
58. தருமதத்தன்
59. திலோத்தமை
60. தீவதிலகை
61. தூங்கெயிலெறிந்த தொடித் தோட்செம்பியன்
62. தொடுகழற்கிள்ளி
63. நெடுஞ்செழியன்
64. நெடுமுடிக்கிள்ளி
65. பரதன்
66. பிரச்சோதனன்
67. பிரமதருமன்
68. பீலிவளை
69. வளைவணன்
70. புண்ணியராஜன்

71. பூதி
72. மண்முகன்
73. மணிமேகலை
74. மதுராபதி
75. மருதி
76. மாசாத்துவான்
77. மாதவி
78. மாருதவேகன்
79. மாவண்கிள்ளி
80. மாரன்
81. யௌகந்தராயணன், யூகியந்தணன் (15, 64)
82. வயந்தமாலை
83. வாசந்தவை
84. வாசமயிலை
85. விசாகை
86. விந்தாகடிகை
87. விரிஞ்சி
88. விருச்சிகன்
89. குச்சரக்குடிகை (18, 145)

இவற்றுள் ஒரு சிலவே சங்ககாலப் பெயர்கள். மற்றைப் பெயர்கள் பிற்காலத்தையே உணர்த்துவன. வடமொழியி லுள்ள காவியங்கள், நாடகங்கள் முதலியவற்றைக் கற்று இப்பெயர்கள் கொள்ளப்பட்டன. இதற்கு ஒரு சிறந்த சான்றும் உள்ளது. உதயணன் சரிதத்திலிருந்து ஒரு வரலாறு தரப்பட்டிருக்கின்றது.

> கோடிக்கோ சம்பிக் கோமக னாகிய
> வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
> வஞ்சஞ் செய்துழி வான்றளை விடீஇய
> உஞ்சையிற் றோன்றிய யூகி யந்தணன்
> உருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
> பரிவுறு மாக்களிற் றம்பரி வெய்தி
>
> (மணி. 15, 61, 66)

என்ற அடிகளில் இவ்வரலாற்றைக் காணலாம். மணி மேகலை இயற்றிய சாத்தனார், உதயணனைப் பற்றிய வரலாறுகளை வடமொழிக் காவியங்களிலிருந்து அல்லது தமிழ்ப் ‘பெருங் கதை’ யிலிருந்து கற்றுள்ளார் என்

பதற்கு இது தக்க சான்று அல்லவா ? ஆகவே வடமொழிக் காவியங்கள் அல்லது ' பெருங்கதை ' தோன்றிய பின்னர், சுமார் கி. பி. 800-ல் இவ்விரு காவியங்களும் தோன்றின என்றல் பெரிதும் பொருத்தமாதல் காணலாம்.

15. சிலப்பதிகார காப்பியத்திற் பயின்று வந்துள்ள வடசொற்களும் தொடர்களும் பிற்பட்ட காலத்தில் தமிழிற் புகுந்தனவாகவேயுள்ளன. உதாரணமாக :

செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி
(10, 177—186)

என்ற அடிகளைக்காண்க. இங்ஙனமே, மணிமேகலையில் வந்துள்ள வடசொற்களும் தொடர்களும் மிக மிக அதிகமாயுள்ளன.

சந்த வநித்தஞ் சாத்திய மாயின்
ஒத்த வநித்தங் கடாதி போலெனல்
விபக்கம் விளம்பில் யாதொன்று யாதொன்று
அநித்தமல் லாதது பண்ணப் படாதது
ஆஅகாசம் போலென் றுரும்
பண்ணப் படுதலும் செயலிடைத் தோன்றலும்
நண்ணிய பக்கஞ் சபக்கத் திலுமாய்

விபக்கந் தின்றி யகித்தத் தினுக்கு
மிகத்தரும் ஏதுவாய் விளங்கிற் றென்க
ஏதமில் திட்டாந் தம்இரு வகைய
சாதன் மியம்வை தன்மி யம்மென
சாதன் மியமெனப் படுவது தானே
அநித்தங் கடாதி அன்னுவயத் தென்கை
வைதன் மியதிட் டாந்தம் சாத்தியம்
எய்தா விடத்தில் ஏதுவும் இன்மை

(29, 127—141)

இவை போன்ற வடசொற்கள் முற்சங்ககாலத்து இலக்கியங்களில் வரும் என்று எண்ணவும் கூடுமா ? கி. பி. 800 அளவிலேதான் இவற்றிற்குத் தமிழில் இடமுண்டு.

16. ஒரு சொல்லைக் குறித்து நான் இங்கே சில கூறுதல் அவசியம். 'சுருங்கை' என்ற சொல்லே இங்கே கருதப்படுவது. இது சிலப்பதிகாரத்தில்,

சுருங்கை வீதி மருங்கிற் போகி (14, 65)

எனவும், மணிமேகலையில்,

பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி (12, 79)

எனவும்,

சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரும். (28, 5—6)

எனவும் வருகின்றது. இதன் பொருள் பூமியின் கீழ் மறைவாய்ச் செய்து அமைத்த வழி என்பதாகும். இது பற்றி, ஆசிரியர் பெரிடேல் கீத்[1] இந்த ஸங்கேதப் பொருளில் 'ஸிரிங்க்ஸ்' என்ற கிரேக்கச் சொல்லைக் கடன்

---

1. ஸம்ஸ்கிருத இலக்கிய வரலாறு பக். 25.

வாங்கி இந்தியாவில் பிற்காலத்தில் 'ஸுருங்கா' என வழங்கினர் என்று கூறியுள்ளார்.

'ஓரை' யென்பதைப் போல, இச் 'சுருங்கை' என்ற சொல்லும் கிரேக்க மொழியிலிருந்து வடமொழிச் சில்ப சாஸ்திரங்களிற் புகுந்து, பின்னர் தமிழிலக்கியங்களிற் புகுந்ததாம். இச்சொல் பிற்சங்க நூலாகிய பரிபாடலிலும் (20, 104) சிந்தாமணியிலும் (142) வந்துள்ளது. கி. பி. 800-க்குச் சற்று முன்பாக இச்சொல் தமிழ் வழக்கிற் புகுந்ததெனல் பொருத்தமாம். இந் நெறியில் நோக்கிலும், சிலப்பதிகாரம் கி. பி. 800-அளவில் தோன்றியதெனக் கொள்ளுதல் தக்கதேயாகும்.

17. மணிமேகலையில் வரும் குச்சரக்குடிகை (18, 145, 152) என்பதும் இங்கே நோக்கத்தக்கது. பெருங்கதையிலும் (4, 13, 147) 'கூத்தப் பள்ளிக் குச்சரக் குடிகையுள்' என வருகின்றது. கூர்ஜ்ஜர தேசத்து முறையில் அமைந்த குடிகை என்பது இதன் பொருள். கூர்ஜ்ஜரம் என்பது ஆனர்த்தம், லாடம் முதலிய பல பகுதிகளுடையது. இப்பகுதிகள் தனித்தனி இராஜ்யமாக இருந்தன. கி. பி. 500 அளவில் கூர்ஜ்ஜரர் என்ற அன்னிய மரபினர் பாருகச்சம் முதலிய பிரதேசங்களிற் குடியேறி, தங்கள் பெயரால் கூர்ஜ்ஜர ராஜ்யத்தை நிறுவினர். வரவர, அடுத்துள்ள சிறியராஜ்யங்கள் இவர்கள் வசப் பட்டன. இதன் விளைவாகவே, கூர்ஜ்ஜரம் என்ற தேசப் பொதுப்பெயர் பிற்பட்ட காலத்தில், சுமார் கி. பி. 600-ல், வழங்கத் தொடங்கிற்று. கூர்ஜ்ஜரச் சில்ப முறை இன்னும் பிற்பட்டதென்றே கொள்ள வேண்டும். சுமார் கி. பி. 700-ல் இம்முறை வழக்கில் வந்திருக்கலாம். தமிழ் நாட்டில் இம்முறை கையாளப்பட்டது கி. பி. 700-க்கும் பிற்பட்டதாகவே இருத்தல்வேண்டும். இவ்வாறு நோக்கினும், சுமார் கி.பி. 800-ல் மணிமேகலையும் சிலப்பதிகாரமும்

தோன்றின என்ற முடிவு வலியுறுகின்றது (கே. எம். முன்ஷி, குஜராத்தும் அதன் இலக்கியமும், பக் 28, 78).

இங்ஙனமாக மொழிநிலையும், யாப்புநிலையும், பெயர் வழக்காற்று நிலையும் இருபெருங் காப்பியங்களும் சுமார் கி. பி. 800 அளவில் தோன்றியதாதல் வேண்டுமென் பதற்குச் சான்று பகர்கின்றன. சாஸ்திரங்கள், கலைகள் முதலியன பற்றிச் சிலப்பதிகாரத்திற் காணும் விஷயங் களும் மிகப் பிற்பட்ட காலத்தையே குறிக்கின்றன. உதாரணம்: இரத்தினபரீக்ஷை முதலியன.

18. இக்காப்பியங்களால் விளங்கும் சமுதாய நிலை யும் இம்முடிபினையே வற்புறுத்துகின்றன. பொதுப்பட நோக்கினுல் சங்க இலக்கியங்களில் அகப் பொருள் பற்றி யவை காதல் மணத்தையே குறிக்கின்றன. தலைவனும், தலைவியும் தன்னந்தனியாய் எதிர்ப் பட்டு, ஒருவரை யொருவர் காதலித்துக் களவொழுக்கம் பூண்டு, பின் மணந்துகொள்ளும் வாழ்க்கையே காணப்படுகின்றது. களவிற்குப் பின் மணம் நிகழ்ந்தமையை அகநானூற்றில் வரும் 'உழுந்துதலைப் பெய்த' என்ற 86-ம் செய்யுளும் 'மைப்பறப் புழுக்கின்' என்ற 136-ம் செய்யுளும் உணர்த்து கின்றன. இவ்விரண்டிலும் பார்ப்பார் அல்லது புரோகிதர் மணச் சடங்கு நிகழ்த்தியதாக யாதொரு குறிப்பும் காணப் படவில்லை. கோவலனுக்கும் கண்ணகிக்கும் நிகழ்ந்த மணவினை,

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்பென்னை

* * *

சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள முலையினர் இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
* * *
மங்கல நல்லமளி ஏற்றினர்
(1, 47—54, 56—59, 64)

என வருணிக்கப்படுகிறது. இங்கே புரோகிதர் மறைவழி காட்டலும் பிறவும் கூறப்படுதல் காணலாம். இது தமிழ் நாட்டு மணச்சடங்கின் மிகப் பிற்பட்ட நிலையை உணர்த்துகின்றது. இவ்வாறு மணம்புரிந்தவர்களைத் தனியே குடியிருக்கச் செய்து மனையறம் படுத்துதலும் சங்ககாலத்தில் காணப் பெறாத புது ஒழுக்கமாம்.

19. இனி, கணிகையர்களைக்குறித்துச் சிலப்பதிகாரத்தில் வந்துள்ள செய்திகளும் பிற்காலத்தையே உணர்த்துகின்றன. கணிகையராவார் வேசியர்களுள் கீதம், வாத்தியம், நிருத்தம் முதலிய அறுபத்துநாலு கலைகளிலும் வல்லவராய், ரூபகுண சீலங்களில் சிறந்தவர்களாயுள்ளவர்கள் அத்தகுதிபற்றிக் 'கணிகை' என்று பட்டம் பெற்று அரசனது அவைக்களத்தில் ஆசனத்திற்குரியராவர். இங்ஙனம் காமசூத்திரம் *(1, 3, 20)* வரையறுக்கிறது. இவ்வாறுள்ள கணிகையருள்ளும் மிக மேம்பட்டவர்கள் அரசன் முன் அரங்கேறி, தலைக்கோல்தானம் பெற்று, ஆயிரத்தெண் கழஞ்சுப்பொன்பரிசும் பெறுவார்கள். இது அரங்கேற்று காதையால் விளங்கும். 'தலைக்கோலி' என்ற பெயர்கள் சாஸனங்களிலும் காணப்படுகின்றன. திருவாரூர்க் கோயிலில் ஒரு நாடக மகள், தனது நாட்டிய வித்தையை அரசர் முன்பாக அரங்கேற்றி, 'பூங்கோயில் நாயகத் தலைக்கோலி' எனப் பட்டம் பெற்றனள் என்று பிற்காலச் சோழர் காலத்ததாகிய ஒரு கல்வெட்டுக் கூறு

கிறது (548—1904) இக்கல்வெட்டின் காலம் சுமார் கி. பி. 1060. பிற்காலச் சோழர் காலத்தில் வழக்கில் வந்தது இக் கணிகையாது தலைக்கோலிப்பட்டம் என்பது இச் சாஸனத் தால் நன்கு விளங்கும். கி. பி. 800-ல் இவ்வழக்கு ஏற் பட்டிருக்கலாம். இவ்வழக்கு முதன் முறையாக ஏற் பட்டதனைக் குறித்தே அரங்கேற்று காதை இயற்றப்பட் டது என்பதற்குப் பெரியதோர் இயைபு உண்டு. சிலப்பதி காரத்தில் விளங்கும் நாட்டிய நிலையும், இசையின் நிலையும் கணிகையர் நிலையும் பிறவும் இக்காலத்துச் சமுதாயமும் நாகரிகச் சுழல் நீரில் மூழ்கி மகிழ்ச்சியில் திளைத்திருந் தமையை நன்கு தெரிவிக்கின்றன. ஆகவே, நாம் மேலே வரையறுத்த காலம் மிகவும் பொருந்துதல் காணலாம்.

20. செங்குட்டுவன் வடநாடு சென்று கண்ணகி தெய்வத்திற்குரிய சிலையைக் கங்கையில் நீராட்டிக் கொணர்ந்து, வஞ்சியுட் புகுந்து, தனது தேவியுடன் அத்தாணி மண்டபத்திற்குச் சென்றனன். அப்பொழுது வழியில் நாடக அரங்கத்திலே கூத்தச் சாக்கையனால் 'கொட்டிச் சேதம்' என்ற கூத்து நிகழ்த்தப்பட்டு வந்தது. அதனைச் செங்குட்டுவன் கண்டு களித்தனன். இக் கூத்து :

திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது சூடகம் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒருதிற னாக வோங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்

கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து
(28, 67—77)

என வருணிக்கப்படுகின்றது. சாக்கையார் கூத்து. தமிழ் நாட்டில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் வழங்கத் தொடங்கியது. முதன்முதலாக, பரகேசரி இராசேந்திர சோழன் சாசனத்தில்தான் இது வருகின்றது.

சாசனம் வருமாறு:

குமரன் சிகண்டன் என்ற சாக்கையன் திருவாவடு துறை யாழ்வாரின் புரட்டாசித் திருவிழாக்காலத்து ஆறங்கம் ஆரியக் கூத்து ஆட நிருத்யபோகம் ஆகிய சாக்கைக் காணி பெற்றது. *(120, 1925)*

சாக்கைக் கூத்து என்ற தொடரே பின்வரும் சாசனத்தில் வருகின்றது.

ஆலையூர்ச் சாக்கையென்பான் கிழைப்பழுவூர்க் கோயிலில் சாக்கைக் கூத்து மூன்று நடத்தப் பொன்னும் நிலமும் பெற்றது (பரகேசரிவர்மன் சாசனம், 250, 1926)

இச்சாசனங்கள் 10-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் தோன்றியன. இக்கூத்தைக் கூறும் சிலப்பதிகாரம் இக்காலத்துக்கு மிக முற்பட்டிருக்க முடியாது. எனவே இக்காவியம் கி. பி. 800 அளவில் தோன்றிய தெனல் பொருத்தமாதல் தெளிவு. திரு. மு. இராகவையங்கார் 'கூத்தச்சாக்கையன்' என்ற பொருள்பற்றி யெழுதிய கட்டுரை ஊன்றி நோக்கத் தக்கது. (ஆராய்ச்சித் தொகுதி, பக். 451-454)

21. சிலப்பதிகாரத்தால் வெளியாகும் சமய நிலையை நோக்கினும், மேலே முடிபே வலியுறுகின்றது. ஒழுக்கத்தை வற்புறுத்தி வந்த ஜைன சமயத்தினர் கால அடைவில் சமயதத்துவங்களை விசேஷமாகப் பாராட்டத் தொடங்

கினர். அவற்றுள்ளும் கர்மம் பற்றிய கொள்கைகளை ஆழ்ந்து சிந்தித்து, அதன் பல்வேறு நெறிகளைக் குறித்தும் நூல்கள் எழுதலாயினர். வைதிக சமயங்களை நேர்பட எதிர்த்து வாதம் புரிவதற்கு இக்கொள்கைகள் பெரிதும் துணைபுரிந்தன. ஆகவே, இக்கர்ம விசாரணைகள் தமிழகத்திற் சம்பந்தராதியோர் காலத்தை அடுத்து, மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்டன என்று கருதுதல் தகும். முற்பிறவியில் நிகழ்ந்த கர்மங்களின் விளைவே அடுத்த பிறவியின் நிகழ்ச்சிகளாகும் என்ற கொள்கை கடைபோக முற்றும் நம்பப்பட்டது. இதனை எளிதில் உணர்த்துதற்குப் பற்பல சரித்திரங்களையும் பூர்வ வரலாற்றுடன் கையாளலாயினர். வடநாட்டிற் பிறந்த பௌத்த ஜாதகக் கதைகள் முன்மாதிரியாக அமைந்தன. சிலப்பதிகார வரலாறும் இந்நெறியையே பின்பற்றுகிறது. எங்ஙனமெனின், 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்' எனப் பதிகத்தில் வருதலேயன்றி, நூலினகத்தும் ஆசிரியர்தாமே

> வினைவிளை கால மாதலின் யாவதும்
> சினையலர் வேம்பன் தேரானாகி (16, 148—149)

எனவும்,

> உம்மை வினைவந் துருத்த காலைச்
> செம்மையி லோர்க்குச் செய்தவம் உதவாது
> (23, 171—172)

எனவும் பல இடங்களில் வினையின் இயல்பை வற்புறுத்திக் கூறுதல் காணலாம். இதனோடு அமையாது, கோவலன் முதலியவர்களது துன்ப நுகர்ச்சிக்குக் காரணமாக, அவர்களது முற்பிறப்பு வரலாறுகளும் விரிவாக இக் காவியத்தில் கூறப்பட்டுள்ளன (23, 138-170). இவ்வகைப் பிறப்பு வரலாறுகள் சங்ககாலத்தில் வழங்கியன

வாகத் தெரியவில்லை. இதனை நோக்குமிடத்தும், இச் சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்தே இக்காவியம் தோன்றியது என்பது விளங்கும்.

இவ்வாறாக எவ்வகையால் நோக்கினும், சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இருபெருங் காப்பியங்களும் சுமார் கி. பி. 800 அளவில் தோன்றியன என்பது உறுதியடைகின்றது.

இனி 750 முதல் 1200 வரையுள்ள காலப்பகுதியை முற்காவியகாலம் எனவும் பிற்காவியகாலம் எனவும் பிரித்து குறிப்பிடுதற்கு நியாயமுளதா என்று நோக்குதல் வேண்டும். இக்காலப் பகுதியில் தோன்றிய பெருநூல்கள் காவியங்களேயாம். பக்தி நூல்கள் ஒரு சில உளவேனும் அவை இப்பகுதிக்கு முன்புள்ள இலக்கிய முயற்சியின் கடைசி முயற்சிகள் எனவே கொள்ளத்தக்கன அவைகளும் ஒருவாறு காவியங்கள் தோன்றுதற்குப் பயன்பட்டன என்றே கூறுதல் வேண்டும். சைவத் தோத்திர நூல்கள் பெரிய புராணம் என்ற காவியம் தோன்றுதற்குத் தக்க சூழ்நிலையைத் தந்தன. இங்ஙனமே ஆழ்வாராதியர்கள் பாடல்கள் கம்பனது பெருங்காப்பியத்துக்குத் தக்க சூழ்நிலையை உதவின. அவிரோதியாழ்வார் முதலினோர் இயற்றிய ஜைனத்தோத்திரப் பாடல்கள் ஜைன காவியங்கள் தோன்றுதற்குத் தக்க சூழ்நிலையைத் தந்தன.

இவையேயன்றிச் சில இலக்கண நூல்களும், பாட்டியல் நூல்களும் இக்காலத்தே தோன்றின. இலக்கண நூல்களுள் வீரசோழியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம் என்ற மூன்றும் சிறப்பாகக் கூறத்தக்கன. காவிய லக்ஷணங்களை வகுத்தும், காவியங்களுக்குரிய செய்யுளினங்கள் பலவற்றையும் உணர்த்தியும், காவியங்களை அழகுறுத்துவனவாகக் கருதும் அணிகளை விளக்கமுறச் செய்தும் எழுந்தன இந்நூல்கள். எனவே, இவைகளும்

காவியத்திற்கு உறுப்புக்களாகவே அமைந்தன என்பது தெள்ளிது. வடமொழியில் தண்டியாசிரியர் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பர். அவர் இயற்றிய நூலைத் தழுவி எழுதிய தமிழ்நூல் அணியியல் எனவும், தண்டியலங்காரம் எனவும் தமிழில் வழங்குகின்றது. இது இயற்றப்பெற்ற காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என உய்த்துணரலாம்.

பாட்டியல் நூல்களும் ஒரு சில தோன்றின என்றேன். பன்னிருபாட்டியல், வச்சணந்தி வெண்பாப் பாட்டியல் என்ற இரண்டையும் இங்கே குறிக்கின்றேன். இவைகள் காவியங்களையும் மற்றும் சில பிரபந்தங்களையும் இலக்கணங் கூறி அமைகின்றன. எனவே, இவையும் காவிய காலத்தில் தோன்றுவதற்கு இயைபுடையனவாய் அவற்றிற்குத் துணைபுரிவனவாய் அமைந்தமை காணலாம்.

தமிழிலக்கிய சரிதத்தில் காவியகாலம் என ஒரு பகுதியிருந்தமை மேற்கூறியவற்றால் நன்கு புலனாகும். ஆனால் இந்நீண்ட காலப்பகுதியில், தத்துவ விசாரணைகள் மிகுதியும் நிகழ்ந்தன. தத்துவ நூல்களும் மிகப் பலவாய்த் தோன்றின. இத்துறையில் வல்லபேரறிஞர்களும் பலர் தோன்றினர். ஸ்ரீ சங்கராச்சாரியர், ஸ்ரீ ராமாநுஜாச்சாரியர், ஸ்ரீ மெய்கண்டதேவர் முதலினோரது திருநாமங்கள் நமக்கு எளிதில் ஞாபகத்திற்கு வரலாம். இத்தத்துவ விசாரணைக் கிளர்ச்சியும் இலக்கிய வரலாற்றை ஒருவாறு பாதித்துள்ளன. 10-ம் நூற்றாண்டுவரை தோன்றியன பெரும்பாலும் ஜைனகாவியங்களே. பின்னர் சுமார் ஒரு நூற்றாண்டாக, காவியங்கள் இயற்றப்பட்டன வாகத் தெரியவில்லை. சுமார் கி. பி. 1150 முதல் மீண்டும் காவிய முயற்சி நடை பெறத் தொடங்கிற்று. ஆனால் இப்பொழுது தோன்றியவை ஜைன காவியங்களல்ல; வைதிக காவியங்களே யாகும். இவ் வைதீக

காவியங்கள், பிற காரணங்களோடு தத்துவ விசாரணை யின் காரணமாகவும் பிறந்தன என்று நினைத்தல் தகும். கி. பி. 750 முதல் 1000 வரையுள்ள காலப்பகுதியை 'முற் காவிய காலம்' எனவும் கி. பி. 1100 முதல் 1300 வரை 'பிற்காவிய காலம்' எனவும் கொள்ளலாம்.

காவியகாலத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதிகளைக் குறித்து இங்கே கூறவேண்டும் அவசியம் இல்லை. பல அறிஞர்களாலும் இவை ஒப்புக்கொள்ளப்பட்டனவே.

சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலத்தைக் குறித்து முன்னரே கூறியுள்ளேன். காவியத்தின் ஆசிரியா சேர குலத்தவராகிய இளங்கோவடிகள். இவரைச் சேரன் செங்குட்டுவனது தம்பி என்பர். தாம் துறவுபூண்ட வரலாற்றைக் கண்ணகித் தெய்வம் தேவந்திகை மீது ஆவேசித்து நின்று உணர்த்தியதாக இவரே வரந்தரு காதையில் தெரிவித்துள்ளார். ஆனல் இது கற்பித மென்றே கொள்ளத்தக்கது. இருவரது சமயங்களும் வேறு வேருகும். கதை நிகழ்ச்சியோடு கதை கூறுவோன் தன்னைத் தொடர்பு படுத்துவது ஒரு மரபு மாத்திரமே யன்றி வேறில்லை. கதைமுற்றும் உண்மையென்று கற் போர் கருதுமாறு கவிஞர்கள் இவ்வகை மரபைக் கையாளுதல் பிறமொழி இலக்கியங்களிலும் காணப்படுவ தொன்றே. இதுபற்றி முன்னரே கூறியுள்ளேன்.

இளங்கோவடிகள் கவித்துவத்திற் சிறந்து விளங் கியது போலவே, கல்வித் துறைகள் பலவற்றிலும் சிறந்த வர். இவர் கல்வித் திறம் சிலப்பதிகாரத்தில் நன்கு விளங்குகிறது. நாட்டிய சாஸ்திரம், இசைநூல், கணு நூல், களவுநூல், சிற்பநூல், சோதிடநூல் முதலிய வற்றிற் பெரும் பயிற்சியுடையவர்.

ஆறிரு மதியினும் காருகவடிப் பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன் (26, 25—6)

என்ற அடிகளை விளக்குமிடத்து, ஆறிருமதி-இராசி பன்னிரண்டு; காருகவடி-கிரகநிலை; ஐந்து கேள்வி-திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம்; நட்பு, ஆட்சி உச்சம், பகை, நீசக்கோளுமாம் என்று அரும்பதவுரை கூறும். இங்ஙனம் பல்வேறு துறைகளிலும் பயிற்சி மிக்கிருந்தது போலவே, இவர் முற்பட்ட சங்க இலக்கியங்களிலும் பெரும் பயிற்சியுடையவர். அவற்றி லிருந்து தொடர்களும், அடிகளும், கருத்துக்களும் இவரால் எடுத்தாளப் பட்டுள்ளன. ஒரு சில வருமாறு:

தாதெருமன்றம் (சிலப். 16, 102: மலைபடு. 531: நற்றிணை 343: குறுங். 46, புறம். 33)

வாயன் முறுவல் (சிலப். 16, 80: அகம். 5)

கல்லதரத்தம் (சிலப். 16, 57: குறுங். 66)

அளைவிலையுணவு (சிலப். 16, 3: பெரும்பாண். 163)

வில்லேருழவர் (சிலப். 11, 210)

இறங்குகதிர்க்கழனி (சிலப். 14, 2: புறம். 98)

கருங்கைக் கொல்லர் (சிலப். 5, 29: புறம். 21)

உலக விடைகழி (சிலப். 10, 27: புறம். 175)

படையமை சேக்கை (சிலப். 13, 70: அகம். 289)

மெய்ப்பை (சிலப். 16, 107: முல்லை. 60)

குடாவடியுளியம் (சிலப். 25, 50: மலைபடு. 501)

இவை எடுத்தாண்ட தொடர்கள்,

அரையிருள் யாமத்தும் பகலுந்துஞ்சார் (சிலப். 4, 81: புறம். 180)

நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்து (சிலப், 4, 31: நெடுநல். 95)

வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்து (சிலப். 4, 37: நெடுநல். 51-2, அகம். 340)

குடிபழி தூற்றுங் கோலனுமல்லன் (சிலப். 23, 34: புறம். 72)

காவொடு நவிலா நகைபடுகிளவியும் (சிலப்.14, 139: அகம். 16)

பாடுதுறை முற்றிய கொற்றவேந்தன் (சிலப். 27, 46: புறம். 21)

வட்சர் போகிய வான்பனந் தோட்டுடன் (சிலப். 25, 146: புறம். 100)

வழிவழி சிறக்கநின் வலம்படு கொற்றம் (சிலப். 92: மதுரைக். 194)

திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே (சிலப். 20, 23: அகம். 13)

இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணுயோ நீ (சிலப். 11, 156—7: அறநெறி. 59)

புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை (சிலப். 30, 140: புறம். 76)

காவிரிபுரக்கு நாடுகிழவோற்கு (சிலப். 27, 171: பொருந. 248)

இவை எடுத்தாண்ட அடிகள், ஒரு சில இடங்களில் முந்து நூல்களின்று பெற்றது என நேரே ஆசிரியர் சுட்டியிருக்கின்றனர்.

பெண்ணறி வென்பது பேதைமைத்தே யென்றுரைத்த நுண்ணறிவினோர் (சிலப். 21, 24—5)

ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது
செய்வினை வழித்தா யுயிர்செலு மென்பதும்
பொய்யில் காட்சியோர் பொருளுரை (சிலப். 28, 165—168: புறம். 29; குறள் 332)

அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்

பண்டையோ ருரைத்த தண்டமிழ் நல்லுரை (சிலப். 28, 207—9)

இவைகளைக் காண்க. முந்து நூற் கருத்துக்கள் வந்துள்ள இடங்களிற் சில வருமாறு:

இளைய ராயினும் பகையரசு கடியும் (சிலப். 4, 21: புறம். 58)

அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை (சிலப். 5, 1—3: சிறுபாண். 1—3)

அரைசு கெடுத் தலம்வரு மல்லற்காலை (சிலப். 84: புறம். 174)

சூதர் மாகதர் வேதாளிக ரோடு (சிலப். 5, 48: மதுரைக். 670—1)

இங்ஙனம் ஆசிரியர் முந்துநூல்களை எடுத்தாண்டனர். இவர் தங்காலத்தும் சிறிது முற்பட்டும் வழங்கிய சொல், தொடர் முதலிய வற்றையும் தம் நூலில் அமைத்துள்ளார்.

சில்லை (சிலப். 16, 147: நாலடி 377)
அம்மாமி (சிலப். 28, 5)
மாமி (சிலப். 28, 8)
ஓசனிக்கின்ற (சிலப். 14, 125)
குண்டைப் பார்ப்பீர் (சிலப். 23, 88)
பாடு கிடத்தல் (சிலப். 30, 78)
உன் (சிலப். 15, 23, 29, 34)
பட்டிமை (சிலப். 21, 38)
நீர் (சிலப். 11, 103, 123)
பின்னை (சிலப். 13, 136)
அல்லால் (சிலப். 14, 44)
உண்டேல் (சிலப். 14, 67)

என்பவை காண்க.

இவர் தம் காலத்தில் செய்யுளடிகளின் செறிவை நெகிழ்த்துவதற்கு, 'தான்' 'அது' என்பவற்றின் பல்வேறு வேற்றுமைகளையும் வழங்கி வந்தனர். இவ்வழக்கும் இவரது காப்பியத்தில் காணப்படுகிறது.

தயங்கிணர்க் கோதை தன்துயர் (25, 80)

ஐயைதன் கோட்டம் (11, 216)

வானோர் தங்கள் வடிவி னல்லதை (23, 175)

தாங்கா விளையுள் நன்னா டதனுள் (23, 60)

கோவலன் றன்னைக் குறுகினனாகி (16, 157)

காதலி தன்னை (13, 40)

தேமொழி தன்னொடும் (10, 44)

கோவலன் தன்னொடும் 11, 205)

காரிகை தன்னுடன் (11, 67)

கோவலன் றன்னுடன் (11, 163)

அவன்றன் சேவடி (11, 106)

மேற்காட்டியனவெல்லாம் சிலப்பதிகார காப்பியம் முற் சங்ககாலத்திற்கு மிகப் பிற்பட்ட தென்பதை வற்புறுத் திக்கொண்டே யிருக்கின்றன. இங்ஙனமாக, தொட்ட தொட்ட இடத்திலெல்லாம் இது பிற்காலத்தது என் பதற்குரிய சான்றுகள் தோன்றிக்கிடக்கின்றன. இப்படி யாயினும், இது முற்சங்க காலத்தது என்ற மயக்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது இளங்கோவடிகள் செங்குட்டு வனது தம்பி என்ற பொய்யுணர்ச்சி. இது முழுக் கற்பனை என்பதுமேலே காட்டப்பட்டது.

இரண்டாவது இக்காப்பியம் பண்டைத் தமிழரது நாகரிகத்தை உணர்த்துகிறது என்ற கொள்கை. இதற்குத் தொன்மை கற்பிப்பது தங்கள் கடமை என்ற அபிமானம்

நம்மவர் மனத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது. தமிழ்மக்களது பண்டை நாகரிகம் முற்சங்க காலத்து நூல்களிலிருந்து மட்டுந்தான் ஆராய்ந்தறியத்தக்கது. இவ் அபிமானத்தை ஒரு சில சரித்திரக்காரர்கள் பயன்படுத்தி, ஆராய்ச்சி செய்வோர் போன்று, பற்பல கூறியும் எழுதியும் வருகின்றனர். போதிய தமிழறிவின்றி, பிறர் கூறுங் கூற்றுக் களையே தாங்கண்டன போல ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தெழுதிப் போலியாராய்ச்சியைப் பரப்பி வருகின்றனர். உண்மை நாட்டமில்லாத இவ்வகை யாராய்ச்சி சிறிதும் கொள்ளத் தக்கதன்று.

பதிற்றுப்பத்து 88-ம் செய்யுளிலும் சிலப்பதிகாரத்திலும் *(28, 135—149)* வரும் சேரபரம்பரையை ஒப்பிடுக. செங்குட்டுவனுக்குப் பிற்பட்டு, 9-ம் பத்திற்குத் தலைவனாகிய குடங்கோ இளஞ்சேரலிரும்பொறை 'சதுக்கழதரை வஞ்சியுள் தந்தவன்' எனச் சிறப்பிக்கப்படுகிறான். செங்குட்டுவன் சமகாலத்தவராக இளங்கோவடிகள் இருப்பாரானால் இவ்வாறு கூறுவது முடியாது.

நிற்க, சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயமும் சுவையும் தமிழ் மக்களால் என்றும் போற்றத்தக்கன. வழக்குரை காதையின் நாடகச் சுவையும், உணர்ச்சி வேகமும், உரையாடற் சிறப்பும் நாம் நன்கறிந்தனவே. இதன்கண் வரும் வரிப்பாட்டுக்கள் தனிப்பட்ட சிறப்பும் சுவையும் உடையன.

> பவள வுலக்கை கையாற் பற்றித்
> தவள முத்தம் குறுவாள் செங்கண்
> தவள முத்தம் குறுவாள் செங்கண்
> குவளை யல்ல கொடிய கொடிய (20)

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி

கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின் கணவன்
திருந்துசெங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி(25)

தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் னிணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் (32)

அன்னம் துணையோ டாடக்கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர் (33)

இக்கானல்வரிப் பாட்டுக்கள் தமிழன்னையின் திருவடிகளில் என்றும் நறுமணங் கமழ்ந்து, பன்னிற வொளியால் தரிசிப்போர் கண்களைக் களிகொள்ளச் செய்து திகழும் என்பது உறுதி. நமது உள்ளத்திலே இப்பாட்டுக்கள் இன்னிசையை எழுப்பி என்றும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். நமது தேசீய கவி பாரதியார்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் எங்கணுமே பிறந்ததில்லை; உண்மைவெறும்
புகழ்ச்சியில்லை.

என்றும்,

—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென் றோர்மணி
யாரம்படைத்த தமிழ்நாடு

என்றும் பாடியுள்ளது நாம் அனைவரும் அறிந்ததே.

இக்காவியம் முற்சங்க காலத்தது என்று சிலர் கருதுதற்குக் கொண்ட சான்றுகளிலொன்று இதனோடு உடன் தோன்றிய மணிமேகலையைப் பற்றியது. பின் கூறிய காவியத்தை இயற்றிய சாத்தனார், கடைச் சங்க

காலத்துப் புலவருள் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனுர் எனவும், எனவே இவரது காலத்தவராகிய இளங்கோ வடிகளும், அவரது பெருங் காப்பியமும் முறையே கடைச் சங்ககாலத்துப் புலவரும் நூலும் ஆமெனவும் கொள்ளுவர். ஆனுல், இக்கொள்கை தற்காலத்து ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலார்க்கும் உடம்பாடன்று. கடைச் சங்கத்துச் சீத்தலைச் சாத்தனுரும், மணிமேகலைச் சாத்தனுரும் வேருவர் என்பதே தற்காலத்தார் கொள்கை. மணிமேகலையில்,

பிற்பாடு (12, 78)
முங்கி (29, 16)
அந்த (29, 30; 27, 85)
இந்த (28, 198; 26, 63; 22; 155)
அப்படி (29, 400, 409)
இப்படி (29, 469)
நான் (28, 92; 27, 278; 23, 95)
தன்னை முதலிய சாரியைகள் (22, 102, 12, 196, 198, 202—6, 212—3; 21, 79, 89; 20, 27)
உன் (21, 18, 23, 80)
செய்குவன் (22, 182)
உனக்கு (22, 129)
கேட்குவன் (20, 18)
அறிகுவன் (20, 90)
புகுந்தனன் (19, 56); புக்கனன் முற்கால வழக்கு
ஆனேன் (21, 22)
போனுல் (21, 84)
அவ்விடம் (21, 127)

அது (சாரியை) (21, 133)

அவள் (சாரியை) (20, 113)

முதலிய பிற்காலப் பிரயோகங்கள் வந்துள்ளன. அன்றியும் 'சாதிக்கிற' (29, 125, 299) என, 'கிறு' என்ற நிகழ்கால இடை நிலைபெற்ற வினை காணப்படுகிறது. 'ஆநின்று' (29, 205), 'கின்று' (29, 294) என்ற இடை நிலைகளும் இதில் பயில்கின்றன. காத்தன்று, கொண்டன்று (23, 17) தக்கன்று (23, 30) என்பன 'காத்தமையாலன்று, கொண்டமையாலன்று, தக்கதன்று' என்ற பொருள்களில் முறையே வந்துள்ளன. இவை முற்சங்க காலத்தில் காத்தது, கொண்டது, தக்கது என்ற பொருளில்தான் முறையே வழங்கி வந்தன.

ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பினானே (புறம். 241)

ஏறிய தறிந்தன் றல்லது வந்த
ஆறுநனி யறிந்தன்றோ விலனே (அகம். 384)

என்பன காண்க.

முற்சங்க காலத்துச் சீத்தலைச் சாத்தனாரது பாடல்கள் (அகம். 53, 134, 229, 306, 320; குறுந்தொகை, 154; நற்றிணை, 36, 127, 339, புறம். 59) என்பனவற்றில் வந்துள்ளன. இவற்றின் நடைக்கும், மணிமேகலைச் சாத்தனாரது நடைக்கும் உள்ள வேறுபாடும் எனது கருத்தையே ஆதரிக்கின்றது. அன்றியும் சங்க காலத்துச் சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமயத்தினரெனக் கருதுதற்கு யாதொரு சான்றும் இல்லை. மணிமேகலைச் சாத்தனார் பௌத்தர் என்பதில் ஐயமே இல்லை. இதுவும் எனது துணிவையே வற்புறுத்துகிறது.

மணிமேகலைச் சாத்தனார் சங்ககாலத்தினரென்றல் தமிழ்மொழியின் சரிதத்தோடு பெரிதும் முரண்படுவதாகும்.

மணிமேகலை பிற்பட்ட நூலென்பதை ஒப்புக்கொள்வதில் யாதொரு தயக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை; ஆனால், ஒரு முக்கியமான கேள்வியுள்ளது. இருபெருங் காவியங்களுக்கும் பொதுவாக உள்ள அடிகளும் வர்ணனைகளும் மிகப் பலவாயுள்ளன. பொதுப்பட வழக்கிலிருந்திருக்கக் கூடிய ஈனோர் (மணி. 28, 132: சிலப். 23, 176), பிற்பாடு (மணி. 12, 78: சிலப். 13, 1) முதலிய சொற்களை நாம் விட்டுவிடலாம். இந்திரவிகாரம் (மணி. 26, 55: சிலப். 10, 14), சுடுகாட்டுக் கோட்டம் (மணி. 6, 204: சிலப். 9, 20) பூத சதுக்கம் (மணி. 20, 29: சிலப். 5, 134) முதலிய சிறப்புப் பெயர்களை ஒதுக்கிவிடலாம். உய்யானம் (மணி. 3, 52: சிலப். 14, 127): பொதியறை (மணி. 4, 105, சிலப். 10, 191) முதலிய பொதுப் பெயர்களை நாம் கவனிக்கவேண்டாம், விழாக் கோள் (மணி. 1, 20: சிலப். உரைபெறு கட்டுரை)

கால் கொள்ளுதல் (மணி. 1, 26, சிலப். 5, 144)
வினையுருத்தல் (மணி. 8, 40, சிலப். 16, 217)
நாத்தொலைவு (மணி. 13, 26, சிலப். 3, 44)
பூவிலை (மணி. 24, 19, சிலப். 5, 51)
இடங்கழி (மணி. 18, 119, சிலப். 23, 37)

முதலிய மரபுத் தொடர்களைப் புறக்கணித்துவிடலாம். ஐம்பெருங் குழு என்பேராயம் (மணி. 1, 17, சிலப். 5, 157); பட்டி மண்டபம் (மணி. 1, 61, சிலப். 5, 102); வேத்தியல் பொதுவியல் (மணி. 2 18, சிலப். 14, 148); காலக் கணிதர் (மணி. 2, 29, சிலப். 5, 44), எழுது வரிக் கோலம் (மணி. 3, 122, சிலப். 5, 226), ஆடல் பாடல் அழகு (மணி. 18, 104, சிலப். 3, 8) முதலிய சங்கேதத் தொடர்களைக் கணக்கில் கொள்ளவேண்டாம். மாகதர், சூதர், வேதாளிகர் (மணி. 28, 50, சிலப். 5, 48), கடுநவை

(மணி. 6, 127, சிலப். 5, 215) யாமங் கொள்பவர் (மணி. 7, 65, சிலப். 5, 49. புறம். 37) முதலிய மூந்து நால் தொடர்களையும் கொள்ள வேண்டாம்.

இவற்றையெல்லாம் நீக்கினும் இருகாவியங்களிலும் பல கூறுகள் பொதுவாயுள்ளன,

அடைமொழி புணர்த்த பெயர்கள்

நுதல்விழி நாட்டத் திறையோன் (மணி. 1, 54: சிலப். 14, 7)
கம்பலை மாக்கள் (மணி. 3, 147: சிலப். 19, 29)
உண்ணு நோன்பி (மணி. 3, 102: சிலப். 15, 164)
உருவிலாளன் (மணி. 5, 6: சிலப். 2, 44)
வம்ப மக்கள் (மணி. 3, 126: சிலப். 5, 111)
கண்மணி யனையான் (மணி. 16, 48: சிலப். 13, 75)
குருகுபெயர்க் குன்றம் கொன்றோன் (மணி. 5, 13: சிலப். 24, 10)
இளங்காற் செல்வன் (மணி. 19, 101: சிலப். 4, 18)

அடைமொழி யொற்றுமை

சுந்தரச் சுண்ணம் (மணி. 2, 23: சிலப். 5, 155)
நிகர்மலர் (மணி. 3, 15: சிலப். 9 1-2)
விளையா மழலை (மணி. 4, 99: சிலப். 8, 67)
நிறையருந் தானை (மணி. 9, 26: சிலப். 25, 178)
முறஞ்செவி யானை (மணி. 19, 121: சிலப். 10, 247)
பெரும் பெயர் மன்னன் (மணி. 19, 134: சிலப். 13, 138)
நாறைங் கூந்தல் (மணி. 22, 130:சிலப். 10, 43)
அழற்கணுகம் (மணி. 23, 69: சிலப். 5, 124)

ஆக்க வொற்றுமை

சோழர்தங் குலக்கொடி (மணி. பதிகம், 23: சிலப். 13, 170)

கச்சி முற்றத்து (மணி. 21, 174: சிலப். 25, 9, 34)

வர்ணனை யொற்றுமை

வானவன் பேரூர் மறுகிடைத் தோன்றி (மணி. 3, 123—4: சிலப். 6, 54-5)

சுரியற்றாடி மருள்படு பூங்குழல் (மணி. 3, 116: சிலப். 27, 181)

கடைமணியுகுநீர் (மணி. 3 22: சிலப். 20, 54)

கயிற்கடை முக்காழ் (மணி. 3, 135: சிலப். 6, 101)

ஆரங் கண்ணி (மணி. 4, 50: சிலப். பதிகம், 12)

எங்கோனியல் குணன் (மணி. 5, 71: சிலப். 10, 184)

திருவிலிட்டுத் திகழ்தருமேனியன் (மணி. 6, 10: சிலப். 15,156)

குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன (மணி. 6, 18: சிலப். 27, 153)

உயிர் வழங்கு பெருநெறி (மணி. 12, 62: சிலப். 28, 173)

இந்திர திருவன் (மணி. 19, 116: சிலப். 26, 94)

தலைத்தார்ச்சேனை (மணி. 19, 123: சிலப். 26, 80)

நாவலந் தண்பொழி லன்னோர் (மணி. 22, 29: சிலப். 25, 173)

காவிரிப் படப்பை நன்னகர் (மணி. 25 16: சிலப். 15, 151)

விடர்ச்சிலை பொறித்த விறலோன் (மணி. 28, 104: சிலப். 28, 136)

உவமை ஒற்றுமை

ஊதுலைக் குருகி னுயிர்த்துத் தடங்கா (மணி. 2, 43: சிலப். 4, 59; 22, 152)

... அரும்பெறல் மாமணி
ஓங்கிரும் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று (மணி. 2, 72—73: சிலப். 30, 29—30)

நன்மணி யிழந்த நாகம் போன்றவன் (மணி. 7, 131: சிலப். 13, 59)

இன்னுயிரிழந்த யாக்கையின் (மணி. 7, 133: சிலப். 13; 59)

பாசறை மன்னர் பாடிபோல (மணி. 8, 32: சிலப். 10, 148)

ஆடுங் கூத்திய ரணியேபோல (மணி. 12, 51-2: சிலப். 28, 165—6)

உருவக வொற்றுமை

கல்விப் பாகன் (மணி. 18, 165: சிலப். 23, 38)

காமக் கள்ளாட்டு (மணி. 25, 91: சிலப். 22, 127)

தொடரொற்றுமை

குடசமும் வேதிரமும் (மணி. 3, 164: சிலப். 13, 157)

பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணுடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவர்
செம்பு செய்ஞ்ஞரும் கஞ்சகாரரும்
மரங்கொல்தச்சரும்
மண்ணீட் டாளரும் பொன்செய் கொல்லரும் (மணி. 28, 31—50; சிலப். 5, 22—48)

தோலின் றுன்னரும் துன்ன விலைஞரும்
காலக் கணிதரும்
பாணர் மறுகு
விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரொடு

இலங்குமணி வினைஞ ரிரீ இய மறுகும்
மாகதர் சூதர் வேதாளியர்
கூறுங் குறளு மூமுஞ் செவிடும் (மணி. 12, 97, சிலப். 5, 118)

சொல்லணி யொற்றுமை

பூத்த வஞ்சி பூவா வஞ்சியில் (மணி. 26, 78: சிலப். 6. 50)

கருத்தொற்றுமை

சுடுமணோற்றி யரங்கு சூழ் போகிய முதலியன (மணி. 18, 33—5: சிலப். 14, 146)

மாதவர் கற்பும் மடவார் நோன்பும்,
காவலன் காவலின்றெனிலின்ருகும் (மணி. 22, 208—9: சிலப். 28, 207—8)

மயற்பகை (மணி. 23, 41: சிலப். 5, 122)

தலைமையில் வாழ்க்கை (மணி. 24, 79: சிலப். 11, 183)

உம்மை வினை வந்துருத்த லொழியாது (மணி· 26, 32; சிலப். 57)

கற்புக் கடன் பூண்டு (மணி. 26, 8: சிலப். 15, 143)

.........ஆருயிர் போனற்
செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெய்துதல் (மணி. 6, 158—9: சிலப். 28, 167)

கரந்துரு வெய்திய கடவுளாளரும் (மணி. 1, 15: சிலப். 6. 72—3)

ஒற்றுமையின் இயல்புகளை இப்பாகுபாடுகள் உணர்த்தும். ஆனல், அதன் அளவிற்கு உதாரணங்கள் தருகின்றேன்.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி (மணி. 1, 70—1 சிலப். 5, 72—3)

தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன் (மணி. 3, 36—7: சிலப். 15, 157—8)

சூரியற் றூடி மருள்படு பூங்குழல் முதலியன (மணி. 3, 116: சிலப். 27, 181)

பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணெடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவர்...
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்
மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்...
தோலின் றுன்னரும் துன்ன வினைஞரும்...
பால்வே றாக எண்வகைப் பட்ட
கூலங் குவை இய கூல மறுகும் (மணி. 28, 31—50)

பால்வகை தெரிந்த பகுதிப் பண்ட மொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணெடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் மைந்நிண விலைஞரொடு...
கஞ்ச காரரும் செம்பு செய்குநரும்
மரங் கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்...
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்னகாரரும் தோலின் றுன்னரும்...
சூதர் மாகதர் வேதாளிகரொடு (சிலப். 5, 22—48)

இவைகளை நோக்கினால், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒன்றற்கொன்று கடப்பட்டுள்ளது என்பது தெளிவு. இரண்டு காப்பியங்களுள் எது முந்தியது? தற்காலத்து ஆராய்ச்சியாளர்களிற் பெரும்பாலார் மணிமேகலை

பிந்தியது என்றுகொள்கின்றனர். இதற்குஅவர்கள் கூறும் சான்றுகளில் முக்கியமானது செய்யுள் நடை. இச்சான்று உறுதியான முடிபைத் தருவதன்று. மேலும், செய்யுள் நடை ஊன்றி நோக்குமிடத்து அத்தனை வேறுபட்டுக் காணப்படவுமில்லை. ஏறத்தாழச் சமகாலத்தே வெவ்வேறு சமயத்தார் இருவர் நூல்கள் இயற்றின்ல் அவ்வவர் கல்விக்கும், சூழ்நிலைக்கும், பயிற்சிக்கும், மனப்பண்பிற்கும் தக்கவாறு நடைவேறுபடுமல்லவா? அத்தனை யளவே நடை வேறுபட்டுக் காண்கிறது. அன்றியும் இளங்கோ வடிகள் உண்மைக் கவித்வம் வாய்ந்தவர்; அழகுக்கலை யுணர்ச்சி நிரம்பப்படைத்தவர், 'முத்தமிழ்க் கல்வியும், வித்தகக் கவியுங் காட்டுதற்கு நூல் செய்தார்' என்றனர் அடியார்க்கு நல்லார். இவரது நூலின் அழகிய நடை யோடு மணிமேகலையின் நடையை ஒப்பிட்டுக் கால முற்பிற்பாடு துணிதல் தக்க தன்று. எனவே, இவ்விஷயம் பற்றி நமக்குக் கிடைக்கும் சான்று முன்னோர்கள் கொள் கைகளே. பதிகம் வலியுடையதொரு சான்றே யெனினும், அதிற் காண்பன சில, நூலகத்து வருவனவற்றோடு முரண் படுகின்றன. உதாரணமாக, கண்ணகி தெய்வமாகி விண்ணுலகம் புகுந்த செய்தியைக் குன்றக் குறவர்கள் இளங்கோவடிகட்குக் கூறியதாகப் பதிகம் கூறும். நூலினகத்தே செங்குட்டுவனுக்கு இவர்கள் இச்செய் தியைக் கூறியதாகவுள்ளது. (சிலப். 25, 56—63) இளங் கோவடிகள் உடனிருந்தனர் என்ற செய்தி போலும் இங்கே காணப்படவில்லை. எனவே, இப்பதிகம் கூறுவன வற்றை உண்மையெனக் கொள்ள இயலவில்லை. ஆதலால்,

உரைசாலடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்

எனச் சிலப்பதிகாரத்திலும்,

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திற மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்

என மணிமேகலைப் பதிகத்திலும் வருவன உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. மேலேகாட்டிய ஒற்றுமைகள் ஒரு நூலைக் கண்முகப்பில் வைத்துக் கொண்டு, மற்றை நூல் இயற்றப்பட்டது என்பதை ஐயத்திற்கிடனின்றித் தெளிவிக்கின்றன. உண்மையெனக் கண்டு தெளிந்த இச்செய்திக்குப் பதிகங்கள் முற்றும் மாறுக வுள்ளன. இனி, அடியார்க்கு நல்லார் எழுதியுள்ளனவற்றை நோக்குவோம்.

'யானறிகுவன் அது பட்ட தென்று உரைத்த சாத்தனுர் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக்கின்ருர்க்கு, அடிகள் 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள், என உளப்பாட்டுத் தன்மையாற் கூற, சாத்தனுர் இவர் ஏனையிருவேந்தரையும் புகழ்ந்துரையார் என்பது கருதி மூவேந்தர்க்கும் உரியதாகலின், 'நீரே யருளுக' என்று ஏகாரவினுப் பொருண்மையான்...கூற, அவர் அதனையே துணிந்த தமது முத்தமிழ்க்கல்வியும் வித்தகக் கவியுங்காட்டுதற்கு...தாம் வகுத்துக்கொண்ட மூவகையுள்ளுரையின் விளைவு தோன்ற மங்கல வாழ்த்துப் பாடல் முதல் வரந்தரு காதையிறுதி(யை) முன் வைத்து மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக, அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியஞ் செய்தமைத்தனம் எனக் கேட்டு, அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்

கன் நடாத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின் இரண்டாகி நடந்தன என்க'. இதனுல் சிலப்பதிகாரத் திற்கு முன்பே மணிமேகலை இயற்றி முடிந்துவிட்டது என்பது புலனும். இதனை மறுக்கவல்ல சான்று யாதும் காணப்படவில்லை. அடிகள் பதிகம் இயற்றினுர் என்று உரைகாரர் கூருமையும் இங்கு நோக்கத்தக்கது. காவியம் என்ற நிலையில் மணிமேகலை, சிலப்பதிகாரத்தை நோக்க, சிறந்த தல்ல என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்தக் காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம் கடப்பட்டிருக் குமா? கடப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. இளங்கோவடிகள் போன்ற பெருங் கவிஞர்கள் இரும் பையும் பொன்னுக்கவல்ல கவித்வ மந்திர சக்தி வாய்ந்த வர்கள் அல்லவா?

இங்ஙனம் துணிந்தாலும் இருபெருங் காப்பியங்களும் ஏறத்தாழ சமகாலத்தன என்றே நாம் கொள்ளலாம். இரண்டும் சுமார் கி. பி. 800-ல் சற்று முன்பின்னுக இயற் றப்பட்டிருக்கலாம். இதனகத்தே காணும் தருக்கப் பொருள்கள் சுமார். கி. பி. 400-ல் திங்நாகர் இயற்றிய நியாயப் பிரவேசத்தினின்று அல்லது கி. பி. 7-ம் நூற்ரு ண்டில் தர்மகீர்த்தி இயற்றிய நியாய பிந்துவினின்று எடுக்கப்பட்டன வாகலாம் என்பர் கீத் ஆசிரியர் (முன்னுரை பக். 22). இம்முடிவு எனது துணிபினையே வற்புறுத்துகிறது.

மணிமேகலை ஒரு பௌத்த காவியம். இச்சமயத் தினர் இயற்றிய நூல்களுள் இதுவொன்றே நமக்குக் கிடைத்துள்ளது. அகவற் பாவால் இக்காப்பியம் இயன் றுள்ளது; சிலப்பதிகாரத்துள்ளன போன்று, விருத்த வகைகளும் வரிப்பாட்டுக்களும் இதில் இல்லை. பௌத்த சமயவுணர்ச்சி பெருகுதற் பொருட்டே இது இயற்றப் பட்டது. 'கன்னியா குமரிக்குக் கிழக்கேயுள்ள தீவாந்த

ரங்களெல்லாம் மணிமேகலா தெய்வம்' என்ற சமுத்திர தேவதையின் பரிபாலனத்து உட்பட்டிருந்தன என்பதும், போதி சத்துவராக வரக்கூடிய புண்ணிய சீலர் கடலிடையே வருந்துகின்றபொழுது இந்திரனேவலால் இத்தேவதை ஏழு நாள்களுக்குள் அவரைக் காத்து உதவி வந்தவள் என்பதும், புத்த பகவானிடம் இத்தெய்வத்துக் குள்ள பத்தி மேலீட்டால் அப்பகவானுக்குச் சைத்தியங் கள் செய்வித்தும் மனமுருகி வழிபட்டும் வந்தவள் என்பதும் பௌத்தர்கள் கொள்கைகள். இச்செய்திகள் டாக்டர் ஸில்வியன் லெவி எழுதிய வியாசத்தால் (இந்திய சரித்திர த்ரைமாஸிகை, 3, 2) விளங்குகின்றன. இவை பற்றித் தமிழ்ப் பேராசிரியர் ராவ்ஸாகிப் மு. இராகவை யங்கார் எழுதியனவும் இங்கு அறியத்தக்கன.

பௌத்த சமயவுணர்ச்சி தலை நிற்ப இக்காவியஞ் செய்யப் பட்டதே யெனினும், ஆசிரியரது கவித்வச் சிறப்பும் அங்கங்கே புலனுகின்றது. ஓர் உதாரணம் தருகின்றேன்.

> மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
> பாசடைப் பரப்பிற் பன்மல ரிடை நின்று
> ஒருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
> அரச வன்ன மாங்கினி திருப்பக்
> கரைநின் ருலும் ஒருமயில் தனக்குக்
> கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
> கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்.

இது தற்குறிப்பேற்றம் என்னும் அணியின் பாற் படுவதால், கவித்துவத்தின் உண்மைத் தத்துவத்திற்குக் கீழ்பட்டு விடுகிறது. என்ருலும், கவிஞன் கண்டதொரு காட்சியா யமைந்து, உண்மைக் கவிதையினளவு நம்மை இன்புறுத்து கிறது. தனிப்பட்ட நிறத்துடன் ஒளிரும் நட்சத்திரமாக, மணிமேகலை இலக்கிய வானில் விளங்குகிறது.

மணிமேகலைக்காவியம் போன்றே, னகரவீற்றில் முடியும் அகவற்பாக்களையுடைய பிறிதொரு காவியம் கலியாணன் கதையாகும். இதுபற்றி யாப்பருங்கல விருத்தியில், 'உதயணன் கதையும் கலியாண கதையும் 'என்' என்னும் அசைச்சொல்லா' லிற்ற நிலைமண்டிலம்' எனவும் (சூ. 74, பக். 262), 'இறுதியெழுத்துஞ் சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம் உதயணன் கதையும், கலியாண கதையும், பன்மணி யாலையும். மும்மணிக் கோவையும் என்பனவற்றுட் கண்டு கொள்க' (சூ. 53. பக். 195) எனவும் வருதல் நோக்கத்தக்கது, இதனால் உதயணன் கதையோடு இக்கலியாணன் கதை அமைப்பில் ஒத்தது என்பது விளங்கும். யாப்பருங்கல விருத்தியிலன்றி வேறு உரைகளில் இந்நூல் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படாமையால் யாதொரு விவரமும் அறியக்கூடவில்லை. ஆனால், நூலின் பெயரிலிருந்து கலியாணன் என்பவனது வரலாறு பற்றிய ஒரு காவியம் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இலக்கிய அமைப்பு மரபு என்பதனை நோக்கினாலும், உதயணன் கதையோடு சேர்த்துப் பிற்பட யாப்பருங்கல விருத்திக்காரர் கூறுதலினாலும், இக்காவியம் மணிமேகலையை அடுத்துத் தோன்றியிருக்கலாம். வடமொழியிலும் பிராகிருதத்திலுமுள்ள கதைகளை ஆராய்ந்தால், இக்கதையின் பொருளை ஒருக்கால் அறியக்கூடும்.

இலக்கியத்தைக் கலையாகப் போற்றியவர்கள் ஜைனர்கள் என்று முன்னர்க் கூறினேன். கலையென்று கருதியவுடன், சமயம் சாதி முதலியன வெல்லாம் பிற்பட இலக்கியம் என்ற உணர்ச்சியொன்றே மேம்பட்டு நிற்கும். இலக்கியம் என்னும் குடியாட்சியுலகில் உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமையுணர்ச்சிக்கு இடமில்லை. எல்லாச் சமயங்களும் அங்கே சமம் என்ற நிலையில் அடங்கியிருக்கும். மதத்துவேஷம் முதலியன தலைகாட்டாது மறைந்து

விடும். உதாரணமாக, இளங்கோவடிகள் என்னும் கவியரசர் மூவேந்தர்களையும் சமமாகப் புகழ்ந்து கூறியுள்ளார். அன்றியும் இவர் சைவம், வைஷ்ணவம் முதலிய சமயங்களை விரிந்த நோக்குடன் சமமாகப் பாவித்துள்ளார். வள்ளுவரும் இங்ஙனமே தமது பேரிலக்கியத்தைப் பொது மறையாக்கி,

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது (கல்லாடம்: நண்ணிய)

என்றனர். தேவார காலத்துச் சமயச் சச்சரவு உண்டே! சிலப்பதிகாரம் அக்காலத்தை அடுத்துச் செய்யப்பட்டதாயின், அதன்கண் இச் சச்சரவு காணப்படவேயில்லையே என்று சிலர் வினவலாம். இதற்கு இங்குக் கூறியதே தக்க விடையாம். அரசர்களுள் இப்பொது நோக்குடைய ஒரு சிலர் இங்ஙனமே ஒருதலைச் சார்பின்றித் தமது நாட்டில் வழங்கும் அனைத்துச் சமயங்களையும் ஒருப்போலப் போற்றி வந்தனர். இந்தச் சூழ்நிலையில் பாரத நூலொன்றும் இராமாயண நூலொன்றும் தோன்றின. இவை 9-ம் நூற்றுண்டளவில் தோன்றிய திவாகரம் என்னும் நிகண்டில் குறிக்கப் பெற்றுள்ளன.

அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருகற் கடிந்த வீரத் தயிலும்
பாடிய புலவன் பதியம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப் பத்தாவது
ஒலிபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்

என்ற பகுதியைக் காண்க. இங்கே முதலடியில் இராமாயணமும், இரண்டாம் அடியில் பாரதமும் உணர்த்தப்படுகின்றன. அம்பர் நகரத்துச் சேந்தன் இவற்றை இயற்றி

ஞன் என்று வெளியாகின்றது. திவாகரத்தின் காலம் 9-ம் நூற்றுண்டாகவே, இவ்விரண்டு காவியங்களும் சுமார் 850-ல் இயற்றப்பட்டிருக்கலாம். இரண்டும் இப்போது கிடைப்பனவாகத் தெரியவில்லை. திவாகரத்தை இயற்றியவர் திவாகரர் என்ற ஜைனர். அச்சிட்ட புஸ்தகத்தில் விநாயக வணக்கமும் சிவன் பெயர் என்ற தொடக்கமும் உள்ளன. ஆனுல், பழைய ஏட்டுப் பிரதிகளில் இவ்வணக்கம் இல்லை; அருகன் பெயர் என்றே இங்கிகண்டு தொடங்குகிறது. திவாகரரை ஆதரித்து வந்த சேந்தன் வைதிக சமயத்தைச் சார்ந்த ஒரு சிற்றரசன். சமய வேற்றுமையின்றி இலக்கிய வளர்ச்சி இவ்வாறு நடைபெற்று வந்தது.

வைதிக புராணப் பொருளிலிருந்து மேலே கூறிய பாரதமும் இராமாயணமும் கொள்ளப்பட்டன. தமிழ் நாட்டுப் பழைய கதைகளும், சரிதங்களும் மறக்கப்படவில்லை. இவைகளும் நூற்பொருளாய் அமையக் காவியங்கள் இயற்றப்பட்டன. சிலப்பதிகாரம் பழையதொரு கதையைப் பொருளாகக் கொண்டது என்பது மேலே கூறப்பட்டது. பதிற்றுப் பத்தினுள் 5-ம் பத்தின் பதிகத்தையும் இக்காவியம் ஒருவாறு தழுவிக்கொண்டது. இங்ஙனமே 8-ம் பத்தின் பொருளை ஆதாரமாகக் கொண்டு ஒரு காவியம் தோன்றியது. இதுதான் தகடூர் யாத்திரை எனப்படுவது. 8-ம் பத்தின் பதிகத்தில்,

தகடு ரெறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திற லொள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறையை
மறுவில் வாய்மொழி அரிசில் கிழார்
பாடினர் பத்துப் பாட்டு

என வருகின்றது. இதிற்கூறிய சரிதப் பொருள்தான் நான் இங்கே கருதியது.

'இவை (யானை நிலை, குதிரை நிலை) தனித்து வராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும்; அவை தகடூர் யாத்திரையினும் பாரதத்தினும் காண்க' எனப் புறத்திணை, (17) உரையில் நச்சினார்க்கினியர் எழுதினர். தொடர் நிலைச் செய்யுள் எனக் கூறுவதனால் தகடூர் யாத்திரை ஒரு காவியம் என்பதும் உறுதியடைகின்றது.

இந்நூல் அதிகமானுக்குரிய தகடூர்மீது சேரமான் படையெடுத்துச் சென்ற வரலாற்றினைக் கூறுவது. புறத்திணை 7-ம் சூத்திரவுரையில் 'அது (உழிஞை) சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமான் இருந்ததாம்' என நச்சினார்க்கினியர் இந்நூற் பொருட் பகுதியொன்றைக் குறித்துள்ளார். அரசர்க்குரிய நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் (குறள். 485 உரை) என்னும் அறுவகைக் குணங்களுள் மேற்சேறல் என்னும் படையெடுத்துச் செலவுயாகம் அல்லது யாத்திரை என்று வடமொழியிற் பெயர் பெறும். எனவே, யாத்திரை என்னும் வடசொல் படையெடுத்துச் செல்லுதல் என்று பொருள்படும். இச்சொல்லுக்குப் பிற்காலத்தில் பொருள் வேறுபட்டுவிட்டது. இக் காரணத்தால் நூலின் பெயர்ப் பொருள் நன்கு விளங்காமற் போயிற்று. இந்நூற் பெயரை 'தகடூர் மாலை' எனப் புறத்திரட்டுப் பிரதி செய்தோருள் ஒருவர் திருத்தியும் விட்டனர். இதனை இயற்றியவர் வைதிக சமயத்தினர்.

இரு பிறப் பாளர்க்கு ஒருஉக மாதிதே (புறத்திரட்டு, 19)

என்ற அடி- இதற்குச் சான்று.

இது சரித நிகழ்ச்சி பற்றிய ஒரு நூலேயாயினும், அந்நிகழ்ச்சி நடைபெற்ற காலத்துத்தானே இயற்றப் பெற்றதன்று. மிகப் பிற்பட்ட காலத்திலே இது தோன்றியதாகும். ஏனெனில், இதனைப்பழையவாகியகதை பொருளாகச் செய்யப்படுகின்ற தொன்மை என்பதற்கு

இலக்கியமாகப் பேராசிரியர் காட்டுகின்றனர். சங்க நூல்கள் பலவற்றையும் இந்நூல் எடுத்தாண்டுள்ளது.

இருதலைப் புள்ளின் ஒருயிர் போல (புறத். 785; அகம். 12)

பண்ணமை புரவிப்பண்பு பாராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே கல்லென
வேந்தூர் யானைக் கல்லது
ஏந்துவன் போலான்றன் னிலங்கிலை வேலே (புறத்திரட்டு, 1370—புறம். 301).

மணிநிறச் சிறுசிரல் போலகம்
அணிகல் யானைக்கு ஊறளக்கும்மே (புறத்திரட்டு, 1376—பதிற்றுப்பத்து, 42, 51, 74).

கடும்புனற் கற்சிறை (புறத்திரட்டு, 1317—தொல். புறத். 7)

கண்ணுறு பொழுதில் கைபோலெய்தி (புறத்திரட்டு, 785: கலித். 34).

இவற்றையேயன்றி நாலடியாரையும் இந்நூல் ஆண்டுள்ளது.

பரப்புநீர் வையகந் தேரினுமில்லை
இரப்பாரை எள்ளா மகன் (புறத்திரட்டு, 227—நாலடி, 307)

இதனால் இந்நூல் கி. பி. 650-க்குப்பின் தோன்றியதென்பது உறுதி. பிற்பட்ட சொற்பிரயோகங்களும் இதன்கண் உள்ளன. கொணரேல் (புறத்திரட்டு, *1301*), விளியாக் கால் (புறத்திரட்டு, *1314*), அல்லது (புறத்திரட்டு, *1317*) தேசு (புறத்திரட்டு, *1314*). இவற்றாலும் இது பிற்பட்ட நூல் என்பது நன்கு தெளியலாகும்.

இஃது உரைவிரவி இயற்றப்பட்டதென்பதும்

தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே

என்ற தொன்மையிலக்கணத்தாற் பெறுகின்றோம். 'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்ற சூத்திரத்தின்

(தொல். பொருளி. 485) உரையில் 'பாட்டு வருவது சிறு பான்மை யாகலின்: அவை தகடூர் யாத்திரை போல்வன' என்றும் பேராசிரியர் எழுதியுள்ளார். எனவே இந் நூல் பெரும்பான்மை உரைநடையாலும், சிறுபான்மை செய்யுளாலும் இயன்றுள்ளமை தெளிவாகின்றது. இச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய வுரையால், தகடூர் யாத்திரையில் பிறபாடை தழுவி வந்த பகுதிகளும் இருந்தமையும் புலனாகின்றது. இந்நூலிலிருந்து 44 செய்யுட்கள் புறத்திரட்டு என்ற திரட்டு நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றால், சேரமானுக்கு அதிகமான் தம்பி முறையினன் என்பது விளங்குகிறது.

காலவெகுளிப் பொறையகேள் நும்பியைச்
சாலுந் துணையும் கழறிச் சிறியதோர்
கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா: அதுகண்டாய்
நூல்கண்டார் கண்ட நெறி (புறத். 776)

இதனால் தகடூர் யாத்திரைச் சரித்திரம் பாரதம் போன்று தாயத்தாரிடை நிகழ்ந்த போரின் வரலாற்றை விரித்துக் கூறியதாதல் புலப்படுகின்றது. பாரதச் சரித்திரத் திற்கும் இந்நூற் சரித்திரத்திற்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

நாடு (புறத்திரட்டு 844)
செங்கோன்மை (666, 667)
சொல்வன்மை (756)
தூது (776, 785, 786)
புல்லறிவாண்மை (995)
நிரைகோடல் (1241)
நிரைமீட்சி (1251)
பகைவயிற் சேறல் (1257, 1258)

பாசறை (1274)

வஞ்சினம் (1301, 1304)

படைச் செருக்கு (1314—1321)

எயில் காத்தல் (1341, 1342)

தானை மறம் (1369—1377)

குதிரை மறம் (1381)

மூதில் மறம் (1403—1406)

இரங்கல் (1437—1453)

என்பன தகடூர் யாத்திரையில் வரும் ஒரு சில பொருள்களாம். இவற்றிற்கும் பாரதத்தில் வரும் பொருட் பகுதிகளுக்கும் உள்ள ஒற்றுமை எளிதில் அறியத்தக்கது. இதனை நோக்கினால், தென்னாட்டில் நிகழ்ந்த இரண்டாவது பாரதப்போரின் வரலாறு என்று கருதுமாறு இத்தகடூர் யாத்திரை அமைந்துள்ளதெனல் வெளிப்படை.

இப்போர் அதிகமான் நகரில் பெரியதோர் அச்சத்தை விளைவித்ததாக, ஒரு கனவு மூலம் ஆசிரியர் உணர்த்துகின்றார். கனவு கண்டவள் அதிகமானது தாய். கனவு வருமாறு:

கனவே போலவும் நனவே போலவும்
முன்னிய தன்றியென் னுள்ளகம் நடுக்குறக்
கருநிறக் காக்கையும் வெண்ணிறக் கூகையும்
இருவகை யுயர்திணைக் கேந்திய கொடியொடும்
வெருவந்த தோற்றத்தா ருருவின பல
கூளிக் கணங்கள் குருதி மண்டை சுமந்தாடவும்
பறையன்ன விழிந்த
கண்ணாள் பிறையன்ன பேரெயிற்றாள்
குவடன்ன பெருமுலைபாள் இடை கரந்த
பெருமோட்டாள்

இடியன்ன பெருங்குரலாள் தடிவாய்ற்றசைப்
புறத்தாள்
கடலன்ன பெருமேனியாள்
காண்பின்னுக் கமழ் கோதையாள்,
சிலையன்ன புருவத்தாள் சென்றேந்திய அகலல் குலாள்
மழையு மஞ்சும் வளியும் போலும்
செலவினு ளொரு பெண்டாட்டி
தலைவிரித்துத் தடக்கை நாற்றி
மறனெறிந்து மாறு கொண்டறியா
அறிவுக்கிம் முறைநா ளிவ்வள வென்றே
பூவிரல் காட்டி நீறு பொய் கத்தன்
கைகளால் நிலனடித் தூரையிடஞ் செய்து
காடு புகுதக் கண்டே னென்னும்
கவலை நெஞ்சமோ டவல நீங்கினுள்
அன்றது மன்றவவ் வதிகமான் தாய்க்கு

இச் செய்யுள் தக்கயாகப் பரணியுரையில் (641, உரை) கண்டது.

இத் தென்னுட்டுப் பாரதத்தை இயற்றிய வியாசர் இன்னுரென்று புலப்படவில்லை. அரிசில்கிழார், பொன்முடியார் முதலிய சங்கப் புலவர்கள் ஒருசிலரும், சேரமான் அதிகமான் முதலிய சங்ககாலத்தரசர்கள் சிலரும், இக்காவியத்தில் கதாபாத்திரங்களாக வருகின்றனர். இது புறத்திணை (8, 12) உரைகளால் விளங்குகின்றது. இவரேயன்றி, அதிகமானுற் சிறப்பெய்தியவனுகப் பெரும்பாக்கன் என்ற வீரனெருவனும், (புறத்திணை 8, உரை) சேரமானது படையைச் சார்ந்த நெடுங்கேரளனென்ற வீரனெருவனும் பாத்திரங்களாகத் தோன்றுகின்றனர். இவ்விருவரது பெயர்கள் போலும் சங்கநூல்களில் வந்தனவல்ல. இவர்கள் புதியராகப் படைத்துக் கொள்ளப்பட்ட வீரர்கள் போலும். அரிசில்கிழாரும் பொன்முடியாரும் சேரமானது ஸம்ஸ்தானத்துப் புலவர்கள். பொன்முடி என்பது ஒரூர்.

இதனை இந்நாட்டினராகிய நீங்கள் நன்கறிவீர்கள். இதனை அறியாது பொன் போன்ற தலைமுடியையுடைய ஒருபெண்ணின் பெயரென்று கருதி, பொன்முடியாரைப் பெண்பாற் புலவர்களுள் ஒருவராகச் சிலர் சேர்த்து எண்ணிவிட்டனர்.

ஒருமுறை அதிகமானுற் சிறப்பெய்திய பெரும்பாக்கன் போர்க்களத்திலே தனது வீறுதோன்ற நின்றனன். அப்பொழுது அவனைச் சிறிதும் பொருட்படுத்தாது சேரமான் படைமுனையிலே தனது பெருவீரம் தோன்ற எதிர் நின்றனன். இங்ஙனம் எதிர்நின்ற பேராண்மையைக் குறித்து அரிசில்கிழாரும் பொன்முடியாரும் வியந்து பாடினர் (புறத்திணை, 8, உரை). சேரமானுகிய இரும்பொறையினது பூக்கோளைப் பொன்முடியார் வருணிக்கின்றனர் (புறத்திணை, 12, உரை). ஒருமுறை சேரமானது படை தோற்றழிந்துவிட்டது. தனது படை எவ்வாறு அழிந்தது எனப் பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் வினவுகின்ருன். இருவரும் படையழிவை விரித்துக் கூறுகின்றனர். சேரமான் தகடூரை முற்றுகையிட்ட பொழுது, பொன்முடியார் தகடூரின் அரண்வலியை விளக்கிக் கூறுகின்ருர். நெடுங்கேரளன் தனது வீரத்திறமெல்லாம் காட்டிப் போரில் மடிந்துவிட்டான். அப்பொழுது அவன் தாய் போர்க்களத்திற்குச் சென்று, தன் மகனைக் கண்டு, தானும் உயிர் துறந்தாள். இந்நிகழ்ச்சி,

எற்கண் டறிகோ! எற்கண் டறிகோ!
என் மகனுதல் எற்கண் டறிகோ!
கண்ணே கணை மூழ்கினவே; தலையே
வண்ண மாலை வாளிவிடக் குறைந்தன;
வாயே, பொருநுனைப் பகழி மூழ்கலிற் புலால் வழிந்து
ஆவ நாழிகை யம்பு செறித்தற்றே;
நெஞ்சே, வெஞ்சரங் கடந்தல; குறங்கே

நிறங்கரந்து பலசரம் நிரைத்தன: அதனல்
அவிழ்பூ அப்பணைக் கிடந்தோன்
கவிழ்பூங் கழற்றின் காய் போன்றனனே.

(புறத்திரட்டு, 1405)

என்ற பாடலில் நெஞ்சையுருக்கும் சோகச்சுவையுடன் கூறப்பட்டுள்ளது.

இவ்வரிய காவியத்தை நாம் இழந்துவிட்டோம். இது வசனங்கலந்த ஒரு காவியம். எனவே, 9-ம் நூற்றுண்டின் இறுதியில் வழங்கிய வசனநடை இவ்வாறுள்ளதென அறியும் பேறும் நமக்கு இல்லா தொழிந்தது.

9-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தமிழிற் செய்யுள் வளம் மிக்க செழிப்புற்றது என முன்பே குறிப்பிட்டுள்ளேன். இதற்குக் காரணமாயிருந்தவர்கள் பெரும்பாலும் ஜைனர்களென்றே கூறவேண்டும். இவர்களே இலக்கிய இலக்கண உணர்ச்சியில் தலைநின்றவர்கள். வடமொழி, பிராகிருதம் முதலிய மொழிகளில் சிறந்த பயிற்சியுடையவர்கள்; கல்வித் துறைகள் பலவற்றிலும் மேம்பட்டு நின்றவர்கள். கல்வியின் பொருட்டும் சமயத்தின் பொருட்டும் தங்களை முற்றும் அர்ப்பணம் செய்தவர்கள். பல பிரதேசங்களுக்கும் சென்று அங்கங்கே கல்வியறிவையும் சமயவுணர்ச்சியையும் பரப்பியவர்கள். இவர்களுடைய பரந்த மொழியுணர்ச்சியும் இலக்கிய அறிவும் தமிழ்மொழிக்குப் பெரிதும் பயன்பட்டன. புதுப்புதுச் செய்யுள் வகைகளை இயற்றித் தமிழை வளம்படுத்தினர். யாப்பருங்கலத்தில் வரும் மேற்கோட் செய்யுட்கள் நான் கூறியதற்குச் சான்றுகும். தமிழின் இனிமைத் தத்துவத்தை இவர்கள் நன்குணர்ந்து, அது சிறந்து புலப்படும்படி செய்யுட்கள் அமைத்தார்கள். இவர்கள் தமிழோசையை அனுபவித்த முறையில், தமிழ் என்ற சொல்லிற்கே இனிமை என்ற புதுப் பொருள் பிறந்துவிட்டது.

இக்காலப் பகுதியிலே ஜைனர்களுடைய மொழி யாற்றல் புலப்படுவதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியத்தைக் கலையாக எத்தனையளவு போற்றினாலும் தங்கள் சமயத்தைப் புறக்கணிக்க முடியுமா? முடியாது. ஆகவே, தங்கள் சமயத்திற்குரிய கதைப் பொருள்கள் நிரம்பவேண்டும் அவசியம் ஏற்பட்டது. முக்கியமாக, கதாரூபமான பொருள்களே தங்கள் கவிதை யாற்றலுக்கும், மக்களை இன்புறுத்துதற்கும் வேண்டப்பட்டன. தங்கள் சமயத்தில் அருக பதவியடைந்தோர்களாகிய தீர்த்தங்கரர்களது சரித்திரங்கள் அறிவூட்டுவன என்றும், புண்ணியம் பயப்பன என்றும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை விளைப்பன என்றும் இவர்கள் கருதியது வியப்பாகுமா? இச்சரித்திரங்கள் அனைத்தும் ஒருசேர வடமொழியில் எழுதி முற்றிய காலம் கி. பி. 897 ஆகும். நூலின் பெயர் மஹாபுராணம் என்பது. தங்கள் மனத்திற்குகந்த இச்சரித்திரப் பொருள்களை அழகுணர்ச்சி தோன்ற இனிமை கனியும்படி செய்யுட்களாகப் பாடி வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சியின் முதலாவது விளைவு சீவக சிந்தாமணி ஆகும்.

இப்பெருங் காப்பியத்தின் காலம் கி. பி. 900-ன் பின் என்பது உறுதி. வடமொழி மஹாபுராணத்தை எழுதி முற்றுவித்தவர்கள் ஜினசேனாச்சாரியரும் குணபத்திர முனிவரும் ஆவார்கள். குணபத்திரருக்குப் பின், குமர சேனரென்று ஒருவரும் அவர்க்குப் பின் சிந்தாமணியாசாரியரும், பின்னர் ஸ்ரீவர்த்த தேவரும் இருந்தனர். இவர்கள் திரமிள சங்கத்தைச் சார்ந்தவர்கள். சிந்தாமணியாசாரியரைப் பற்றி ஒரு ஸ்லோகம் உள்ளது. அதன் பொருள்: 'தர்மார்த்த காமமோக்ஷங்களைக் குறித்து விவரிக்கும் சிந்தாமணியை வீடுகள்தோறும் பரவச்செய்த, அப்பெரும் புகழ்படைத்த சிந்தாமணி முனியைச் சிந்தாமணியால்

மிக்க நன்மையடைந்த மாந்தர்கள் எவ்வாறு புகழா திருப்பர்?' என்பதாகும். இதிற் குறித்த சிந்தாமணி ஒரு காவியம் என்பது வேருெரு ஸ்லோகத்தால் விளங்குகிறது. ஸ்லோகம் வருமாறு:

க்ருத்வா சிந்தாமணியம் காவ்பம் அபீஷ்டார்த்த ஸமர்த்தனம்
சிந்தாமணிரபூம் நாம்நா பவ்ய சிந்தாமணிர் குரு

ஸர்வா பீஷ்டங்களையும் தரவல்ல சிந்தாமணி என்னுங் காவியத்தைச் செய்த சிந்தாமணி குருவானவர் பவ்யர்கட்கு ஒரு சிந்தாமணி போன்று விளங்கினுர் என்பது இதன் கருத்து. சிந்தாமணி ஆசாரியரை யடுத்து ஸ்ரீவர்த்த தேவர் வைக்கப்பட்டுள்ளார். இவர்,

சூளாமணி கவீநாம் சூடாமணி நாம ஸேவ்ய காவ்ய கவி:
ஸ்ரீவர்த்த தேவ ஏவஹி க்ருத
புண்ய: சீர்த்திம் ஆஹர்த்தும்

என்று கூறப்படுகிருர். 'கீர்த்தியடைய வேண்டிய அளவு பெருமையுடைய சூளாமணியை இயற்றிய ஸ்ரீவர்த்ததேவர் புலவர்கட்கெல்லாம் ஒரு தலைச்சூடாமணி போன்றுள்ளார்' என்பது இதன் பொருள்.

இவ்வாறு சிந்தாமணியையும் சூளாமணியையும் அடுத் தடுத்துக் கூறுவதனுலும், இரண்டுங் காவியங்களாதலினு லும், இரண்டும் ஜைன சமயத்திற்குரியனவாதலினுலும், இவைகளை இயற்றியவர்கள் திரமிள ஸங்கத்தாரா யிருத்தலினுலும், இவைகள் தமிழ்க் காவியங்களே யாதல் வேண்டும். இவற்றை எழுதிய ஆசாரியர்கள் மஹா புராணத்திற்குப் பிற்காலத்தவர்கள் என்பதும் மேலே கூறப்பட்டது.

சிந்தாமணியின் உரைச் சிறப்புப் பாயிரத்தில்,

வையகம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்

சிந்தாமணியைத் தென்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்ன

என வருகின்றது. இதிலே கூறப்பட்ட 'பொய்யாமொழி' கங்கராஜ்யத்தை, கி. பி. *908* முதல் *950* வரை ஆட்சிபுரிந்த வனுகிய 'சத்திய வாக்கிய கொங்குணி வர்ம பூதுகப் பெருமானடி' என்பவன். கங்கர்களிற் பலர் ஜைன மதாபிமானிகள். சிந்தாமணியை உலகம் போற்றுமாறு வஞ்சிநகர்ப் பொய்யாமொழி என்பவன் புகழ்ந்த 'திருத்தக்க தேவன்' என வருதலால் திருத்தக்க தேவரும் பொய்யாமொழியும் ஒருகாலத்தவர். எனவே, சிந்தாமணி என்ற காவியம் *10*-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் சுமார் *930*—ல் தோன்றியதாதல் வேண்டும். சூளாமணி என்ற காவியமும் சுமார் கி. பி. *950*—ல் இயற்றப் பெற்றதென்று துணிதல் தகும்.

பணிதந் தலகில் பராவெடுத்துச் சிந்தா
மணிதந்த சூளாமணியாள் (கண்ணி. 186)

என்ற இராசராசனுலாவும் சிந்தாமணியை அடுத்துச் சூளாமணி தோன்றியதெனலைக் குறிப்பிக்கின்றது.

சிந்தாமணியைத் திருத்தக்க தேவரும் சூளாமணியைத் தோலாமொழித்தேவரும்[1] இயற்றினுர் என்றல் பிரசித்தம்.

1. 'பெருமண்டூரிலிருந்து கிடைத்த சூளாமணி ஏட்டுப் பிரதி ஒன்றில் பிரமாதிஞு ஆனிமீ" 7-ம் தேதியில் அபரபக்ஷமும் சதுர்த்தியும்...திருவாதிரை நட்சத்திரத்தில் புதுவாய்ப் புவனநாதர் சந்நிதியில் ஜினசேன தேவர் சூளாமணி எழுதி முடிந்தது' என இறுதிக் குறிப்பு உள்ளது. (வானெலி: 7-7-50 பக். 39). இதினின்றும் ஜினசேனதேவர் என்பது தோலாமொழித் தேவர்க்குரிய பெயரென்று S. கலியாணசுந்தரம் அய்யர் கருதுகின்ருா. ஆனுல், சூளாமணியின் மூலநூலாகிய வடமொழி மகாபுராணத்தை இயற்றியவருள் ஒருவர் ஜினசேனுசாரியர் என்பவர். இம்மூல நூலைச் செய்தவர் பெயராகவும் மேற்கூறியது இருத்தல் கூடும்.

'மேலே காட்டிய ஸ்லோகங்களிலே இக்காவியங்களை முறையே சிந்தாமணி முனிவரும் ஸ்ரீவர்த்த தேவராகிய சூடாமணியும் இயற்றினர் என்று காணப்படுகின்றதே! இங்ஙனமிருப்ப, அச்சுலோகங்களிற் குறித்த காவியங்கள் தமிழ்க் காவியங்கள் ஆதல் எப்படி?' என்று சிலர் ஐயுறவு கொள்ளலாம். இக்காவியங்களை இயற்றிய பின்னர், இவற்றின் பெயர்களால் ஆசிரியர்கள் இங்கே குறிக்கப்பட்டனர் என்று கொள்ளுதல் தக்க விடையாகும்.

சிந்தாமணிக் காப்பியத்திற்கு முதனூல் வாதீப ஸிம்மன் என்னும் ஜைன கவி வடமொழியிற் செய்த க்ஷத்ர சூடாமணியும் கத்ய சிந்தாமணியும் என்பர். இது உண்மையேயென்பது சிந்தாமணியில் ஒருசில செய்யுட்கள் முற்கூறிய நூல்களிலுள்ள ஸ்லோகங்களின் மொழி பெயர்ப்பாக அமைந்துள்ளமையால் தெளியலாம். உதாரணமாக:

> ஜீவாகாம் பாப வைசித்ரீம் ஸ்ருத வந்த: ஸ்ருதௌ புரா
> பஸ்யேயு: அதுநே தீவ ஸ்ரீகல்பா பூத கிஞ்சகா

என்ற ஸ்லோகம்

> உண்டென வுரையிற் கேட்பா ருயிருறு பாவமெல்லாம்
> கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போலவாகி (303)

என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்ற மொழிபெயர்ப்புக்களாகப் பல செய்யுட்கள் காணப்படுகின்றன. வாதீப ஸிம்மன் காலம் 8 அல்லது 9-ம் நூற்றாண்டென அறுதியிடப்பட்டுள்ளது. இவரது நூலுக்குப் பின் தோன்றிய சிந்தாமணி 930-ல் இயற்றப் பட்டிருக்க வேண்டுமென முன்னர்த் துணிந்தது பெரிதும் பொருத்த முடைத்தாதல் காணலாம்.

இந்த அரும்பெருங் காப்பியத்தின் சிறப்புக்கள் தமிழ் மக்களாகிய நாம் நன்கறிந்தனவே. பண்டைத் தமிழ்

நூல்களை நன்கு கற்று, அவற்றிலுள்ள அரிய தொடர்களையும் கருத்துக்களையும் இதன் ஆசிரியர் தம் பெருநூலில் பொன்போற் பொதிந்து வைத்துள்ளார். இது கற்பவருக்கு இலக்கிய நினைவுகளை யுணர்த்திப் பேரின்பம் பயக்கின்றது.

முத்துடை வெண்மருப்பு (முருகு. 304—5)

என்பது

முத்துடை வெண்மருப் பீர்ந்து (சிந்தா. 83)

என வருகின்றது.

கண்ணி ரருவி யாக
அழுமே தோழியவர் பழமுதிர் குன்றே (நற். 88)

என்பது

கோளுழுவை யன்னுற்குக் குன்றமு
நின்றழுதனவே (சிந்தா. 1226)

என வருகின்றது.

வில்லக விரலிற் பொருந்தி (குறுந். 370)

என்பது

வீட்டிடந் தோறும் வில்லக விரல் போற் பொருந்தி நின்று (சிந்தா. 2110)

என வருகின்றது.

ஞாயி றனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும் பணைத் தோளே (குறுந். 315)

என்றும்,

... ... வானிடைச்
சுடரொடு திரிதரும் நெருஞ்சி போல (அகம். 336)

என்றும் வருங் கருத்து,

நீள்சுடர் நெறியை நோக்கும் நிரையிதழ்
நெருஞ்சிப் பூப்போல் (சிந்தா. 461)

என வருகின்றது.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து (குறள், 828)

என்பது,

தொழுததங் கையினுள்ளும் துறமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட னொடுங்கும்
(சிந்தா. 1891)

என வருகின்றது.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் (894)

என வருங் குறள்,

காலனை அளியன் தானே கையினால் விளிக்கும் (சிந்தா. 2148)

என வருகின்றது.

எற்கண் டறிகோ (புறத்திரட்டு. 1405)

என்று வரும் தகடூர் யாத்திரைச் செய்யுட் கருத்து,

மொய்ப்படு சரங்கள் மூழ்க முனையெயிற் றாளிபோல
அப்பணைக் கிடந்த மைந்தன் அருமணித் திருவில்வீசும்
செப்பிள முலையினார்கண் சென்றுலாய்ப் பிறழச்சிந்திக்
கைப்பட எடுத்திட் டாடும் பொலங்கழற் காயுமொத்தான்
(சிந்தா. 2287)

என வருகின்றது.

காலா சோடற்ற கழற்கா லிருங் கடலுள்
நீலச் சுறுப் பிறழ்வ போன்ற புனலுடன்
நேராரை யட்ட களத்து. (களவழி, 9)

என்பது,

காலாசோ டற வெறிந்த கனைகழற்கா லலைகடலுள்
நீலநீர்ச் சுறவினம் போல் நெய்த் தோருட் பிறழ்ந்தனவே.
(சிந்தா. 2236)

என வருகின்றது. இதுவேயன்றி, களவழிச் செய்யுட்கள் பலவும் (4, 8, 22, 7, 26, 34, 35) சிந்தாமணியில் (2237-2244) தொடர்ந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

வேறொரு செய்தி தனிப்பட எடுத்துக் கூறுந் தகுதிவாய்ந்தது. உதயணன் கதையினின்று தொடர்களும், கருத்துக்களும் மிகுதியாய்ப் பயின்று வருகின்றன. உதாரணங்காட்டுதல் மிகையாகும். இங்ஙனமே பிற்பட்ட கவிஞர்களனைவரும் இவரது சிந்தாமணியைப் பயன் படுத்தியுள்ளார்கள். உலக மகா கவிகளுள் ஒருவராகிய கம்பருக்கும் இக்காவியம் உதவியுள்ளது. ஓர் உதாரணங் காட்டுகிறேன்.

துன்பமுற் றவர்க்கலால்
இன்ப மில்லை யாதலின்

என்பது சிந்தாமணி (579).

துன்புள தெனினன்றோ சுகமுளது (கங்கை. 69)

என்பது இராமாயணம்.

முந்துநூற்கடல்நீரை முகந்து உண்டு மீண்டும் அமிர்த வர்ஷமாய்ப் பொழிகின்ற மேகம் என்று திருத்தக்க தேவரைக் கூறலாம். இம்மேகம் பொழிந்த நன்னீர் பின்னூல்களாகிய தடாகங்களில் நிரம்பி நின்று கல்வி விருப்புடையார் அனைவரும் திளைத்து மகிழ்தற்கு இயைந் ததாயுள்ளது.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (குறள். 215)

என்பது தமிழ் வேதம் அல்லவா?

காவிய வரலாற்றில் சிந்தாமணியால் உளவாகிய ஒரு சில பெருநலன்களை நான் இங்கே எடுத்துக் கூற விரும்பு கிறேன். வியக்கத்தக்க முறையில் பல அற்புதமான செய்யுள் வகைகள் இதன்கண்ணே உள்ளன. கற்ப வருக்குச் சலிப்பு உண்டாகா வண்ணம் செய்யுள் வேறு பாடுகள் அடிக்கடி நிகழ்கின்றன. இச்செய்யுட்கள் பல இடங்களில் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடியும், உணர்ச்

சிக்குத் தக்கபடியும், கருத்துக்களுக்குத் தக்கபடியும் வேறுபாடெய்தி அழகாய் அமைந்துள்ளன. எங்கும் இந்நூலாசிரியர் இனிய தமிழிற் களித்து விளையாடு கின்றார்.

கொங்கு விம்மு குளிர்பிண்டிக் குழவி ஞாயிற் றெழிலேய்ப்பச்
சிங்கஞ் சுமந்த அரியணை மேல் தேவர் ஏத்திச் சிறப்பயர
எங்கும் உலகம் இருள்நீங்க இருந்த எந்தைப் பெருமானார்
தங்கு செந்தாமரையடி யென்தலையவே யென்தலையவே
(2812

எத்தனை மகிழ்ச்சிக் கூத்தோடு இப்பாடலை ஆசிரியர் பாடுகின்றார் என எண்ணி நோக்குங்கள். சிதம்பரத்திலே ஆருத்ரா தரிசனத்தின் போது, நடராஜப் பெருமான் திருமுன்பில் பக்தர்கள் சிரத்தின் மீது கைகூப்பி, ஒரு காலில் நின்று, மறு காலை அதன்மீது மடித்து வைத்து ஆனந்தக் கூத்தாடுவர். அந்தக் கூத்தினை நினைவூட்டு கிறது. இச்செய்யுள்.

கூந்தலை ஒருகை யேந்திக் குங்குமத்தாரை பாயப்
பூந்துகில் ஒருகை தாங்கிப் புகுமிடங் காண்டல் செல்லார்
வேந்தனைச் சரணென் றெய்த விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக் கார்மழை பொழிவ
தொத்தான் (2660)

இதிற்காணும் அழகிய சித்திரம் குற்றாலத்திலே அருவி யாடி வரும் நாகரிக நங்கையரை நமது கண்முகப்பிற் கொண்டு வருகிறது.

கரும்பே தேனே அமிர்தே காமர் மணி யாழே
அரும்பார் மலர்மேல் அணங்கே மழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே (2453)

ஒருவன் தன் இன்னுயிர்க் காதலியை விளிப்பதற்கு இவற்றினும் இனிய உவமப் பொருள்கள் காணக்கூடுமோ?

குழல்மலிந்த கோதை மாலை பொங்கவெங் கதிர்ம்முலை
நிழல் மலிந்த நேர்வடம் நிழற்படம்புடைத்தர
எழில் மணிக் குழைவில் வீச இன்பொ னோலை மின்செய
அழல்மணிக் கலாபமஞ் சிலம்பொடார்ப்ப ஆடுமே (1952)

இது பந்தாடுதலை ஓசையின் கதியால் எவ்வளவு நன்றாக உணர்த்துகிறது பாருங்கள். சிலப்பதிகாரத்தில் வரும்

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்றுபந்தடித்துமே
தேவராரமார்பன் வாழ்க என்று பந்தடித்துமே
(29, வாழ்த்துக்காதை)

என்ற அழகிய கந்துகவரியை நினைவூட்டுகிறது.

திம்பா லமிர்தூட்டிச் செம்பொன் மணிக்கூட்டிற்
காம்பேர் பணைத்தோளி மென்பறவை கண் படுப்பித்து (1040)

என்ற அடிகளில் ஒருத்தி தான் வளர்த்துவரும் கிளிக்குச் செய்யும் அன்பு முழுதும் ததும்புகின்றதல்லவா?

சிறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லெலன மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டு இசை பாட
நாறுமலர்க் கொம்புநடை கற்பதென வந்தாள் (2019)

என்பதிலுள்ள செய்யுளின் கதி அணிகலப் பாரம் தாங்க மாட்டாது அசைந்து வரும் மெல்லிய லொருத்தியின் நடையை எவ்வளவு நன்றாக உணர்த்துகிறது!

இதில் வரும் வரிப்பாட்டுக்களில் அழகும் இனிமையும் ஒழுகுகின்றன.

அவிழ்ந்தேந்து பூங்கோதை யாகந் தலர்ந்த
முகிழ்ந்தேந்து பூண்முலைமேற் பொன்பசலை பூப்ப

பொன் பசலை பூப்பப் பொருகயற் கண் முத்தரும்ப
அன்புருகு நெஞ்சம் அழுங்குவிக்கும் மாலை (2051)

காதலனைப் பிரிந்திருக்கும் தலைவி மாலைப்பொழுதை வருணிக்கும் சோகச் சுவையும் இவ்வரிப்பாட்டிற் காணப் படுகிறது.

மேற்காட்டிய செய்யுள் வகைகளேயன்றி, ஒருவகைப் பாவினம் தாம் இயற்றும் காப்பிய வகைகளுக்கென்றே சிந்தாமணி யாசிரியர் முதலியோர்களால் புதுவதாக வகுக்கப்பட்டது. இவர்கள் காலத்திற்கு முன்பு இப் பாவினம் வழங்கியதாகத் தெரியவில்லை. இது கலித்துறை வகைகளுள் ஒன்று.

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை

என்பது யாப்பருங்கலம் (சூ. 88) நெடிலடி என்பது ஐந்து சீர்களால் வருவது. இக்கலித்துறை வகையைக் குறித்து யாப்பருங்கல விருத்திகாரர் 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி[1] என்றிவற்றின் முதற் பாட்டு வண்ணத்தான் வருவன; அவற்றுள் நேரசை முதலாய்வரின் ஓரடி பதினான்கெழுத்தாம்; நிரையசை முதலாய்வரின் ஓரடி பதினைந்தெழுத்தாம். பிங்கல கேசியின் முதற்பாட்டு இரண்டாமடி ஓரெழுத்து மிகுத்துப் புரிக்காகப் புணர்த்தார். அல்லன வெல்லாம் ஒக்கும்.' (பக். 487) என்றெழுதினர். இவர் கருத்தின்படி இக்கலித்

1. அமிர்தபதி என்பது பிழை. அமிர்தமதி என்றிருத்தல் வேண்டும். அமிர்தபதியின் சரித்திரம் சோமதேவர், கி. பி. 959-ல் இயற்றிய யஸஸ்திலகத்தில் வந்துள்ளது. Prof Handiqui எழுதிய 'Yasastilaka and Indian Culture' என்ற நூலில் 34-36-ம் பக்கங்களில் இவளது சரித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இவளது குணதிசயங்கள் 50-52-ம் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன. யஸஸ்திலகசம்புவின் மூலத்தில் இவளது சரித்திரம் iv-ம் பகுதியில் உள்ளது.

துறைவகை வண்ணத்தான் வந்ததாம். உதாரணமாகக் காட்டியவற்றுள் முதற்செய்யுள் வருமாறு:

மூவா முதலாவுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னினெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவ னவன் சேவடி சேர்து மன்றே.

இது சிந்தாமணியிற் காப்புச் செய்யுள். காப்பியத்திற் கென்றே இயற்றப்பட்டு, காப்பியங்களிலே வழங்கி வந்தமையால், இதனைக் 'காப்பியக் கலித்துறை' என்று விரசோழியம் பெயரிட்டுள்ளது. அவ்விலக்கணம் கூறுவது வருமாறு:

இனிக் கலித்துறையைக் கோவைக் கலித்துறை என்றும், காப்பியக் கலித்துறை என்றும் இரண்டாக்கு வார் எனக்கொள்க (123, உரை). '...முன்றுன் பெருமை' காப்பியக் கலித்துறை (124, உரை)

மேற்கூறிய செய்யுள் வளம் சிந்தாமணியால் நேர்ந்த முதலாவது விளைவாகும், இரண்டாவதாக, செய்யுளின் ஓசை இனிமை என்ற உணர்ச்சி இக்காவியத்தால் பிறந்த தென்னலாம். செய்யுள்தோறும் இவ்வோசை யினிமை கனிந்து நின்று நமது நெஞ்சை அள்ளுகின்றது.

வீணையுங் குழலும் பாலும் அமுதமும் கரும்பும் தேனும்
பாணியாழ் கனியும் வென்ற பைங்கிளி மழலைத் தீஞ்சொல்
(1500)

என்ற செய்யுளின் இனிமை சொல்லளவிலும் புலப்படு கின்றது.

சின்மணி மழலைநாவிற் கிண்கிணி சிலம்பொ டேங்கப்
பன்மணி விளக்கினிழல் நம்பியைப் பள்ளி சேர்த்தி

மின்மணி மிளிரத்தேவி மெல்லவே யொதுங்கு கின்றாள்
நன்மணி யீன்றுமுந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள். (317)

என்ற செய்யுளின் ஓசை இனிமை சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாததாயுள்ளது.

இந்தவோசை யினிமையோடு நெருங்கிய தொடர்புடைய சொல்லழகும், சொல்லினிமையும் மூன்றாவதாக நோக்கத்தக்கன. சொற்களை மென்று சுவைத்து ருசி பார்த்து, இனிமையும் அழகுமுள்ள சொற்களையே சிந்தாமணி கையாளுகின்றது. இச் சொல்லழகை ஆங்கில ஆராய்ச்சியாளர் பெரிதும் பாராட்டுவர். மேலே காட்டிய செய்யுட்களிலேயே இவ்வினிமையும் அழகும் நன்கு காணலாம்.

இங்ஙனமாக, பலவகையான இனிமைகளும் ஒன்றாகக் கலந்து நம் மனத்திலே பாய்ந்து அதனை இன்பக்கேணியாகச் செய்துவிடுகின்றன. பொருளை நோக்காதபடி, செய்யுளை வாயாற் பாடின அளவிலேயும் நமக்கு உளதாம் இன்பம் மிகப் பெரிதாம்.

மேற்கூறிய நல்லியல்புகள் ஒருபுறமிருக்க, தற்காலத்துள்ள இலக்கிய மதிப்பாளர்கள் இப்பெருங்காப்பியத்தில் சில குறைபாடுகள் காணுவர். இக்குறைபாடுகளுள் முதலாவது நாம் கவனிக்கத்தக்கது கதையின் அமைப்புப் பற்றியது. யாரேனும் ஒரு கதாநாயகனை எடுத்துக் கொண்டு, அவன் செயல்களைக் காலமுறைப்படி ஒன்றன், பின் ஒன்றாக எடுத்துக் கூறுதல் சரித்திர நெறிக்குப் பொருந்துவதாகலாம்; காவிய நெறிக்குப் பொருந்த மாட்டாது. அழகு பெறவேண்டுமானால் கதா நாயகனது வாழ்வின் நோக்கமாக யமைந்த பெருஞ்செயலை எடுத்துக் கொண்டு அதன் தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவுநிலை என்பனவற்றை அறுதியிட்டு, அம்முறைப்படி கதையை அமைத்து, கதையொருமை என்ற உணர்ச்சியை

நமக்கு உண்டு பண்ணுதல் வேண்டும். இந்நெறியில் நோக்கினுல் சிந்தாமணி குறைபாடு உடையதேயாகும்.

இரண்டாவது: தனித்தனிக் கட்டங்களைக் குறித்த தாகும். இவைகள் ஒருசில இடங்களில் அழகாய் அமைந் துள்ளன. தனித்தனிச் செய்யுட்கள் தெவிட்டாத இனிமை வாய்ந்து ஒழுகுகின்றன. ஆனால், இவற்றால் மட்டும் கதை அமைப்பு அழகு பெறமாட்டாது. இவை இலை, தழை முதலியன மிகுந்து மரத்தை மறைத்து விடுவது போலத்தான். 'தனித் தனிச் செய்யுட்களின் அழகைக் கண்டு களித்தல் கற்பணி செய்த மாளிகையிலே ஒரு தனிக் கல்லின் அழகிய அமைப்பினைக் கண்டு மகிழ் தலோ டொக்கும்' என்ற கருத்துப்பட ஸி. எஸ். லியூயிஸ் (சுவர்க்க நீக்கத்தின் முன்னுரை பக். 20) எழுதுகிறார். இந்த உணர்ச்சியே சிந்தாமணியை வாசிப்போர் உள்ளத் தில் உண்டாகின்றது. தனிப்பட்ட செய்யுளின் அழகும் இனிமையும் இந்த உணர்ச்சியைத்தான் மிகுவிக்கின்றன. இதனால் ஆசிரியரின் கவித்துவத்தில் மிக முக்கியமான தோர் குறைபாடு நமக்குப் புலனாகின்றது. கதை முழு வதையும் மனக்கண் முன் நிறுத்தி, அதன் அங்க உபாங்கங்களை முறைப்பட உணர்ந்து அனைத்தையும் ஒன்று சேர்த்து அழகுறப் பாவித்து நிர்மாணஞ் செய்யும் உயரிய பாவனா சக்தி இவருக்கு இல்லை. அத்தனை பெருஞ் சிற்பி அல்லர் இவர்.

மூன்றாவதாகக் கவனிக்கத்தக்கது பாத்திர சிருஷ்டி பற்றியது. காவியங்களுக்குப் பாத்திர சிருஷ்டியென்பது உயிர்நாடியாகும். கண்ணகி என்ற பாத்திரத்தை இளங்கோவடிகள் எவ்வளவு அழகாகச் சிருஷ்டித்துள் ளார் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவளது தீரச் செயலிலே கொடுமையும் சிறிதளவு உண்டு. என்றாலும் நம் உள்ளத்தை அவளது குணாதிசயங்கள் கொள்ளை

கொண்டு விடுகின்றன. சீவகன் உள்பட ஒரு பாத்திர மேனும் உள நூல் தத்துவங்களைப் பின்பற்றி அமைந்தன வல்ல. எனவே நம்மை வசிகரித்து இன்புறுத்தும் ஆற்றல் இக்காவியத்தில் வரும் பாத்திரங்களுக்கு இல்லை.

நான்காவதாகக் கவனிக்கத் தக்கது இக்காவிய நாயகன் தன் அன்பைப் பகிர்ந்து விரயஞ் செய்த பல மணங்கள் பற்றியது. எட்டு மகளிரை இவன் மணந்த தாகச் சொல்லப்படுகிறது. இக்காரணம் பற்றி, இக் காப்பியத்திற்கு மண நூல் என்ற பெயரும் உள்ளது. இந்துக்களாகிய நமக்குப் பல பெண்களை மணந்து கொள்ளுதல் சாஸ்திர சம்மதம்தான். ஆனால், மனித இயற்கை இதற்கு இடங்கொடுப்பதில்லை. அன்றியும் ஏகதாரம்தான் உத்தம லட்சியம் என்பது நம்மவர்கள் கொள்கை. இக்கொள்கைக்கு இணங்கவே, சமீபத்தில் சட்டமும் பிறந்திருக்கிறது. உள்ளத்தைப் பல மகளிர்க் கும் பறிகொடுத்து வாழ்பவனை நாம் இழிந்தவனாகவே கருதுகிறோம். பல் பெண்டிராளனுடைய துன்பங்களைப் பற்றி நம் புலவர்கள் விவரித்துப் பாடியிருக்கிறார்கள். எனவே சீவகனது செயல் பொதுவாகத் தமிழ் மக்களது பாராட்டுக்கு உரியதென்று கருதமாட்டார்கள். சமய நெறியில் நின்று நோக்குவதால், ஜைன மக்கள் இப்பல் பெண்டிர் மணத்தைச் சீவகன்பாலுள்ள குற்றம் எனக் கொள்ளமாட்டார்கள். உண்மையான காதல் இன்னது என்பதை உணராத சீவகனை உத்தமமான காவியபுருஷ னென்று எண்ண இயலவில்லை. மணம் பற்றிய அளவில், மக்கள் மேற்கொள்ள வேண்டிய உத்தம லட்சியம் இக்காவிய நாயகனிடம் இல்லை.

ஐந்தாவதாக, இக்காவியத்தில் ஸம்போக விவரங் களும் கோப்யஸ்தான வர்ணனைகளும் மிகுதியாய்க் காணப் படுகின்றன. இதுபற்றி ஒரு வரலாறு வழங்குகின்றது.

பாண்டியன் அவைக்களத்தில் இந்நூல் அரங்கேற்றப் பட்டபொழுது, புலவர் சிலர் இதிலுள்ள அகப்பொருளும் அதன் இனிமையும் விரிவுங் கண்டு, இங்ஙனம் பாடவேண்டு மாயின், 'இவ்வாசிரியர் இளமையில் பெண்ணின்பம் நன்கு நுகர்ந்தவராதல் வேண்டும்' என்று ஆசிரியர்பாற் குற்ற மேற்றினர்களாம். ஆசிரியரும் இல்லையென்று மறுத்து, எரிந்துகொண்டிருந்த மழுவைக் கையில் ஏந்தித் தமது அகப்புறத் தூய்மையைப் புலவர் அனைவரும் அறிய நிரூபித்தாராம். இதுபோன்றதொரு சரித்திரம் பிற் காலத்தில் குமரகுருபர சுவாமிகள் மீதும் ஏற்றிச் சொல்லுவதுண்டு. இவ்வரலாற்றின் உண்மை எவ்வா றாயினும், இக்காவியத்தில் அகப்பொருள் விஷயங்கள் அறிஞர்கள் கண்டித்துரைக்குமளவு மிகுதியாய் வந்துள் ளன என்பதற்கு இது தக்க சான்றாகிறது. எனவே, இவ்விஷயமும் மக்களது ஒழுக்க மேம்பாட்டிற்கு முன் மாதிரியாகக் கொள்ளத் தக்கதன்று. உள்ள நாள் முழுவதும் தீச்செயல்கள் புரிவதில் ஈடுபட்டு, இறுதிக் காலத்தில் 'சங்கரா, சங்கரா' என்று அலறியழைத்த கதை உங்களுக்கு ஞாபகம் வரலாம். இதுபோன்றதுதான் சிவகன் முடிவில் வைராக்கியம் பிறந்து துறவுபூண்டு முத்தி நெறியில் நின்றது.

ஆறுவதாக, இக்காவியம் பொதுவாக நோக்குமிடத்து நமது மனத்தை அள்ளிப் பிடிப்பதாகக் காணவில்லை. நமது மனத்தைத் தொடுவதுகூடச் செய்யவில்லை. தனித் தனிச் செய்யுளின் நயத்திலே ஈடுபட்டு நமது மனம் அமைந்துவிடுகிறது; கதையின் போக்கிலே சென்று அதை அனுபவிப்பதற்கு ஒருவாறு இது தடையாயுள்ளது. ஓர் உவமானத்தால் இதை விளக்குகிறேன். சில கதைகளை நாம் படிக்கிறோம். அவற்றைப் படித்து முடிக்கும் வரை, அக்கதைப் புஸ்தகங்களைக் கீழே வைப்பதற்கு மனம் வருவதில்லை; வேறு சில கதைப் புஸ்தகங்களைப் படிக்க

எடுத்தால், நமது மனம் விரைந்து அவற்றில் மூழ்குவது மில்லை. கதையின் போக்கோடு மனம் ஒன்றிச் செல்லுவது மில்லை. பின் கூறிய வகையைச் சார்ந்தது சிந்தாமணிக் காவியம். நாவல்கள் நமது நாட்டில் முதல்முதலாகத் தோன்றத் தொடங்கிய காலத்தில், சில புலவர்கள் நாவல்கள் இயற்றினார்கள். இவர்கள் கதையை முக்கியப் பொருளாகக் கொள்ளாது, தமது பாண்டித்தியத்தை வெளிப்படுப்பதே முக்கியமெனக் கருதி, நாக பந்தங்கள், இரத பந்தங்கள், சுழி குளங்கள், சருப்பதோ பத்திரங்கள் முதலியவற்றை இயற்றி அங்கங்கே புகுத்தி நாவல்-இலக்கியத்தையும் தமது தாய்மொழியையும் ஒருங்கே கொலை செய்து வந்தனர். சிந்தாமணி யாசிரியர் இவ்வாறு செய்தாரென்று நான் சொல்ல வரவில்லை; அது தவறு. ஆனால், தமக்குக் கிடைத்த அற்புத சக்தியாகிய இன்னேசை யாட்சியைச் செய்யுள்தோறும் நிறுவி, அதன் தெவிட்டாத இனிமைத் தடாகத்தினின்றும், மனம் எளிதில் கரையேற ஒட்டாதபடி செய்து, கதையின் போக்குச் சுவைபட மனத்தைக் கவர்ந்து செல்லவேண்டும் என்பதை அப்பிரதானமாக்கிவிட்டனர். ஒரு முறையில் இது ஓர் ஆற்றலாகத் தோன்றினாலும், பிறிதொரு முறையில் இது குறைபாடாகவே முடிந்து விடுகிறது.

இக்குறைபாடுகளிற் பலவற்றை நீக்கி, ஓர் அழகிய சிறந்த காப்பியமாக அமைந்தது சூளாமணி. இது சிந்தாமணியை அடுத்து, அக் காப்பியம் தோன்றிய சில ஆண்டுகளுக்குள் தோலாமொழித் தேவர் என்பவரால் இயற்றப்பட்டதென்று முன்னரே கூறியுள்ளேன். தோலாமொழித் தேவர்க்கு ஸ்ரீவர்த்த தேவர் என்பதும் ஒரு பெயராதல் வேண்டும்.

இக்காப்பியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று என இதன் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரம் பிள்ளை

கூறினர். இங்ஙனம் கொள்வதற்குக் காரணம் இக்காப்பியத்தின் ஏட்டுப் பிரதிகளில் 'இரண்டாவது' என்பதற்குரிய குறியிடு காணப்படுவதேயாகும். ஐஞ்சிறு காப்பியம் என ஒரு தொகுதி உண்டு என்பதற்கு ஆதாரமில்லை. 2-வது என்ற குறியீடு சில நூல்களை எழுதிக் கோத்து வைத்துள்ள கோப்பு முறையில் இரண்டாவது என்றும் பொருள்படலாம். பொருளுறுதியுமில்லாத நிலையில் ஐஞ்சிறு காப்பியம் என்ற ஒரு தொகுதியை ஒப்புக் கொள்ளாதிருத்தலே நேரிது.

இக் காப்பியத்திலே,

நாமான் புரைக்குந் துறை யென்னினும் நாம வென்வேல்
தேமான் அலங்கற் றிருமால் நெடுஞ்சேந்த னென்னும்
தூமான் தமிழின் கிழவன். சுடராரமார்பிற்
கோமான் அவையுள் தெருண்டார் கொளப்பட்டதென்றே
(பாயிரம், 3)

என ஒரு செய்யுள் வருகின்றது. இதில் வரும் சேந்தனை ஒரு பாண்டியன் எனக் கருதி, இப்பாண்டியன் காலத்து, இவனது தந்தையாகிய அவனி சூளாமணியின் பெயரால் இக்காப்பியம் இயற்றப்பட்டதெனக் கொண்டு, இதன் காலம் 7-ம் நூற்றாண்டு என ஒரு சிலர் கருதுவர்.

ஆனல்,

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் புபலனைய
கையன் தெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யரையன்வள
நாடற் கேற்பப்
பொக்கெட்டும் பத்துமிலான் புகழ்தரும தீர்த்தன் மலர்ப்
பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்தோலா மொழிசூளா மணியுணர்வோர்
துறைகண் டோரே.

என்ற ஒரு செய்யுளால் இச் சேந்தன் பாண்டியன் அல்லன் என்பதும், இவன் கார்வெட்டி அரசன் என்பதும் விளங்கும். 10-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் இம்மறுபெயருடைய கார்வெட்டியரசனொருவன் இருந்தனன் போலும். யாப்பருங்கல விருத்தியில் (பக். 519)

என்னிற் பொலிந்த திவள்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுப்பான் தண்மதியம்-மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்
எரிந்திலங்கு வேலின் எழும்

என்ற ஒரு செய்யுள் சொல்லானந்தத்திற்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதிற் காணும் விசயன் மேலைச் செய்யுளில் வரும் அரசனே போலும்.

இந்நூற்கதையும் மகாபுராணத்திலிருந்து கொள்ளப்பட்டதே. சுரமை நாட்டில் போதன நகரில் பயாபதி (பிரஜாபதி) என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான். இவனுக்கு மிகாபதி (ம்ருகாவதி), சசியென இரு மனைவியர். இவருள் மிருகாபதி வயிற்றில் விசயனும், சசி வயிற்றில் திவிட்டனும் அவதரித்தார்கள். விசயன் பலதேவனது அம்சம்; திவிட்டன் (திப்பிரஷ்டன்) கண்ணனது அம்சம். இவ்விருவர்க்கும் பகைவன் அசுவக்கிரீவன். திவிட்டன் சுவலனசடி என்ற வித்தியாதர அரசனொருவனது மகள் சுயம்பிரபையை மணம் புரிகின்றான். அசுவக்கிரீவன் திவிட்டனோடு போர்புரிந்து இறக்கின்றான். பின் திவிட்டன் ஆட்சி புரிய, அவன் தந்தை பயாபதியும் முன்னோன் விசயனும் தீக்ஷித்து மோக்ஷம் அடைகின்றார்கள்.

இக்கதையை அழகாக, தமிழ்ச்சுவை செய்யுள் தோறும் துளும்பும்படி, கதையின் போக்கு ஒருவாறு செவ்விதாய் நடைபெற்றுச் செல்லுமாறு தோலாமொழித் தேவர் காப்பியமாக இயற்றியுள்ளார். கதைப்பொருளிலும்

கதையமைப்பிலும், செய்யுளின் இனிமையிலும், சொல்லழகு இனிமை முதலியவற்றினும் இக்காப்பியம் சிந்தாமணியை வென்று விடுகிறதென்றே சொல்லலாம். செய்யுள் வகைகளும் சிந்தாமணியிற்போல மிகப் பலவாயுள்ளன. ஆனால், இதிலும் போக வர்ணனைகளும், மகளிர் வருணனைகளும் மிகுதியாகவே காணப்படுகின்றன.

கீழ்வரும் செய்யுட்களில் மகளிர் வருணனையை நோக்குங்கள்:

மாநில மிடைபதித்து வெண்பளிங்கிற் செவ்வரத்த
இரேகை வாங்கிப்
பால்நிர வேல்வடிவு படத்திருத்தித் தாமரையுட்
பாரித் தன்ன
தூநில வாணெடுங்கண் குழைமுகத்தி னுள்ளிலங்கத்
தோன்று கின்ற
ஆய்நில மணியைம்பால் இவ்வணங்கு வரையணங்கோ
அன்றே காண்மின்;
எழுதாது மையொளிரும் இருமருங்கும் எறித்திடையே
செங்கே ழோடித்
தொழுதார்க்கு வரங்கொடுக்குந் தடங்கண்ணி துணைமுலையின்
வளாகஞ் சூழ
இழுதாய குங்குமத்தால் இலதையையும் கொழுந்தினையும்
இழைத்தார் பின்னும்
முழுதார முத்தணிந்தார் நுண்மருங்குல் உளதாக
முயன்று ரல்லர் (அரசியல். 406—407)

மகளிரை மட்டும் இவ்வாறு இனிமைச் சுவையொழுக ஒப்பனை செய்கின்றார் என்று நினைத்தல் வேண்டா. ஆடவர்களையும் சுவையிற் சிறிதும் குன்றாதபடி அழகு ஒழுக வருணனை செய்கின்றார். கீழ்வரும் செய்யுட்கள் மேல அரசியற் சருக்கத்திலேயே (401, 403) வருகின்றன. அவற்றைக் காணுங்கள்:

செந்தா அ மரைபுரையும் செழுங்கண்ணும் தடக்கையும்
பவள வாயும,
நந்தா அ மரைநாறும் அடியிணையும் அவையவையே
காண்மின்! காண்மின்!
நந்தா அ மரைநாடன் நகையிலங்கு மணியாரம்
நவின்ற மார்பம்
பைந்தா அ மரைமடந்தை பாராட்டப் பொலிந்திலங்கும்
படியுங் காண்மின்.
சேதாம்பல் வீழ்ந்தனைய செவ்வாயும் செங்குவளை
திளைத்த கண்ணும்
மீதார்ந்த வெண்ணிலாச் சுடரொளியும் வெள்ளிக்குன்
றனைய தோளும்
போதார்ந்த கருங்குஞ்சி மணிதொடர்ந்தாற்போற்புறந்தாழ்ந்
திருண்ட வாறும்
காதார்ந்த குழைதாழக் கதிருமிழ்ந்த திருமுகத்தின்
கதிர்ப்பும் காண்மின்!

இந்த அழகிய காவ்ய சூளாமணிக்கு இன்றுவரை ஒரு பதிப்புத்தான் வந்துள்ளது. சி. வை. தாமோதரம் பிள்ளை 1889-ல் நன்றாகப் பதிப்பித்து வெளியிட்டனர். ஆனால், அவர்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் மூன்று பிரதிகளே கிடைத்தன. அவர்கள் கண்டெடுப்பதற்கு முன், இந் நூலைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. செம்மையான பிரதிகள் கிடையாமையால், பிள்ளையவர் களே ஒரு சில இடங்களைத் திருத்திவிட்டார்கள். புறத் திரட்டு என்னும் திரட்டு நூலில் இக்காவியத்தினின்றும் 79 செய்யுட்கள் கோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று செய்யுட்கள் (புறத்.308, 338, 339) இப்போ துள்ள பதிப்பிற் காணப்பெறவில்லை. இந்நூற் பிரதிகள் கிடைப்பது அரிதாய்ப் போய்விட்டது. திருந்திய நல்ல பதிப்பு வெளிவரவேண்டியது இன்றியமையாதது.

ஏறத்தாழ, சிந்தாமணி, சூளாமணி என்ற சைன காவியங்கள் தோன்றிய காலத்திலேயே ஒரு பௌத்த காவியமும் தோன்றியது என நினைத்தற் கிடமுண்டு. இக்காவியம்தான் குண்டலகேசி என்பது. சிலப்பதி காரத்தோடு அகவலால் இயன்று, மணிமேகலை என்ற பௌத்த காவியம் வெளிவந்ததுபோல, சிந்தாமணி முதலியவற்ருேடு இக்காவியங்களுக்குரிய விருத்த யாப்பி ஞல் குண்டலகேசி என்ற பௌத்த காவியம் தோன்றிய தெனக் கருதலாம். இச்செய்திகளை நோக்கினுல், பௌத்த மும் ஜைனமும் சமயம் பற்றியும் இலக்கியம் பற்றியும் போட்டியிட்டு வந்தன எனத்தெரிகின்றது.

குண்டலகேசியின் சரித்திரம் வருமாறு :

குண்டலகேசி என்பவள் ஒரு வைசியப் பெண். இவள் ஒருநாள் தன் மாளிகையின் மேன்மாடியில் விளை யாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது காளன் என்ற ஒரு வைசிய புத்திரனைக் காவலாளர்கள் சிறைக் கூடத்திற்கு நடத்திச் செல்வதனைக் கண்டாள். பௌத்த சமயத்தைச் சார்ந்தவனுயிருந்தும் தீயொழுக்கங்களைக் கைப்பற்றி, சோரவிருத்தி பண்ணியதால் இவனைக் காவலாளர்கள் பிடித்துக்கொண்டனர். அரசனும் குற் றத்தை விசாரித்துக் கொலைத்தண்டனை விதித்தனன். இத்தண்டனையை நிறைவேற்றுவதற்கு இவனைத் தெரு வழியாக இட்டுச் சென்ருர்கள். இவன் பேரழகனு யிருந்தமையால் இவனைக் கண்டதும் குண்டலகேசி காமுற்ருள். இதைத் தெரிந்து இவளுடைய பிதா அரசனைக் கண்டு, காளனை மீட்டு, தன் மகளை இவனுக்கு மணம் புரிவிக்க, இருவரும் இனிது வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் குண்டலகேசி விளையாட்டுப் போக்கில், 'காளனை நீ கள்வனல்லவா?' என்ருள். இப்பேச்சை மனத்திலே வைத்திருந்து குண்டலகேசியைக் காளன் கொல்ல நினைத்து

விட்டான். இதன் பொருட்டு ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி குண்டலகேசியை அழைத்துக் கொண்டு, ஒரு மலைக்குச் சென்று, அங்கே அதன் மீதேறி, 'நான் உன்னைக் கொல்லப் போகிறேன்' என்று கூறினன்: குண்டலகேசி, 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்ற லோக வசனத்தை நினைந்து, தானே இவனை முற்படக் கொன்றுவிடவேண்டும் என்று துணிந்து, 'நான் சாகிறேனுனல் உம்மைப் பிரதட்சிணம் பண்ணி நமஸ்கரித்து விட்டுப்பின் சாகிறேன்' என்ருள். காளன் ஒத்துக்கொள்ள, குண்டலகேசி அவனைப் பிரதட்சிணம் பண்ணுவது போற்சுற்றி, மலையினின்றும் கீழே தள்ளிவிட்டாள். காளன் இறந்து புத்தஸ்மரணத்தினுல் மோட்சம் அடைந்தனன். குண்டலகேசியும் கணவனை இழந்த வருத்தத்தினுல் துறவு பூண்டு, பரசமயங்களை யெல்லாம் நாவல் நட்டு வெற்றி கொண்டு, இறுதியில் முத்திபெற்ருள். (நீலகேசி, 286, உரை).

இச்சரித்திரம் பௌத்த நூலாகிய தேரிகாதையிலும் கூறப்பட்டிருக்கிறது. குண்டலகேசி என்பது புனை பெயர். இவளது உண்மைப் பெயர் பத்திரை என்பது. இவள் முதலில் நிகண்டவாதியாயிருந்து, அங்கே இவள் தலைமயிர் பறிக்கப்பட்டுச் சேர்க்கப் பெற்ருள். பின்னர் தலைமயிர் வளர்ந்த பொழுது, அது அடர்ந்து சுருண்டிருந்தமையால் குண்டலகேசி என்று பெயர் பெற்ருள். இவளது நாயகன் காளன் 'ஸத்துகன்' என்று பெயர் பெற்றிருந்தான். இவையும் பிற செய்திகளும் தேரிகாதை (46-ம் காதை) யால் விளங்குகின்றன.

குண்டலகேசி என்று கதாநாயகி பெயரால் வழங்கும் இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று என்பது கற்ருர் அறிந்ததொன்றே. இதன் ஆசிரியர் நாதகுப்தனுர் என்பர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் (மணிமேகலை, அரும்பத அகராதி). வீரசோழிய வுரைகாரர் இக்காவி

யத்தினை 'அகலக்கவி' என்று குறிப்பிடுகின்றார். 'குண்டலகேசியும் உதயணன் கதையும் முதலாகவுடைய வற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தனவாலெனின், அகலக்கவி செய்வானுக்கு அப்படி யல்லது ஆகாது' (வீரசோ. அலங். 4) என்று ஓரிடத்துக் கூறுகின்றனர். இது ஒரு விந்தையான கருத்தே. தெரியாத சொல்லும் பொருளும் காவியத்திற்கு என்ன பயன் செய்ய வல்லது என நமக்குத் தெரியவில்லை. இதன் கருத்து இன்னதென்பது ஆராய்தற்குரியது. வீரசோழியவுரை சுமார் 13-ம் நூற்றாண்டில் தோன்றியது. அக்காலத்தேயே, இக்காவியத்தில் சொல்லும் பொருளும் சில இடங்களில் விளங்கவில்லை யென்று தெரிகிறது. பிறிதோரிடத்து (அலங், 13. உரை) 'இனிப்பாவிகமாவது அகலக்கவிப் புலவன் கருத்து. அது குண்டலகேசி, உதயணன் கதை முதலாயினவற்றுள் கண்டுகொள்க' என வருகிறது. இப்பெரு நூலுக்குக் குண்டலகேசி விருத்தம் என்ற பெயருண்டென்பதும், இதிற் கலித்துறைகள் வந்துள்ளன என்பதும் இவ்வீரசோழிய வுரையினாலே புலனாகின்றன (யாப்பு. 21 உரை). யாப்பருங்கல விருத்தியில், 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி என்றிவற்றின் முதற்பாட்டு வண்ணத்தால் வருவன' என்று கூறப்பட்டிருத்தலோடு, 'முன்றான் பெருமைக்கண் நின்றான்' என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளும் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, இக்காப்பியம், 'முன்தான் பெருமைக்கண் நின்றான்' என்ற செய்யுளோடு தொடங்குகிறது. இந்நூற் செய்யுள் ஒவ்வொன்றும், 'காதை' என்னும் பெயரால் வழங்கப்பட்டதென்பது, 'இதனால் முன்றான் பெருமைக் கணின்றான் என்னும் காதையை அநுவதித்தவாறு' என்பது முதலாகவரும் நீலகேசியுரையால் (176, உரை) அறியலாகும்.

இக் குண்டலகேசி 'அகலக்கவி' என்று கூறப் பட்டுள்ளது என மேலே சுட்டினேன். தமிழிற் கவியென்ருல் கவிஞனையும் குறிக்கும்; கவிஞன் இயற்றிய செய்யுளையும் குறிக்கும். 'விஸ்தார கவி' என்பதன் மொழி பெயர்ப்பே 'அகலக்கவி.' விஸ்தாரகவியாவான்: மும்மணிக் கோவையும். பன்மணி மாலையும், மறமும், கலிவெண் பாவும், மடலூர்ச்சியு முதலாகிய நெடும் பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத்தமும், 'கதை முதலாகிய செய்யுளும், இயலிசை நாடகங்களோடும், கலை நூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவி யெனக் கொள்க' என்று யாப்பருங்கல விருத்தி (பக். 513) கூறும். திவாகரமும் இங்ஙனமே இலக்கணம் அமைக்கும் (12,51). எனவே, இக்குண்டலகேசி இயலிசை நாடகங்களோடும், கலைநூல்களோடும் பொருந்தப் பாடிய ஒரு கதைப் பாட்டு.

இப்பௌத்த காவியத்தினின்றும் 19-செய்யுட்கள் புறத்திரட்டில் வந்துள்ளன. ஓர் உதாரணம் தருகின்றேன்:

வேரிக் கமழ்தா ரரசன் விடுகென்ற போழ்தும்
சோரிக்கலத்தின் வகையாற் கொலைசூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாட லிவற்ருற் பொலியாது விட்டான்
பாரித்த வெல்லாம் வினையின் பயனென்ன வல்லான் (724)

குண்டலகேசியினின்றும் முழுச்செய்யுட்களாகச் சுமார் 25-ம், முதல் நினைப்பும் குறைச் செய்யுட்களுமாகச் சுமார் 180-ம் நீலகேசி யுரையில் காணப்படுகின்றன. உதாரணங் களாகக் கீழ்வருஞ் செய்யுட்களைக் காண்க:

என்றுதா னுலகுயக்கோள் எண்ணினன் அது முதலாச்
சென்றிரந்தார்க் கிந்தனன் பொருளுடம் புறுப்புக்கள்
துன்றினன் பிறக்குந ளுளனயின் மாமேருக்
குன்றியின் துணையாக் கொடுத்திட்டா னல்லனே! (பக் 6)

எண்ணிகந்த காலங்கள் எம்பொருட்டான் மிகையுழந்
தெண்ணிகந்த வுலோகங்கள் இருடீர ஒருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமும் சிலமும் மிதையாக்கி
எண்ணிகந்த குணத்தினன் எம்பெருமா னல்லனே! (பக். 6)

அளவிலாக் கடைப்பிடி யொருநான்கும் பிறப்பென்னும்
களைவருந் துன்பத்துக் கற்ப நூறாயிரம்
விளைவாய போதியை யுறுமளவும் வினைமடியான்
தளர்வின்றி யோடிய தாளினா னல்லனே! (பக். 191)

நிலம்வலிது நீர்திவளும் தீத்தெறூஉம் காற்றுளரும்
புலமாமாறிது பொருள் வரையறுக்கு மாகாசம்
நலமாண்ட நாற்பூதஞ் சார்வாக வுபாதாக்கள்
சொலமாண்ட இயற்கைதான் நிறமுதலாச் சொலற்பாற்றே.
(பக். 205)

அவாச் சார்ந்து பற்றுகும் பற்றினால் வினைமுதிர்வாம்
தவாதவிவ் வினைமுதிர்வாற் பிறப்பாகும் பிறப்பினாற்
குவாவிய பிணிமூப்புச் சாக்காட்டின் கூட்டமா
யுவாவியத் தடுமாற்றம் ஒழிவின்றி யுருளுமோ. (பக். 246)

விதல் விவ துயிராதல் அக்குறி
காய்தல் கோறல், கொலையேவல் என்றிவை
ஒய்த லின்றியுடனாதை லால்வரும்
சேதனைக் குக்கொலை யாமெனச் செப்பினான் (பக். 4)

உடைப்பண் பில்ல தொருகாற் பெறுவது
கொடுக்க லின்றிக் கொளலுற்றுக் கொண்டபின்
இடத்திலெண் மாத்திரை நீத்தினி அஃதரோ
கடுத்த திமை யுடைய களவுதான். (பக். 5)

தடிகடவழ் குருதிதன திருகணொரு தலைதனதோர்
புடைபுதல்வர் புனையிழையர் பொருகளிறு புனைநிதியம்
முடிகளர சிவைமுறைபி னருளியவன் முரல் கொள்கழல்
அடிகளடை பவர்துயர்கள் அடைதலும தரிதே (பக். 5)

கீழ்வரும் செய்யுள் குண்டலகேசியில் வந்துள்ள ஒரு கலித்துறை யென்ன வூகிக்க இடமுண்டு.

கதிர்த் தாரகையும் வெண்டிங்களு மாக வெய்யோனைக் கையாற்
பிதிர்த்தா ருளர்பெரும் பானுடன் ருங்கிற் பின்ருக் கலியோ
டெதிர்த்தாரை வென்றண்ட மூடுநின் ருனருள் போலுந் தண்மை
உதிர்த்தா ரழல்கங் குலாயெங்கும் பெற்ற தொளி விசும்பே.

இச்செய்யுளைக் குறித்து, 'இது நான் கடியும் எதுகையும், வழிமொழியும், பொருட் பொலிவும் பெற்று, நயன் ஒப்ப முடிந்தமையால், இன்பம் என்னும் உயிரலங்காரமாய் நின்றது' என்ருர் வீரசோழிய வுரைகாரர் (151, உரை).

இது ஒரு கலித்துறை; குண்டலகேசியில் கலித்துறை பயின்று வந்துள்ளது என்று மேலே தெளிந்தோம். அன்றியும் இது ஒரு பௌத்த நூல்; பௌத்தர் இயற்றிய வீரசோழியத்திற்குப் பௌத்தர் எழுதிய உரையில் பௌத்த காவியத்திலிருந்து மேற்கோள் காட்டுதல் மிகப் பொருத்தம். மேலும், இம்மேற்கோள் வந்துள்ள இடத்திற்குச் சிறிது முன், 'வேரிக்கமழ் தாரவன்' என்று தொடங்கும் குண்டலகேசிச் செய்யுள் காட்டப் பட்டுள் ளது. இக்காரணங்களால் எனது ஊகம் வலியுறுகிறது.

50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்பு தாம் இவ்வரிய காவியத்தின் ஏட்டுப் பிரதியொன்று பார்த்ததாக காலஞ் சென்ற ராவ்சாஹிப் வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் என்னிடம் கூறியதுண்டு. ஏடுகள் தேடிப் பெற்றுத் தொகுத்து வைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும் சென்னை அரசாங்க நூல்நிலயத்தார், தஞ்சை சரஸ்வதி மஹால் ஆட்சியாளர், மதுரைச் சங்கத்தினர், திருவனந்த புரம் அரசாங்க நூல்நிலயத்தார் முதலியோர்கள் வேண்டு மளவு முயற்சி எடுத்தால் எத்தனையோ அரிய நூல்கள் நமக்குக் கிடைப்பன வாகலாம். சிறிது காலந்தாழ்த்தால் இப்போது கிடைக்கும் நூல்கள்தாமும் சிதல்வாய்ப்பட்டு அழிந்துவிடும். இதை நம்மவர்கள் ஞாபகத்தில் வைத்தல்

வேண்டும். உங்கள் ஸர்வகலாசாலையில் வேலை பார்த்து வரும் ஸ்ரீ கிருஷ்ணய்யங்கார் மிக முயன்று பிரதிகள் தேடித்தொகுத்து அரசாங்கத்திற் சேர்த்துள்ளது மிகப் பாராட்டத்தக்கது.

நிற்க,

ஒரு பௌத்தர் மணிமேகலை இயற்றினார்; அதனைத் தெரிந்து உடனே ஒரு ஜைனர் சிலப்பதிகாரத்தை இயற்றித் தந்தனர். இரண்டு காப்பியங்களும் ஆபரணங்களின் பெயர்களாய் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. இங்ஙனமே ஒரு பௌத்தர் குண்டலகேசி என்ற காவியத்தை இயற்றினர்; பௌத்த சமயப்பொருள்கள் இதில் விளக்கப் பட்டிருத்தல் வேண்டும். நூற்பெயர் ஒரு பெண்ணின் பெயராகவுள்ளது. இதனையடுத்துச் சில ஆண்டுகளுக்குள் ஒரு ஜைனர் ஒரு பெண்ணின் பெயருள்ள காப்பியம் ஒன்று தமது சமயப்பொருள்களை விளக்கி இயற்றியிருப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம். இவ்வாறே ஒரு ஜைன காவியம் தோன்றியது. இதுதான் வளையாபதி என்ற பெருங்காப்பியம். குண்டலகேசியில் வரும் சமயம் பற்றிய செய்யுள் ஒவ்வொன்றையும் எடுத்துத் தருக்கித்து ஜைன சமயத்தை நிறுவப் புகுந்த நீலகேசி என்ற காப்பியம் ஒன்று உண்டு என்பதையும் இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைப் பற்றிப் பின்னர்க் கூறுவேன். 'கதை' என்ற நெறியில், ஜைன சமயக் கதையைப் பொருளாகக் கொண்டு, குண்டலகேசிக்கு எதிர்த் தராசில் வைத்து எடை காணத் துணிந்தது 'வளையாபதி'.

இக்காப்பியத்தின் கதை நமக்குத் தெரியமாட்டாது: நூல் இப்போது அகப்படாமையினால். ஆனால், குண்டலகேசியைப் போல, இதுவும் ஒரு வணிகசாதி வரலாறு எனக்கொண்டு வைசியபுராணம் என்ற நூலில் 35-ம்

சருக்கத்தில் ஒரு கதை கூறப்பட்டுள்ளது. கதையின் சுருக்கம் வருமாறு :

நவகோடி நாராயணன் என்ற வைசியன் ஒருவன், ஒருகாலத்து வாழ்ந்து வந்தான். இவன் வக்குவமகரிஷி கோத்திரத்தில் உதித்தவன்; வைர வாணிகன்; விற்பிடி மாணிக்கத்திலே பெயர் சிறந்தவன்; தேவேந்திரனைக் காட்டிலும் மிக்க செல்வ வாழ்வு உடையவன்; நற்குணத் தன்; ஈகையிலும் சிவபத்தியிலும் மேம்பட்டவன். ஒரு பாண்டியனை வென்று வீரனாகவும் திகழ்ந்தனன். இவன் தன் குலத்தில் ஒரு பெண்ணையும் அந்நிய குலத்தில் வேறொரு அழகிய பெண்ணையும் மணந்தனன். இவ்வேற்று மணத்தை வைசிய மரபினர் வெறுத்து, இவன் தங்கள் உறவினனாகக் கருதத் தக்கவனல்லன் என்று கூறினர். எனவே, நவகோடி நாராயணன் தனது அந்நிய குலத்து மனைவியை நீக்கி வைத்துவிட்டான். அப்பொழுது அம்மனைவி கர்ப்பவதியா யிருந்தாள். நாராயணனும் கப்பலேறி அந்நிய தேசங்கட்குச் சென்று வாணிபம் செய்து வெகு காலத்திற்கு அப்புறம் பெருஞ்செல்வத் திரளோடு திரும்பி வந்து, தன் குலத்து மனைவியோடு இன்புற்று வாழ்ந்து வந்தனன்.

நீக்கி வைக்கப்பட்ட மனைவி மனங்கலங்கி, காளி கோயிலுக்குச் சென்று, தன் கணவன் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தல் வேண்டுமெனப் பிரார்த்தனை செய்து வ்ந்தாள். காளி தேவியும் அஞ்சவேண்டாமென்று அபயங் கொடுத்துத் தன் கோயிலுக்கு அருகாமையிலே வாழ்ந்து வரும்படி சொல்லி மறைந்தனள். இவ்வாறே வாழ்ந்து வரும் நாளில், ஒரு மைந்தனைப் பெற்றெடுத்தாள். இம்மைந்தனும் உரிய பருவத்தில் பள்ளிச் சாலைக்கு அனுப்பப்பட்டான். அங்குள்ள ஒரு பையன் இவனை நோக்கி, 'நீ தகப்பனை அறியாதவன்' என்று கூற,

மைந்தனும் வீடு வந்து தன் தாயிடம், 'எனது தந்தை யார்?' என்று கேட்க, தாய் உண்மையைச் சொல்லு கின்ருள். பின் மைந்தன் தன் தந்தை வாழ்ந்த புகார் நகரம் புகுந்து, அவனது கடைக்கு முன் நின்றுகொண்டு, தனது உறவை வெளிப்படுத்துகின்ருன். நவகோடியும், இச்செய்தியைத் தெரிந்து பொய் கூறுகிருன் என்று எண்ணி, மைந்தனைத் துரத்தத் தொடங்கினுன். மைந் தனும், 'நான் உம்முடைய பிள்ளை என்பதற்குக் காளி தேவியே சாட்சி கூறுவாள்' என்று சொல்ல, வைசிய மக்கள் இந்த வழக்கை விசாரித்தனர். காளியை மைந்தனும் அவன் தாயும் வேண்டிக்கொள்ள, அவள் வணிகர் சபைக்கு வந்து சாட்சி கூறி, உண்மையை வெளிப்படுத் தினுள். பின்னர், நவகோடி நாராயணன் மைந்தனையும் அவன் தாயையும் ஏற்றுக்கொண்டு இன்ப வாழ்வு வாழ்ந்தனன்.

இந்தச் சருக்கம் 'பஞ்ச காவியத்தலைவரில் வைர வாணிபன் வளையாபதி பெற்ற சருக்கம்' என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கதைக்கும் வளையாபதிக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. 'தமிழ்க் காப்பியங்கள்: இலக்கணமும் இலக் கியமும்' என்ற நூலில் கே. வி. ஜகந்நாதையரும் இம்முடி பினையே கொண்டுள்ளார். இந்நூல் டாக்டர் சாமிநாதை யரது மேற்பார்வையில் ஆராய்ந்து எழுதப்பட்டது.

வளையாபதி ஒரு ஜைன காப்பியம்.

இது

> உலகமூன்று மொருங்குடன் ஏத்துமாண்
> திலக மாய திறலறி வன்னடி
> வழுவி னெஞ்சொடு வாலிதி னூற்றவும்
> தொழுவல் தொல்வினை நீங்குக என்றியான்.
>
> (தொல். சொல். 148. நச்.)

என்ற செய்யுளாலும், 'நிக்கந்த வேடத் திருடி கணங்களை' என்று அடியார்க்கு நல்லார் காட்டும் (9, கனாத்திற. 13, உரை) மேற்கோளாலும் தெரியக் கிடக்கின்றது. மேற் கூறிய கதையிலோ ஜைன சமயக் குறிப்புப் போலும் இல்லை. வளையாபதி இறுதியில் துறவு பூண்டு முத்தியெய் தியமை புறத்திரட்டுச் செய்யுட்களால் (422-424) விளங் கும். இம்முடிபும் மேலைக் கதையிற் காணப்படவில்லை. ஆனால், இப்பொருள்பற்றி விரிவாய் ஆராயவேண்டும் அவசியமே இல்லை.

புறத்திரட்டில் இக்காப்பியத்தினின்றும் 66 செய்யுட் கள் தரப்பட்டுள்ளன. யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் கீழ்வரும் செய்யுட்கள் காட்டப்பட்டிருக் கின்றன.

நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே

காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே
வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே

மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே
உத்தம நன்னெறிக்கண் நில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்க ணின்றாக்கம் செய்தியேல்
சித்தி படர்தல் தெளிவாழி நெஞ்சே

இவை வளையாபதிச் செய்யுட்களின் அழகை ஒருவாறு புலப்படுத்துகின்றன. தக்கயாகப் பரணியுரையிலே (425) 'இவர் (ஒட்டக்கூத்தர்) வளையாபதியை நினைத்தார் கவியழகு வேண்டி' என வந்துள்ளது.

அடியார்க்கு நல்லார் காட்டும் சில செய்யுட்கள் (6, 82-108), இவ்வளையாபதியைச் சார்ந்தன என்றெண்ணு தற்கு இடமுண்டு. அவை வருமாறு:

அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம்
பைவாய் பசும்பொற் பரியக நூபுரம்
மொய்ம்மணி நாவின் முல்லையுங் கிண்கிணி
கௌவிய ஏனவும் காலுக் கணிந்தாள்.

குறங்கு செறியொடு கொய்யலங்காரம்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையி னுடீஇப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
அறிந்த தமைவர அல்குற் கணிந்தாள்.

ஆய்மணி கட்டி அமைந்த விலைச் செய்கைக்
காமர் கண்டிகைக் கண்டிரள் முத்திடைக்
காமற் பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற
வேய்மருள் மென்றோள் விளங்க அணிந்தாள்.

புரைதபு சித்திரப் பொன்வளை போக்கில்
எரியவிர் பொன்மணி யெல்லென் கடகம்
பரியகம் வால்வளை பாத்தில் பவழம்
அரிமயிர் முன்கைக்கு அமைய அணிந்தாள்.

சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினைத்
தொங்க லருத்தித் திருந்துங் கயிலணி
தண்கடல் முத்தின் தகையொரு காழெனக்
கண்ட பிறவும் கழுத்துக்கு அணிந்தாள்.

நூலவ ராய்ந்து நுவலருங் கைவினைக்
கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பிணை
மேலவ ராயினு மெச்சும் விறலொடு
காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்.

கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகம்
சூளா மணியொடு பொன்னரி மாலையும்
தாழ்தரு கோதையும் தாங்கி முடிமிசை
யாழின் கிளவி யரம்பையர் ஒத்தாள்.

இவைகள், வளையாபதிக்குரியதாக அடியார்க்கு நல்லார் பெயராற் குறிப்பிட்டுக்கூறும்.

துக்கத் துடைக்கும் துகளறு காட்சிய
நிக்கந்த வேடத் திருடி கணங்களை
ஒக்க அடிவீழ்ந் துலகியல் செய்தபின்
அக்கதை யாழ்கொண்டு அமைவரப் பண்ணி

(9, கனாத்திற. 13, உரை)

என்ற செய்யுளோடு ஒப்பும் தொடர்பும் உடையனவாதல் மனங்கொளத்தக்கது.

இக்காப்பியம் 10-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியிருக்கலாம் என்று ஊகித்தேன். இந்நூல்,

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையவை யுள்வழிப்
பற்றா வினையாய்ப் பலபல யோனிகள்
அற்றா யுழலும் அறுத்தற் கரிதே (புறத்திரட்டு, 422)

என்ற செய்யுளில் திருக்குறளை எடுத்தாளுதல் காணலாம். வளையாபதி பிற்காலத்துக் காப்பியம் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

வளையாபதியை அடுத்து, பிறிதொரு வகைக் காப்பியங்கள் ஒருசில தோன்றின. முன்னர் விவரித்த குண்டலகேசி இவ்வகையைச் சார்ந்ததே. சமயப் பிணக்கு அதிகரித்து, ஜைனர் முதலாயினோர் பரமத கண்டனம் செய்து ஸ்வமத ஸ்தாபன முயற்சியில் ஈடுபட்டுள்ளதை இக்காவியங்கள் புலப்படுத்துகின்றன. குண்டலகேசிக்கு மறுப்பாகத் தோன்றிய நீலகேசியை முதற்கண் நோக்குவோம். இதனை யாப்பருங்கல விருத்தி குறிப்பிட்டிருக்கிறதென முன்னரே கூறினேன். நூலின் பெயர் நீலகேசித் திரட்டு என ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுகிறது. எனினும், 'நீலகேசித் தெருட்டு' எனவே அதனைக்

கொள்ளுதல் வேண்டும். நூலின்கண் 'சினவரன் நெறியே தெருட்டென்றான்' (148) எனவும் மொக்கல வாதச் சருக்கம் முதலியவற்றின் இறுதிச் செய்யுட்களில் 'தெருளாதவரைத் தெருட்ட லதுவே' எனவும் வருவனவற்றிற் போன்று 'தெருட்டு' என்ற சொல் வந்துள்ளது இப் பெயரை உறுதிப்படுத்தும். ஆனால், பொதுப்பட 'நீலகேசி' எனவே இந்நூல் வழங்கப்பட்டு வந்தது.

பாஞ்சால தேசத்திலே சமுத்திரசாரன் அரசுபுரிந்து வந்தான். அவனது புண்டரவருத்தனம் என்ற நகரினை அடுத்து, பலாலயம் என்ற ஒரு பிணக்காடு இருந்தது. பேய்கள் நிரம்பிய அக்காட்டில் பிடாரி கோயில் ஒன்று இருந்தது. அதில் முனிசந்திரன் என்ற ஜைனத் துறவி சில நாள் தங்க நேர்ந்தது. ஒருநாள் காளிக்குப் பலியிடுவதற்காகச் சிலர் ஓர் ஆட்டினைக் கொணர்ந்தனர். முனிவன் இதனை அறிந்து பலி கொடுத்தலை விலக்கி, அம்மக்களை நல்வழிப்படுத்தினான். காட்டிலுள்ள பேய்களெல்லாம் சபை கூடி ஒரு பெரிய பேயைக் கூட்டிவந்து, தமக்கு உண்டியில்லாமற் செய்துவிட்ட முனிவனை அடக்குதல் வேண்டுமென்று தீர்மானித்தன. இதன் பொருட்டு தென்றிசை வந்து பழையனூர் நீலியாகிய நீலகேசியினிடம் முறையிட்டு (44) அவளை அழைத்துச் சென்றன. நீலகேசிப் பேயும் முனிவன் முன் தோன்றி அவனைப் பலவாறாக அச்சுறுத்தத் தொடங்கினாள். முனிவன் சிறிதும் மனத்துளக்க மின்றி யிருக்கவே, அரசன் மகளாகிய காமலேகையின் உருவங்கொண்டு வந்து நின்று, முனிவனை நீலகேசி மயக்கிவிட முயன்றாள். தனது ஞானதிருஷ்டியால் தன்முன் ஒரு வரம் வேண்டி நிற்பது பேய் மகள் என்பதை யுணர்ந்து, 'நீ அரசன் மகளாயின் நீ இப்பேய் வனம் வருவதற்குக் காரணம் என்'னென்று கேட்க நீலகேசியும் தன்னை முனிவன் உணர்ந்து கொண்டான் என்று கருதி நடுங்கிப் பணிகின்றாள். முனிவன் தருமோப

தேசம் செய்கின்றான். நீலகேசி தன் பாவத்திற் கிரங்கி, தனக்குற்ற பணியை விதிக்கும்படி வேண்டுகின்றாள். முனிவனும்,

செய்த தீமை கெடக் கடனாட்டிற்
சினவரன் னெறியே தெருட்டு என்றான் (148)

இந்த ஆணையை மேற்கொண்டு, பரமத கண்டனம் செய்யப் புகுகின்றாள் நீலகேசி.

[1]பழையனூர் நீலி (நீலகேசி)யின் வரலாற்றை ஞான சம்பந்தரும்,

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் அடிகளே. (1, 45, 1)

எனக் குறிப்பித்துள்ளார். இவ்வரலாற்றின் பிறிதோர் அமிசத்தைப் பெரிய புராணத்துள் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் (3) காணலாம். கர்ண பரம் பரை வரலாறாக கி. பி. 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் வழங்கி வந்த இந்தக் கதையிலிருந்து ‘நீலி’யைத் தமது மதப்பிரவர்த்தகி யாக்கி, நீலகேசிக் காவியத்தை ஜைனர்கள் அமைத்துள்ளனர். இந்த அமைப்பிலுள்ள ஹாஸ்ய ரஸம் அனுபவிக்கத்தக்கது.

இந்நூலைக் காவியம் என்று சொல்வதற்குத் தக்க இலக்கியச் சுவையும் பெரும்பாலும் இதன்கண் இல்லை. இம்மதிப்பின் உண்மையை ஏதேனும் ஒரு சருக்கத்தைக் கற்றுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் கவிதைச்

---

1. பழவூர் நீலி, பழைய நல்லூர் நீலி என்றும் சொல்வதுண்டு. நீலி கதை வில்லுப்பாட்டாகவும் வழங்குகிறது. ‘விழிஞ்சம் முடிப்பிறையில் நீலகேசியம்மன் தீபஸ்தம்பம்’ என ஒரு குறிப்பு திரு. கணேசபிள்ளையின் கையெழுத்துப் பிரதியில் காணப் படுகிறது. S.D.P.

சுவையை இவ்வகை நூல்களில் நாம் எதிர்பார்த்தல் கூடாது.

இந்நூலகத்தே காணும் தருக்க நெறியும் கௌரவமாய் நிகழுகிறதென்று கூறமுடியாது. எதிரிட்டு வாதஞ் செய்வோரை இகழ்தலும், நகையாடுதலும், பழித்துரைத்தலும் அங்கங்கே காணப்படுகின்றன. பித்தி (203), பித்தன் (769), மூடர் (765), உணர்ந்திலை (810), நக்காள் (189), நகைக்குணம் (753, 709), பெரிதழகிது (803) என்பன இவ்வகை உரையாடல்களிற் சில.

ஆனால், இந்நூலியற்றிய காலத்தில் தருக்கம் நிகழ்ந்த நெறி பொதுப் பட இவ்வாறிருந்ததெனலும் பொருந்தும்.

இந்நூலியற்றிய காலத்தைக் குறித்து இதனைப் பதிப்பிட்ட பேராசிரியர் சக்கரவர்த்தி நயினாரவர்கள் விரிந்த ஆராய்ச்சியுரை ஒன்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவர்களது முடிபு கொள்ளத்தக்கதென்று தோன்றவில்லை. 'நீலகேசியில் தொல்காப்பியம், நாலடியார், குறள் என்ற மூன்று நூல்களிலிருந்தும் செய்யுட்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இம்மூன்றனுள் தொல்காப்பியம் மிக முற்பட்டது. அடுத்தது நாலடியார்; இது கி. மு. 3-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. குறளை இயற்றியவர் ஏலாசாரியர் என்ற பெயருடைய குந்தகுந்தாசாரியர். இவர் கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் என்பது ஜைன கர்ணபரம்பரை. எனவே, கி. பி. முதல் நூற்றாண்டு நீலகேசியின் முன்னெல்லையாகக் கொள்ளலாம். ஆஜீவகர்களை நீலகேசி குறிக்கின்றது; தேவாரத்தில் இவர்கள் குறிக்கப்படாமையினாலே, இவர்கள் தேவார காலத்திற்கு முன்பு, அதாவது கி. பி. 5-ம் நூற்றாண்டு வரை தங்கள் சமயத்தைப் பிரசாரம் செய்து வந்தார்கள் என்று கொள்ளலாம். எனவே கி. பி. 5-ம் நூற்றாண்டு

நீலகேசியின் பின்னெல்லை யென்று கருதலாம்' என்று இப்பேராசிரியர் துணிந்தனர். இத்துணிவு பலவகையாலும் பொருத்தமற்றது. ஆராய்ச்சியாளர்கள் நாலடியாரின் காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியென்று ஒரு முகமாய்த் துணிந்துள்ளார்கள். இந்நூலில் வரும்

நான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல் (80)

என்பதனை,

'ஊன்கொடுமை யுரைத்தானஃ துணர்ந்திலனே யாகாதோ' என்ற நீலகேசிச் செய்யுள் (181) எடுத்தாண் டுள்ளமை தெளிவு. 'வானிடு வில்லின் வரவறியா வாய்மையினால்' என்ற நாலடிச் செய்யுளையும் (கடவுள் வாழ்த்து) நீலகேசி 684-ம் செய்யுள் எடுத்தாளுகின்றது. இங்ஙனம் வேறு சிலவும் உள. எனவே, நீலகேசி 7-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்பது தெளிவு.

பேம்படுப் பவரொடும் பிரிவின் ணுமையைத்
தேம்படு கிளவிநீ சிந்தி யென்னவே (822)

என்பது 'இன்னாதே, பேஎ யொடானும் பிரிவு' என்ற பழமொழி (126)யை ஆண்டுள்ளது. பழமொழியின் காலம் 8-ம் நூற்றாண்டு எனற்குத் தக்க சான்றுகள் உள. எனவே, நீலகேசி இந்நூற்றாண்டிற்கும் பிற்பட்டதாம்.

அன்றியும் 'மொழி கொண்டேல்' (271) என்பதனுள் 'ஏல்' என்பது அசையாக வந்துள்ளது. 8, 9-ம் நூற்றாண்டுகளில் தோன்றிய பாவைப் பாட்டுக்களில் 'ஏலோ ரெம்பாவாய்' என்ற இடத்து 'ஏல்' அசையாக வருதல் நோக்கத்தக்கது. இப்போதுள்ள பண்டைத் தமிழ் நூல்

களில் இரும்புக்கும் காந்தத்திற்கும் உள்ள தொடர்பு மணிமேகலைக் காப்பியத்தில்தான் முதன் முதலாக வருகின்றது.

உள்ளநெறி யென்பது நாராசத் திரிவிற்
கொள்ளத் தருவது காந்தமெனக் கூறல் (27, 55—56)

இதனைப் பின்பற்றி,

இரும்பொடு காந்தம் இயைவில் திரிவே (366)

என நீலகேசி கூறுகின்றது. மணிமேகலையைப் பின்பற்றிய இடங்கள் வேறு சிலவும் உள்ளன. இக்காப்பியம் 9-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றியது. நீலகேசி 9-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது எனக் கொள்ளுதற்கு இவை தக்க சான்றுகளாம்.

இந்நூலில் 139-ம் செய்யுளின் இறுதியடி 'தடங் கொள் செந்தா மரை யடியென் தலையவே யென் தலையவே' என்று காணப்படுகிறது. இது 'தங்குசெந்தா மரையடி யென்தலையவே யென்தலையவே' என்ற சிந்தாமணிச் செய்யுளின் (2812) அடியைப் பின்பற்றியது. இங்ஙனமே சிந்தாமணியை அடியொற்றி வந்த வேறு இடங்களும் நீலகேசியில் உள. எனவே, சிந்தாமணியின் காலமாகிய கி.பி. 10-ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இந்நீலகேசி பிற்பட்டது. இறுதியாக, குண்டலகேசியின் மறுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. நீலகேசியுரையாசிரியர் இரண்டிலும் முள்ள செய்யுட்களைக் 'காதை' என்பர். குண்டலகேசியின் காலம் கி. பி. 10-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். எனவே இக்காலத்திற்கும் நீலகேசி பிற்பட்டது. இந் நூற்றாண்டின் இறுதியில் சுமார் கி. பி. 1000-ல் அல்லது சிறிது பிற்பட்டு நீலகேசி தோன்றியதாதல் வேண்டும். இம்முடிபு யாப்பருங்கல விருத்தியில் இந்நூல் குறிப்பிடப் பட்டுள்ளமையோடு முரணுகாமையும் அறியத்தக்கது.

நீலகேசியில் வந்துள்ள சொற்பிரயோகங்களும் இம் முடிபிற்கு ஒத்தனவாகவே உள்ளன. கீழ்வருவனவற்றைக் காண்க :

குழுமணர் 408	மூஞ்சி 856
உமர் 838	நான் 714
உன் 193	உனக்கு 520
மெச்சி 416	சுலா 632
சோபனம் 624	சுவாகதம் 624
வேண்டுகின்றீர் 500	கொள்கின்றுள் 215
பலிசை 598	போதே 398
மாதுளம் 576	கும்மாயம் 3 ·8
எல்லாத்திற்கும் 510	அல்லால் 114
முகமன் 131	பாவகாரி 313
அப்படி 170	இப்படி 170

இங்ஙனமாக, எவ்வாறு நோக்கினும் நீலகேசி சுமார் கி. பி. 1000-க்கு முற்பட்டதாகாது என்பது தேற்றம்.

ஏறத்தாழ இக்காலத்தில் தோன்றிய தருக்க காவியங்கள் வேறு சிலவும் யாப்பருங்கல விருத்தியால் தெரியவருகின்றன. இவ்விருத்திகாரர் 'தருக்கமாவன : ஏகாந்த வாதமும் அநேகாந்தவாதமும் என்பன. அவை குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவ தரிசனம், காலகேசி முதலிய செய்யுட்களுள்ளும் சாங்கிய முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க.' (யாப். வி. பக். 540) என்றெழுதுகின்றனர். இவற்றுள் தத்துவ தரிசனம் என்பது காவியமாகத் தோன்றவில்லை. இதுவும் காலகேசியும் ஒழிந்த பிறவற்றோடு 'கேசி' என்பதனைக் கூட்டி, குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி, அஞ்சனகேசி என்பனவே நூற்பெயர்களெனக் கொள்ளுதல் வேண்டும். இது

'உபசார வழக்கினல் குண்டல நீல பிங்கல கேசிகளது தோற்றமும் தொழிலும் சொன்ன இலக்கணச் செய்யுட்களும் பிரித்து வேரோர் உபகாரத்தினல் குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்னும் பெயர் பெற்ருற் போல வெனக் கொள்க' என்று யாப்பருங்கல விருத்திகாரர் (பக். 40) கூறுவதனல் விளங்கும். இவையனைத்தும் சிந்தாமணி, சூளாமணி முதலியவற்றில் வருவன போன்ற செய்யுட்களான் இயன்றன என்று ஊகித்தல் தகும். ஏனெனின் இவ்விருத்திகாரர், 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி என்றிவற்றின் முதற் பாட்டு வண்ணத்தான் வருவன. அவற்றில் நேரசை முதலாய்வரின் ஓரடி பதினன்கெழுத்தாம். நிரையசை முதலாய்வரின் ஓரடி பதினைந்தெழுத்தாம். பிங்கலகேசி யின் முதற்பாட்டு இரண்டாம் அடி ஒரெழுத்து மிகுத்தும் புரிக்காகப் புணர்த்தார். அல்லன வெல்லாம் ஒக்கும்' (பக். 487) எனக் கூறி 'மூவா முதலா' (சிந்தாமணி: கடவுள் வாழ்த்து 1) என்பன முதலாகிய செய்யுட்களை உதாரண மாகக் காட்டினர்.

பிங்கலகேசி[1] அஞ்சனகேசி, காலகேசி என்பன எம்மதத்தைச் சார்ந்த தருக்க காவியம் என்பதும் நம்மால் அறியக்கூடவில்லை. இவை பெரும்பாலும் ஜைன சமயச் சார்பினவாகவே இருத்தல் கூடும். இவற்றுள் ஏதேனு மொன்று பௌத்த சமயத்திற்குரியதாயிருப்பின், வீர சோழியவுரைகாரர் குண்டலகேசிச் செய்யுளைக் காட்டியது போலக் காட்டியிருப்பர். யாப்பருங்கல விருத்தியில் குறிப்பிடும் 'அமிர்தபதி'யைக் குறித்தும் யாதும் அறியக் கூடவில்லை. பெயரை நோக்கிய அளவில், தருக்க காவியம் என்று தோன்றவில்லை. பெரும்பாலும் சிந்தாமணியைப் போன்றதொரு காவியமாகவே யிருத்தல் கூடும்.

---

1. பிங்கலகேசி. See Mahabharata XII, 174, 178.

வேறு இரண்டு காவியங்களும் யாப்பருங்கல விருத்தியால் புலப்படுகின்றன. 'பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா' என்ற சூத்திரத்தின் உரையில் (பக். 238) 'இன்னும் பல அடியால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராண சாகரமும் முதலாக்வுடைய செய்யுட்களிற் கண்டு கொள்க' என்று காணப்படுகிறது. எனவே இராமாயண காப்பியம் ஒன்றும், புராண சாகரம் என்னும் காப்பியம் ஒன்றும் விருத்தியின் காலத்திற்கு முற்பட்டு, அதாவது 12-ம் நூற்றாண்டிற்கு முன்பு இருந்தன என்று அறிகிறோம். இந்த இராமாயணத்தைக் குறித்து முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இது வெண்பாவினால் இயன்றதொரு நூலாதல் வேண்டும். வீரசோழியவுரையில் இராமசரிதம் பற்றி, இரண்டு செய்யுட்கள் உள்ளன. அவை:

மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்கள்—மற்றிவன்தன்
கண்தான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்தார் அரக்கன் வலி.

ஐயிருப தோசனையு மாய்கோ ரிடனின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவெந்து வேலுக மீட்டு. (பொருட்படலம், 18, உரை)

என்பன. இவை பெரும்பாலும் விருத்தி குறிப்பிடும் இராமாயணத்தைச் சார்ந்தனவாகலாம். சென்னை அரசாங்க நூல்-நிலையத்திலுள்ள 'பல திரட்டு' என்ற தொகுதியில் 'இராமாயண வெண்பா' என்னும் நூலிலிருந்து நான்கு வெண்பாக்கள் தரப்பட்டுள்ளன.

சனகன்மொழி கேட்டுத் தவமுனிவன் சொன்னான்
தினகரனார் தெய்வக் குலத்தோன்—மனமகிழ
வந்தசிறுச் சேவகனை மன்னா அறிவீரோ
இந்தவகை என்னினைந்தீர் என்று.

தயரதனும் புத்திரரும் தாமரையோன் பெற்ற
நயமுனியும் தானையுடன் நண்ணச்—சயமுடைய
கோதமன்றன் புத்திரனைக் கொண்டு மிதிலேசன்
ஏதமிலான் வந்தான் எதிர்.

வசிட்டனும் கோசிகனும் மன்னவரும் கூடி
விசித்திரமா மங்கலச்சொல் விண்டு—சசிக்குநிகர்
மாமுகத்துச் சிதைக்கும் வாழும் உருமிளைக்கும்
மாமுகூர்த்த மிட்டார் மகிழ்ந்து.

சூரியனார் வம்சத் துதித்த தயரதனும்
ஆரியனை யிங்கே அழைமின்என்றான்—மூரி
வளைக்குலங்கள் முன்றில்தொறு மாமுத்தம் ஈன்று
திளைக்கு மிதிலையர்கோன் தேர்ந்து.

இவற்றைக் குறித்து 'வேறோர் இராமாயண நூலைச் சேர்ந்தவையாகும். ஆயின், இது பிற்காலத்து நூலாக வேண்டுமென்பது இதன் வாக்கால் தெரிகிறது' என ஸ்ரீ மு. இராகவையங்கார் எழுதியுள்ளார் (ஆராய்ச்சித் தொகுதி, 19). வீரசோழிய வுரையிற் காணும் செய்யுட்களும், இச் செய்யுட்களும் வாக்கில் வேறுபடுவனவாகத் தோன்றவில்லை. முந்தியன யாப்பருங்கல விருத்தி குறிப்பிடும் இராமாயணத்தைச் சார்ந்தனவாயின், இவையும் அவ்வாறே கொள்ளத்தகுவன.

இவ்விருத்தி குறிப்பிடும் புராண சாகரமும் வெண்பாவினால் இயன்றதாதல் அவ்வுரையே தெரிவிக்கின்றது. இராமயணத்தோடு சேர்த்துக் கூறப்படுதலால் வைதிக சமயத்திற்குரிய புராணத் தொகுதியென்று இதனைக் கொள்ளலாம்; அன்றியும் இது ஒரு காப்பியமாதலும் வேண்டும். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரால் ஸி. எல். எஸ். பதிப்பகத்திலிருந்து வெளியிடப்பட்ட ஒரு பாட புஸ்தகத்தில் புராண சாகரம் என்றொரு நூலிலிருந்து சில செய்யுட்கள்

தரப்பட்டுள்ளன என்று எனக்கு ஞாபகம் வருகின்றது. இப்புராண சாகரம் முன் குறித்த நூல்தானே அன்றே என்பது துணியக்கூடவில்லை. 'கதாஸரித் ஸாகரம்' என்ற வடநூற் பெயரின் சாயையில் இந்நூற் பெயர் அமைந்திருத்தலால், அதற்குப் பின் கி. பி. 12-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இது இயற்றப் பெற்றதாகலாம். கதாஸரித் ஸாகரம் இயற்றிய ஸோமதேவ பட்டர் (கி. பி. 1063—1081) 11-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். எனவே இப்புராண சாகரம் 12-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் இயற்றப் பெற்றதாகலாம்.

மேலே இந்நூல், வைதிக சமயத்தைச் சார்ந்ததாகலாமென்று ஊகித்தேன். ஆனால், இது கதாஸரித் ஸாகரத்தைத் தழுவி யியற்றியதொரு நூலாகவும் இருத்தல் கூடும். அவ்வாறாயின், இதன் காலம் சில ஆண்டுகள் இன்னும் பிற்பட்டதாகலாம்.

கி. பி. 1000 முதல் கி. பி. 1250 வரை தமிழறிஞர்களது உள்ளம் வேறு பல துறைகளிற் சென்றுவிட்டதென நினைத்தற்கிடமுண்டு. மேலே குறித்த இராமாயண வெண்பாவும் புராண சாகரமுந் தவிர, நாம் ஆராய்ந்து வரும் காவிய வகையில் வேறு ஒரு நூலும் இந்தக் காலப் பகுதியில் தோன்றியதாகத் திட்டமாகக் கூறமுடியாது. இத்துறைகளை ஒரு சிறிது நோக்குவோம். முதலாவது இலக்கணத் துறை. இலக்கண ஆராய்ச்சி மிகுதியாய் நிகழ்ந்தன. ஒரு சில இலக்கணங்களும், உரைகளும் இக்காலத்தில் தோன்றின. நேமிநாதம், வீரசோழியம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்ற இலக்கணங்கள் இதன் விளைவாக இக்காலத்தே தோன்றின. இக்காலத்தெழுந்த உரைகளுள் தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரையும், நாம் மேலே பல இடங்களில் குறித்துள்ள யாப்பருங்கல

விருத்தியும்[1] சிறப்பாகக் கூறத்தக்கன. யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையும் முதல் இராஜராஜன் காலத்தன என்று ஸ்ரீ மு. இராகவையங்கார் சாசன உதவி கொண்டு நிறுவியுள்ளார் (சாசனத் தமிழ்க்கவி சரிதம் பக். 39—44). அம்முடிவு ஒப்புக்கொள்ளத்தக்கதே. ஆனல், காரிகையின் உரைகாரராகிய குணசாகர முனிவரை அமித சாகரரின் ஆசிரியரென்று ஒரு சிலர் கொள்ளுவர். இக்கருத்துக்கு ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. யாப்பருங்கலத்திற்கு உரையியற்றியவர் இன்னரென்று துணிவதற்குச் சான்று யாதும் இல்லை. ஒரு சில இடங்களில் "யாப்பருங்கல உரையுட் கண்டுகொள்க" எனக் காரிகையுரை (அடையாறு சாமிநாதையர் நூல் நிலையப் பதிப்பு: பக். 42, 67, 79, 90, 101, 105, 108, 115, 122, 124, 160, 195.) கூறுதலால், முன்னைய உரையை இயற்றியவர் வேறோர் ஆசிரியர் ஆவர் என்றும் துணிதல் தகும். ஓரிடத்தில் (பக். 195) "தொல்காப்பியத்துள்ளும், யாப்பருங்கல விருத்தியுள்ளும் கண்டுகொள்க," எனக் காணப்படுகின்றது. இதனல் தொல்காப்பியத்தோடு ஒத்த தகுதியும் பெருமையுமுடையதாக இவ்விருத்தி கருதப்பட்டுள்ளது தெளிவாம். தாமே எழுதிய விருத்தி ஆயின், காரிகை உரைகாரர் இங்ஙனம் கூறுர். அன்றியும், மேற்சுட்டிய பன்னிரண்டு இடங்களில் ஓரிடத்தேனும் தாம் இயற்றிய விருத்தியெனக் குறிப்பிடவே இல்லை. இக்காரணங்களால், இவ்விருத்தியின் ஆசிரியரும், காரிகையின் உரைகாரரும் வேறு வேருவர் என்றே துணியத்தக்கது.

இறையனர் களவியலுரையும் இப்போது உள்ள நிலையில் இந்தக் காலப் பகுதியில்தான் எழுதி முற்றிய

1. யாப்பருங்கலவிருத்தியில் 'அமிர்தமதி' என்ற காவியம் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் காவியம் ஸோமதேவர் கி. பி. 951-ல் இயற்றிய யஸஸ்திலக சம்புவின் வழி நூல். எனவே சுமார் கி. பி. 1100-ல் இயற்றப்பட்டிருக்கலாம். இதனை நோக்குமிடத்து யாப். வி. 1200-ல் இயற்றியதாகலாம் எனத் தோன்றுகிறது.

தெனக் கருதுதல் வேண்டும். கடைச்சங்கத்து நக்கீரர் இதனை இயற்றினர் என்பது மிகப் பிற்பட்ட கர்ணபரம்பரை வரலாறு. இக்கதையை நம்பி இவ்வுரையும் நூலும் கடைச்சங்ககாலத்தன என்று முன்னுள்ளோர் கூறி வந்தனர். ஆனல் மு. இராகவையங்கார் முதலிய ஆராய்ச்சியாளர்கள் இவ்வுரை 7-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதெனவும், பின் வரலாற்று முறையில் வழங்கி 13 தலைமுறைகள் கழிந்த பிற்பாடு 10-ம் நூற்றாண்டளவில் எழுதி முற்றியதெனவும் கொள்வர். இவ்வுரை இன்னும் பிற்காலத்தது எனக் கொள்ளுதற்குச் சான்றுகள் உள்ளன. நாலடிச் செய்யுட்கள் சிலவும், பழமொழிச் செய்யுட்கள் சிலவும் இவ்வுரையில் பயின்று வருகின்றன. உதாரணமாக,

பொழிப்பகல நுட்பநூலெச்சம் (நாலடி, 319)

என்பது இறையனர் அகப்பொருள் உரையில் (பவானந்தர் கழகப் பதிப்பு, 1939) 16-ம் பக்கத்தில் வருகின்றது.

"குன்றி வழியடைப்பதில்" (பழமொழி, 303)

"இல்லையே யானை, தொடுவுண்ணின் மூடுங்கலம்" (பழ. 391)

"உயிருடையார் எய்தாததில்" (பழ. 105)

என்பன அகப்பொருளுரையில் 60, 98–ம் பக்கங்களில் முறையே வருகின்றன. இவை இவ்வுரை 10-ம் நூற்றாண்டில் தோன்றியது என்னும் கொள்கையைத் தவிர்க்கும் வலியுடையன அலல். எனினும் உரை பொதுப்படப் பிற்பட்டதெனற்கு இவையும் சான்றாகும். ஆனல் சுமார் கி. பி. 930-ல் தோன்றிய சிந்தாமணிச் செய்யுளுள் சிலவற்றை (2019, 2749) அகப்பொருளுரை வசனமாக அமைத்துச் செல்கின்றது.

"தன் செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பிப்புடைப்ப அம்மலரணிக் கொம்பர் நடைகற்பதென நடந்து சென்று" (பக். 37) எனவும்,

"வடகடலிட்ட ஓர் நுகம் ஓர் துளை தென்கடலிட்ட ஓர் கழி சென்று கோத்தாற்போலவும்" (பக். 38) எனவும் வருவன காண்க, இவை இவ்வுரை 10-ம் நூற்றாண்டில் தோன்றியதென்பதை ஐயப்பாட்டிற்கு இடனாக்குகின்றது. உரைநடையிற் பயின்று வருதற்குத் தக்கபடி காலம் இடையிடு பட்டிருக்கவேண்டும். மேலும் பொருள் பொதிந்த வாக்கியமொன்று அகப்பொருள் உரையில் வருகின்றது.

'அக்குலத்துள் (பாண்டிய குலத்துள்) தோன்றுவார் தேவர்களே ஆகலாம். நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருள் மிக்கான் எனப்படான், மக்களுள் மிக்கானாய தல்லது' என்பதுதான் அவ்வாக்கியம். இதனால் பாண்டிய அரசர்களை 'தேவர்' எனக் குறிப்பிடத் தொடங்கி அவ் வழக்குநிலைபெற்ற பிற்பாடு அகப்பொருளுரை தோன்றி யிருக்க வேண்டுமென்பது புலப்படுகிறது. இதுவும் 10-ம் நூற்றாண்டில் அகப்பொருளுரை தோன்றியதென்பதை ஒப்புக்கொள்ள இடந்தராமலிருக்கின்றது. இறுதியாக நன்னூலிலிருந்து,

பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு.

என்று வரும் வெண்பாவை (23) அகப்பொருளுரை (பக். 16) வசனத்தில் அமைத்து ஆளுகின்றது. நன்னூல் தோன்றியது 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியென்பது நன்கு அறியப்பட்டது. ஆதலால். அகப்பொருளுரையும் சுமார் கி. பி. 1250-ல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, இவ்வுரை பிற்காவிய காலத்திற்குச் சிறிது முற் பட்டதாதல் தெளிவாம்.

இங்ஙனமே, வீரசோழியம் வீரராஜேந்திரன் என்ற வீரசோழன் காலத்து 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டது. ஆனால் இதன் உரையில் 'கம்பனு ரிடைப் பெருமை உளது' (பக். 35) என வருதலால் இவ் வுரை கம்பன் காலத்திற்கும் பிற்பட்டது. எனவே இது கி. பி. 1200–க்கு முற்பட்டதெனக் கொள்ளல் இயலாது. பெரும்பாலும் பிற்காவிய காலத்திற்கு இதுவும் சிறிது முற்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழ்த் தண்டியலங்காரமும் இக் காலத்தைச் சார்ந் ததே. இந்நூலின் மூலமும், உதாரணமும் ஓர் ஆசிரிய ராலேயே இயற்றப்பட்டவை. பிரயோக விவேகம் இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர், 'தண்டியாசிரியர் மூலோ தாரணம் காட்டினாற் போல'(3, உரை) என்று எழுது கின்றார். இவ் அணிநூலில் வரும் செய்யுட்கள் பலவும் 'அநபாயன்' என்ற சோழனைக் குறிக்கின்றன. வாழ்த் தணி என்பதற்கு,

மூவாத்தமிழ் பயந்த முன்னோன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்டு
அண்ணல் அநபாயன் வாழிஅவன் குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

என்ற செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் அநபாயன் இரண்டாம் குலோத்துங்கன் ஆதற்குப் பெரிதும் இயைபு உண்டு. வேற்றுமையணியை உதகரிப்பதாக,

சென்று செவியளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்பம் நிறைப்பவற்றுள்—ஒன்று
மலர்இ வரும் கூந்தலார் மாதர் நோக்கு;ஒன்று
மலரி வரும் கூத்தன்தன் வாக்கு.

என்ற வெண்பாக் காட்டப்பட்டுள்ளது. இதன் இறுதி யடியில் வரும் 'கூத்தன்' கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்த னுவன். இவ் வெண்பாவில் 'கூத்தனது' வாக்கின் திறத்

தைப் புகழ்ந்து கூறும் அருமையை நோக்கினுல், பெரும் பாலும் தண்டியலங்கார மூலமும், உரையும் இயற்றியவர் 'கூத்தனது' மாணுக்கனுகவே இருத்தல் கூடும். கூத்தன் பாடிய தக்கயாகப் பரணியில் 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே' என வருகின்றது. இச் சொற்கிழத்தியையே தண்டியலங்காரமும்,

> சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
> சிந்தைவைத் தியம்புதல் செய்யுட் கணியே (பாயிரம். 1)

எனவும்,

> என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
> அன்னை யுடைய அடித்தளிர்கள்—இன்னளிசூழ்
> மென்மலர்க்கே கன்றுமென வுரைப்பர் மெய்யிலா
> வன்மனத்தே தங்குமோ வந்து.

எனவும் குறிக்கின்றது. கூத்தன் இயற்றிய மூவருலாவில் குலோத்துங்கனைப் பற்றிய உலாவும் ஒன்று. மூவராவார்: விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராஜராஜ சோழன் என்பவர்கள். இம்மூவர் காலத்தும் ஒட்டக் கூத்தர் வாழ்ந்தவர் என்பது அறியத்தக்கது. குலோத் துங்கன் காலம் 12-ம் நூற்ருண்டின் முற்பகுதி. எனவே, தமிழ்த் தண்டியாசிரியரும் இக்காலத்தே வாழ்ந்தவராவர். நேமிநாதமும் ஒட்டக்கூத்தன் காலத்தே இயற்றப்பட்ட தாம். இதனை இயற்றியநேமிநாதர் 'பட்டோலை பிடிக்கக் கூத்தன் பாடியது' என ஒரு செய்யுள் தமிழ் நாவலர் சரிதையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனுல் நேமிநா தரும், ஒட்டக்கூத்தனும் ஒரு காலத்தவராவர். நேமிநா மும் ஒட்டக்கூத்தனது காலத்தின் முற்கூருகிய விக்கிரம சோழன் காலத்தில் இயற்றப்பெற்றதெனல் பொருந்தும். எனவே, இந்நூல் 11-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தோன்றியதாகும்.

புறப்பொருள் வெண்பாமாலையின் காலத்தைத் திட்டமாக வரையறுத்தற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும், இந்நூலும் 10-ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதெனற்குச் சில குறிப்புக்கள் உள்ளன.

இலக்கணங்களேயன்றி, சிற்றிலக்கியங்கள் இயற்றுவதிலும், கவிஞர்களது மனம் இவ் இடைக்காலத்தில் ஈடுபட்டது. இவற்றுள் மிக முக்கியமானவை கலிங்கத்துப் பரணியும், மூவருலாவும், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் முதலாயினவும் ஆம். சோழர்கள் 8-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து 13-ம் நூற்றாண்டு முடியத் தமிழ் நாட்டைத் தலைமைபூண்டு அரசுபுரிந்துவந்தனர். இவர் பெரும்பேரரசுகளாய் விளங்கிய காலம் 10, 11, 12, நூற்றாண்டுகளிலாம். புலவர்கள் பாடியேத்துதற்குரிய பெருவெற்றிகளெல்லாம் இக்காலத்தேயே நிகழ்ந்தன. உதாரணமாக, கலிங்கவெற்றி இக்காலத்ததே. கடல் கடந்து பர்மா, சுமாத்ரா, ஜாவா முதலிய பிரதேசங்களிலும் இவர்கள் வெற்றி பரவியது. சிற்பம் முதலிய கலைகள் பல சிறந்து விளங்கியதும் இக்காலத்துத்தான். தஞ்சைப் பிரகதீச்சுரர் கோவிலை உதாரணமாகக் கூறலாம். இங்ஙனம் பெருஞ்சிறப்பெய்தி வாழ்ந்த சோழவரசர்கள் மீது புலவர்கள் பலரும் பிரபந்தங்கள் பாடி, அவர்களை மகிழ்வூட்டித் தாமும் பரிசுகள் பெற்றுச் சிறப்புப் பெற்றது சிறிதும் வியப்பன்று. இச்சோழர்கள், தாங்கள் புவிச் சக்கரவர்த்திகளாய் விளங்கியதற்கேற்க, தங்கள் புகழை வளர்த்துப் புலமையை வளர்க்குமாறு கவிச்சக்கரவர்த்திகள் ஒரு சிலரையும் நியமித்தனரென்று சொல்லலாம். ஆனால் அரசியல் வாழ்க்கையிலும் பிறநாடுகளை வென்று கொள்ளுதலிலும், பெரும்போர்களிலும், ஈடுபட்டிருந்த இவ்வரசர்கள் இடையிடையே கேட்டு மகிழ்தற்குச் சிறு பிரபந்தங்களே தகுந்தவை. எனவே, சிறு பிரபந்த வகைகளும் இக்காலத்துச் செழிந்தன.

கோவில்கள் செழிப்புற்றுத்தோன்றிய இக்காலத்தில் சமய ஆராய்ச்சியும், தத்துவ ஆராய்ச்சியும், சிறந்து விளங்குதலும் ஒருதலை. தத்துவ நூலுலகில் பெருநிகழ்ச்சியென்று கூறத்தக்கது ஸ்ரீ சங்கராச்சாரியர் பாஷ்யமியற்றியதேயாம். இது இயற்றிய காலம் கி. பி. 8-ம் நூற்றாண்டாகும். இதனைத் தொடர்ந்து ஸ்ரீராமானுஜ பாஷ்யமும் பிற தத்துவ நூல்களும் தோன்றின. சைவசமயத்திற்குரிய சித்தாந்த சாஸ்திரங்களும் கி. பி. 10-ம் நூற்றாண்டு தொடங்கி இயற்றப் பெறலாயின. மெய்கண்ட தேவரது சிவஞான போதம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது. இவ்வாறாக, இவ் இடைப் பகுதியில் தத்துவ நூல் முயற்சிகளும் பெரிதும் நிகழ்ந்தன.

இங்ஙனமாக, இவ் இடைக்காலத்துத் தமிழறிஞர்களது உள்ளம் காவிய முயற்சியிற்புகாது வேறு பல துறைகளிற் சென்று கொண்டிருந்தது. ஆனால் இம் முயற்சிகளெல்லாம் காவியவுணர்ச்சிக்கு உரந்தருவனவாயின. இலக்கணங்கள், முக்கியமாகச் செய்யுளிலக்கணங்களும், அணியிலக்கணங்களும், காவியத்திற்குரிய செய்யுட்கள் நலமிகுந்து விளங்குவதற்கு உதவின. சிற்றிலக்கியங்கள், கேட்போரை இன்புறுத்துதலே இலக்கியங்களின் பிரதான நோக்கமென்பதனை வற்புறுத்தி, அவர்களுக்கு ஏற்கச் செய்யுட்கள் அமைதல் வேண்டுமென்பதனை அறிவுறுத்தின. அன்றியும் செய்யுள் வகைகள் பலவும் பொதுமக்களிடையே பரவுவதற்கும் பயன்பட்டன. சமய நூல்களும், தத்துவ நூல்களும் இலக்கியங்களில் வரும் கருத்துக்கள் ஆழமுடையனவாயும் உரமுடையனவாயும் அமைதற்கு உதவி, அவ் இலக்கியங்கள் நிரந்தர வாழ்வுற்று விளங்கும்படி இயற்றப்பெறல் வேண்டுமென்பதை உணர்த்தின. 'விழுமிய கருத்து' என வழங்கிய தொடரின் பொருள் இதுவேயாகும்.

பல துறைகளிலும் பரந்து சென்ற தமிழ் மக்களது உள்ளம் வேறொரு முக்கியமான துறையிலும் பிரவேசித்துப் புதியதொரு சக்தியையும் பெற்றது. இதுதான் பக்தி நெறி. சில நூற்றாண்டுகட்கு முன் நாயன்மார், ஆழ்வார்கள் காலத்தே, இப்பக்தி இயக்கம் அங்குரித்து வளர்ந்து, அந் நாயன்மார் முதலியோர்களைக் கொள் கொம்பாகப் பற்றி நின்று, தமிழ் நாட்டில் செழித்தோங்கியது. நாம் விவரிக்கும் இடைக்காலத்தே, இவ் இயக்கம் கொள்கொம்பு வேண்டாது நாடு முழுதும் பரந்து பொது மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. சமயப் பொருள்களையும் தத்துவப் பொருள்களையும் சமயக் கடவுளர்பற்றிய சரிதங்களையும் பொதுமக்கள் கேட்டுணர்ந்து கொள்ளுதற்குப் பெரிதும் விரும்பினர். அங்கங்கே பிரவசனகர்த்தர்கள் தங்கியிருந்து இவ்விருப்பத்தை நிறைவேற்றி வந்தனர். பற்பல சமயங்களுக்குமுரிய ஆசாரியர்கள் குறிப்பிட்ட இடங்களில் நிலைபெற்றிருந்து சமயத்தையும் பக்தியையும் ஏற்கெனவே பக்குவப்பட்டிருந்த பொதுமக்களது உள்ளத்தில் வேகத்தோடு ஆழ்ந்து செல்லும்படி செய்தனர். சில சில இடங்களில், சமயப் பிரசாரத்திற்காக மடங்களும் நிறுவப்பட்டன.

இவ்வாறு பல பிரகாரத்தாலும் பக்குவப்பட்டு மேம்பாடுற்ற இடைக்காலத்தின் முடிவிலே, மீண்டுங் காவியங்கள் தோன்றலாயின. பிற்பட்ட இக்காவியங்களில் முதலாவது கூறத்தக்கது கம்பராமாயணமே. 'இராமாவதாரம்' என்பதே கம்பன் தனது பேரிதிகாசத்திற்கு இட்ட பெயர். இது,

நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே

எனக் கம்பன் தானே கூறுதலாலும் புறத்திரட்டில் இராம சரிதத்தினின்றும் தரப்பட்டுள்ள 27 செய்யுட்களும் இராமாவதாரம் என்ற நூலைச் சார்ந்தனவென்று ஆதாரம் காணப்படுதலாலும், இச்செய்யுட்கள் கம்பராமாயணத்தில் உள்ளன ஆதலாலும், நன்கு விளங்கும். நேபாள மொழியிலுள்ள இராம சரிதத்திற்கு 'இராமாவதாரம்' என்ற பெயருண்மை இங்கே அறியத்தக்கது. 'இராமகாதை' எனவும் ஒரு சிலரால் இப்பெருங்காப்பியம் வழங்கப்பட்டது. இது,

> எண்ணிய சகாத்தம்[1] எண்ணூற் றேழின்மேல்
> சடையன் வாழ்வு
> நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
> பண்ணிய இராமகாதை பங்குனி அத்த நாளில்
> கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினனே

என்ற தனியன் செய்யுளால் உணரலாகும். ஆனால் இப்புதுப் பெயர்களெல்லாம் காலகதியில் மங்கி மறைந்தொழிய, வான்மீகி முனிவர் இட்ட 'இராமாயணம்' என்ற பெயரே நிலை பெறுவதாயிற்று.

---

1. சகம் ஆண்டைப் பற்றிய குறிப்பு: மேலைச் சளுக்கிய மன்னனாகிய முதல் விக்கிரமாதித்தன் கத்வால் செப்பேடுகளில் முதலில் காணப்படுகிறது. அவ்வேந்தன் சோழநாட்டின்மேல் படையெடுத்து, காவிரியாற்றுக்குத் தென்கரையிலுள்ள உரகபுரத்தில் தங்கியிருந்த காலத்தில் சகம் 596-ல் மூன்று பிராமணர்க்கு நிலம் வழங்கினனென்று அச்செப்பேடுகள் கூறுகின்றன (உரகபுரம் - உறையூர்) சகம் 596=கி. பி. 674 (Gadval plates of Vikramaditya I—Epigraphia Indica, Vol. X, No. 22).

சகம் 792-ல் (கி. பி. 870) இரண்டாம் வரகுண பாண்டியனது ஆட்சியின் எட்டாம் ஆண்டில் மதுரை ஜில்லாவிலுள்ள ஐவர் மலையில் ஒரு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே சகம் ஆண்டு குறிக்கப்பெற்ற தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் பழமை வாய்ந்ததென்று தெரிகிறது. (Ins. 705 of 1905)

T. V. சதாசிவப் பண்டாரத்தார்.
17—4—52

கம்பன் வாழ்ந்த காலமும் அவன் தனது பேரிதிகாசத்தை இயற்றிய காலமும் பல ஆண்டுகளாக விவாத விஷயமாயிருந்தன. ஆனால் தமிழ்நாட்டுச் சரிதமும் தமிழிலக்கிய சரிதமும் உணர்ந்தார் சிறிதும் ஐயுறவு கொள்ள இடமில்லாதபடி, இப்பொழுது அக்காலம் நிர்ணயம் எய்திவிட்டதென்று தயக்கமின்றிக் கூறலாம். நான் எழுதியுள்ள 'தமிழ்ச்சுடர்மணிகள்' என்ற நூலில் (பக். 109—132) இதுபற்றி விரிவாக ஆராய்ந்தெழுதியுள்ளேன். முக்கியமான சில சான்றுகள் வருமாறு:—

கி. பி. 1376-ல் பொறிக்கப்பட்ட ஒரு கன்னடக் கல்வெட்டு (எபிகிராபியா கர்நாடிகா, வால்யூம் 5, ஹாஸ்ஸான், 77) இவ் ஆண்டிற்கு முன் இரண்டு தலைமுறைக் காலமாகக் கம்பராமாயணம் கன்னட தேசத்தில் வழங்கி வந்ததென்று தெரிவிக்கின்றது. எனவே கி. பி. 1325-ல் கம்பனது பெருங்காவியம் கன்னட தேசத்திலும் பெரும்புகழ் பெற்றுப் பரவியிருந்ததென்பது புலனும்.

பெரிய திருமொழியில் 'மஞ்சுலாஞ் சோலை' என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' (பால. ஆற்றுப். 10) என்ற இராமாயண அடியை மேற்கோள் காட்டி 'என்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர்' என எழுதினர் பெரிய வாச்சான் பிள்ளை. இவர் பிறந்தது கி. பி. 1228-ல். எனவே, சுமார் கி. பி. 1200-ல் கம்பனது பெருநூல் மிக்க பிரசாரம் எய்தியிருந்ததென்பது விளங்கும்.

தெலுங்குப் பிரதேசமாகிய ஓரங்கல் நாட்டில் பிரதாப ருத்திரன் ஆஸ்தானத்திற்குக் கம்பன் சென்றதாகவும், அவனது வள்ளன்மையைப் புகழ்ந்து

அவனிமுழு துண்டும் அயிரா பதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி

உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்

என்ற செய்யுளைப் பாடியதாகவும் ஒரு வரலாறு தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது. இவ்வரலாறு உண்மையென்றே கொள்ளுதற்குரியது. ஏனெனின், கம்பன் தெலுங்கு முதலிய பிறமொழிச் சொற்கள் பல வற்றை எடுத்தாளுகின்ருன்.

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும் (திருவவதாரப். 22)
தாவமிடைந்தன தம்மிமிடைந்தென (எழுச்சி. 30)
கிச்சிடை யிடுமெனக் கிளக்கின்ருர் சிலர் (பிணிவீட்டு. 3)
அக்கட இராவணற் கமைந்த ஆற்றலே (யுத்த. மந்திரப். 32)
அந்துசெய் குவனென அறிந்த மாதலி (இராவணன்வதை. 61)

என்பன உதாரணங்கள். இவற்றுள் 'மசரதம்' கானல்நீர் என்றும், 'தம்மி' தாமரை என்றும், 'கிச்சு' நெருப்பு என்றும் தெலுங்கிற் பொருள்படுவன. 'அந்து' அப்படி என்று கன்னடத்திற் பொருளாம். 'அக்கட' என்பது தெலுங்கில் ஒரு வியப்பிடைச்சொல். மேலே வரலாற்றிற் குறிக்கப்பட்ட அரசன் முதலாம் பிரதாபருத்திரனுவன். இவனது கல்வெட்டுக்கள் கி. பி. 1162, 1179 முதலிய ஆண்டுகளுக்கு உரியனவா யுள்ளன. எனவே, கம்பன் 12-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவனென இவ் வரலாறு உணர்த்தும்.

இராமாயணத்தில் வரும் ஒருசெய்யுள் மேலே முடிபைத் திட்டமாய் வலியுறுத்துகிறது. இச்செய்யுள் வருமாறு:

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன்மலரின் மேலோன்
கன்னிநாள் திருவைச் சேர்ந்த கண்ணனும்ஆளுங் காணிச்
சென்னிநாள்-தெரியல் வீரன் தியாகவி-நோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள
நோக்கிப் போனுன்.

இச்செய்யுளில் 'தியாகவிநோதன்' என்ற சிறப்புப் பெயர் வருதல் காணலாம். மூன்றாங் குலோத்துங்கன் இச்சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டான் என்பது சாசனங்களால் (செந்தமிழ். 1, 119, 122) புலப்படுகின்றது. இவ்வரசன் கி. பி. 1178 முதல் 1216 வரை ஆட்சி புரிந்தவன். கம்ப ராமாயணம் இவனைக் குறித்தலினாலே, கி. பி. 1178-ல் அல்லது அதற்குச் சற்றுப் பின்பு இப்பெருங் காவியம் இயற்றி முடிந்ததெனல் வெளிப்படை.

இக்காலவரையறை இராமாயண ஏட்டுப் பிரதிகளில் அருமையாய்க் காணப்படும் ஒரு செய்யுளால் மிகவும் உறுதியடைகின்றது. செய்யுள் வருமாறு:—

> ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
> தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
> சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
> காரார் காகுத்தன் கதை.

இதனால் சகாப்தம் 1100-ல், அதாவது கி. பி. 1178-ல் இராமாயணத்தைக் கம்பன் பாடினன் என்பது தெளிவாகின்றது. சகாப்தத்தைச் 'சகரயாண்டு' என்றல் அக்காலத்துள்ள ஒரு சாசன வழக்கு (தென்னிந்திய சாசனம் 12, 263, 264).

இங்ஙனமாகவும், 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்...கம்பநாடன் பண்ணிய இராமகாதை... அரங்கேற்றினனே' என்ற செய்யுள் எவ்வாறு பிறந்ததென்று சிலர் வினவலாம். ஸ்ரீ ரா. ராகவையங்கார் கூறியுள்ளபடி பேரெண்ணாகிய ஆயிரத்தை நீக்கி அப்பதங்களைக் குறிப்பிடுதல் வழக்காதலால், 1000-ன் மேல் எண்ணிய 107 என்று கொண்டு, சகாப்தம் 1107-ல் அதாவது கி. பி. 1185-ல் இராமாயணம் அரங்கேற்றப்பட்டது எனக்கொள்ளுதல் தக்கது. சகாப்தம் 807-ல் அதாவது கி. பி. 885-ல் இக்காவியம் அரங்கேறியதென்று

கருதுதல் மேற்காட்டிய சான்றுகட்கும், வைஷ்ணவ சமய சரிதத்திற்கும், தமிழிலக்கிய சரிதத்திற்கும், முற்றும் முரணும். கி. பி. 1178–ல் இப்பேரிதிகாசம் பாடி முடிந்தது எனவும் கி. பி. 1185–ல் அரங்கேறியது எனவும் துணிதல் மிகவும் பொருத்தமாகும்.

கம்பனது பெருங்காப்பியம் நமது பாரதநாட்டுக் கவித்துவக் கொள்கைகளுக்கும் காவியக் கொள்கைகளுக்கும் முற்றும் பொருந்தி அவற்றாலும் பெரிதும் சிறந்து மேம்பட்டு விளங்குவதுடன், எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமுள்ள கவித்துவக் கொள்கைகளை வைத்து அளவிட்டு நோக்கினும் அவற்றாலும் தலைசிறந்து விளங்குகிறது. இதனால் இப் பெருங் கவிஞனை உலக மகாகவிகளுள் ஒருவன் எனப் பலரும் போற்றுகிறார்கள். இவனது பெருநூலை வான்மீகியின் மொழிபெயர்ப்பு என்று கொள்ளுதல் சிறிதும் தக்கதன்று. வான்மீகி முனிவர் தம்காலத்தில் வடநாட்டில் வழங்கி வந்த இராமசரிதத்தைத் தமது அற்புதக் கவித்வ சக்தியால் பேரிதிகாசமாக இயற்றித் தந்தனர். பரதகண்ட முழுதும் இதனைப் பாராட்டுகின்றது. மேலைநாடுகளிலும் காவிய ஆராய்ச்சி செய்வோர் இதனை ஆராய்ந்து, இதன் பல நயங்களையும் வியந்து போற்றுகின்றனர். ஆனால் வான்மீகியின் இராமாயணம் 'வளர்ச்சி யிதிகாசம்' என்னும் வகையைச் சார்ந்தது. இவ் இராமாயணம் கதையின் அம்சங்களில் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. இவ்வளர்ச்சி–நிலையில் இராமசரிதத்தின் ஒரு குறிப்பிட்ட படியை வான்மீகி முனிவர் சித்திரித்தனர். அவர் காலத்தோடு இவ்வளர்ச்சி–நெறி முடிந்துவிடவில்லை. மேன் மேலும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. கால அடைவில் வளர்ந்து வந்தது போலவே, இடம் பற்றியும் இச்சரிதம் பல நூதன அமிசங்கள் பெற்று வளர்ந்து வந்தது. தென்னாட்டிலும் அதாவது தமிழ்நாட்டிலும் இச்

சரிதம் பரவியது. இங்கே பல பல புதிய அமிசங்களால் சிறந்து வளர்ந்தது. காவிய நாயகனுன புருஷோத்தமன் என்ற நிலையினின்று இராமன் இப்பொழுது லோகநாயகனும் லோகசரண்யனுமான தெய்வ நாயகனுக மாறி விட்டான். இவ்வாறு மாறுவதற்குத் தென்னுட்டில் முழு வேகத்துடன் பிரவகித்துக்கொண்டிருந்த பக்தி இயக்கமே முழுமுதற் காரணமாகும். இந்த நிலையிலே இராம சரிதத்தை வரையறுத்துப் பெரியதோர் அற்புதச் சித்திரமாகக் கம்பன் இயற்றியளித்தனன். இவ்வுண்மையால் இவனது இராமாயணம் மோழிபெயர்ப்பே ஆகாமை தெளிவாம். ஆனுல் வான்மீகியின் இதிகாசத்தை முற்றும் ஒதுக்கிவிட்டு இவனது பெருநூல் அமைந்துள்ளதென நினைப்பதும் தவறு. அவ் இதிகாசத்தை முற்றும் நன்கு ஓதியுணர்ந்து, அதனைத் தனது பேரறிவிலும் ஆழ்ந்தவுள்ளத்திலும் தேக்கி நிறைத்து, அதனோடு கம்பன் இரண்டறக் கலந்துவிட்டான். வடமொழியாகிய தெய்வ மொழியின் பேரழகும் இவனைக் கவர்ந்து வசீகரித்து விட்டது. எனவே,

தேவ பாடையில் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னுருரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னுலி துணர்த்திய பண்பரோ

வையம் என்னை யிகழவும் மாசெனக்கு
எய்த வும்மி தியம்பிய தியாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையி னேர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

என்று கம்பன் பாடுவானுயினுன். பொதுவகையில் வான்மீகியைப் பின்பற்றியபோதினும், கட்டங்கள்தோறும் இவன் இராமசரித-அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகு பட அமைத்திருக்கிருன். இவற்றையெல்லாம் ஊன்றி நோக்குமிடத்து, கம்பனது பெருநூலை ஒரளவில் முதற்

காவியம் என்றும், ஓரளவில் வழிமுறைக் காவியம் என்றும் நாம் கொள்ளுதல் வேண்டும். இத்தகையதொரு பாகுபாடு ஸி. எஸ். லியூயிஸ், தமது சுவர்க்க நீக்கத்தின் முன்னுரையில் வகுத்துத் தந்திருக்கின்றனர்.

கம்பனது பெறலருங் காப்பியம் தமிழ்க் கவித்துவத்திற்குப் பேரெல்லையாய், காவியங்களுக்குச் சிரோபூஷணமாய் விளங்குகிறது. ஆற்றலும் அழகும் மிக்கு அளந்தறியலாகாத தமிழ்மொழியின் மதிப்பரிய கருவூலமாக இக்காப்பியம் திகழுகின்றது. தமிழும் வடமொழியும் இனிது கலந்து வேற்றுமையுணர்ச்சி சிறிதுமின்றி, அழகு நிரம்பிச்செல்லும் பேராறு போல விழுமிதாய் ஒழுகுகின்றது. தென்னாட்டுப் பண்பாடும் வடநாட்டுப் பண்பாடும் ஒன்றுபடக் கலந்து, அறிவையும் உளத்தையும் ஒருங்கு மகிழ்வித்து, உயர்ந்த லட்சியங்கள் பலவற்றைக் குன்றின்மேலிட்ட விளக்கெனத் தோற்றுவித்து, தமிழ் மக்களுக்கும் கவிதை யுணர்ச்சியுடைய அனைவர்க்கும் வற்றாத இன்பசாகரமாக, இப்பெருங்காப்பியம் காம்பீர்யத்தோடு அமைந்துகிடக்கின்றது.

இக்காவியம் தமிழரது கவித்துவத்தின் பேரெல்லையை உணர்த்துகின்றது. எத்தனைமுறை இவ்வுண்மையை வற்புறுத்தியுரைப்பினும் தகும். இதற்குச் சிறிது முன் ஒரு சில காவியங்கள் தோன்றின. இக்காவியங்களை இனி நோக்குவோம்.

இவற்றுள் முதலாவது கூறத்தக்கது ஸ்ரீராஜராஜ விஜயம் என்ற காவியமாகும் (சாஸனத் தமிழ்க் கவிசரிதம், பக். 47—48). முதல் இராஜராஜன் என்ற சோழப் பேரரசன் மீது இக்காவியம் பாடப்பெற்றதாம். இதனை இயற்றியவர் நாராயணன் பட்டாதித்தன் என்பவர் என்று கொள்ளலாம். 'ஸவர்ணன்' என்று இவர் கூறப்படுகிறார். க்ஷத்திரியப் பெண்ணிடம் பிராமணனுக்குப் பிறந்தவன்

'ஸவர்ணன்' எனப்படுவான் என்று வைஜயந்தி நிகண்டு தெரிவிக்கின்றதென்பர். இந்நூலிலே முதல் இராஜ ராஜனது பிறப்பு, வளர்ப்பு, திருமணம், அவன் ஆட்சி புரியத் தொடங்கினமை, ஆட்சித்திறம், அவனது பெரு வெற்றிகள், வள்ளன்மை, அவன் நீதி வழங்கியமை முதலியன காவிய முறையில் விரிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். நூல் இப்போது கிடையாமையால், வேறுயாதும் நாம் தெரிதற்கில்லை. முதல் இராஜராஜனைப் பற்றிய தாதலால், இக்காவியம் 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும்.

இந்நூலின் ஆசிரியன் நாராயண பட்டாதித்தன் என்றேன். ஆனால் இதனை விசேடகாலங்களிற் படிப்பதன் பொருட்டு இப்பட்டாதித்தனுக்கு நிலம் இறையிலியாக விடப்பட்ட செய்தியொன்றே சாஸனம் தெரிவிக்கின்றது. இதுபற்றி ஸ்ரீ மு. இராகவையங்கார் பின்வருமாறு கூறி யுள்ளார். 'இவ்வாறு நூலோதுவதற்கென்று நியமிக்க பட்டோரே அந்நூலை இயற்றியவருமாதல் வேண்டுமென்று கருதலாம். இயற்றியவர் வேறாயின், அரசன் அவர்க்குச் செய்த சிறப்பைப்பற்றி ஒன்றுங் கூறாமல், அதனை அவை முன் படிப்பதற்கு மட்டும் செய்யப்பட்டதைச் சாஸனம் எடுத்துக் கூற நியாயமில்லை. அதனால் நூலாக்கியோரே அதனைச் சபைமுன் ஓதிப் பலருமறியப் பிரகாசப்படுத்தலை விரும்பி இவ்வாறு நிலம் அளிக்கப்பட்டதாகக் கருதலே ஏற்புடையதாம்......பிரபலனான சோழன் ஒருவனது வரலாறுகளை விளக்கும் இத்தகைய காப்பியம் இப்போது வழக்கு வீழ்ந்துள்ளமை வருந்தத்தக்கதாம்.'

புராணங்களிலும் பிற கதைகளிலும் மனத்தைச் செலுத்தி அப்புராண முதலியவற்றிலுள்ள பொருள்கள் பற்றிக் காவியங்கள் இயற்றுதலைக் கைவிடுத்து, உண்மைச் சரித்திரப் பொருள்களைக் காவியமுறையில் அமைத்துப் புலவர்கள் நூலியற்றியமை பெரிதும் போற்றுதற்

குரியதாம். வடமொழியிலும் 'ஹர்ஷ சரிதம்' முதலியனவாக இத்தகைய நூல்கள் உள்ளமை பலரும் அறிவர்.

இந்த இராஜராஜன் காலத்தேயே வேறொரு காவியமும் தோன்றியதென்பது சாஸனத்தால் புலப்படுகின்றது (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 48—49). ஆனால் இப்போது தோன்றியது 'நாடக காவியம்' ஆகும். நூலின் பெயர் இராஜராஜேசுவர நாடகம். 'இந்நாடகமும் அச்சோழனது பிறப்பு வளர்ப்புக்களையும், வீரம், நியாயம் முதலிய அருஞ் செயல்களையும், பிற அறச்செயல்களையும், அவன் தஞ்சையில் நிருமித்த இராஜராஜேசுவரமான பெரிய கோயில் கட்டப்பட்ட வரலாறுகளையும் பற்றிப் பாடப்பெற்றதாதல் வேண்டும்' என்பர் ஸ்ரீ மு. இராகவையங்கார். இந்நாடகததைத் தஞ்சைப் பெரியகோவிலில் விசேட காலங்களிலே நடித்துக் காட்டிவந்தனர். இங்ஙனம் நடித்தற்கு வேண்டும் நிபந்தங்களை முதல் இராஜராஜன் மகன் இராஜேந்திரன் ஏற்படுத்தினன் என்று இவன் சாஸனத்தால் விளங்குகிறது. இந்நாடகத்தை இயற்றியவரது பெயர் முதலிய வரலாறு யாதும் தெரியவில்லை.

அரசர்களைப்பற்றி மட்டும் காவியங்கள் எழுந்தன என்று நினைத்தற்கில்லை. அவர்களது படைத்தலைவர்களைக் குறித்தும் ஒரு சில காவியங்கள் தோன்றியுள்ளன. இது 'வீரணுக்க விஜயம்' என்ற காவியத்தால் புலனுகின்றது. வீரணுக்கனது[1] முழுப்பெயர் வீரசோழ அணுக்கன் என்பது. இப்பெயர் கொண்டார் பலர் இருந்தனர். முதல் இராஜேந்திரனது மக்களுள் ஒருவனும் இப்பெயரால் விளங்கினன். இவனே வீரணுக்க விஜயத்திற்குக் காவிய நாயகன் என்று கொள்ளலாம். பின்னர் வீரராஜேந்திரன் என்று பெயர் சிறந்தவனும் இவனேயாவனெனக் கருதல்

1. வீரணுக்கன் சாதிபற்றிய பெயரென்பர் மயிலைநாதர் (பக். 166).

தகும். இராஜேந்திர சோழனது சேனைப்பிரிவுகளிலும் 'வீரசோழவணுக்கர் படை' எனவொன்றும் உளதாயிருந்தது. இக்காவியத்தைப் பாடியவர் பூங்கோயில் நம்பி என்பவர். இதன் காலம் 11-ம் நூற்ருண்டின் பிற்பகுதியாதல் வேண்டும். 'வீரராஜேந்திரனுகிய வீரசோழன் தன் தந்தை காலத்தே யுத்த யாத்திரையொன்று நடத்தி அதனில் வெற்றி பெற்றவன்' என்பதும், இவ்வெற்றித் திறத்தைப் புகழ்ந்து பாடியவர் இப் பூங்கோயில் நம்பி என்பதும் திருவாரூர்க் கமலாலயத்தின் முதற் பிராகாரத்தே தெற்குத் திருமதிலிற் கண்ட ஒரு சாஸனம் தெரிவிக்கிறதென்று கூறுவர் ஸ்ரீ மு. இராகவையங்கார் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 51—52).

இதற்குப் பின், 11-ம் நூற்ருண்டின் கடைசிப் பகுதியில் ஒரு காவியம் தோன்றிற்று. நூலின் பெயர் 'குலோத்துங்கசோழ சரிதை' என்பது. இதனை இயற்றியவர் புதுச்சேரிச் சீமையைச் சார்ந்த திரிபுவனியூரினரான கவி குமுதசந்திர பண்டிதன் திருநாராயணபட்டன் என்பவர். காவிய நாயகன் முதற் குலோத்துங்கன் என்று கொள்ளுதல் வேண்டும். இவ்வரசனது விருப்பப்படி திரிபுவனி மகாசபையார் முன்பு இக்காவியம் அரங்கேற்றப்பட்டது. நூலாசிரியர்க்கு இவ்வூரவர்கள் நிலம் இறையிலியாக விட்டுக் கொடுத்துச் சம்மானஞ் செய்தனர். இச்செய்தியைக் குறிக்கும் சாஸனம் முதற் குலோத்துங்கனது 27-ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளமையால், இவனது ஆட்சியின் முற்பகுதி வரலாறுகளே இக்காவியப் பொருளாதல் வேண்டும். இவன் நிகழ்த்திய கலிங்கப்போர் முதலியன இந்நூலில் இடம் பெறவில்லையென்றே தோன்றுகிறது. எனவே, இதன் ஆசிரியர் கலிங்கத்துப் பரணியாசிரியராகிய செயங்கொண்டார்க்கு முற்பட்டவராவர். 'புலவர்களாகிய குமுதங்கட்குச்சந்திரன் போன்றவர் என்ற பொருளுடையஇவர் சிறப்புப்

பெயரினின்று, புலவர்களெல்லாம் ஈடுபட்ட வாக்கினிமை யுடையவர் இத் திருநாராயணபட்டர் என்றும், அத் தகைய மதிப்பை அரசனுற்பெற்று, செயங்கொண்டார்க்கு முன்பே அவன் வாயிற் பெரும்புலவருள் ஒருவராய் விளங் கியவர் இவர் என்றும் கருதல் தகும். இந்நூல் அடைந் துள்ள பெருஞ்சிறப்பை நோக்குமிடத்து, இது புலவர் களாற் போற்றப்பட்டு அக்காலத்துப் பெருவழக்குப் பெற்றிருந்ததென்றே சொல்லலாம்' என்பர் ஸ்ரீ மு. இராக வையங்கார் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 59—60).

இவ்வாருக, அரசர் முதலினோரைப் பற்றிக் காவி யங்கள் தோன்றியபோதினும், சமயச் சார்பான புராண முயற்சிகளும் மறைந்துவிடவில்லை. முற்குறித்த முதற் குலோத்துங்கனது ஆட்சியின் இறுதிப் பகுதியில் சில புராணகாவியங்கள் பிறந்தன. இவை அஷ்டாதச புராணம், கன்னிவன புராணம் என்பனவாம். அன்றியும் பூம்புலியூர் நாடகம் என்ற ஒரு நாடக காவியமும் வெளி வந்தது. இவற்றை இயற்றியவர் 'வீரைத்தலைவன் பரச மயகோளரி மாமுனி' என்பர். இச்செய்தியைக் குறிக்கும் சாஸனப் பாடல்கள் குலோத்துங்கனது 41, 49-ம் ஆட்சி யாண்டுகளில் தோன்றியவை. ஆசிரியர் 'முனி' எனக் குறிக்கப்படுதலால், இவர் துறவியென்பதும், 'பரசமய கோளரி' எனப்படுதலால் இவர் சமயவாதம் புரிந்து வெற்றி பெற்றவர் என்பதும் புலப்படுகின்றன. இவர்க்குப் பாலையூரில் நிலம் இறையிலி செய்து அளிக்கப்பட்டது. இறையிலி அளித்தவன் முதற் குலோத்துங்கனுகவே இருத்தல் கூடும். இம்முனிவர் செயங்கொண்டார் காலத்து விளங்கியவராகலாம் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 61—62).

மேற்கூறிய ஸ்ரீராஜராஜ விஜயம், குலோத்துங்க சோழ சரிதை முதலியன போன்று சரித்திர நுட்பமும்,

அஷ்டாதச புராண முதலியன போன்று சமயவுணர்ச்சியும் பக்தியுணர்ச்சியும் சிறந்து விளங்குவது பெரிய புராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணமாம். இதனை இயற்றியவர் குன்றத்தூர்ச் சேக்கிழார் என்பது தமிழ் மக்கள் நன்கறிந்ததேயாம். இவர் சேக்கிழார் குடியிற் பிறந்தமையால், அக்குடிப் பெயராலேயே வழங்கப்படுகின்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை; ஆனால், அருண்மொழித்தேவர் என்பதே இயற்பெயர் என்று சேக்கிழார் புராணம் கூறும். தமது பெரிய புராணத்தில் 10 இடங்களில் தமது அரசனைப் புகழ்ந்துள்ளார். அனபாயன் என்ற சோழனது அவையிலே இப்புராணம் அரங்கேற்றப்பட்டதாகும். இது,

> மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
> சேய வன்திருப் பேரம்பலம் செய்ய
> தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
> ஆய சீர்அன பாயன் அரசவை (பாயிரம், 8)

என்றசெய்யுளால் விளங்கும். அனபாயன் என்ற சிறப்புப் பெயருடையவன் குலோத்துங்கச்சோழன் என்ற இயற்பெயரினனவன். இதனை,

> சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத்திருவெல்லை
> பொன்னின் மயமாக் கியவளர் போரே றென்றும்புவிகாக்கும்
> மன்னர் பெருமான் அனபாயன் வருந்தொல் மரபின்முடிசூட்டும்
> தன்மை நிலவு பதியைந்தின் ஒன்றாய் நீடும் தகைத்தவ்வூர்
> (சண்டேசுர. 8)

என்ற செய்யுள் புலப்படுத்தும். இக்குலோத்துங்கன் தில்லையிற் பேரம்பலம் பொன்வேய்ந்தவன் என்பதும், தில்லைத் திருவெல்லையைப் பொன்னின் மயமாக்கியவன் என்பதும் மேலைச் செய்யுட்கள் புலப்படுத்துகின்றன. இச்செயல்கள் குலோத்துங்க சோழனுலாவில்,

... ...சூலத்தான்
ஆடுந் திருப்பெரும்பே ரம்பலமும் கோபுர
மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடிப்
பொலங்கோட்டு மாமேருப் பூதரமும் போய
வலங்கோட் டிகிரியு மான (கண்ணி. 46—48)

என்று வரும் அடிகளாலும், இராசராச சோழனுலாவில்,

சிற்றம் பலமும் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும்—சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமும் கோபுரமும்
சூளிகையும் எத்தெருவும் தோரணமும்—ஆளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமும் அக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையும்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னிற் கடலகழின் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராசராசன் (கண்ணி. 30—34)

என்று வரும் அடிகளாலும் உணரப்படும். இவ்வடிகள் விக்கிரம சோழன் மகனாகிய இக்குலோத்துங்கனுக்கே 'அனபாயன்' என்ற பெயர் உரியதாகும் என்பதை விளக்கும். இது குலோத்துங்க சோழனுலாவிலுள்ள,

... ...—வாசிகை
ஆழிப் பெருமான் அபயன் அனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும்' (கண்ணி. 158—159)

இவ்வடிகளாலும்,

பெருமான் அனபாயன் பேரியம் மூன்றும்
தரும் ஆர வாரம் தழங்க (கண்ணி. 315)

என்ற அடிகளாலும் உணரத்தக்கது. விக்கிரம சோழனுக்கும் இராஜராஜ சோழனுக்கும் இப்பெயரை மூவருலா வழங்காமையும் அறியத்தக்கது.

இங்குக் காட்டிய இலக்கியச் சான்றுகளுக்கு ஏற்பவே, சிலாசாசனச் சான்றுகளும் உள்ளன. 'பூமன்னு பதுமம் பூத்த' என்று தொடங்கும் திருவாரூர்ச் சாஸனமொன்றில் (தென்னிந்திய சிலாசாஸனம், தொகுதி 7, எண் 485). கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 7-வது திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலத்தன முடையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைநம்பிக்கும் பரவை நாச்சி யார்க்கும் அர்ச்சனாபோக இறையிலியாக பழம்பெயரும் முன்னிறை கட்டினபடியுந் தவிர்த்து யாண்டு 7-வது முதல் அநபாயநல்லூர் என்னுந் திருநாமத்தால் என வருகின்றது. பழம்பெயர் தவிர்த்து அநபாயநல்லூர் எனப் பெயரிடச் சொல்லுவதனால், இக்குலோத்துங்கன் அநபாயன் என்ற சிறப்புப் பெயருடையான் என்பதை இச்சாஸனம் தெளிவிக்கும்.

கோகர்ணக் கல்வெட்டு ஒன்று (தென்னிந்திய சிலா சாஸனம், தொகுதி 7, எண் 1044) 'பேரம்பலம் பொன்' வேய்ந்த கோவிராஜ கேசரிபன்மரான திரிபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 12-வது என வருகின்றது. இது இக்குலோத்துங்கன் பேரம்பலம் பொன்வேய்ந்ததற்குத் தக்க சிலாசாஸனச் சான்றாகும். பிற சாஸனங்களும் இதனைத் தெரிவிக் கின்றன. இவன் கலிங்கத்துப் பரணிகொண்ட முதற் குலோத்துங்கன் அல்லனென்பது ஸ்ரீவெல் துரையால் 1912-ல் நன்கு நிறுவப்பட்டுளது. அனபாயன் குலோத் துங்கனைச் சரித ஆராய்ச்சியாளர் இரண்டாங் குலோத் துங்கன் என்பர். இவன் கி. பி. 1133 முதல் 1146 வரை அரசுபுரிந்தனன் என்றும் வரையறுத்துள்ளனர். ஆகவே சேக்கிழாரும் இக்காலத்தினராவர். இவர் பெரிய புராணம் இயற்றியது சுமார் 1140-ம் ஆண்டின் அளவாக இருக் கலாம்.

பெரிய புராணத்திலே சைவ அடியார்கள் அறுபத்து மூவரது வரலாறுகள் உரைக்கப்படுகின்றன. இவர்களுள் முக்கியமானவர்கள் நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவர்கள். மூவரையும் சைவசமயாச்சாரியர்கள் என்றல் மரபு. இவர்களோடொத்த பெருமையுடைய மாணிக்கவாசகர் சரித்திரம் இப்புராணத்தில் கூறப்படவில்லை. தனியடியார்களே யன்றி, ஒன்பது தொகையடியார்களும் இப்புராணத்தில் விவரிக்கப்படுகின்றனர். இவர்களாவார், தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர் முதலாயினோர். இதில் கூறப்படும் தனியடியார்களிற் பெரும்பாலோர் சோணாட்டிலும், நடுநாட்டிலும், தொண்டை நாட்டிலும் உள்ளவர்கள். மற்றைப் பிரதேசங்களில் இருந்தவர்கள் பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப்பணிவார்கள், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்கள் முதலிய தொகையடியார் கூட்டத்தில் பொதுப்படக் கூறப்பட்டுள்ளார்கள் போலும். தமிழ்நாட்டில் சைவசமய வரலாற்றை உணர்தற்கு இப்புராணம் இன்றியமையாதது.

இவ்வரலாறுகளனைத்தும் சுந்தரமூர்த்திகள் பாடிய திருத்தொண்டத்தொகையையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருவந்தாதியையும் பின்பற்றிக் கூறப்பட்டன. சருக்கப் பெயர்கள் தாமும் திருத்தொண்டத் தொகையில் வரும் தொடர்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ளன. தில்லைவாழந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறுவரிவண்டுச் சருக்கம் முதலியவாக வரும்பெயர்களால் இதனை அறியலாம். இத் திருத்தொண்டத்தொகையில் வரும் 11 செய்யுட்களும் 'ஆரூரிலாரூரனம் மானுக்காளே' என முடிகின்றன. இம்முடிவுக்கேற்ப, ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரைப் பற்றிய செய்யுளொன்று வைக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனமாக, திருத்தொண்டத் தொகையிலும் திருத்தொண்டர் திருவந்தாதி

யிலும் வருவனவற்றைச் சிறிதும் நெகிழவிடாது நூலின் கண் அமைத்துச் சேக்கிழார் தமது புராணத்தை இயற்றி யுள்ளார். தேவாரத்தையும் நன்கு ஓதியுணர்ந்து அதி னின்றும் செய்திகளை வடித்தெடுத்து அடியார்கள் வரலாறு நிரம்புமாறு இவ்வாசிரியர் செய்துள்ளார். இங்ஙன மேயன்றி நாயன்மார் வாழ்ந்திருந்த தலங்களுக்குச் சேக்கிழார் சென்று விசாரித்து, அவர்கள் வரலாற்றுக் குறிப்புக்களைக் கேட்டுத் தொகுத்துள்ளார்; முந்து நூல் களை நன்கு கற்று வேண்டுங் குறிப்புக்களைத் தெரிந் துள்ளார்; தம் காலத்திருந்த கோயில்கள் படிமங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றை நேரிற்சென்று கண்டு, அவைபற்றிய செய்திகளையும் தம் பெருநூலிற் பயன்படுத்தியுள்ளார். இவர் கூறியவற்றில் பல செய்திகள் சிலாசாஸனங்களால் உறுதிபெற்று வருவதை நோக்கும் போது, மிகவும் நுட்பமாக ஆராய்ச்சி செய்து தமது புராணத்தை இவர் இயற்றியுள்ளார் என்பது விளங்கும்.

ஆகவே, சேக்கிழார் சிறந்த சரித ஆசிரியர்க்கு வேண்டுந் தகுதிகள் யாவும் நிரம்பியவர் என்பதற்குத் தடையே இல்லை. ஆனால் இவர் சிறந்த கவிஞரும் ஆவரா? இக்கேள்வியை நாம் கூர்ந்து பரியாலோசனை செய்தல் வேண்டும். நாம் சைவ மரபினர் என்ற காரணத்தாலே, இவரைக் கவிஞரென்ற நிலையிலும் புகழ்தல் வேண்டு மெனக் கருதினேமாயின், இவரது உண்மைப் பெருமையை நன்கு உணராததனோடு, தமிழுணர்ச்சிக்கும் காவியவுணர்ச் சிக்கும் தீங்கு இழைத்தவராவோம். விருப்பு வெறுப்பின்றி நடுநிலையினின்று இக்கேள்வியைப் பரிசீலனை செய்தலே தக்கதாகும்.

காய்த லுவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்க் கண்ணதே

என்பது நாம் கடைப்பிடிக்கத் தகும் ஆராய்ச்சி நெறி யென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

முதலாவது, அடியார்கள் சரித்திரங்கள் பக்தி யுணர்ச்சியை வளர்ப்பனவேயாயினும், அவற்றுட் பெரும் பாலன தற்காலத்து ஒழுக்க உணர்ச்சியோடு மாறு படுவதுடன், நமது மனங்கிளர்ந்து அவற்றால் இன்பமும் பயனும் எய்த முடியாதபடி அமைந்துள்ளன. அன்றியும் இவை உயர்ந்த ஒழுக்க நெறியின்பாற் படுவன என்று ஒரு காலத்தும் மக்கள் கருதார். உதாரணமாக, இயற்பகை நாயனார் வரலாற்றை எடுத்துக்கொள்க, அடியார்கள் யாரேனும் வேண்டுவனயாவையும் இல்லை யென்னாது கொடுக்கும் இயல்பினையுடைய பெரியாரது சரித்திரம் இதிற் கூறப்படுவது. அந்தண அடியாரொருவர் இயற் பகையாரிடத்து வந்து,

> மன்னு காதலுன் மனைவியை வேண்டி
> வந்த திங்கென அந்தண ரெதிரே
> சொன்ன போதிலும் முன்னையில் மகிழ்ந்து
> தூய தொண்டனர் தொழுதுரை செய்தார்
>
> (இயற்பகை. 7)

> விதி மணக்குல மடந்தை இன்றுனை இம்
> மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன் என்ன
>
> (இயற்பகை. 8)

இயற்பகையார் இசைந்தனர். இது முற்காலத்தில் சமயத் தின் கொடிய ஆட்சியையும் அக்காலத்தில் அடியார்கள் சிலர் ஒழுகி வந்த ஒழுக்கத்தின் தன்மையையும் புலப் படுத்தும். ஆனால் தற்காலவுணர்ச்சிக்கும் ஒழுக்கத்திற்கும் இது முற்றும் மாறுபட்டதென்பது கூறவேண்டா. இங்ஙனமே சிறுத்தொண்டர் சரித்திரத்தில் பிள்ளைக் கறி சமைத்தளித்தசெய்தி நம் மனத்தில் பெரிதும் அருவருப்பை யுண்டுபண்ணுகிறது. இது போன்ற செய்திகளை அமைத்துக் காவியம் செய்வதென்றால், காவியச்சுவை மிக மிகக் குன்றிவிடும் என்பது தெளிவு.

இரண்டாவது, சேக்கிழார் பரிபக்குவ மெய்திய சரித ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சிப் பொருளை அமைத்துக் காவியஞ் செய்தால், அதிற் காவியச்சுவை காணுதல் மிக மிக அரிது. மேன்மேலும் வளர்ந்துவரும் விஞ்ஞான விஷயத்தை நூற்பொருளாக அமைத்து ஒருவன் காவியஞ் செய்தான் என வைத்துக்கொள்வோம். இதில் காவியச் சுவை சிறிதேனும் காண முடியுமா? இத்தகையதொரு செயலினையே சேக்கிழார் செய்ய மேற்கொண்டது. சரித வுண்மைகளும் ஆராய்ச்சிப் பொருள்களும் கவிஞனது மனோ பாவனைச் சிறகை ஒடித்தெறிந்து, அவன் கற்பனை யுலகில் உல்லாசமாய்ப் பறந்து செல்வதைத் தடுத்துவிடுகின்றன.

இவைபோன்ற காரணங்கள் சேக்கிழாரைச் சிறந்த காவியக் கவிஞர் வரிசையில் வைத்து எண்ணுதற்கு இடங் கொடுக்க மாட்டா. எனினும் இவர் ஓரளவில் காவியச் சுவையை உண்டுபண்ணி வெற்றி பெற்றுள்ளார் என்று நாம் தயக்கமின்றிக் கூறலாம். ஆராய்ச்சியாளர் ஒரு சிலர் பெரிய புராணம் பெருங்காப்பியமாகுமா என்பதனை ஆராய்ந்து, தாம் வேண்டியபடி 'ஆகும்' எனத் துணிபுங் கொண்டுள்ளனர். (கோவை சுப்பிரமணிய முதலியார்: சேக்கிழார், பக். 151 முதலியன). காவியத்திற்கு வேண்டும் ஒரு முக்கியமான இலக்கணம் இப்புராணத்தில் இல்லை. காவிய நாயகன் என ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காவிய நாயகன் எனக் கூறுதல் சிறிதும் பொருந்தாக் கூற்றும். வாழ்த்து வணக்கம் முதலியனவெல்லாம் காவியத்தின் உயிர்நிலை ஆகமாட்டாது. ஆதலால் இப்புராணத்தைத் தனித்தனிச் சரிதங்களைச் சேர்த்துக் கோத்த ஒரு கோவை யென்றே துணிதல் வேண்டும். இங்ஙனமாகவும், காவியச் சுவை எவ்வாறு உண்டு பண்ணப்பட்டது?

முதலாவது, சேக்கிழார் ஊட்டுந் தமிழின்பம் தனிப் பட்ட சுவையுடையது. இதனை,

கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கு
மெல்லியலுக்கு
எண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடமச்சம் பயிர்ப்பை வலிந்தெழலும்
(தடுத்தாட். 143)

என்ற செய்யுளிற் காணலாம். தமிழைச் சுவைத்துத் தேர்ந்து இச்செய்யுள் இயற்றப்பட்டுள்ளது. முதன் மூன்று அடிகள் மிக்க இன்பம் பயக்கின்றன.

இரண்டாவது, தொடர்களின் இன்பம். இது பலவிடங் களில் தோன்றி நம்மைப்பெரிதும் பரவ்சப்படுத்து கின்றனது.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள வெற்பென
(திருநாவுக்கரசு. 379)

ஆனந்தக் கடலினை (திருநாவுக்கரசு. 380)

மழலை மென் கிளிக் குலமென (திருஞானசம்பந்த. 1047)

புண்ணிய வினைவுபோல்வார் (திருஞானசம்பந்த. 1225)

பூந்துகில் புனைந்த புண்ணியம் (ஷை 1186)

மூன்றாவது, வருணனை யின்பம் உயர்ந்த தரத்ததாய் அமைந்துள்ளது.

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம்
(இளையான்குடி. 15)

என்ற செய்யுளைப் படித்து நோக்குங்கள்.

நான்காவது, தமிழாட்சியில் ஆசிரியர் காட்டும் தன்ன டக்கம். கரைகடவாது செல்லும் தெளிந்த ஆற்றொழுக்குப் போலச் செய்யுட்கள் இனிது ஒழுகி நம்மையும் மனவமைதி

யுடையராய்ச் செய்து சாந்தச் சுவையை யூட்டுகிறது. இதற்கு உதாரணம் புராணத்திற் பல இடங்களிலும் காணலாம். இவைபோன்ற நெறிகளிற் சேக்கிழார் காட்டும் இலக்கியச்சுவை பெரிதும் வியக்கற்பாலதேயாம்.

சிவக சிந்தாமணி என்ற புறச்சமய காவியம் மக்களைக் கவர்ந்து விடுதல் கூடாதென்று நினைத்துச் சேக்கிழார் இப்புராணத்தை இயற்றினரென்று அவரது புராண வரலாறு கூறும். ஆனல் இதனை உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. சேக்கிழார் இதுபற்றி ஒரு குறிப்புப்போலும் நமக்கு உணர்த்திஞரல்லர். இவர் போன்ற பெருங் கவிஞர்கள் இவ்விதமான பகைமையால் புராணஞ் செய்தாரெனல் அவர் பெருமையை நன்குணராதார் கூற்றேயாகும். சிந்தாமணியிற் போல உண்ணத் தெவிட்டாதபடி இனிமையால் இழைத்த செய்யுட்கள் பெரிய புராணத்தில் இல்லை. ஆனல் அளவுபட்டு இன்பந்தரும் இனிமை இதன் கண் உண்டு. ஆடம்பரமற்ற அழகும் இதன் கண் காணலாம். இவை முதலிய நலன்களை நாம் சுவைத்துணர்ந்து அமைதியுறுவோமாக.

12-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கம்ப னுக்குச் சேக்கிழார் ஒரு தலைமுறை முற்பட்டவராவர் என்பதும் இதனுல் புலனுகும். ஆனல் கம்பன் பெரிய புராணத்தைக் கற்றுப் பயன் படுத்தியுள்ளானென்று திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் எழுதினர் (சேக்கிழார்: சென்னைச் சர்வகலாசாலைப் பிரசங்கங்கள், சாது அச்சுக்கூடம் 1933). இவ்வாறு எழுதுவதற்குத் தக்க சான்றுகள் இல்லையென்றே தோன்றுகிறது. இவர்கூறுவன வற்றுள் சிறிதளவு கவனிக்கத்தக்கது ஒன்றே உள்ளது.

தெரிவரும் பெருமைத்திருத் தொண்டர்தம்
பொருவருஞ் சீர் புகலலுற்றேன் முற்றப்
பெருகுதண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒரு சுணங்கனை ஒக்கும் நலைகமையேன் (பாயிரம், 6)

என்ற பெரிய புராணச் செய்யுளும்

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

என்ற இராமாயணச் செய்யுளுமே இங்குக் கருதியன. இரண்டு செய்யுட்களும் வெவ்வேறு உவமைகளைக் கையாளு கின்றன. கன்னிரை நாய் குடித்தலும், பாலைப் பூனை குடித்தலும் சாதாரணமாய்த் தோன்றக்கூடியனவே. ஒன்றை நோக்கி மற்றையது அமைக்கப்பட்டது என்பதற்கு அவசியமேயில்லை. இங்ஙனமே இவர்காட்டும் பிற ஒப்பு மைகளும் வலியுடையனவல்ல.

வேறோர் ஆராய்ச்சியாளர்,

கண்கள்என் ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்;
பெண்களில் உபர நோற்றுள் சடங்கவி பேதை என்பார்;
மண்களி கூர வந்த மணங்கண்டுவாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள்
(தடுத்தாட். 25)

நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கு மன்னதேயாம்;
தம்பியைக் காண்மி னென்பார்; தவமுடைத் துலகம் என்பார்;
இம்பர் இந்நகரிற் றந்த முனிவனை இறைஞ்சும் என்பார்
(கார்முகப். 49)

முதலிய சிலசெய்யுட்களைக் காட்டிக் கம்பனைச் சேக்கிழார் கற்றுளார் என்பர்: பெரிய புராணத்தில் வெள்ளி பாடல்கள் சில உள்ளன வென்பது யாவரும் அறிந்ததே. ஒற்றுமையுள்ள பாடல்கள் வெள்ளியம்பலத் தம்பிரான் இயற்றிச் சேர்த்தனவாகலாம்.

மேலே விவரித்த பெரிய புராண முதலியன பக்தி யிலக்கியங்களாக அமைந்து நமது மூதாதையர்களை வசிகரித்தன. ஆனல் இதிகாசங்களின் மீதுள்ள அவாவும் குறைவுபடவில்லை. அவைகளும் மிக்க கவர்ச்சியுடையன

வாக விளங்கி அவர்களது போற்றற்பாட்டிற்கு உரிய வாயின. கம்பன் இயற்றிய இராமாயணத்தைக் குறித்து முன்பே சொல்லப்பட்டது.

பாரதமொன்று தமிழில் இயற்றப்பட்டதாகச் சாஸன வாயிலாக அறிகிறோம். இதனைக் குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடைய அருணிலை விசாகன் திரைலோக்யமல்லன் வத்ஸராஜன் என்பவன் இயற்றினன். சாஸனகாலம் மூன்றாங் குலோத்துங்கனது 32-ம் ஆட்சியாண்டு. இவ்வரசன் கி. பி. 1178-ல் அரசாட்சி மேற்கொண்டானாதலின், கி.பி. 1210-ல் சாஸனம் பொறிக்கப்பட்டதாம். எனவே, 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பாரதம் தோன்றியதாதல் வேண்டும் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 90: மதராஸ் எபிகிராபிக்கல் ரிப்போர்ட்டு-1905, எண் 482). அருணிலை விசாகன் 'பாரதத்தை இனிய செந்தமிழ்ப் படுத்தினன்' என்றும், அவன் சிவநெறியில் ஒழுகுபவன் என்றும் சாஸனம் தெரிவிக்கின்றது. இப்பாரதம் இப்போது மறைந்துவிட்டது.

பிறிதொரு பாரதம் குறைப்பிரதியாக நமக்குக் கிடைத்துள்ளது. பெரும்பாலும் வெண்பாவினால் இது பாடப்பெற்றதாதலால், 'பாரத வெண்பா' எனப்பெயர் வழங்குகிறது; பெருந்தேவனார் என்பவர் இதன் ஆசிரியராகக் கருதப்படுகின்றனர். நூல் முற்றும் அகப்படாமையினாலே, ஆசிரியர் பெயர் உறுதியாய்த் தெரியக்கூடவில்லை. சங்கநூல்கள் பலவற்றில் முதலாவது வரும் கடவுள் வாழ்த்துச்செய்யுட்கள் பாரதம் பாடிய பெருந்தேவனார்[1] இயற்றியன என்று காணப்படுகின்றது. நச்சினார்க்கினியர்,

1. இப்பாரதம் பாடிய பெருந்தேவனார் வேறு; அகம்-51, குறுந்தொகை-255, நற்றிணை-83, இவற்றை இயற்றிய பெருந்தேவனார் வேறு. பிற் குறிப்பிடப்பட்டவரைக் 'கடுகு பெருந்தேவனார்' எனப் பிரதிகள் தெரிவிக்கின்றன.

கங்கை சிறுவனும் காய்கதிரோன் செம்மலும்
இங்கிருவர் வேண்டா என எள்ளிக்-கங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவந்தார் தத்தம் மனம்

என்ற பாரதச்செய்யுளைக் காட்டி (தொல். புறத்திணை. 17) 'இது பெருந்தேவனார் பாட்டு' என்றனர். ஆனால் இச்செய்யுள் இப்போது அகப்படும் பாரத வெண்பாப் பகுதியில் உளதாக வேண்டுமாயினும், இதிற் காணப் படவில்லை. பெருந்தேவனார் என்ற பெயரோடு சார்த்தி, பாரதம் நெடுங்காலமாக வழங்கி வந்தமையால் பாரத வெண்பாவும் இவர் பாடியதென்று வழங்கி யிருத்தலும் கூடும். அல்லது உண்மையிலே, இப்பாரத வெண்பாவைப் பாடியவர் 'பெருந்தேவனார்' என்ற பெயர் கொண்டவரா யிருத்தலும் கூடும். ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்தா லன்றி உண்மை தெளிய வழியில்லை.

ஆனால், ஓர் உண்மை நமக்கு எளிதிற் புலப்படுகிறது. பாரத வெண்பாவை இயற்றியவர் வைஷ்ணவ சமயத்தினர். நூலகத்துப் பருவந்தோறும் வரும் காப்புச் செய்யுட்கள் இதற்குச் சான்று பகரும்.

தேனேங்கு சோலைத் திருவேங்கட மென்றும்
வானேங்கு சோலை மலையென்றும்—நானேங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்

என்ற விடுமப் பருவத்துச் செய்யுளைக் காண்க.

இப்பாரத வெண்பா தோன்றியகாலம் கி. பி. 9-ம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கூறிவந்தனர். இதற்கு முக்கியமான சான்றாகக் கொண்டது இந்நூலகத்துள்ள ஒரு செய்யுளாகும்.

வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரான் உரிமையால்—திண்மையால்

தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானொடு
யார்வேந்தர் ஏற்பார் எதிர்

என்பதே அச்செய்யுள். தெள்ளாற்றில் வென்ற ஓர் அரசன் காலத்தில் இந்நூல் இயற்றபட்ட தென்பது இதனால் வெளியாகும். இதன் உரைநடைப் பகுதியில் 'அல்லிபீடத் தரிவைக்குத் தன் அழகமர்தோளே ஆலய மாக்கிய, பல்லவர் கோமான் பண்டிதராலயனைப் பரவினேம்' என வந்துள்ளது. இதனால் தெள்ளாற்றில் வென்றவன் ஒரு பல்லவன் என்பதும் அவனுக்குப் 'பண்டிதராலயன்' என்ற சிறப்புப் பெயர் இருந்த தென்பதும் விளங்கும். பல்லவன் என்று கூறியதனைக் கொண்டு மூன்றாவது நந்திவர்ம பல்லவனே இவ் அரசன் என்று முடிபு கண்டனர். ஆனால் இங்ஙனம் துணிந்த காலத்து, இந்நந்தி யொருவனே தெள்ளாற்றில் வெற்றி கொண்டவனாகக் கருதப்பட்டான். இப்பல்லவனைத் தவிர 13-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு பல்லவனும் தெள்ளாற்றில் வெற்றி கொண்டுள்ளதாக ஒரு பல்லவ சாஸனம் தெரிவிக்கிறது (தென்னிந்திய சிலாசாஸனம் 12-ம் தொகுதி என் 128)[1]. கோப்பெருஞ் சிங்கன் என்பவன்தான் இப்பல்லவன். தெள்ளாற்றில் வெற்றி கொண்ட இந்த இரண்டு பல்லவர்களுள் யாவர் காலத்து இப்பாரத வெண்பா இயற்றப்பட்டது?

இதனைத் துணிதற்குச் சொல்வழக்காறு முதலியன நமக்குத் துணைபுரிகின்றன. 13, 14-ம் நூற்றாண்டுகளில் நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களில் ஆளப்பட்டுள்ள சொற்களும், தொடர்களும், பிற பிற்காலச் சொற்களும் பாரத வெண்பாவிலும் அதன் உரைநடைப் பகுதியிலும் காணப்படுகின்றன. உதாரணமாக,

---

1. A. R. No. 418 of 1922. Epigraphia Indica Vol. XXIII, p. p. 180—81.

விவஸ்தை (பக். 48) சமயவிரோதம் (பக். 48)
அருளிப்பாடு (பக். 73) அடா (பக். 248)
சண்டன் (பக். 22, 40, 79, 87, 129, 190, 199, 253)
புருஷகாரம் (பக். 107) சுப்ரமணியசுவாமி (பக். 213)
இலச்சித்தல் (பக். 141, 156, 159) அப்போ (பக். 253)
போட்டு (பக். 150, 151, 191) என்றனுடை (பக். 256)

என்ற சொற்களையும் தொடர்களையும் காண்க.

விராகம் (விராபிஷேம் பக். 211) என்பது சோழர் காலப் பிற்பகுதியில் சாஸனங்களில் பயின்றுவருவதாகும். அசதி (பக். 80), சுரோணிதம் (பக். 129, 134, 135, 255) என்ற பிழைபட்ட சொல்வழக்காறுகளும் பிற்பட்ட காலத்தையே உணர்த்துகின்றன. முடிவாகக் கொன்றை வேய்ந்தனில் வரும்,

மீகாமனில்லா மரக்கலம் ஓடாது

என்பது,

யாயாகி யெந்தையுமா யென்னையுமென் மக்களையு மெடுத்து நாட்டி
ஓயாது நி நிற்க உரியதோ ரிவ்விடத்தே உலந்தா யம்மா
நீயானே யென்மகனைச் செருக்களத்தே யின்றுநீ தமியனுக்கி
மீகாம னில்லாத மரக்கலந்தா னுக்கினுப் வேந்த ரேறே
(பக். 211)

என்ற செய்யுளில் எடுத்தாளப் படுகின்றது. இவ்வாறு எடுத்தாளும் வழக்கம் இப்பெருந்தேவனுர்க்கு உண்டென்பது,

நில்லா வுயிர்கொடுத்து நின்ற புகழ்படைக்கை
நல்லார் கடனென்ற நன்குணத்தார்—சொல்லார
முந்தியா னுகின்றேன் மூவாத குண்டலந்தை
எந்தை கொடுக்கின்றேன் இன்று (பக். 81)

என்ற செய்யுளால் அறியலாகும். கொன்றைவேய்ந்தனை இயற்றிய ஔவையார் கம்பன் காலத்தவர் என்று கொள்

வார்கள். ஆகவே பாரதவெண்பா 13-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இயற்றப்பட்டதெனக் கொள்ளுதலே ஏற்புடையதெனத் தோன்றுகிறது.

தெள்ளாற்றுப்போர் கி. பி. 1231–32-ல் நிகழ்ந்ததெனத் துணிந்துள்ளார்கள் (தென்னிந்திய சிலாசாஸனம் தொகுதி 12, பக். 180).

இது முடிவாயின், நந்திக் கலம்பகம் எப்பொழுது இயற்றப்பட்டதென்ற கேள்வியெழுதல் இயல்பே. நமக்கு அகப்படும் நூற்பிரதியில் பிற்காலத்துச் செய்யுட்கள் பல இடைச்செருகலாய்ப் புகுந்து விட்டன. இவற்றை நீக்கிவிட்டோமாயின், உண்மையான கலம்பகம் மூன்றாம் நந்தியின் காலத்தே அவன்மீது பாடப்பெற்றதெனக் கொள்ளுதலில் தடையில்லை. ஆனால் நந்திக் கலம்பகத்தைத் தனிப்பட நன்கு ஆராய்ந்த பின்னரே திட்டமான ஒரு துணிபுக்கு நாம் வருதல் கூடும். அவ் ஆராய்ச்சி பிறிதோர் சமயத்துச் செய்யத் தக்கதேயன்றி, இங்கே வேண்டாததாம்.

பாரத வெண்பாவில் வருஞ் செய்யுட்கள் கட்டுரைச் செறிவின்றி யுள்ளன. வெண்பாவிற்குத் தனித்துரிய செப்பலோசை பிறழ்ந்து வரும் இடங்களும் மிகப்பலவாய்க் காணப்படுகின்றன. உதாரணமாக, ஈற்றுச் சீரொழிய ஏனையவை காய்ச்சீரால் அமைந்த வெண்பாக்களைக் கூறலாம்.

மின்பயிலு மாமணிப்பூண் வேல்வேந்தர் தந்திறையை
முன்பொழுதே யந்தணர்க்கு முற்றுவித்தும்—பின்பொழுது
நேரிழையாள் தன்னோடு நேயமுடன் மெய்ச்சூதின்
போரடையத் தானடைந்தான் புக்கு (பக். 72)

என்ற வெண்பாவைக் காண்க. உண்மையில் இதிற்காணும் ஓசை கலிப்பாவிற்குரிய ஓசையாம். பிற்காலத்தார் இங்ஙனம் கலியோசையை வெண்பாவிற்கு ஊட்டிச் செய்யுளை நெகிழச்செய்து வெண்பாவின் ஓசையினிமையைச்

சிதைத்து விட்டனர். இதில் வரும் உரை நடைப்பகுதியில் ஒரு சில, வடமொழி பெரும்பாலும் தழுவாது வந்துள்ளன. 'இவ்வகையேத்தி இன்சொற் பல கொடுத்து, எம்பெருமாட்டி, நீர் என்பக்கல் எழுந்தருளியறியாதிர், இன்று எழுந்தருளிய காரணம் என்? என்று பல படியாலும் மன்னன் வினவக் கண்டு விம்மி விம்மி வெய்துயிர்த்து யாது சொன்னாள் குந்திதேவி' (பக். 90) என்ற பகுதியை நோக்குக. வேறு சில, தமிழும், வடமொழியும் கலந்து ஒழுகுகின்றன. 'எழின்மணி முடிவேந்தர் இடுதிறையெல்லாம் முன்பொழுதில் தானம்பண்ணிப்பின் பொழுதில் அபராண்ணிய தரித்திரன் என்னும் பேரெய்தித் தன் நேரிழையாளோடும் சூது பொருதுகின்ற மன்னன் விவஸ்தையறிந்து யாது செய்தான் ஸ்ரீ வாசு தேவன்' (பக். 72) என்ற பகுதியால் இதனை உணரலாம். வேறு சில பகுதிகள் வடமொழிச் சொற்கள் நிரம்பியுள்ளன. உரை நடையின் முக்கியகதி இதுவேயாகும். 'பராஷ்டிரத்து க்ஷத்திரியர் முன் என்னை, அர்த்தரதரில் வகுத்துப் பரிபவம் பண்ணின ஸ்ரீ விஷ்மன் சேனுபத்தியத்துக்குள் நில்லேனென்றும், நின்னையுடைய நான் இப்படி விர சௌரிய பங்கமாவதோ என்றும்' (பக். 142) என்ற பகுதி இதற்குச் சான்று.

இங்ஙனமாக, செய்யுள் செறிவின்றி நெகிழ்ந்து, உரை நடையும் பல திறப்பட்டுச் சென்ற போதிலும், பாரத வெண்பா பலவகையிலும் போற்றத் தகுவதாயுள்ளது. கதையைச் சுவைபட அமைத்து இந்நூல் கூறுவது பாராட்டத்தக்கது. உரைப்பகுதியும் கதையில் வாசகர் மனம் ஊன்றி ஈடுபடும்படி இயன்றுள்ளது. 13-ம் நாட்போரை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இப்பகுதியிலுள்ள ஒரு சில விருத்தங்கள் தெளிந்த நடையில் பொருட் சிறப்பு ஒன்றையே முக்கியமாகக் கொண்டு அமைந்தன. உதாரணமாக,

களிமா றுலகுக்கோர் காலனே சொல்லீர்
கடல் வண்ணன் தங்கை கருவுயிர்த்த தென்பார்
தெளிமாண வாளேந்திச் செய்கின்ற போரிற்
சிலையேந்திச் செய்த செருவென்ன தென்பார்

ஒளிமாலொடன்றோ படைபயின்ற தென்பார்
ஒள்ளிலை வேற் பார்த்தன் சே யல்லனோ வென்பார்
புளிமாவ தாகுமோ தேமாங்கன் றென்பார்
புலிக்குப் பிறந்தது எலியாமோ என்பார் (பக். 252)

என்ற செய்யுளைக் காணலாம். வாசுதேவன் தூது சென்ற காலத்து, துரியோதனனது வஞ்சனை கண்டு விசுவரூபம் எடுத்து வளர்ந்ததை வருணிக்கும் பகுதி மிகச் சிறந்த தொன்றாகும்:

வஞ்சனை யறிந்து நெஞ்சறி வுற்ற
ஊழியிற் காயெரி யுடன்றது கருங்கடல்
ஓதமும் விசும்பும் உடனுற நிமிர்ந்தது;
வானுந் திசையு மாயிருள் பரந்தது;

நீல மேனி நிமிர்ந்தெழுந் ததுவே;
மறைத்தவன் இருந்திய மல்லரும் அரக்கரும்
ஆர்த்தபொற் பாதம் எய்தலும் அதனொடு
வியன்பா தலத்து வீழ்ந்தனர் பலரே;

அருகணைந் துலகத்
தொல்பகை யழியப் பல்வகைப் பொருதிறற்
பரவைநீர் கெடுத்துப் பணிந்தனர் பலரே;
பொடித்தன மயிரே; பொங்கின புகையே;

கடித்தன எயிறே; மடித்தன வாயே;
நிமிர்ந்தன புருவம்; மலர்ந்தன நாட்டம்;
நெற்றித் தனிக்கண் நெருப்பொடு பிறங்கிற்று;
மற்றைச் செங்கண் மயங்கெரி யுமிழ்ந்தன;

பாயிருள் நீக்கும் பல்கதிர்த் திரளென
ஆயிரம் தடக்கை

திசை முகம் பொதியச் செறிந்தன; அவைதாம்
தின்சிலை குனிப்பன; செஞ்சரந் தெரிவன,

வெங்கணைத் தூணி வீக்குவன, வெஞ்சுடர்
வாளுறை கழிப்பன, கேடக மலைப்பன,
சூல மேந்துவ தோமரஞ் சுழற்றுவ,
கணிச்சி கொள்வன, கப்பண மெடுப்பன,

அணிச்சுடர் நெடுவா ளொடுவே லடுப்பன,
மழுவொடு தண்டு வகைபெற நிமிர்ப்பன,
சத்தி யோச்சுவ, சங்கந் தொனிப்பன,
பிண்டி பாலம் பெயர்ப்பன,

ஒண்டொழிற்கணை யோட்டி யதிர்ப்பன,
வடிநுதிக் குந்தம் வலமிடம் வாங்குவ,
முரண்வலி முன்கை
வளையம் ஓச்சுவ, வச்சிரம் எடுப்பன,

திரளிருப் புலக்கை திண்ணென ஓச்சுவ,
சுடரொளி யாழி சுழற்றுவ, அடல் முழங்கு
வலம்புரி யார்ப்பன, வன்பிடி முழங்குவ,
பொலங்கழல் விரிப்பன, பொன்முடி திருத்துவ,

வசையெழப் புகைப்பன, புகையெழப் பிசைவன,
பூங்கச்சு வரிப்பன, பூங்கழல் எடுப்பன,
தூங்கழில் மணிவிரற் சுட்டிக் காட்டுவ,
பூங்கழ லடிகொடு புரள மிதிப்பன,
பிடிக்கலுற் றடர்ப்பன, புடைக்கலுற் றேச்சுவ,
தோளொடு தோள் கொட்டுவ, தாளொடுதாள்
அடிப்பன,
அளைய வாங்கிய ஆயிரந் தடக்கையும்
விண்கெழு படையொடு விசும்படைந் தனவே;
கான மாமுகில் இலங்கி மற்றவன் தோளு மாகமுஞ்
சூழ்ந்துநின் றனவே;
நிலச் சோதி நிலையுற நிமிர்தலிற்
பகலொளி மிழந்தது பரிதிமண்டிலமே;
முதலொரு விசும்பி னந்தரர் மயங்கிப்

புகலிட மிலையெனப் புலம்பி நின்றனரே;
தோள்மிசை வீழ்ந்த சூறை மாருதம்
மீமிசை விசும்பின் மிசையெடுத்ததுவே;
முடுகலிற் றூரகை சுழன்றுதாம் எரிந்தன;

வானக் கங்கைநீர் சுழிதெரிந்ததுவே;
தேவர் கோமான் மாமுகிற் பொன்னகர்க்
கற்பகச் சோலை பொற்பழிந்தனவே;
பாதாள மஞ்சித் துண்ணென்று துளங்க

நாகந் துளக்குற
விசும்பிற் றேவரும் திகைப்ப
மேனிலை யழிந்து மண்பெயர்ந் ததுவே,

விசுவரூபம் எடுத்த அளவில், நெருப்பும் கடலும் விசும்பும் உடனுற நிமிர்ந்தன. நீலமேனி நிமிர்ந்தெழவே, எங்கும் இருள் பரந்தது. மறைத்து வைக்கப்பட்டிருந்த மல்லர் முதலியோர் அவன் பாதத்தால் துகைப்புண்டனர். அவனை அணுகிய பலரும் தமது வீரச்செருக்கு ஒழிந்து பணிந்தனர். அவன் மேனிமயிர் பொடித்தது; வெகுளிப் புகை பொங்கிற்று; எயிறுகள் கடித்தன; வாய்கள் மடித்தன; புருவம் நிமிர்ந்தன; நயனங்கள் பரக்க விழித்தன; நெற்றிக் கண் நெருப்பைக் கக்கிற்று. அவனது ஆயிரம் தடக்கைகளும் போர்ச்செயல்கள் புரிந்தன. இவ்வாறாக, பரம்பொருளாகிய திருமாலின் உக்கிர ரூபம் மிக நன்றாகப் பாவனை செய்யப்பட்டிருக்கிறது. இப்பாரத வெண்பா முற்றும் நமக்குக் கிடையாதது நமது துர்ப்பாக்கியமே யென நாம் நன்றாக உணர்கிறோம்.

பாரத வெண்பாவைப்போலவே, வெண்பாவும் உரையிடையிட்ட செய்யுளுமாக அமைந்த வேறொரு காவியமும் அரைகுறையாய் நமக்குக் கிடைத்துள்ளது. அரிச்சந்திர வெண்பா என்பதே நான் இங்குக் கருதுவது. இக்காவியமும் இக்காலப்பகுதியைச் சார்ந்ததென்று கொள்ளலாம். கி. பி.

1524-ல் நல்லூர் விரை ஆசுகவிராயர் விருத்தப்பாவில் இயற்றிய அரிச்சந்திர புராணத்திற்கு மூலமாக உள்ளது இந்நூல்: இது,

> விதியினர சிழந்த அரிச்சந்திரன் தன்
> வியன்கதையாம் வெண்கவிதை விருத்தமாக்கி
> அதிவிதமாம் கலியுகத்தில் வருச காத்தம்
> ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறில்

என்ற அரிச்சந்திர புராணப் பாயிரப்பகுதியால் விளங்கும்.

திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைப் பதிப்பாக ஸ்ரீ மு. இராகவையங்காரால் இப்போதுதான் இவ்வெண்பா[1] வெளியிடப்பட்டுள்ளது.

பாரதத்தைப் போலவே இராமாயணமும் தமிழ் நாட்டில் பெரிதும் போற்றப்பட்டு வந்த ஒரு சரித்திரமாகும். கம்பனது இராமாயணத்தைக் குறித்து முன்பு கூறியுள்ளேன். இவ் இராமாயணம் வான்மீகியின் பேரிதிகாசத்தைத் தழுவி இயற்றிய வழிமுறை இதிகாசம் என்று முன்னர்க் குறிப்பிட்டுள்ளேன். இங்ஙனம் வைதிக சமயத்தவர்கள் இச்சரித்திரத்தைப் போற்றியதுபோலவே, அவைதிக சமயத்தவராகிய பௌத்தர்களும் ஜைனர்களும் இதனைப் போற்றி வந்துள்ளார்கள். பௌத்தர்களது புத்த ஜாதகக் கதைகளில் தசரத ஜாதகக் கதைகள் சிலவும் காணப்படுகின்றன. இவைகள் உணர்த்துவது இராமாயண சரிதத்தையே. ஆனால், தமிழில் இப்பௌத்தர்கள் இச்சரிதம் பற்றிக் காவியம் இயற்றியதாக அறிகுறி ஒன்றும் காணப்படவில்லை. ஜைனர்கள் கதையை

1. அரிச்சந்திர வெண்பா: (1) சுயம்வரகாண்டம் (2) சலம் வருகாண்டம் (3) யாககாண்டம் (4) மிருகயாத்திரைக் காண்டம் (5) விசுவாமித்திரப் பிரவேச காண்டம் (6) இராச்சியதான காண்டம் (7) காசியாத்திரைக் காண்டம். மொத்தச் செய்யுள் 304. இந்நூலின் காலம் 13 அல்லது 14-ம் நூற்றாண்டாகக் கொள்ளலாம் என்பர் பதிப்பாசிரியர்.

வேறுபடுத்துத் தமிழில் இராமாயணம் ஒன்று இயற்றியுள்ளார்கள் எனஊகிக்கலாம். ஏறத்தாழ இதே காலத்தில், கன்னட மொழியில் ஜைனர்கள் இராம சரிதம் செய்துள்ளார்கள். நாகச் சந்திரன் அல்லது அபிநவ பம்பா என்ற கவிஞன் சுமார் கி. பி. 1100-ல் இயற்றிய பம்பா இராமாயணம் என்று வழங்குகிற இராமச்சந்திர சரித புராணம் மிகப் பிரசித்தமானதே. இப்புராணத்தோடொப்ப, தமிழிலும் ஓர் இராமசரிதம் தோன்றியமை ஸ்ரீபுராணத்தால் நமக்கு விளங்குகிறது. பிற்பட்டெழுந்த இந்த ஸ்ரீபுராணத்தில் வரும் இராம சரிதப்பகுதியிலே ஒரு சில செய்யுட்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இவை இப்பழைய ஜைன இராமாயணத்தைச் சேர்ந்தன என்று கொள்ளலாம். அச்செய்யுட்களில் சில வருமாறு:

உருமிடிப் புண்ட அருமணி நாகமெனத்
திருமணி நிலத்திற் றேவி சோர்ந்து
செய்த பாவையின் மெய்திரி பின்றி
மையலி னுயிர்த்து மடிந்துடன் கிடப்ப

விம்முறு துயரிற் கொம்மென வுயிரா
விளைந்த தெல்லாம் உளங்கொள வுணரா
எழுதுகண் ணருவிய ளினைந்தினைந் திரங்கலின்
ஒழுகுபு கழிய முழுகிய மேனியள்

அழுதழு தலறி யாவோ வென்னும்;
இணைபிரி யன்றிலி னேங்கி நீங்காத்
துணைவனை நினைந்து சோகமீ தூர்தர
வான்பழி சுமந்துநின் வனமலர்ச் சேவடி

யான்பிரிந் தேநில விடவயின் இடர்ப்பட
மான்பின் போகிய மன்னவரே யெனும்;
மாயோன் செய்த மாய மானிடை
மாயவன் செய்த மகிழ்ச்சி கண்டருளி

ஆவதொன் றின்றி யதன்வழி யொழுகிய
நாயகனேயெனை நனுகாய் வந்தெனும்;

கொற்றவன் றனையே குலவிளங் களிறே
செற்றலர்ச் செகுக்குஞ் சினத்தி யுருமே

மைந்தன மலையே மன்னவனே யெனும்;
நாற்கடற் பரந்தன வேற்படைத் தானையொடு
கூற்றுறழ் மொய்ம்பில் கொடுஞ்சிலைத் தடக்கைத்
தம்பித் துணைவனிற் றவிப்படப் பிரிந்திட்

டெம்பெரு மகனை யென்வழி விழுவி
மாற்றவன் செய்த மாய மாவினை
நோற்றி லாதே நேக்கிய நோக்கின்
அருவினை யேனை யருளிய மனத்தால்

மருவிய மாய வுருவுதாழ் கெழுந்த
வரிசிலைக் குரிசிலை மன்னர் பெருமானை
மான்மறி தொடர்ந்துசெல் வாளரி போலக்
கானெறி விடுத்துக் கடுவனம் புகுந்து

மாயப் புணர்ப்பின் மன்னனை நினைந்து
ஆயமுந் தாயருந் தோழியு மின்றியோர்
நொதுமலாளன் விதிவழி யொழுகி
இடவிடை யிட்ட செய்மைத் தன்றியும்

கடலிடை யிட்ட காப்பிற் றாகிய
இலங்கை மூதூ ரிடுசிறைப் பட்டு
மலங்கு விழிமான் வழிநேர்ந் தருளிய
மன்னவற் குற்றதும் இன்னதென் றறியாது

இன்னற் படவேனை யின்னண மிழைத்த
வினையே வலிதே விளிதரல் புரிவாய்
மனுவே யனையனை வார ணுசியில்
தனியொரு மான்பிணை தன்னின் விடுத்தே

எனையுந் தனியே யிவணிட் டதுவே
சுழல்விழித் தறுகட் பேழ்வாய்ச்
சுடர்க்கைவேற்றிரண்ட தோளாய்

யுழைவிழி யார் சொற் கொண்டார் உறுவர்வெந்
துயர மென்னும்
பழமொழி யதனை யோர்ந்தும் பாவியேன் சொல்லைக்
கேளா
உழையின் பின்போன வேந்தேயுனக்குற்ற தறிகிலேனே

கோம்பி கண்டு குலுங்குபு கலங்காச்
சாம்பிய மஞ்ஞையிற் சாய்ந்தனள் கிடப்ப

சிதையின் சோகத்தை யுணர்த்தும் இச்செய்யுட்களை நோக்கினுல் இவ் இராமாயண நூல் மிகவும் சுவைபட அமைந்ததாம் என்பது விளங்கும். ஸ்ரீ புராண ஆசிரியர் கையாளும் நடைக்கும் இச்செய்யுள் நடைக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுதலினுலே, இவை மேற்கோள் செய்யுள் எனவே பெரும்பாலும் கொள்ளத்தக்கன.

ஜைன இராமாயணக் கதை நமது வைதிக இராமா ணயச் சரித்திரத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. தசரதர் காசியில் முதன் முதலில் வாழ்ந்து, பின்னர் அயோத்தியில் ஆட்சி புரிந்து வந்தனர். இவருக்கு இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என்ற நான்கு புதல்வர் இருந்தனர். ஜனகர் ஓர். யாகம் செய்தனர். அதற்கு இராமனை அனுப்புமாறு தசரதரை வேண்டினர். அவ் வாறே அனுப்ப, இராமன் அங்குச் சென்று சிதையை மணந்தனன். இவர்களைக் காசியில் வாழ்ந்து வரும்படி தசரதர் நியமித்தார். ஒருமுறை வனத்தில் விளையாடி இன்புறுதற் பொருட்டு இராமன், இலட்சுமணன், சிதை என்ற மூவரும் சித்திரகூடம் சென்று அங்குத் தங்கியிருந் தனர். அப்பொழுது நாரதர் அங்கு வர நேர்ந்தது. இராமன் அவர் வரவை அறியாமையினுலே அவருக்கு வந்தனை வழிபாடாற்ருது இருந்தனன். நாரதர் மிகவும் கோபித்துச் சென்று இராவணனை அடைந்து அவனுக்குச் சிதையின் பேரழகை எடுத்துக் கூறினர். இராவணன் தாங் கொணுத காமங்கொண்டு மாரிசனேடு சித்திரகூடம்போய்

வஞ்சனையாகச் சீதையை எடுத்துச் சென்றனன். அப்பொழுது அயோத்தியில் நிகழ்ந்த உற்பாதத்தால் தசரதர் முற்கூறியசெய்தியை உணர்ந்து தூதர்கள் மூலம் ஆறுதல் சொல்லியனுப்பினர். கௌசல்யை, பரதன் முதலியவர்களும் சுக்கிரீவன், அநுமஹான் (அநுமான்) முதலிய வித்தியாதரர்களும் இராமனிடம் வந்து சேர்ந்தனர். அநுமஹான் சீதையைக் கண்டு வந்து இராமனிடம் தெரிவித்தனன். பின்னர் இராமன் அநுமஹானைத் தூதாக அனுப்பினன். வாலி தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி இராமனிடம் வேண்ட, இராமன் மறுத்து விட்டனன். வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் போர் நிகழ்ந்தது. இப்போர் நிகழ்ச்சியில் இலட்சுமணன் வாலியைக் கொன்று விட்டான். விபிஷணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தனன். பின்னர் இராவணன் முதலிய வித்தியாதரர்களுக்கும் இராமன் முதலியோர்களுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. இப்போரில் இலட்சுமணனால் இராவணன் முதலியோர் அழிவெய்துகின்றனர். இறுதியில் இராமன் தீக்ஷைபெற்று மோக்ஷமடைகின்றான். அவ்வாறே அநுமஹான் முதலியோரும் தீக்ஷைபெற்றனர். ஆனால் இலட்சுமணன் மாத்திரம் நரகம் அடைந்தனன்.

இச்சரித வேறுபாடு ஸ்ரீபுராணத்தில் காணப்படுகின்றது. இந்நெறியிலேயே ஸ்ரீபுராணத்திற்கு முந்திய ஜைன இராமாயணத்திலும் கதை சென்றது என நாம் ஊகிக்கலாம். இதில் வரும் செய்யுட்கள் சுவையுடையன வாயிருத்தல் வேண்டும் என்று கூறினேன். ஆனால், கதை அமைப்பில் ஜைன இராமாயணம் மிகவும் கீழ்ப்பட்ட தரத்தது எனவே நாம் துணிதல்வேண்டும்.

இந்த இராம சரிதத்தைப் போலவே பல தீர்த்தங்கரர்களுடைய சரித்திரமும் தமிழில் காவியமாக ஜைன சமயத்தவரால் இயற்றப்பட்டன என்று கருத இடமுண்டு. சாந்திபுராணம் என்பது இங்ஙனம் தோன்றிய தீர்த்தங்கர

சரித்திரங்களுள் ஒன்று. இப் புராணத்தினின்றும் ஒன்பது செய்யுட்கள் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு செய்யுட்கள் (173, 448) மேரு மந்திர புராணத்திலும் காணப்படுகின்றன. ஏனைய ஏழு செய்யுட்கள் புணர்ச்சி விழையாமை (292), கள்ளாமை (306, 307), மெய்யுணர்தல் (442), அமைச்சு (742), பொதுமகளிர் (1057, 1058) என்ற பொருள்கள் பற்றியன. புராண நாயகராகிய சாந்தி தேவர் பதினாறுவது தீர்த்தங்கரராவர். இத் தீர்த்தங்கரரது வரலாறு கூறும் சாந்தி புராணம் ஒன்று கன்னட மொழியிலும் உள்ளது. தமிழ்ச் சாந்திபுராணம் விருத்த யாப்பினால் இயன்றதாகும். ஒரு சில செய்யுட்கள் வருமாறு:

விண்ணி லின்பமும் வீதல் கேட்டுமால்
மண்ணி லின்பமும் மாய்தல் காண்டுமால்
எண்ணி லின்பமாம் ஈறிலாதநதே
நண்ணி நாமினி நயக்கற் பாலதே (புறத்திரட்டு, 442)

ஆயிரங் கதிருடை அருக்கன் பாம்பினால்
ஆயிரங் கதிரொடும் அழுங்கக் கண்டுகொல்
ஆயிரங் கண்ணுடை அமரர் கோனுமோர்
ஆயிரம் அமைச்சர்சொல் வழியினாயதே.
(புறத்திரட்டு, 742)

இச் செய்யுட்களை நோக்கினால் இந்நூல் சுவையிற் சிறந்ததன்று எனவே தோன்றுகிறது.

இந்நூலுக்கு மிக முற்பட்டு நாரத சரிதை என்ற ஒரு காவியம் தோன்றியது. இக் காவியமும் சாந்தி புராணம்போன்று ஒரு சரித்திரம் பற்றியதேயாதல் வேண்டும். இதினின்றும் எட்டுச் செய்யுட்கள் புறத்திரட்டில் வந்துள்ளன. இச் செய்யுட்களால் ஒரு சில செய்திகள் உய்த்துணரத் தக்கனவாயுள்ளன.

வல்லென்ற சொல்லும் புகழ் வாய்மை வழீஇய சொல்லும்
இல்லென்ற சொல்லு மிலனுகலின் யாவர் மாட்டும்
சொல்லுங் குறையின் மையிற் சோரு மின்மை யாலே
கோல்லென்ற சொல்லு முரை கற்றிலன் கொற்ற வேலான்.
(புறத். 496)

இச் செய்யுளால் நாரத சரிதை அரசனொருவனது சரித்திரம் கூறுதற்கமைந்தது என்பது தெளிவாம். இஃது உண்மையாயின், அரசனது நாடு, நகர், அரண்மனை முதலியவற்றைப் புகழ்ந்துரைக்கும் செய்யுட்கள் இந்நூலின்கண் உளவாதல் வேண்டும். இவ்வனுமானத்திற் கேற்பவே,

மன்னன் மேவு கோயில் மேரு மானமற்றிம் மண்ணெலாம்
என்னலாய ஆரிடத் திலங்குமா ளிகைக்குலம்
பொன்னின்மேரு வின்புறப் பொருப்பு நேர வப்புறந்
தன்னுநேமி வெற்பையென்பர் சூழ்மதிற் பரப்பையே
(புறத். 861)

என்ற செய்யுள் காணப்படுகின்றது. தொடர்ச்சியாகச் சில செய்யுட்களேனும் கிடையாத நிலைமையில் அரசனது சரித்திரம் இன்ன நெறியிற் செல்வது என அறிவதற்கு இயலவில்லை. எனினும், புறத்திரட்டிலுள்ளனவற்றில் இரண்டு செய்யுட்கள் (425, 426) துறவினை வற்புறுத்துகின்றன; மற்றைச் செய்யுட்கள் (304, 356, 414, 1060) உலகவின்பம் இழிவாதலையும் நிலையற்றனவாதலையும் உணர்த்துகின்றன. இவற்றை நோக்கும்போது கதாநாயகனாகிய அரசன் உலகவின்பத்தை இறுதியில் நீத்துத் துறவு பூண்டனன் என்பது பெறப்படலாம். இத்துணையே இந்நூற் சரிதத்தில் நம்மால் அறியக்கிடப்பது.

ஆனல் இச்சிறு முடிபினின்றும் ஒரு முக்கியமான செய்தி விளங்குகின்றது. ஜைன சரிதங்கள் பலவும் இறுதியிற் கதாநாயகன் துறவு பூண்டு முத்தி யெய்துகின்றதனோடு முடிகின்றன. உதாரணமாக சீவகசிந்தாமணி, சூளாமணி முதலியவற்றைக்காண்க. நாரத

சரிதையும் இவ்வாறு முடிவதெனக் கொள்ளத்தக்கதா யிருத்தலாலே, இச்சரிதையும் ஒரு ஜைன சரிதமாகவே இருக்கலாமெனத் தோற்றுகின்றது. ஸ்ரீபுராணத்தில் நாரதன், பர்வதன் என்னும் இருவர்களது சரித்திரம் கூறப்பட்டுள்ளது. இச்சரித்திரம் பற்றிய நூலாகவே நாரத சரிதை அமைந்ததாதலும் கூடும். இதன்கணுள்ள 'ஆசையல்குற் பெரியாரை' (1060) என்னுஞ் செய்யுள் யாப்பருங்கல விருத்தியுரையில் (பக். 365) மிகை யெண்ணிரவிறைக்கு உதாரணமாகத் தரப்பட்டுள்ளது. ஆகவே விருத்தியுரையின் காலமாகிய 12-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டது இந்நாரத சரிதையென்பது விளங்கும்.

பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் கி. பி. 13-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியதென அதன் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் கூறியுள்ளார். ஆனால், இதன்கண் ஐயங்கொள்ளுதற்கு இடமுண்டு என மு. இராகவையங்கார் தமது சாஸனத்தமிழ்க்கவி சரிதத்தில் (பக் 120) எழுதியவற்றால் புலனும். இப்புராணத்தின் காலம் பிற்பட்டதாக வேண்டும் எனற்குத் தக்க காரணங்கள் உள. எனவே, இது இக்காவியகாலத்தில் சேர்த்து விவரிக்கப்படவில்லை.

சில காப்பியங்கள் பெயரளவில் நமக்குத் தெரிந்துள்ளன. இவை பிங்கல சரிதை, வாமன சரிதை என்பன. இவைகள் நவநீதப் பாட்டியலின் பழையவுரையில் குறிக்கப்பெற்றுள்ளன. செய்விப்போனல் பெயர் பெற்றுள்ள நூல்களுக்கு இவை உதாரணமாம் என்று கூறப்படுகின்றது. வேறு எவ்வகையான விவரமும் இக்காவியங்களைக் குறித்து நமக்குத் தெரியமாட்டாது.

இப்பகுதியிலே காவியகாலத்தில் தோன்றிய நூல்கள் முறையே விவகரிக்கப்பட்டன. காவியங்களின் பொதுவியல்பு பற்றி இனி அடுத்து விசாரணை செய்வோம்.

4. காவியங்களின் பொதுவியல்பு

இதுகாறும் பாரதம் முதலிய இதிகாசங்களைக் குறித்தும், சிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களைக் குறித்தும், சூளாமணி முதலிய காவியங்களைக் குறித்தும், பெரிய புராணம் முதலிய புராணங்களைக் குறித்தும் நாம் விவகரித்தோம். இவை தம்மில் நமது முன்னோர்கள் கண்ட வேறுபாடுகளை ஏற்கெனவே எடுத்துக் கூறியுள்ளேன். எனினும், இவ்வேறுபாடுகளை மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துதல் நலமாகும்.

பாரதம், இராமாயணம் என்ற இரண்டு நூல்களுமே இதிகாசம் ஆம். சைவ நன்மக்கள் சிவரகஸியத்தையும் இவ்வகையில் உட்படுத்தி அதனை மகேதிகாசம் என்பர். ஆனால், இதிகாசம் என்னும் இயல்புக்கு இந்நூல் ஒத்த தாகாது என்பதே முடிவாகக் கொள்ளுதல் வேண்டும். இச்சொல் இதி-ஹ-ஆஸ எனப்பிரிந்து, 'அவ்வாறாக உள்ளது' என்று பொருள்படும். அநாதிகாலந் தொட்டுப் பரம்பரைக் கேள்வியாய் வந்து பின் வரலாறாக எழுதப் பட்ட விரபுருஷ சரிதமே இச்சொல்லால் உணர்த்தப் படுவது. மேற்குறித்த பாரதம், இராமாயணம் என்ற இரண்டும் இவ்வகையைச் சார்ந்தன என்பது வெளிப்படை. இதனை மேல்நாட்டு இலக்கிய ஆராய்ச்சியாளர் 'எபிக்' எனப்பெயரிட்டு ஆளுவர். வடமொழி ஆசிரியர்கள்,

> தர்மார்த்த காம மோக்ஷாணும் உபதேஸஸமந்விதம்
> பூர்வவ்ருத்தம் கதாயுக்தம் இதிஹாஸம் ப்ரசக்ஷதே

என இதன் இயல்பை விளக்குவர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் பற்றிய உபதேசத்தோடு கூடிய

தாய் பூர்வத்தே நிகழ்ந்த கதையாகச் சொல்லப்படுவதாய் உள்ளதனை இதிகாசம் என்று கொண்டனர் என்பதுவே இதன் பொருள். தமிழிலுள்ள அணி இலக்கண ஆசிரியர்கள், இதிகாசம் எனத் தனியாக ஒருவகையைக் கொள்ளவில்லை. பெருங்காப்பியம் என்ற பகுதியிலே இதிகாசத்தையும் அமைத்தனர்.

பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்களை உணர்த்துவதாய் அமைந்த விரிவான கதையாகும். காப்பியம் இப்புருஷார்த்தங்கள் அனைத்தும் வாராமல் ஒரு சில குறைந்து வரும் கதையையே உணர்த்தும் என்பர்.

புராணம் என்பது பதினெண் புராணங்களையே முதலில் குறித்தது. பிற்பட்ட காலங்களில் இதன் பொருள் விரிந்து பக்தர்கள் சரித்திரம், ஸ்தல மகிமை முதலியவற்றின் சரித்திரமெல்லாம் அடங்கிய வரலாற்று நூலினைக் குறிப்பதாக முடிந்தது. இவ்வகை நூல்கள் சமய உணர்ச்சியே மேலோங்கி நிற்க இயற்றப்பட்ட சமய நூல்களாம். இங்ஙனம் எழுந்த நூல்களில் ஒருசில இலக்கிய அழகும் சுவையும் சிறந்து விளங்குதல் பற்றிக் காவியமாகக் கொள்ளப்பட்டனவும் உள. இச்சிறப்புற்ற இலக்கியங்களைப் பற்பல சமயத்தவரும் போற்றிப் பாராட்டு வாராயினர்.

ஆதியில் எழுந்த புராணங்கள் ஐந்து வகைப்பட்ட செய்திகளைக் கூறுவன, அவை, உலகின் தோற்றம், ஊழியின் இறுதி, வம்சம், மன்வந்தரங்கள், வம்சாநு சரிதம் என்பனவேயாம். இவ்வியல்பிற்குப் பதினெண் புராணங்கள் பெரும்பாலும் பொருந்தியன. இப்புராணங்களைக் காவியம் எனக்கூறுதல் இல்லை. இவற்றில் செய்யுளாகத் தமிழில் இயற்றப்பட்டுள்ளன மச்ச புராணம், கூர்ம புராணம், பாகவதம், இலிங்க புராணம், காந்த

புராணம் என்பன. விஷ்ணு புராணம் செய்யுளில் இயற்றப்பட்டுள்ள போதினும் இன்றுவரை அச்சில் வெளிவரவில்லை. இப்புராணம் முதலிய ஒரு சில வசனத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.

மேற்கூறிய இதிகாசம், பெருங்காப்பியம், காப்பியம், புராணம் என்ற நான்கும் காவியம் என நமது முன்னோர்களது கொள்கைப்படி வழங்கப்படுதற்கு ஒருவாறு இயைபுடையனவே. இவை காவியமாதலை உணர்தற்குப் பெருங்காப்பியத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கணத்தை நோக்குதல் வேண்டும். இவ்விலக்கணம் வருமாறு;

பெருங்காப்பிய நிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றி னொன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்ற மென்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளையாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்த லென்று
இன்னன புனைந்த நன்னடைத்தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச் சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப. (தண்டி. 8)

இங்குக் கூறிய இயல்புகள் ஊன்றிக்கவனித்தற்குரியன.

முதலாவது நூலின் முகப்பு: இதில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்பன கூறப்படுதல்வேண்டும். இரண்டாவது நூலின் பயன்: அறம், பொருள், இன்பம், வீடு

என்ற நால்வகைப் புருஷார்த்தங்களையும் தரவல்லதாய் நூல் அமைதல் வேண்டும். மூன்ருவது நூலிற்காணும் வருணனை: இது மலை, கடல், நாடு, நகர், பருவம், சூரியோதயம், சந்திரோதயம் முதலியனபற்றி யிருத்தல் வேண்டும். நான்காவது நூலின் பொருள்: இது தன்னிகரில்லாத் தலைவனைப் பற்றியதா யிருத்தல் வேண்டும்: அவனது திருமணம், அவன் பூஞ்சோலையில் மகளிரோடு இன்புறுதல், அவரோடு புனலாடுதல், அவரோடு புலத்தல், கலத்தல், மக்களைப் பெறுதல் முதலியன உரைக்கப்படல் வேண்டும்; அவன் முடிபுனைந்து அரசாளுதல், அவன் மந்திராலோசனை புரிதல், பகையரசனிடம் தூது அனுப்புதல், படையெடுத்துச் செல்லுதல், போர்புரிதல், வெற்றி பெறுதல் முதலியனவும் நூலின் கண் உளவாதல் வேண்டும். இந்நாற் பொருள்களை அரசனது இல்லறவாழ்க்கை, அரசியல் வாழ்க்கை என இரு பகுதிகளுள் அடக்கிக் கொள்ளலாம். ஐந்தாவது நூலின் அமைப்பு: சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலியனவாக நூல் பகுக்கப்படுதல் வேண்டும்; ஒன்பது சுவை முதலியனவும் எல்லாரும் விரும்பும்படி அமைதல் வேண்டும்.

இவ்ஐந்து இயல்புகளுள் நான்காவதாய்க் கூறப்பட்ட நூற்பொருளொன்றே பெருங்காப்பியத்தின் உயிர் நிலையாய்உள்ளதென்பது எளிதின் உணரலாம். நூற்பொருளின் தன்மை 'நன்மணம் புணர்தல் பொன்முடி புனைதல்' முதலியவற்றை வரிசைக் கிரமத்தில் 'ஜாப்தா' வாக அடக்கிக் கூறுவதால் விளங்கிவிடும் என்று நமது தமிழ்த் தண்டியலங்காரம் கருதுகிறது. ஆனல் இக்கருத்துக் கொள்ளத் தக்கதன்று. கோவை முதலிய பிரபந்தங்கள் சிலவற்றை நோக்கினல் நான் கூறுவதன் உண்மை புலனும். கோவைகளிலே இங்கே ஜாப்தாவிலுள்ள விஷயங்கள் அனைத்தையும் காணலாம். இவற்றைக்காப்பியம் என்பார் இல்லை. ஆகவே இந்த ஜாப்தாவினுல் பெருங்காப்பியத்தின்

உயிர் நிலையாயுள்ள நூற்பொருள் நன்கு விளக்கமெய்த வில்லை. இது தமிழ்த்தண்டியலங்காரத்தில் ஒரு பெரிய குறையாகும். வடமொழியில் தண்டியாசிரியர் செய்த காவ்யாதர்சம் இத்தமிழ் நூலிற்கு முதனூலாயுள்ளது. அதிலே இக்குறை காணப்படவில்லை. அந்நூல்

இதிஹாஸ கதோத்பூதம் இதரத்வா ஸதாஸ்ரயம்

எனக்கூறுகிறது. மஹாபாரத முதலிய கதையினின்று தோன்றிய சரிதமாயிருக்கலாம்; அங்ஙனமன்றி ஏற்கெனவே உலக வழக்கில் உள்ளதாக வேனும் அல்லது கவிஞன் தனது அறிவுவன்மையால் கற்பித்துக் கொண்டதாக வேனும் அமைந்து நன்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ள சரிதமாகவும் இருக்கலாம் என்பது கருத்து. எனவே சிறந்ததொரு சரிதத்தையே பொருளாகக் கொண்டு பெருங்காப்பியம் அமைதல் வேண்டும்.

இச்சரிதப் பொருளைக் கூறு முறைபற்றியும் தமிழ்த் தண்டியலங்காரம் ஒரு முக்கியமான அம்சத்தைக் கைவிட்டு விடுகிறது. சரிதத்தை விரிவாகக் கூறவேண்டும்; ஆனால் ஒவ்வொரு சருக்கமும் மிக மிக விரிந்து பன்முகப் பட்டுச் செல்லுதல் கூடாது. இந்த அம்சத்தையும் முதனூல் தெளிவாகக் கூறுகிறது.

அலங்க்ருதம் அஸங்க்ஷிப்தம் ரஸ பாவ நிரந்தரம்
ஸர்க்கை ரநதி விஸ்தீர்ணை: ஸ்ராவ்ய விருத்தை: ஸுஸந்திபி:

என்ற பகுதியில் வரும் 'அஸங்க்ஷிப்தம்' என்ற சொல்லாலும் ஸர்க்கை: அநதி விஸ்தீர்ணை; என்ற தொடராலும் மேற்கூறியதின் உண்மை விளங்குவதாகும். இக் கருத்து மேனாட்டு ஆசிரியர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டதே.

நூற்பொருளாகிய சரிதத்திற்குரிய நாயகனைப்பற்றித் தமிழ்த் தண்டியலங்காரம் கூறுவது பெருங்காப்பிய இயல்பினையே உருக்குலைத்து விடுகிறது. இந்நூல்,

தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய்

என நாயகன் பெருமையை விளக்குகிறது. இத்தகைய பெருமையுடையனாய் உலகில் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொருவனைத்தான் கருதுதல் கூடும். இவனைப்பற்றியன்றி, வேறொருவரது சரிதம் பற்றியும் பெருங்காப்பியம் தோன்றுதல் இயலாது. இதுவே உண்மையான கருத்தாயின், பெருங்காப்பியங்கள் நமது நாட்டில் மிக மிகச் சிலவே இருத்தல் கூடும். இது பிரத்யக்ஷ அளவையோடு முரண்பட்டதாதலால், ஆசிரியரது கருத்து இதுவன்று. பொதுப்படப் பெருமை மிக்க ஒரு நாயகனது சரிதம் பற்றிக்காவியம் அமைதல் வேண்டுமென்பதே கருத்தாகக் கொள்ளல் வேண்டும். முதனூல் இக்கருத்தையும் தெளிவுபடுத்துகிறது. அதில் 'சதுரோதாத்த நாயகம்' எனவருகின்றது. சாமர்த்தியமும், குலம் வீரிய முதலியவற்றால் பெருமையுமுடைய நாயகனையுடையதாயிருத்தல் வேண்டுமென்பது இதன் கருத்து. இங்ஙனம் கூறுவதால் கதாநாயகர்கள் பலர் இருத்தற்குப் பொருத்தமாவதோடு, காப்பியங்களும் பலவாகத்தோன்றுதற்கும் வாய்ப்பு உளதாகின்றது. நாயகன் கௌரவமும் கிரந்த மகத்துவமும் மேற்கூறியவற்றால் ஒருங்கே உணரப்படும்.

காவியம் என்பதற்குத் தமிழ்த் தண்டியலங்காரம் கூறும் பொதுவியல்புகள் குறைபாடு உடையன என்றும், இக்குறைகள் தமிழ்நூலின் முதனூலாகிய தண்டியாசிரியரது காவியாதரிசத்தில் காணப்படவில்லையென்றும் மேலே கூறினேன். இனிக் காவியாதரிசத்தில் கூறப்படுவன குறித்து நாம் ஆராய்தல் வேண்டும். இவ்வட நூலிலும் ஒரு சில குறைகள் உள்ளன. முதலாவது, இதிகாசம்,

காவியம் என்ற இரண்டற்கு முள்ள வேறுபாடுகள் கூர்ந்து கவனிக்கப்படவில்லை. இதிகாசத்தை மகாகாவியம் என்று கூறுதல் அதன் இயல்பை முற்றும் உணர்த்திவிட மாட்டாது. காவியங்களுக்குரிய லக்ஷணங்கள் இவற்றில் அமைந்திருத்தலோடு வேறுசில முக்கியமான இயல்புகளும் இதிகாசத்தில் உள்ளன. இதில் வரும் பொருள் அநாதி காலந்தொட்டு மக்களது நாகரிக வாழ்விற்கு மிக மிக முன்பாகவே கர்ண பரம்பரையாய் வழங்கி வந்த சரித்திரங்களாம். அன்றியும் இது தோன்றிய சூழ்நிலையும் பிற்காலத்தே காவியங்கள் தோன்றிய சூழ்நிலையும் முற்றும் வேறுபட்டனவாகும். இதிகாசங்கள் அடிப்படையில் பொது மக்கள் கேட்டு இன்புறுதற்கெனவே தோன்றியன. பிற்பட்ட காவ்யங்கள் கற்று இன்புறுதற்கு எனவே இயற்றப்பட்டன. இக்காரணத்தால் இதிகாசங்களில் மக்களது கவனத்தை ஒரு முகப்படுத்துதற்கு வேண்டும் பல பல உபாயங்களும் காணப்படும். அன்றியும் இதிகாசங்கள் வீரபுருஷ சரிதமாகவே இருக்கும். இச்சரிதங்களும் மக்களுடைய வரலாற்றில் ஆதிகாலத்துக்கு உரிய வீர புருஷர்களைப் பற்றியதாம். பிற்பட்ட காவியங்களில் இவ்வாறு இருத்தல் அவசிய மன்றும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து இதிகாசமும் காவியமும் தன்மையிலேயே வேறுபட்டன என்று மேல் நாட்டு ஆராய்ச்சியாளர் கூறுவர். அவர்கள் இதிகாசத்தை 'எபிக்' என்றும், பிற்பட்ட காவியங்களை 'ரொமான்ஸ்', 'நெரெட்டிவ் பொயம்' என்றும் வழங்குவார்கள். வடமொழியிலும் இதிகாசங்களைத் தனிப்படக் கூறுதலே ஆதிமரபாக வுள்ளது. 'புராணேதிகாசம்' என்ற தொடரை நோக்கினால் இதனை அறியலாம்.

இரண்டாவதாக, மேலெழுந்த வாரியாகவுள்ள சில இயல்புகள் தண்டியாசிரியரால் கூறப்படுகின்றன. காவியங்களுக்கு முகப்பிலே இருக்கவேண்டும் ஆசி முதலி

யனவும், நூற்பயனுக இருக்கவேண்டும் நால்வகைப் புருஷார்த்தங்களும் இவ்வாருக அமைந்த இயல்புகளாம். இவைகள் காவியத்தின் உண்மையான இயல்புகள் என்று கொள்ளற்குரியன வல்ல.

மூன்ருவது, சிற்சில இயல்புகளின் உண்மையான அடிப்படைக் கருத்து உணரப்படவில்லை என்றே கூற வேண்டும். நகர், வனம், மலை முதலியன பற்றிய வருணனைகளும், பொழில் விளையாட்டு, புனலாடல் முதலியன பற்றிய வருணனைகளும் எதன் பொருட்டுக் காவியங்களில் கூறப்படுதல் வேண்டும்? சாதாரண மக்கள் வாழ்விலிருந் தெடுத்த வாழ்க்கை நிகழ்ச்சியைக் காவியம் தனக்குரிய பொருளாகக் கொள்ளாது, மனோபாவனை யினுல் கற்பிக்கப்படும் கற்பித ரம்மிய வாழ்வினையே (ரொமான்ஸ்) தனக்குரிய பொருளாகக் காவியங்கள் கொண்டுள்ளன. இக்காரணத்தாலே உயர்வு நவிற்சி வருணனைகளும், இன்பநுகர்ச்சி வருணனைகளும் காவியங் களில் பயின்று வருகின்றன. இந்த உண்மை நோக்கம் தண்டியாசிரியரது நூலில் காணப்படவில்லை. இங்ஙனமாக மகாகாவியத்தின் அல்லது காவியத்தின் அடிப்படையான உண்மைத் தத்துவங்கள் தண்டியாசிரியரால் கூறப்பட வில்லை என்றே நாம் கருதுதல் வேண்டும். இதனுல் அவர் கூறும் இயல்புகள் காவியங்கள் ஒழிந்த பிறவகை நூல் களுக்கும் அமைவனவாகவுள்ளன. கற்பவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய இயல்புகளைச் சூத்திரங்களால் சுருக்கிக் கூற முற்பட்டதால், இவ் ஆசிரியர் ஆழ்ந்த உண்மைகளை விசாரணை செய்து உணர்த்தவில்லை என்று தோன்றுகிறது.

இவ்வாருக, சிறந்த ஓர் இதிகாசபுருஷனை அல்லது சிறந்த ஒரு நாயகனைக் குறித்துள்ள சரிதத்தைப் பொரு ளாகக் கொண்டு, உலகினர்க்கு நன்மை புரியும் நோக்

கத்தை மேற்கொண்டு, சரிதத்தைப் பலவாறாக அழகுறுத்தி, சுவைபட விரிவாகக்கூறிச் செல்லும் நூலே காப்பியமாகும். இந்த இயல்பே நமது பாரததேசத்தில் முற்காலத்தோரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நமது தமிழ் நாட்டில் இதிகாசம், பெருங்காப்பியம், காப்பியம், புராணம் என்பன தொல்காப்பியர் காலத்தில் இருந்தனவாகப்புலப்படவில்லை. நூல்களாக அவர் வகைப் படுத்திக் கூறுவன முதல்நூல், வழிநூல் என்ற பாகுபாடும், பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி என்ற பாகுபாடுமேயாம். இப் பாகுபாடுகள்,

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியுமென நுதலிய நெறியின. (தொல். மரபு. 90)

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர். (தொல். செய்யு. 75)

பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே (தொல். செய்யு. 173)

அதுவே தானும் பிசியொடு மானும் (தொல்-செய்யு. 174)

என்ற இச் சூத்திரங்களால் அறியக்கிடக்கின்றன.

இவையே யன்றி ஆற்றுப்படை முதலிய ஒரு சிலவும் தொல்காப்பியர் காலத்து வழங்கிய நூல்வகைகளாம் ஆனால், ஒரே செய்யுளான் அமைந்தன இவ்வாற்றுப்படை முதலியன என்பது மனங்கொள்ளத் தகும். காப்பியம் என்பதன் இயல்பு இவற்றின் கண் இல்லை.

செய்யுளின் உறுப்புக்களைக் கூறுகிற இடத்திலே,

அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனுஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே (செய்யு. 1)

என்று காணப்படுகிறது. முற்பட இருபத்தாறு உறுப்புக்களை உணர்த்தி, இவ் எட்டினையும் தனிப்படக் கூறுதலினாலே, இவை தனிநிலைச் செய்யுட்கேயன்றி, தொடர் நிலைச் செய்யுட்குச் சிறப்பாக வுரியன என்றனர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். அடியார்க்கு நல்லாரும் 'அம்மை முதலிய எட்டுவனப்பும் தொடர் நிலைச்செய்யுட்கு இலக்கணம் என்று கூறியவர்' தொல்காப்பியர் என்றெழுதினர் (சிலப். உரைப்பாயிரம், உரை). 'வனப்பு' என்று இவ் அம்மை முதலிய எட்டும் பெயர் பெறும். இப்பெயரின் பொருத்தத்தை 'வனப்பு என்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு...அதனால் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலையதே 'வனப்பு' என்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பது' எனப் பேராசிரியர் விளக்கினர். ஆனால் இளம்பூரணர் இவ்வனப்புக்கள் தனிநிலைச் செய்யுட்கு உரியன என்றே கருதுமாறு உரையியற்றியுள்ளார். வனப்புக்களுள் ஒன்றாகிய தொன்மையின் இயல்பைக் கூறுமிடத்து தொல்காப்பியர்,

தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே

என்றனர். இதனால் உரை விரவிவரும் பாட்டுக்கள் கொண்ட நூலினையே பெரும்பாலும் இச் சூத்திரம் குறித்ததெனக் கொள்ளல் வேண்டும். எனவே பேராசிரியர் குறியீட்டினை மேற்கொண்டு, உரையிடையிட்ட

தொடர் நிலைச்செய்யுள் பற்றியது தொன்மை யென்று கூறலாம். இங்ஙனம் கூறிய அளவில் காவியத்தை ஆசிரியர் தொல்காப்பியர் கருதினரென்று நினைக்க இடமில்லை.

தொடர்நிலை என்பது தொல்காப்பியரால் பொருளதிகார முழுமையிலும் ஓரிடத்துத்தான் வழங்கப்பட்டுள்ளது.

மாட்டும் எச்சமும் நாட்ட மின்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே (செய்யு. 203)

என்ற சூத்திரத்தில் இது வருகிறது. இங்கே தொடர் நிலை யென்பது செய்யுளில் வரும் அடியையேனும், தனி நிலைப்பட்ட செய்யுளையேனும் குறிப்பதாகும். பேராசிரியர் தந்துள்ள உதாரணங்கள் இக்கருத்தை நன்கு வலியுறுத்துகின்றன. ஆகவே 'காவியம்' என்ற கருத்துத் தொல்காப்பியர்க்கு உளதென்றேனும், அது 'தொடர்நிலை' என்ற குறியிட்டினுல் அவரால் வழங்கப்பட்ட தென்றேனும் கோள்ளுதல் சிறிதும் பொருத்துவதன்றும்.

ஆனல் இக்குறியீடு 'காவியம்' என்ற கருத்தில் எப்போது வழங்கலாயிற்று? தமிழ் நாட்டில் காவியங்கள் தோன்றத்தொடங்கிய பின்னரே இக் குறியீடு அதற்கு வழங்கப்பெற்றதாதல் வேண்டும். இதற்கேற்ப, தண்டியலங்காரம், செய்யுளை முத்தகம், குளகம், தொகை நிலை, தொடர் நிலையென நான்கு வகைப்படுத்தி விளக்கி, தொடர் நிலை என்றதனைச் சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை என இரு கூறு படுத்தி, பொருட்டொடர் நிலையில் பெருங்காப்பியம், காப்பியம் என்ற இரண்டனையும் அமைத்துள்ளது.

செய்யு ளென்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகைநிலை தொடர்நிலை
எத்திறத் தனவும் ஈரிரண் டாகும்.

அவற்றுள்,

முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்,
குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்
தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவ ருரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடம் காலம் தொழிலென நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டிய வாகும்
பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை
பெருங்காப் பியமே காப்பியம் என்றுங்கு
இரண்டா யியலும் பொருட்டொடர் நிலையே (தண்டி. 2-7)

இச் சூத்திரங்களால் மேற்கூறியதன் உண்மை விளங்கும். தண்டியலங்காரம் 12-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் தோன்றியதென முன்னரே காட்டப்பட்டுள்ளது. இதற்குச் சுமார் 75 ஆண்டுசட்டு முற்பட்ட வீரசோழியத்திலும்,

யாப்பை யியம்பிடின் முத்தக மோடு குளகம் தொகை
காப்பியமாம்; முத்த கந்தன் பொருள் ஓர் கவியின் முற்றும்;
வாய்ப்பிற் குளகம் பலபாட்டொரு வினை ; மன்னு தொகை
கோப்பிற் பொருளன; காப்பியம் மாநூல் கொடியிடையே
(176)

என மேற்கூறிய பாகுபாடு தரப்பட்டுள்ளது. ஆனல் தொடர் நிலை என்ற இடத்தில் காப்பியம் என்பது காணப்படுகிறது. ‘தொகை நிலை’ என்றதனேடு ஒத்த வடிவினதாகிய தொடர் நிலை முதன் முதலில் தண்டியலங்காரத்தில்தான் வந்துள்ளது. எனவே இக்குறியீடு 12-ம் நூற்றுண்டிற்கு முன்பு தமிழ்ச்செய்யுள் வழக்காற்றில் இல்லையென்று நாம் துணியலாம். பேராசிரியர் முதலியோர் தண்டியலங்காரத்திலிருந்தே இக்குறியீட்டினை எடுத்து வழங்கினரென்றும் நாம் கொள்ளலாம்.

இங்கே கூறியவற்றுல், தொல்காப்பியரது காலத்தில் காவியம் என்ற கருத்துப்போலும் தமிழிலக்கிய சரிதத்தில்

இல்லையென்பதும், சுமார் 8-ம் நூற்றாண்டளவில் சிலப்பதிகாரம் முதலிய ஒரு சில இலக்கியங்கள் தோன்றிய பின்னரே, இக்கருத்துத் தமிழிற் புகுந்ததென்பதும், 11-ம் நூற்றாண்டளவில் காவியம் என்ற வட சொல்லையே தமிழில் அமைத்தனரென்பதும், 12-ம் நூற்றாண்டளவில் இச்சொல்லுக்குப் பதிலாக 'தொடர் நிலை' என்பதை வழங்கலாயினரென்பதும் நாம் அறியத்தகுவன. தொடர் நிலையென்ற குறியீடு தானும் சிலகாலம் நிலவி நின்று பின் வழக்கு வீழ்ந்துவிட்டது. இவ் வீழ்ச்சிக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது இக் குறியீட்டில் பொருளாறுதியில்லை. இன்னதுதான் பொருளென்று திட்டமாய் இதனைக் கேட்ட அளவில் அறியமுடியாது. தொடர் நிலைச்செய்யுள் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்பன சுருக்க மின்றி நீண்டு, எளிதில் வழங்குதற்கு இடங் கொடாதபடி அமைந்துள்ளன. இக் காரணங்களால், காவியம் (காப்பியம்) என்ற குறியீடுதானே தமிழில் பெரு வழக்காய் உலவி வருவதாயிற்று. வடமொழிப் பகைமை மிகுந்து பரவும் தற்காலத்தில் ஒரு சிலரால் 'தொடர்நிலை' தொல்காப்பியரது ஆட்சியெனத் தவறாகக் கருதப்பட்டு, மீண்டும் தமிழ் வழக்கிற் புகுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, சென்னை ஸர்வகலாசாலையார் வெளியிட்டு வரும் எஸ். எஸ் எல். ஸி. தமிழ்ப்பாட புத்தகத்தில் (1950) கம்பராமாயணம் முதலியன 'தொடர் நிலைச்செய்யுள்' என்ற பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆட்சியெளிமையும், சுருக்கமும், பொருளின் திட்பமும், வழக்காற்றுப் பெருமையுமுடைய 'காவியம்' என்ற சொல்லை நீக்கி விட்டு, 'தொடர்நிலைச்செய்யுள்' என்பதனை வழங்குதல் தகுதியென்று தோன்றவில்லை. நிற்க,

சமீபகாலத்தில் மேல்நாட்டு ஆசிரியர்கள் பலர் இதிகாசம், காவியம் முதலியவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளனர். அவர்கள் கூறியுள்ளனவற்றுள் இதிகாசத்தைப்

பெருங்காப்பியத்தில் அடக்குதல் தக்கதன்றென உணர்கிறோம். இங்ஙனமே பெருங்காப்பியத்திற்கும் காப்பியத்திற்கும் உள்ள வேறுபாடும் அடிப்படையாயுள்ள தொன்றெனக் கருதக்கூடவில்லை. புராணத்தின் இயல்புகளையும் நோக்கத்தையும் நாம் கருதும்போது, அதனை இலக்கியம் என்று கொள்ளுதலில் தானும் பலரும் உடன்படுதலரிது. ஆதலால், இதிகாசம் காவியம் என்ற இரண்டு இலக்கிய வகைகளையே நாம் ஆராய்ந்து வியவகரிக்கவேண்டும்.

இவ் இரண்டில் இதிகாசம் என்ற பேரிலக்கியத்தை ஆதி–இதிகாசம், அநந்தர—இதிகாசம் எனப் பகுத்துணர்ந்து கொள்ளுதல் நலமாகும். ஆதி-இதிகாசத்தை 'முன்முறை-இதிகாசம்' எனத் தமிழில் வழங்கலாம். இதற்கு உதாரணம் வியாசரது மகாபாரதமாகும். கிரேக்க மொழியிலுள்ள இலியத், ஒதிஸ்ஸி என்னும் இலக்கியங்களும், ஆங்கிலோ ஸாக்ஸன் மொழியிலுள்ள 'போவுல்ப்வ்' என்ற இலக்கியமும் இதிகாசத்திற்குப் பிறமொழி உதாரணங்களாம். அநந்தர–இதிகாசத்தைத்தமிழில் 'பின்முறை - இதிகாசம்' என வழங்கலாம். இதற்கு உதாரணங்கள் வான்மீகி ராமாயணமும், கம்பராமாயணமும் ஆங்கில மொழியில் மில்ட்டன் இயற்றிய 'பாரடைஸ் லாஸ்ட்' என்ற பேரிலக்கியமும், லத்தீன் மொழியில் வர்ஜில் இயற்றிய 'ஈனியித்' என்ற பேரிலக்கியமும் ஆம். வான்மீகி ராமாயணம் இதிகாசத்தின் தன்மைகளையும் காவியத்தின் தன்மைகளையும் ஒருங்கு பெற்றதாம். இதனை 'ஆதிகாவ்யம்' என்று வழங்குதலே இங்குக் கூறியதன் உண்மையைப் புலப்படுத்தும். ஆதி - இதிகாசத்தை இயற்கை - இதிகாசம் எனவும், வளர்ச்சி - இதிகாசம் எனவும், ஜனோற்பத்தி - இதிகாசம் எனவும் வழங்குதல் தகும். இங்ஙனமே அநந்தர இதிகாசத்தைச் செயற்கை- இதிகாசம் எனவும், கலாவியல் - இதிகாசம் எனவும்

வழங்குதல் தகும். இப்பாகுபாடு முதலியன அடியிற் காட்டியிருப்பது கொண்டு எளிதில் அறியலாம்.

பேரிலக்கியம்

- இதிகாசம்
  - ஆதி-இதிகாசம்
முன்முறை-இதிகாசம்
(இயற்கை-இதிகாசம்
வளர்ச்சி-இதிகாசம்
ஜனோற்பத்தி-இதிகாசம்)
  - அநந்தர-இதிகாசம்
பின்முறை-இதிகாசம்
(செயற்கை-இதிகாசம்
கலாவியல்-இதிகாசம்
வ்யக்தோற்பத்தி-இதிகாசம்)
- காவியம்

மேற்குறித்த பெயர்கள் இருவகை இதிகாசங்களுக்குமுரிய இயல்புகள் காரணமாகத் தோன்றியன. மக்களது இலக்கிய சரித்திரத்தில் அதிபூர்வகாலத்தில் தோன்றியது பற்றி ஆதி-இதிகாசம் என்றபெயர் ஏற்புடையதாயிற்று. இவ்வகைக்காவியம் கலைபற்றிய நியமங்களும் நுணுக்கங்களும் பிறவாத காலத்தில் இயற்கையில் விளைந்த நூலாதலால் இயற்கை-இதிகாசம் என்ற பெயரும் தக்கதாயிற்று. மேலும் பலகவிதைப் பகுதிகளும் பல பிரதேசங்களில் அங்கங்கே வழங்கி வந்து பின்பு ஒன்றாகத் திரண்டு இதிகாசமாக வளர்ந்ததுபற்றி வளர்ச்சி-இதிகாசம் என்ற பெயரும் பொருத்தமாயிற்று. பல பிரதேசங்களிலுமுள்ள பொதுமக்களிடை இக்கவிதைப் பகுதிகள் ஆதியில் வழங்கிவந்தன என்று பொதுப்படக் கூறலாமேயன்றி, முதன் முதலிலேயே குறிப்பிட்ட ஒரு கவிஞன் இயற்றியதன்று என்ற காரணம் பற்றி, இந்த இதிகாச வகைக்கு ஜனோற்பத்தி-இதிகாசம் என்ற பெயர் தகுதியாதல் காணலாம். இங்ஙனமே, பிறிதொரு வகைக் காவியம் இலக்கிய சரித்திரத்தில் பிற்பட்ட காலத்தில் தோன்றியது பற்றி அநந்தர-இதிகாசம் அல்லது பின்

முறை - இதிகாசம் என்ற பெயரும், கலைபற்றிய உணர்ச்சியும் நியமங்களும் தோன்றி, பாட்டியல் மரபுகளும் வரையறைப்பட்ட காலத்தில் பிறந்ததாதலின் செயற்கை - இதிகாசம் அல்லது கலாவியல்—இதிகாசம் என்ற பெயரும், கவிஞனொருவனால் இயற்றப்பட்டதென்பது தெளிவாதல் பற்றி, வ்யக்தோற்பத்தி-இதிகாசம் என்ற பெயரும் ஏற்புடையனவாதல் காணலாம்.

இங்கே பின்முறை-இதிகாசம் பற்றிக் கூறிய இயல்புகள் உண்மையாதல் எளிதில் அறியக் கிடக்கின்றது. கம்பராமாயணம் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் மிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றியது; கலையுணர்ச்சியும் அது பற்றிய நியமங்களும் நிரம்பிப் பாட்டியல் மரபுகளும் ஒருவாறு வரையறைப்பட்ட பின்பு இது பிறந்தது; கம்பன் என்ற உலக மகாகவிஞனொருவனால் இது இயற்றப்பட்டது. இவ்வாறே பிற பின் - முறைக் காவியங்கள் பற்றியும் எளிதில் இவ் இயல்புகளைக் காணலாம். ஆனால் முன்முறை-இதிகாசத்தில், அதுபற்றி மேற்கூறிய இயல்புகளை நாம் ஆராய்ச்சியின் மேல்தான் காணுதல் கூடும். நமது தமிழ் மொழியில் முன்முறை-இதிகாசம் இல்லை. ஆகவே வடமொழியிலுள்ள மகாபாரதத்தை நோக்குவோம்.

மகாபாரதம் ஆதியில் தோன்றியுள்ள மூலப் படிவத்தை ஆராய்ந்து கண்டு பதிப்பிடுவதற்குப் பம்பாய்-ஆராய்ச்சிக் கழகம் பல ஆண்டுகளாக உழைத்து வந்திருக்கிறது. பல தேசத்துப் பிரதிகளையும் வரவழைத்து ஒப்பு நோக்கி இம் முயற்சியைச் செவ்வனே முற்றுவித்துள்ளது. இப்போது நமது நாட்டில் வழங்கும் பாரதத்தின் அளவில் ஒரு சிறு பகுதியே மூலப் படிவமாயிருத்தல் வேண்டுமென அறுதியிடப்பட்டுள்ளது. அங்ஙனமாயின், எஞ்சியுள்ள பெரும் பகுதி பலபல பிரதேசங்களிற் பிறந்து வழங்கிப்

பின் ஒன்ருகச் சேர்க்கப்பட்டது என்பது தெளிவாகின்றது. இவ்வாருன சேர்ப்பும் கால அடைவில் கிரமமாக நிகழ்ந்த தெனவும் அராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள். கி. மு. 400 முதல் கி. பி. 400 வரையுள்ள காலப் பகுதியில் இவ் இதிகாசம் தோன்றி வளர்ந்து முற்றியிருக்க வேண்டுமென்று வரையறுத்தனர் ஆசிரியர் உவின்டர்னிட்ஸ். இத் துணிபுகளை யெல்லாம் நோக்குவோர்க்கு மகாபாரதம் பற்றி மேற்கூறிய இயல்புகள் உண்மை யென்பது புலப்படும். பல பிரதேசத்தும் வழங்கிய கதைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்தமையை இப் பாரதம் இயற்றியவராகக் கருதப்படும் ஆசிரியரது பெயரும் உணர்த்துகிறதென்று கொள்ளலாம். வியாசர் என்ற சொல்லே தொகுத்தோர் என்று பொருள்படும். இங்ஙனம் தொகுத்தவர்க்கு ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளதே யன்றி, அவரே இயற்றினுரென்றல் உண்மையாக மாட்டாது.

இராமாயணமும் மேற்கூறியபடி தோன்றி வளர்ந்த ஓர் இதிகாசமேயாம். இதனை இயற்றியவராகக் கூறப்படும் பெருங் கவிஞராகிய வால்மீகி முனிவருக்கு முன்பு தொட்டே இராம சரிதம் வழங்கி வந்ததாகும். இது இராமாயணத்தின் தொடக்கத்திற் காணப்படும் வரலாற்றுச் சுலோகங்களால் அறியப்படும், நமது தென் தேசத்தில் இராம சரிதம் பற்றிப் பல புதுக்கதைகள் வழங்கி வந்துள்ளதும், பௌத்தர்களிடையிலும் ஜைனர்களிடையிலும் மிகப் பூர்வகாலந்தொட்டே இராம சரிதம் பல வேறுபாடுகளுடன் வழங்கி வந்ததும், அச்சரிதம் பல பிரதேசங்களினின்றும் கதாம்சங்கள் பெற்று உருப்பெறலாயிற்று என்பதைத் தெளிவுறுத்தும். இந்த இதிகாசமும் கால அடைவில் வளர்ந்து முற்றியதெனவே ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள். மகாபாரதக் கதைக்குப் பிற்பட்ட கதையாகவே இந்த இராமசரிதம் இருத்தல்

வேண்டுமெனவும் பலகாரணங்கள் காட்டிப் பல ஆசிரியர்களும் முடிபு கண்டுள்ளார்கள். நமது பாரததேசத்தின் வடமேற்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த சரித்திரமாக மகாபாரதம் அமைந்திருப்பதும், வடகிழக்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த சரித்திரமாக இராமாயணம் அமைந்திருப்பதும், அறியத்தகும். இதனுல் ஆரியர்கள் வடமேற்கிலிருந்து வடகிழக்கிற்கு வந்து குடிபுகுந்த காலத்து இந்த இராமாயணம் தோன்றியதெனவும், எனவே இது பிற்பட்டதெனவும் கூறுவர். இவ் வரலாறுகளை யெல்லாம் நோக்குவோர்க்கு இந்த இதிகாசம் பற்றியும் மேற்கூறிய இயல்புகள் உண்மையேயாம் என்பது விளங்கும்.

நமது தமிழ் நாட்டில் இவ்வகை முன்முறை-இதிகாசம் தோன்றியதில்லையெனக் கூறினேன். இதனுல் வீரயுகம் நமது நாட்டில் இல்லையென்பது கருத்தன்று. வீரயுகம் நிகழ்ந்த இடங்களிலெல்லாம் முன்முறை-இதிகாசம் தோன்றவேண்டுமென்ற நியதியும் இல்லை. இது பற்றி டபிள்யூ. பி. கார் பின்வருங் கருத்துப்பட எழுதுகிருர் :

உலக சரித்திரத்தில், எண்ணிறந்த காலங்களிலும் இடங்களிலும் வீரயுகத்திற்குரிய சூழ்நிலைகள் அமைந்துள்ளமை காணலாம். அவ் யுகத்தில் நிகழும் கருத்துக்களுக்கும் மனேபாவனைகளுக்கும் ஏதாவது ஒருவகை இலக்கியக் குறிப்புக்கள் பெரும்பாலும் காணப்படும்; ஆனுல் மிகச் சிறந்துள்ளனவாகிய வீரகாவியங்களைக் காணுதல் அத்துணை எளிதன்று. பல தேசத்தவர்களுக்கு இலியத், ஒதிஸ்ஸி போன்ற இதிகாசங்களை அடையும் பேறு இல்லை. இவற்றிற்குப்பதிலாக, கதை யாதுமின்றி, குறுநில மன்னர்களைப் புகழ்ந்துபாடும் மரபுப் புகழ்ச்சிப் பாடல்களோடு திருப்தியடைய வேண்டியதாயிருந்தது. கதைகள் இருந்த இடத்தும், அவை மக்கள் பொதுவே நிகழ்த்தும் தர்க்கங்கள், நியாயவாதங்கள் முதலியன வின்றி, அதிகோரமான ராக்ஷஸ கிருத்தியங்கள் நிரம்பி

யமைந்திருந்தன. அவைகளையே மக்கள் கொள்ள வேண்டியதாயிற்று. இதிகாச இலக்கியம் சாதாரணமாய்க் கிடைப்பதன்று. பல தலைமுறைகளாய் மெல்லச் சாவகாசமாய் நிகழும் முயற்சிகளின் மூலமாகவே அது வளர்ந்து நிரம்புகிறது. தெய்வத் துதிகள் புகழ்ச்சிப் பாடல்கள், இரங்கற் பாக்கள் முதலிய சாதாரணமான கவிதைகளினின்றும் இதிகாசம் வளர்கின்றது. இவ் வளர்ச்சி மக்களது அறிவும் பாவனா சக்தியும் முதிர்ந்து சுயேச்சையாய்த் தானே இயங்கும் ஆற்றலின் வளர்ச்சிக்குச் சூசகமாயுள்ளது. (எபிக் அன்ட் ரோமான்ஸ், பக். 13)

இக் கருத்துக்கள் உண்மையாயின், தமிழ் மக்களின் சரித்திரத்தில் இதிகாசம் தோன்றுதற்குரிய முதிர் நிலை வாய்க்கவில்லை யென்றுதான் சொல்லவேண்டும். சங்க காலத்து இலக்கியங்களில், ஆசிரியர் கார் குறிப்பிடும் புகழ்ச்சிப் பாடல்கள் இரங்கற்பாக்கள் முதலியன நிரம்பிக் காணப்படுகின்றன. இப்பாடல்கள் கலையுணர்ச்சி நிரம்பியுள்ளன; அழகும் சுவையும் மிக்கன. இதிகாசம் தோன்றுதற்கு முன்புள்ள பூர்வகாலத்தேயே இக் கலையுணர்ச்சி முதலியன சிறந்து காணப்படுமாயின், இவற்றின் விளைவாக வீரயுகத்தின் இறுதியில் தோன்றக்கூடிய இதிகாசம் எத்தனை பெருமையுடையதா யிருக்குமென்பதை நாம் ஒருவாறு பாவனை செய்து கொள்ளலாம். ஆனால் இதன் கண் எவ்வகைப் பெருமை காணப்படினும், முன்-முறைக் காவியத்தின் இயல்புகள் காணப்படமாட்டா. 'ஈனியித்' என்பதைப் போன்ற ஓர் இதிகாசமாய்த்தான் அமையக் கூடும். ஆனால் இது போன்றதோர் இதிகாசம் தானும் தமிழில் தோன்றாமைக்குச் சரித்திர காரணங்கள் பல இருத்தல் வேண்டும்.

இதிகாசம் முதலிய மகா காவியங்களின் இலக்கணங்களைக் குறித்து வடமொழியிலே தண்டியாசிரியர், பாமஹர்,

உத்படர், போஜர் முதலிய பல ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். இவர்கள் சுவைகள், அணிகள் முதலியனபற்றி மிக விரிவாய் ஆராய்ந்திருக்கிறுர்கள். ஆனுல் மகாகாவியத்தின் இலக்கணம் முன்னுள்ளோர் கருத்துப்படியே யாதொரு வேறுபாடுமின்றித் தரப்பட்டுள்ளது. தமிழில் அத்தனை விரிவாக அலங்கார நூல்கள் உண்டாகவில்லை. தண்டியலங்காரம், கண்டனலங்காரம், இலக்கண விளக்கம், மாறனலங்காரம் என்பனவே நாம் அறிந்தவை. முன்னுள்ளோர் கூறியதனையே மீண்டும் மீண்டும் எழுதி நம்மவர்கள் வீண் முயற்சி செய்யாதது நமது அதிருஷ்டமென்றே சொல்லவேண்டும். மேல் நாடுகளில் மிகப் பூர்வ காலந்தொட்டு இன்றுவரை இதிகாசம்பற்றிய ஆராய்ச்சியுரைகள் மிகப் பல வாய்த் தோன்றியுள்ளன. அரிஸ்டாட்டில் 'பொயெட்டிக்ஸ்' என்ற நூலை யெழுதினர். ஹொரேஸ் கவிதைக்கலை என்று பொருள்படும் 'ஆர்ஸ் பொயெட்டிக்கா' என்ற சிறந்த நூலினை இயற்றினர். வீதா என்பவர் ஒரு நூல் எழுதினர். பூர்வகாலத்து ஆங்கில ஆசிரியர்களுள், டிரைடன், ஜான்ஸன், அடிஸன் முதலானோரும் விரிந்த ஆராய்ச்சியுரைகள் எழுதியுள்ளனர். தற்காலத்து ஆங்கில ஆசிரியர்களுள் டிக்ஸன் எழுதிய 'இங்க்லிஷ் எபிக் அன்ட் ஹிரோயிக் பொயெட்ரி' என்பதும், சாட்விக் எழுதிய 'ஹிரோயிக் ஏஜ்' என்பதும், கார் எழுதிய 'எபிக் அன்ட் ரொமான்ஸ்' என்பதும், லாஸெல்ஸ் ஆபெர் கிராம்பி எழுதிய 'எபிக்' என்பதும் முக்கியமாய்க் கூறத்தக்கன.

இதிகாசத்திற்குரிய பொருள்பற்றி இங்குச் சிறிது கவனிப்போம். குறிப்பிட்ட வீரனெருவன் அடுத்தடுத்து நிகழும் தனது வீரச் செயல்களினுலே தன் தேச மக்களின் கதியை அல்லது அவர்களை இயக்கிவந்த நோக்கத்தை முற்றுவிப்பதே இதிகாசத்திற் கூறப்படும் பொருளாகும். இதிகாசம் என்ற நிலையை விட்டு, காவியம் என்ற நிலையை

அடையும்போது, மேற்குறித்த வீரச் செயல்களோடு, வீரனை ஆட்கொண்டு செலுத்தும் மிக ஆழ்ந்ததோர் காதலுணர்ச்சியும் காதற்செயல்களும் சேர்ந்து அமையும். மதப் பெருமையை நாட்டுதலே முக்கிய நோக்கமாகக்கொண்ட வீர கவிதையும் (ஹிரோயிக் பொயெம்) அங்கங்கே காணப்படும். இதிகாசம் வாழ்க்கையை ஒத்துச் செல்வதாக அமைந்து, பல்வேறு இடங்களிலுமுள்ள பொதுமக்களை இன்புறுத்துதலோடு, அவர்களை மயிர்க்கூச்செறியச் செய்து, ஊக்கி, உயர்ந்த லட்சியங்களின் மீது அவாக் கொள்ளும்படி செய்யும். பல ஆராய்ச்சியாளர்கள் இவ் இதிகாசங்களில் நீதிக் கற்பனைகளும் நீதி நோக்கங்களும் இருத்தல் வேண்டும் என்பர். ஒரு சிலர், ஏதேனும் ஒரு நீதியை எடுத்துக்கொண்டு, அதனை விளக்கி, உதகரிப்பதற்குத் தகுந்த ஒரு சரிதமே இதிகாசத்தில் அமைக்கப் பட வேண்டும் என்பர். இதிகாசங்கள் நீதியை அங்கங்கே வற்புறுத்தலாம்; நீதியை விளக்குவதே தனது நோக்கமெனக் கவிஞன் தானே கூறுதலும் கூடும். ஆனால் இவ் இதிகாசங்களை முற்பட ஒரு கலை-முயற்சி யென்றே நாம் கருதுதல் வேண்டும். மற்றை நோக்கங்களெல்லாம் இக் கலையுணர்ச்சிக்குப் புறம்பானவை யென்பதை நாம் மறந்து விடலாகாது.

இதிகாசத்தின் கதையமைப்பை அடுத்து நாம் கவனிக்கலாம். ஆங்கிலத்தில் 'ப்ளாட்' என்று சொல்லுவதைத்தான் கதையமைப்பு என்று இங்கே குறிப்பிடுகிறேன். கதையமைப்பு விஸ்தாரமாகச் சென்று நிகழ்ச்சிகள் பலவும் நடைபெறுதற்கு இடங்கொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அந்நிகழ்ச்சிகள் காம்பீரியம் உடையனவாகவும் இருக்கவேண்டும். கதை நிகழ்ச்சியின் கால அளவு சுருங்கியதாய் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. மக்கள் தமது மனோபாவனையால் நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று தொடர்புற்று வளர்ந்து முற்றுப்

பெற்றுள்ளன என்று கருதும்படி, கதை அமைய வேண்டும். இந்த நியதியொன்றே இங்கே கொள்ளத் தகுவது. அற்ப நிகழ்ச்சிகளுக்குக் கதையமைப்பில் இட மில்லை. ஆனால், இதிகாசத்தின் கதைக்குப் பொருண்மை தருவதாயிருந்தால் சிறு சிறு விவரங்களையும் கூறுவது தக்கதாகலாம். இராவணன் தேவர்களைத் தனது பொழி லுக்குக் காவலராகவும், யுத்தச் செய்திகளைத் தனக்கு வந்து தெரிவிக்கும் தூதுவர்களாகவும் கொண்டனன் எனக் கம்பன் அமைத்தது ஒரு சிறு செய்தியேயாகும். ஆனல், இது இராவணனது அரசாணையின் பெருமையை உணர்த்தி, சுந்தரகாண்டத்தில் வரும் ஒவ்வொரு யுத்தத் திற்கும் தனிப்பட்ட சுவையையூட்டி, இதிகாசப் பொருளை மிகவும் சிறப்புறச் செய்கின்றது.

இக்கதையமைப்பில் ஒவ்வொரு பகுதியும் உடலுக்கும் உறுப்புகளுக்கும் இருப்பது போன்று நெருங்கிய தொடர்பு கொண்டு ஒருமை என்ற உணர்ச்சியை நமக்கு உண்டு பண்ணுதல் வேண்டும். வள்ளுவர்,

> உடம்பொடு யிரிடை யென்ன மற்றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு

என்று தமது பெரு நூலிற் கூறியுள்ளார். இக் குறளிற் காணும் உவமை இதிகாசக் கதைக்கும் பொருந்தும். ஒருமை யுணர்ச்சியை இதிகாசத்தின் உயிரெனக் கூறுதல் தகும்; இதிகாசத்தை உடலுக்கும், கதைப் பகுதிகளை உறுப்புக்களுக்கும் ஒப்பாகக் கருதுதல் பொருத்தமாவதும் காணலாம்.

அன்றியும் கதையின் கதி சாதாரணமாயுள்ள நிகழ்ச்சிகளினின்று கிளைத்தெழுந்து, தடுக்க முடியாத நியதிவன்மையால் மேலெழுந்து வளைவு—வீச்சு—நெறி யிலே சென்று, படிப்படியாகக் கீழிறங்கி முடிவில் மீண்டும் சாதாரண நிலைக்கு வந்து அமைதி பெறவேண்டும்.

முதல், நடு, இறுதி என்ற முப்பகுதிகளும் தெளிவுற விளங்குதல் வேண்டும். இங்ஙனமுள்ள கதையின் போக்கை ஆகாய விமானத்தின் போக்கிற்கு ஒப்பிடலாம். முதலில் நிலத்திலே மெல்லத் தவழ்ந்து, பின் வேகங் கொண்டு மேலெழுந்து ஆகாயத்திற் கிளம்பி, பின்னர்க் குறிப்பிட்ட திசை நோக்கிப் பறந்து சென்று, அத்திசையை அணுகியதும் மெல்ல மெல்லக் கீழ் நோக்கி இறங்கி வட்டமிட்டு வந்து முடிவில் நிலத்தைத்தொட்டு மீண்டும் தவழ்ந்து நடந்து விமானம் அமைதி பெறும். இதுபோன்ற உவமானத்தாலே இதிகாசக் கதையின் கதியை நாம் நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

ஒருமை யுணர்ச்சியை விளைக்கின்ற இதிகாசத்திலே பல உபகதைகளும் வருதல் தகும். ஆனால் இவ்வுப கதைகள் பிரதான கதையோடு இயைபு உடையனவாதல் வேண்டும். கதாநாயகன், நாயகி, பிரதிநாயகன் முதலிய முக்கிய பாத்திரங்களின் வரலாற்றோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டனவாக இக் கதைகள் அமைதல்வேண்டும். கம்பராமாயணத்தில் யுத்தகாண் டத்தில் வரும் இரணியன் வதை வரலாறு ஒரு தக்க உதாரணமாம். இவ்வரலாறு வால்மீகி ராமாயணத்திற் காணப்படவில்லை. எனவே இதற்கு மூலத்திலுள்ள பிரதான கதையோடு தொடர்பு இல்லை யென்பது விளங்கும். ஆனால் கம்பன் இதனைத்தொடர்பு படுத்திவிட்டான். விபிஷணன் தன் தமையனான இராவண னுக்கு அறிவுரை கூறுகிறான். தான் கூறுவதை வற் புறுத்துவதற்கு ஒரு பூர்வ வரலாற்றையெடுத்து உதகரிக் கிறான். இவ்வுதாரணத்தால் பலவிளைவுகள் இராவண னுக்குப் புலப்படுகின்றன. பிரகலாதன் தன் தந்தையின் பகைவனான திருமாலுக்கு அடிமையானது, தன் தந்தை யின் வதத்திற்கு அவன் காரணமானது, தன் தந்தையின் அரசுரிமையைப் பகைவனான திருமால் கொடுக்க அவன்

ஏற்று அரசுபுரிந்தது முதலியன விபீஷணன் மனத்திலும் கிடந்து அவனையும் அந்நெறியிற் செல்லும்படி செய்கின்றன என்று இராவணன் உணருகிருன். இவ்வுணர்ச்சி தோன்றியதும், இராவணன்,

மூட்டிய தீயென முடுகிப் பொங்கினன்
ஊட்டரக் கூட்டிய அனைய ஒண்கணன் (விபீடண. 1)

இங்ஙனம் கோபங்கொண்டு,

இரணியன் என்பவன் எம்மனோரினும்
முரணியன் அவன்தனை முருக்கி முற்றினன்
அரணியன் என்றவற்கு அன்பு பூண்டனை
மரணம்என் றொருபொருள் மாற்றும் வன்மையோய்

ஆபவன் வளர்த்ததன் தாதையாகத்தை
மாயவன் கல்லிய மகிழ்ந்த மைந்தனும்
ஏயுநம் பகைஞனுக் கினிய நண்புசெய்
நீயுமே நிகர் ; பிறர் நிகர்க்க நேர்வரோ ?

பாழிசால் இரணியன் புதல்வன் பண்பெனச்
சூழ்வினை முற்றியான் அவர்க்குத் தோற்றபின்
ஏழை நீ என்பெருஞ் செல்வம் எய்திப்பின்
வாழவோ கருத்து! அது வரவற்றாகுமோ? (விபீடண.2-4)

எனப் பலவாருகச் சிற்சில தீய கருத்துக்களை விபீஷணனிடஞ் சார்த்தி, அவனைத் தன்னிடமிருந்து வெருட்டிவிடுகிருன். விபீஷணன் இராவணனை விட்டு அகன்று செல்வதற்குத் தக்கதாய ஒரு வாய்ப்பினை இவ்வரலாற்றின் மூலம் கம்பன் அமைத்துவிடுகிருன். எனவே இரணியன் வரலாறு பிரதிநாயகனான இராவணனது ஒரு முக்கியமான செயலுக்குக் காரணமாயமைந்து, பிரதான கதையோடு தொடர்பு தோன்ற நின்கின்றது.

இதிகாசத்தின் கதைப்பொருள் காம்பீரிய முடையதாயிருத்தல்வேண்டுமென முன்புகூறினேன். இக்காம்பீரியம் கதாபாத்திரங்களையும் பெருமையுறச் செய்து அவற்றை

யும் காம்பிரிய பாத்திரங்களாகச் செய்துவிடுகின்றது. கதையில் வரும் மனுஷ்ய பாத்திரங்கள் உயர்குடிப் பிறப்பினராயும் பெரும்பதவியிலுள்ளவராயும் இருப்பர். கதை நிகழ்ச்சிகள் அரண்மனைகளிலும் பாசறைகளிலும் நடைபெறுகின்றன. பாத்திரங்களின் உணர்ச்சியாவேசங் களும் அநுபவ நிகழ்ச்சிகளும் பெருமிதத்தோடு உயர்வு நவிற்சிநெறியில் விஸ்தாரமாய் வருணிக்கப்படுகின்றன. இதற்கு ஏற்ப, தெய்வங்களும் இடைப் புகுந்து தொழில் புரிகின்றன. இதனால் ஒரு குறை ஏற்பட்டுவிடுகிறது. பாத்திரங்கள் தமது தனிப்பட்ட சிறப்பியல்புகளைச் சிறிது இழந்துவிடுகின்றன. அன்றியும் தனிப்பட்ட பாத்திரங்கள் பலவுள்ளன என்ற பன்மையுணர்ச்சியும் சிறிது சிதைவுறுகின்றது. ஆனால் சில சிறந்த இதிகாசங் களில், தனிப்பட்ட பல பாத்திரங்கள் ஒருங்கு தோன்றி நின்று ஒப்புமை யுணர்ச்சியாலும் வேற்றுமை யுணர்ச்சி யாலும் அவற்றின் தனித் தனிச் சிறப்பியல்புகள் தெளி வாய் நன்கு புலப்படும்படி சிறந்து அமைந்து நிற்கின்றன. இதற்கு உதாரணமாக: பாரதத்தில் வரும் பாத்திரங் களைக் கூறலாம். பாத்திரங்கள் எண்ணிற் சுருங்கியுள்ள இதிகாசங்களிலும், ஒரு சிலரைப் பூர்வாபர நிலைகளில் தனித்தனி வருணித்துக் காட்டிப் பன்மையுணர்ச்சியை ஆசிரியர்கள் மிகுவிக்கின்றனர். மந்தரையால் மனவேற் றுமை யெய்துதற்கு முன்னும் பின்னும் கைகேயியின் இயல்புகளை நோக்கினால் இங்குக் கூறியதன் உண்மை அறியலாகும்.

இதிகாசத்தில் மனுஷ்ய பாத்திரங்களோடு தெய்வங் களும் ஊடாடி யுறவு கொள்ளுகின்றன. இதனை மேலே குறித்துள்ளேன். இத் தெய்வங்கள் ஆகாயத்தில் செறிந்து நின்று பூமாரி முதலியன சொரிந்து மகிழ்தலும் பிறவாறு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தலும், சோகம் முதலிய மற்றை யுணர்ச்சிகளையும் ஆகாயத்தினின்று

புலப்படுத்துதலும் உண்டு. இராமன் சானகியின் பொருட்டு வில்லிறுத்தபொழுது,

பூமழை சொரிந்தார் விண்ணோர் ; பொன்மழை பொழிந்தமேகம்;
பாமமா கடல்களெல்லாம் பன்மணி தூவி யார்த்த ;
கோமுனிக் கணங்க ளெல்லாம் - கூறின ஆசி ; கொற்ற
நாம வேற் சனகற் கின்று நல்வினை பயந்த தென்ன (கார்முகம்.36)

என்றபடி பூமழை சொரிந்து மகிழ்ந்தனர். இந்திரசித்து இலக்குமணனால் வதம் செய்யப்பட்டபொழுது,

வில்லாள ரானோர்க்கெல்லாம் மேலவன் விளித லோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தற் கரசெனக் களித்துத்தேவர்
எல்லாரும் தூசு நீக்கி யேறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார்
(இந்திரசித்து. 56)

என்றபடி தமது ஆடைகளை வீசியெறிந்து தேவர்கள் களித்து ஆர்த்தனர். சிதை தீப்புகும் செயலினைக்கண்டு,

இந்திரன் தேவியர் முதல் ஏழையர்
அந்தர வானினின் றாற்று கின்றவர்
செந்தளிர்க் கைகளாற் சேயரிப் பெருஞ்
சுந்தரக் கண்களை பெற்றித் துள்ளினர்

நடுங்கினர் நான்முகன் முதல நாயகர் ;
படங்குறைந் ததுபடி சுமந்த பாம்பு ; வாய்
விடம்பிறந் துளதென வெதும்பிற் றுலகு ;
இடந்திரிந்தன சுடர் ; கடல்கள் ஏங்கின (மீட்சிப். 82-3)

தேவர்களும் தெய்வப் பெண்களும் நடுங்கிஅரற்றினர். வான வீதியில் நின்று இங்ஙனம் செய்ததேயன்றி, பூமியிலும் இத்தேவர்கள் வந்து மக்கட்குரிய செயலை ஆற்றுகின்றனர். வருணன் இராமனைப் பணிந்து நின்று குரங்குச் சேனை செல்லுதற்கு வழிவிட்டுக் கொடுத்த வரலாறு பிரசித்தமானதே. இங்ஙனம் பல. ஒரு சில சமயங்களில் கதையின் உண்மை நிகழ்ச்சி விண்ணுலகில் நிகழ்வதாகவும், மக்களைத் தேவர்கள் தங்கள் கருத்து முற்றுதற்கு

உபாயமாகக்கொள்ளும் விளையாட்டுக் கருவிகளென அமைவதாகவும் புலப்படுதலுண்டு. வேறு சிலவற்றில், தெய்வம் ஒன்றேயென்றுங் கொள்கை வேரூன்றிவிட்ட பொழுது, இத்தெய்வத்தின் ஆணை உலக மக்களை நியதிப்படி ஆட்டுவிக்கின்றது என்று கருதும்படி நிகழ்ச்சிகள் நடைபெறுதலுமுண்டு. எவ்வாறாயினும், இத்தெய்வீக நிகழ்ச்சிகள் அவ்வப்போது தெய்வம் பற்றிக்கொண்டுள்ள கொள்கைகளுக்குத் தக்கபடி அமைதல் வேண்டும். இவ்வாறு அமையாவிடின், உயிரில்லாத வெற்று வடிவமாக இந்நிகழ்ச்சிகள் அமைந்து யாதொரு பயனும் தரமாட்டாதனவா யொழியும்.

காம்பீரிய பாத்திரங்களான மனுஷ்யர்களும் தெய்வங்களும் தங்கள் இயல்பிற்கு ஏற்றவாறு உயரிய கருத்துக்களையே கருதுவார்களென்பது எளிதில் உணரத்தகும். எனவே, இதிகாச கர்த்தர்களும் இக்கருத்துக்களின் உயர்வுக்குத் தக்கவாறு சிறந்த சொற்களால் அவற்றை வெளியிட முயலுவர். இங்கே ஆசிரியனது பலதிறப்பட்ட கல்வியறிவு அவனது மேதாவிலாசத்திற்குத் துணை புரிகின்றது. கவிஞனது மேதை மின்னல் வெட்டின் இயல்புகொண்டது. மின்னொளி இருண்ட நிலத்துள்ள பொருளைக் கணநேரம் புலப்படுத்தி மறைகின்றது. இது போன்றே, இதிகாசப் பாடலின் விஸ்தாரமான அமைப்புக் கூறுகளையெல்லாம் கவிஞனது மேதை ஒரே பார்வையிற் புலப்படுத்தி விடுகிறது. இவ்வாறு புலப்பட்டால் மட்டும்போதாது. புலப்பட்ட பொருளைத் தக்க சொற்களாலும் தக்க செய்யுள் வகையாலும் கற்பவர் உளங்கொள உணர்த்துதல் வேண்டும். இதற்குப் பல துறையிலும் கல்வி வல்லனாகக் கவிஞன் இருத்தல் வேண்டும். சொற்களின்பொருளை நிறுத்துணர்ந்து, தக்கசொற்களைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தான் புலப்படுத்த எண்ணும் கருத்துக்களுக்கு ஏற்றவாறு, செய்யுளினங்களையும் இவன்

தெரிந்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு சொற்களையும் செய்யுட்களையும் ஆளுதற்கு நல்ல கல்வியும் பயிற்சியும் வேண்டுமென்பது வெளிப்படை. மரபு வழிப்பட்ட செய்யுள்நடை விசித்திரம் இதிகாசங்களில் அடிக்கடி வியக்கத்தக்க பயனை விளைப்பதுண்டு. ஆனால், இவ் விசித்திர நடையை உண்மையான கவித்துவம் நிரம்பிய தாகச் செய்வதற்குக் கவிஞனது மேதை இன்றியமையாத தாம். பெண்களைப் பவளக்கொடிக்கு உவமித்தல் ஒரு மரபு. ஆனால், இவ்வுவமானம் மட்டும் கவித்வத்தைச் சிறந்ததாக்கிவிடமாட்டாது. கம்பனுடைய மேதா விலாசத்தால் பவளவல்லி உயிர்பெற்று நமது மனக்கண் முன் இயங்குவதை அடியில் வரும் செய்யுளில் காணலாம்:

நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினான்.

(அயோத். மந்தரை. 42)

இதுவேயன்றிச் சில அடைமொழிகள் இதிகாசங்களில் அடிக்கடி வருதல் உண்டு. இராமனை அறத்தின் நாயகன் (சூளாமணி. 33) என்றலும், அறத்தின் மூர்த்தி (அயோத்-மந்திரப். 37) என்றலும், ஏறு சேவகன் (கும்பகர்ணன். 342, 349) என்றலும் உதாரணங் களாம். கடலினை நாற்கடல் என்று கூறுதலும், நிலத்தினை நானிலம் என்று கூறுதலும் பெரு வழக்காகும். இவையேயன்றி தசும்பு, அசும்பு (சித்திர கூடப். 36), இஞ்சி (மாயாசீதை. 24), குயிற்றி (நாகபாச. 246) முதலியன போன்ற வழக்கொழிந்த சொற்களையும் பச்சிமம் (பிரமாத்திர. 71). உத்தரா சங்கம் (எழிச்சிப். 17), பீனதனம் (கார்முகப். 31) முதலியனபோன்ற வட சொற்களையும், தம்பி (எழுச்சி. 30); தள்ளவாரி (ஒற்றுக் கேள்வி. 56) முதலியனபோலப் பிறமொழிச் சொற்களை

யும் தெய்வ மரணம் (விபீஷணடைக். 116), அறத்தின் வாழ்வு (மூலபல. 72), முதலியனபோலப் புதிதாக வார்த்தெடுத்த தொடர்களேயும் இதிகாசங்களில் காணலாம். இவை கதை நிகழ்ச்சிகள் சாதாரண நிகழ்ச்சிகளுக்கு நெடுந் தொலேவிலுள்ளன என்பதை உணர்த்தி, அற்பமான பொருள்களில் நமது மனம் செல்லாதபடி தடுக்கின்றன. செய்யுளினங்களும் ஒவ்வொரு காலத்துள்ள வழக்கிற்குப் பொருந்த அமைவனவாகும். சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் அகவற்பாவே காவியங்களுக்குரியதாகக் கருதப்பட்டது. சிறிது பிற்பட்டுத் தோன்றிய காவியங்களில் அகவற்பா கொள்ளப்படவில்லே; விருத்தங்கள் கையாளப்பட்டன. கம்பராமாயணம் முதலிய இதிகாசத்தால் காவியங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உரியன விருத்தப்பாக்களே என்ற கொள்கை மேற்பட்டுவிட்டது.

இவ்வாருக, கதையின் அமைப்பு ஒருமை யுணர்ச்சி, பாத்திரச் சிறப்பு, சொல், சொற்ருெடர், செய்யுள் முதலியவற்றின் அமைதிச் சிறப்பு: இவ்விஷயங்களிலே இதிகாசங்கள் தனிப்பட்ட தன்மையுடையனவாய்ச் சிறந்து விளங்குகின்றன. ஆனுல், மேலே கூறிய சிறப்பியல்புகள் பின்முறை—இதிகாசங்களுக்கே பெரிதும் பொருந்துவன. முன்முறை-இதிகாசத்திற்கு இவை பொருந்துமெனக் கொள்ள இடமில்லே. இங்கே முன்முறை, பின் முறை என்ற தொடர்களே நன்ருக உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாததாம். காலத்தால் முன் தோன்றியது, காலத்தால் பின் தோன்றியது என்பனவே இவற்றின் பொருள். இவற்றிற்கு முறையே முதல்—தரத்தது, இரண்டாம் தரத்தது என்றேனும், முதல்-நூல் வழி - நூல் என்பனபோல முதலில் எழுந்தது, அதன் வழியைப் பின்பற்றிப் பின் எழுந்தது என்றேனும் பொருள் கொள்ளுதல் கூடாது. வடமொழியில் வியாசரது

மகாபாரதம் காலத்தால் முற்படத் தோன்றியதெனற்குத் தக்க சான்றுகள் உள்ளன. இங்ஙனமே வான்மீகியின் இராமாயணம் மகாபாரதத்தின பின்பு தோன்றியதென் பதற்கும் ஏற்புடைச் சான்றுகள் இருக்கின்றன என் றேன். எனவே, இவ் இராமாயணம் பின்முறை-இதிகாச மாகும். இதில் காவியத் தன்மையும் அமைந்துள்ளது; இக்காரணத்தால் ஆதிகாவியம் என்று வழங்கும் பெயர் மேலே கூறியவாறு இதற்கு முற்றுந் தகுவதே. கம்ப ராமாயணம் எதன்பால் அடங்குமென நாம் வினவலாம். இதிகாசப் பொருளையும் கொண்டு, காவியத் தன்மையும் பெற்று, வழிநூலாகவும் இக் கம்பராமாயணம் அமைந் துள்ளது. எனவே, இதனை வழிமுறை-இதிகாசம் எனக் கூறுதல் பொருந்தும்.

இவ்வாறாயின், முன்முறை-இதிகாசத்தின் இயல்புகள் யாவை? இவ்வகை இதிகாசத்தின் கதைப் பொருள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கமாட்டாது. தேசிய முக்கியத்துவம் வாய்ப்பது உலக சரித்திரத்தை அல்லது நாட்டுச் சரித்திரத்தை ஆழ்ந்து பாதிக்கக் கூடிய ஒரு பெரு நிகழ்ச்சியின் மூலமாகவே யென்பது மனங் கொள்ளத் தக்கது. மகாபாரதம் அடிப்படையில் தாயாதி கள் இராச்சியத்தின் பொருட்டுப் புரிந்த போர் பற்றியதே யாகும். இதில் தேசிய முக்கியத்துவம் காணவியலாது. இவ் இதிகாசத்திற்கு வேண்டுவ வெல்லாம் ஒரு சில வீர புருஷர்களின் வரலாறுகளேயாம்.

கணக்கற்ற ஏற்றிழிவுகளும், லட்சியமின்றி மாறி மாறி வரும் பெருமை சிறுமைகளும் வீர யுகத்தில் நிகழும்; இவ்வகை வீரயுகத்தில் வாழ்க்கை ஒரு நெறிமுறைப் பாட்டை அடைந்திருத்தல் இயலாது. இவ் யுகத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு தரத்தனவே; எதனை யும் பிறிதொன்றினைக் காட்டினும் சிறந்ததெனக் கூற

முடியாது. எந்த விளேவும் நிச்சயமெனக் கொள்ளவும் இயலாது: இன்று நாம் பகைவரைக் கொன்று களித்துக் கூத்தாடுவோம்; நாளே நாம் கொலே செய்யப்படுவோம்; நமது பெண்கள் சிறையெடுக்கப்பட்டு அடிமைகளாய்க் கொண்டு செல்லப்படுவார்கள். எதற்கும் கண நேரப் பொருண்மையே யுண்டு. வீரச்செயல்களும் துக்க சம்ப வங்களும் மிகுதியாயுள்ளன; எனவே நல்ல கதைகளும் மிகப் பல காணப்படுகின்றன. ஆனல், வாழ்க்கையில் நெறிமுறை யென்பது இல்லே; உலகம் நன்மையை விட்டுத் திமையிற் புகுதலும் இல்லே. இவற்ருல், இவ் வீரயுகத் தில் மாதிரி நெறிமுறை யின்றி, பன்னெறிக் காட்சி முறையே காணப்படுகின்றது. வீரயுகத்தில் தோன்றியதே முன்முறை-இதிகாசம். இதிற் காணும் பெருமை தனிப் பட்ட மக்களுக்குரிய துன்ப நிகழ்ச்சியின் விளேவாக வுள்ளது. மாறிமாறிச் சென்று கொண்டிருக்கும் நிலே யற்ற உலக நிகழ்ச்சியாகிய திரைச் சீலேயிலே வேற்று நிறமுடைய கணநேரத் துன்பநிகழ்ச்சி இம் முன்முறை-இதிகாசத்தின் கதைப் பொருளாய் அமைந்துள்ளது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழுமிய கதைப் பொருள் இதன்கண் இல்லே.

பாரதத்திற்குப் பின்னெழுந்த இராமாயணத்தை எடுத்துக் கொண்டால், அது ஒருவாறு தேசிய முக்கியத் துவம் வாய்ந்ததெனக் கூறலாம். மனுஷ்யர்களுக்கும் இராக்ஷஸர்களுக்கும் இடையே நிகழ்ந்த போர்பற்றியது இவ் இதிகாசம். வடநாட்டு ஆரியர்கள் தென்னுட்டிற் பரந்து தங்கள் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தென் ஞட்டிற் புகுத்திய செயல் இவ் இதிகாசத்தில் புலப் படுவது. எனவே இதில் தேசிய முக்கியத்துவம் தோன்று கிறது; இம் முக்கியத்துவம் அமையவேண்டுமாயின், உலக சரித்திரம் பல நூற்ருண்டுகளாக நிகழ்ந்து, குறிப்பிட்ட ஒரு நெறியை எய்தியிருத்தல் வேண்டும்.

இப் பின்முறை-இதிகாசத்தில் விழுமிய கதைப் பொருள் உளதென மேலே உரைத்தவற்றால் அறியலாம். இக்கதையில் வரும் பாத்திரங்கள் தம் பொருட்டாகப் போர் முதலிய செயல்கள் புரியவில்லை. ஒரு கடமையை மேற்கொண்டு, பொறுப்பு-உணர்ச்சியோடு இச்செயல்களை இப்பாத்திரங்கள் செய்கின்றனர். உதாரணமாக, இராமாயணத்தில் வரும் பாத்திரங்களை நோக்கலாம். இராமன்,

தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினான் (நகர்நீங்கு. 168)

தாடகை வதை முதலியன எல்லாம் இவன் மேற்கொண்ட கடமையை நிறைவேற்றற் பொருட்டுச் செய்யப்பட்டன. ஆனால் முன்முறை - இதிகாசத்தில், இக்கடமையும் பொறுப்பு - உணர்ச்சியும் இல்லை. மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்கள் தங்கள் காரியம் நிறைவேறுதற் பொருட்டே பல செயல்களையும் செய்துள்ளனர்.

இன்னும் ஒன்று. பின்முறை – இதிகாசத்தில் முன் முறை-இதிகாசத்திற் காட்டினும் மிக்கதொரு கௌரவம் காணப்படுகிறது. முன்முறை–இதிகாசமும் கௌரவம் பொருந்தியதே. அதன் கௌரவம் பெருகுவதற்குப் பல துணைகள் இருந்தன. இதிகாச கவிஞனை மிகவும் பாராட்டி அவனுக்குத் தனிப்பட்ட பதவியளித்து பெரு மக்கள் சூழ்ந்திருக்கும் சபையிலே ஒரு விசேஷ காலத் திலே, இதிகாசத்தை அவன் பாட அனைவரும் கேட்டு இன்புற்று அவனைப் போற்றினர். இக் கௌரவச் சூழ் நிலை பின் முறை-இதிகாச கவிஞனுக்கு இல்லை. இதற்குப் பதிலாக ஓரிடத்தேயிருந்து நூலைப் படிப்பதொன்றுதான் இருந்தது. இங்ஙனமாயின் முன்னையதினும் மிக்கதொரு கௌரவம் எப்படி வாய்த்தது? செய்யுளின் பெருமித நடையினாலேதான் இது வாய்த்தது. இந்நடையைக் குறித்து முன்பே கூறியுள்ளேன். ஒரு விஷயத்தை இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நமது பொறி

நுகர்ச்சியால் விளையும் இன்பத்தை எவையெல்லாம் மிகச் செய்யுமோ, அவைகளைக் குறித்து அடிக்கடி கூறிக் கற்பவரது மனத்தை வசிகரிக்கு முறையில் இச் செய்யுட்கள் அமைந்திருக்கும். உதாரணமாக, ஒளி, இருள், பூ, அணிகலன்கள், காமச்சுவை முதலியவற்றைக் கூறலாம். இவைபற்றிக் கவிஞன் பெருமிதத்தோடு வர்ணித்துச் செல்கிறான். நாம் நம்மை யிழந்து விடுவதில்லை; பொறியுணர்ச்சி எப்பொழுதும் கிளர்ந்து நிற்கின்றது. இந்த வசிகரண சக்தியால் நம்மை ஓரிடத்தும் தரிக்கவொட்டாதபடி கவிஞன் இழுத்துச் செல்கிறான். ஏதேனும் ஒரு வரி அல்லது ஒரு செய்யுளில் நமது மனம் லயித்துத் தங்கி விடும்படி இக் கவிஞன் செய்யமாட்டான். கவிஞனை வீணை வாசிக்கும் இசைச் செல்வனாகவும் கற்பவனை அவன் வாசிக்கும் வீணையாகவும் ஒப்பிடுதல் பெரிதும் பொருத்தமாகும். இவ்வாறாகக் கிளர்ச்சி நெறியில் வசிகரண சக்தியோடு பெருமிதமாய்ச் செல்வது பின்முறை-இதிகாசத்தின் நடை.

முன்முறை - இதிகாசமும் பின்முறை-இதிகாசமும் மேற்கூறிய இயல்புகளையுடையன. இனி, காவியங்களின் வரலாறு முதலியவற்றை நோக்குவோம். முன்முறை-இதிகாசத்திற்குரிய வீரயுகமும், பின்முறை-இதிகாசத்திற்குரிய தேசிய யுகத்தின் தொடக்கமும் நிகழ்ந்து வெகு காலத்திற்குப் பின்னர், தயாவீரயுகம் (ஏஜ் ஆப் ஷிவல்ரி) தோன்றியது. வீரயுகத்திற்கும் தயாவீரயுகத்திற்கும் உள்ள வேறுபாடு கூர்ந்து அறியத்தக்கது. வீரயுகத்தில் உயர்குடியிற் பிறந்த மக்களைப் பற்றிய சரிதமே வழங்கி வந்தது; ஆனால் இம்மக்கள் சாதாரண மக்களைக் கீழ்ப்பட்டவர்களென்று கருதி நடத்தவில்லை. வீரத்திற் சிறந்தவர்களாயின், வேற்றுமை சிறிதும் பாராட்டியதில்லை. தயா வீரயுகத்தில் குடிப்பிறப்பே முக்கியமாகக் கருதப்பட்டது; இக்குடிப் பிறப்பும் படிப் படியாய் உயர்ந்து

அமைந்தது எனக் கொண்டனர். வீரயுகத்தில் தோன்றிய இதிகாசம் அக்காலத்துப் பூர்வ மக்களின் பழக்க வழக்கங்களையும் அனுபவங்களையும் நேரடியாய் உணர்ந்து அமைத்துக் கொண்டது. தயா வீரயுகத்தில் தோன்றிய காவியங்கள் பூர்வ இலக்கியக் கருத்துக்களைச் சார்ந்து நிலைத்தன. அன்றியும், இக்காவியங்கள் கல்வியின் விளைவாய், வடமொழி முதலிய பிற மொழிகளிலுள்ள நூலுணர்ச்சியின் பயனாய், பிற்பட்ட சரித்திரங்களி லின்றும் இளைத்தனவாய், நாட்டில் வழங்கிவந்த சில கதைகளின் புத்தமைப்புக்களாய்த் தோன்றின. இதிகாசங்கள் நுட்பமற்ற ஸ்தூலமான மனோபாவனை யினின்றும் இயல்பாய்த் தாமாகவே தோன்றியன. காவியங்களோவென்றால், புத்துணர்ச்சிகளையும் புதிய இலக்கிய நெறிகளையும் உண்டு பண்ணக் கருதி, கல்வி வல்ல இலக்கிய கர்த்தர்கள் பயிற்சி மிக்க தமது மனோபாவனை யினால் இயற்றியனவாகும். இதனால் பல்வகை இலக்கியச் சுவைகளும் நயங்களும் இக்காவியங்களில் காணப்படுகின்றன; கற்பிதமான காதற் காட்சிகளும், மரபு வழிப் பட்ட வீரபராக்கிரமச் செயல்களும் பெரிதும் வர்ணிக்கப் படுகின்றன. இவ்வாறு தோன்றியமைந்த காவியங்களின் இயல்புகள் இதிகாசங்களின் இயல்போடு முற்றும் வேறு பட்டன என்பது எளிதில் அறியத்தகும்.

காவியம், சார்பில் தோன்றும் இலக்கியமாகும் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இச் சார்பு பொருள் பற்றியேனும், இலக்கியநெறி பற்றி யேனும், இரண்டினையும் பற்றியேனும், இருத்தல் கூடும். பொருள் பற்றியதற்கு உதாரணமாக, உதயணன் பெருங் கதையைக் கூறலாம். நூற்பொருள் முழுமையும் குணாட்டியர் பைசாசி மொழியில் இயற்றிய ப்ருகத் கதையை வடமொழியில் துர்விநீதன் என்ற அரசன் மொழி பெயர்த்துச் செய்த நூலினைப் பின்பற்றியதாகும்.

பொருள் முழுமையும் எடுத்துக் கொள்ளாது, ஏதேனும் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு அதனைக் காவியமாக அமைத்தலும் கூடும். சூளாமணிக் காவியத்தை உதாரணமாகக் கூறலாம். இக்காவியம் திரிஷஷ்டி சலாகா புருஷர்களின் சரிதத்தைக் கூறும் மகாபுராணத்தைப் பின்பற்றிச் செய்யப்பட்டதென்பர். வடமொழியிற் காளிதாச மகாகவி இயற்றிய குமாரஸம்பவம் என்பதும் இதனைப் போன்று ஒரு பகுதியை அமைத்துள்ள ஒரு காவியமே. இலக்கிய நெறிபற்றித் தோன்றிய சார்பு-நூலிற்கு உதாரணமாகச் சிலப்பதிகாரத்தைக் கொள்ளலாம். 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' (பதிகம், 60) என்பதன் உரையில் 'சிலப்பதிகாரம் என்னும் 'பெயரான் ஒரு காப்பியமாக நாம் நிறுத்துதும்' என்று அடியார்க்கு நல்லார் உரை வகுக்கின்றார். இதனால் காவியத்திற்குரிய நெறிபற்றி இத்தமிழ்ப் பேரிலக்கியம் இயற்றப்பட்டதென்பது விளங்கும். அன்றியும் அரங்கேற்று காதையில் வரும் நாடகப் பொருள்கள் பலவும் வடமொழிப் பரத நாட்டிய சாஸ்திரத்தைப் பின்பற்றியன. இதனால் நாட்டியம் நிகழும் முறை வட மொழியில் அமைந்துள்ளதனைப் பின்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறதென்பது வெளிப்படை. மேலும்,

> காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபிற்
> பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று மரபிற் கல்லொடு புணர (புறத்திணை. 5)

எனத் தொல்காப்பியத்தில் வருகின்றது. இந்நெறியையே அடியொற்றிச் சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்தில் காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக் காதை எனக் கதைக்கூறு செல்லுகின்றது. தொல்காப்பிய இலக்கணத்திற் குறிக்கப்பட்ட ஓர் இலக்கிய நெறியைச் சிலப்பதிகாரம் மேற்கொண்டுள்ளமை இங்குக் காணலாம். இனி, பொருள், இலக்கிய

நெறி இவ் இரண்டினையும் பின்பற்றிச் செல்லுங் காவியத்திற்கு உதாரணமாகச் சீவகசிந்தாமணியைக் கூறலாம். இக் காவியத்தில் வரும் பகுதிகளின் பெயர் போலும் 'இலம்பகம்' என்ற வடமொழிப் பெயரினைத் தாங்கி நிற்கின்றது.

...சருக்கம் இலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி

என்ற தண்டியலங்கார சூத்திரப்பகுதியால் (8), இப் பெயர் காவ்யப் பகுதிக்குரிய ஒரு பெயரென்பதுவிளங்கும். அன்றியும் சீவகசிந்தாமணி விருத்தத்தால் இயன்றது. காவியம் விருத்தத்தில் இயற்றப்படவேண்டுமென்பது,

ஸர்க்கை ரநதி விஸ்தீர்ணை :
ஸ்ரவ்ய விருத்தை: ஸுஸந்திபி :

என்ற காவியாதர்ச (18) ஸ்லோகப் பகுதியால் தெரியலாம். எனவே, இப்பெருங்காப்பியம் வடமொழியிற் கூறப்பட்ட இலக்கிய நெறியைப் பின்பற்றியதென்பது நன்கு உணரலாம், இந்நூற்பொருளும் வடமொழியிலுள்ளதே; முன்னரே இது விளக்கப்பட்டது. ஐம் பெருங்காப்பியங்களுள், முற்கூறிய சிலப்பதிகாரம் தமிழ் நாட்டில் வழங்கிய ஒரு பழைய கதையை நூற்பொருளாகக் கொண்டது. இதனை இக்காவியத்தின் காலத்தை ஆராய்கின்றபொழுது கூறியுள்ளேன். மணிமேகலையின் கதை, ஆசிரியர் சாத்தனுர் தாமே படைத்துக்கொண்டது என்று கருத இடமுண்டு. மணிமேகலா தெய்வத்தைக் குறித்துப் பௌத்த நூல்களில் காணப்பட்டபோதினும், மணிமேகலைக் காப்பியத்தின் கதை தமிழுக்கு உரியதெனவே கொள்ளவேண்டும். இக்காப்பியத்திலும் குண்டலகேசியிலும் சமயவாதப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ள வாதப் பொருள்களே இவ் இரண்டு காப்பியங்களிலும் காண்பன. எனவே, இவையும் பூர்வத்திலுள்ள பொருளையும் இலக்கிய நெறியையும் உட்கொண்டனவேயாம். இங்ஙனமாக,

தமிழிலுள்ள காவியங்கள் சார்பில் தோன்றியனவென்பது புலப்படும். வடமொழிக் காவியங்களும் இத் தன்மை யனவே யென்பது அவற்றை நோக்கியறியலாம். ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் காவியம் என்றதனை ஒத்துள்ள 'ரோமான்ஸ்' முதலிய இலக்கியங்கள் சார்பில் தோன்றி யன (டெரிவெட்டிவ்) என்றே ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள் (டிக்ஸன். பக். 99).

காவியங்கள் சார்பு-இலக்கியங்கள் என்று கூறிய அளவிலே, அவைகள் கலையிலும் பிற துறைகளிலும் மக்கள் ஓரளவு பயிற்சி பெற்றதன் பின்னர்த் தோன்றி யன என்பது விளங்கும். வீர யுகத்திற்கும் இக்காவியங் களின் காலத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. வீர யுகத்திற்பிறந்த இதிகாசங்களிலும், பிற பாட்டுக்களிலும் அவற்றை இயற்றிய புலவர்கள் உண்மையிலே வீரச் செயல்களைக் குறித்து நேரடியாக நன்கு உணர்ந்தவர்க ளென்பது புலனும்.

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்கு
ஆழி யனையன் மாதோ (புறம். 330)

என்ற செய்யுட் பகுதியிலே வீரம் ததும்பி நின்று இதனைப் பாடிய புலவர் வீரச் செயல்களைத் தெரிந்து அனுபவித் துள்ளார் என்பதைப் புலப்படுத்துகிறது. பிற்பட்ட காவியங்களிலே இவ்வகை நேரடியான வீரவுணர்ச்சியைக் காணுதல் அரிது. அவற்றைப் பாடிய புலவர்கள் போர் என்ற சொல்லை அறிவார்களேயன்றி, போர்க்களத்தில் போர் நிகழ்வதை நேரிட்டுப் பார்த்து அறியார்கள். ஆதலால் இவர்கள் போரில் உண்டாகும் துன்ப நிகழ்ச்சி களைப் பலபடப்பாரித்துக் கூறுவார்கள். சேனையின் மிகுதியையும் ஆயுதங்களின் பெருமையையும் வருணித்துப்

பேசுவார்கள். போரில் விழ்ந்துபட்ட வீரர்கள் மீது இரக்கங்காட்டுவார்களே யன்றிவெற்றிகொண்ட வீரனதுபெருமிதத்தை விரித்துரைக்கமாட்டார்கள். தாம் கற்றுள்ள பல வீரசரிதங்களை இடையிற் புகுத்துவர். வீரர்களது செருக்கினையும், அவர்களது அரச பக்தியையும், பிற உயரிய கருத்துக்களையும் தமது புலமைத்திறம் தோன்ற எடுத்துக் கூறுவர். சிந்தாமணியில் சீவகனது போர்களெல்லாம் இவ்வாறே வருணிக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் பலவிடங்களில் தாம் கற்றுள்ள பழம்பாடங்களை ஒப்பிக்கின்றனர்.

அஞ்சன நிறம்நீக்கி அரத்தம் போர்த் தமருழக்கி
இங்குலிக இறுவரைபோன் றினக்களி றிடைமிடைந்த
குஞ்சரங்கள் பாய்ந்திடலிற் குமிழிவிட் டுமிழ்குருதி
இங்குலிக அருவிபோன் றெவ்வாயும் தோன்றினவே
(சிந்தா. 2239)

என்ற செய்யுளையும்,

அஞ்சனக் குன்றேய்க்கும் யானை அமருழக்கி
இங்குலிகக் குன்றே போல் தோன்றும்-செங்கண்
வரிவரால் மீன்பிறழும் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து (களவழி நாற்பது, 7)

என்ற செய்யுளையும் ஒப்பிட்டு மேலதன் உண்மை தெளியலாம். இங்ஙனம் பல.

கல்வித் துறைகள் பலவற்றில் பயிற்சி மிகுந்த காலத்தே காவியங்கள் தோன்றின என்பது மேற்காட்டிய உதாரணத்தால் நன்கு விளங்கும். இதன் விளைவுகள் சில இங்கு நோக்கத்தக்கன. காவியங்களின் ஆசிரியர்கள் தாம் கூறக்கருதும் நூற்பொருளின் செல்கதியைப் பல இடங்களில் ஒதுக்கிவிட்டு, அலங்காரமாகவுள்ள பல பகுதிகளை அமைத்து விடுவர். உதாரணமாக, சிலப்பதிகாரத்திலே இந்திர விழவூரெடுத்த காதையில்,

விளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரு மறுகிற்
கருமுகில் சுமந்து குறுமுய லொழித்தாங்கு
இருகருங் கயலோ டிடைக்குமிழ் எழுதி
அங்கண் வானத் தரவுப்பகை அஞ்சித்
திங்களு மீண்டுத் திரிதலும் உண்டு கொல் ?
நீர்வாய் திங்கள் நீணிலத் தமுதின்
சிர்வாய் துவலைத் திருநீர் மாந்தி
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வானவல்லி வருதலும் உண்டு கொல் ?
இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
எரிநிறத் திலவமு முல்லையு மன்றியும்
கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்கு
உள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலம் திரிதலும் உண்டு கொல் ?
மன்னவன் செங்கோல் மறுந்த லஞ்சிப்
பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையிற் றிரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பண்மொழி நரம்பிற் றிவவியாழ் மிழற்றிப்
பெண்மையிற் றிரியும் பெற்றியும் உண்டென
உருவிலாள னொருபெருஞ் சேனை
இகலமர் ஆட்டி யெதிர்நின்று விலக்கியவர்
எழுதுவரிக் கோல முழுமெயும் உறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொடு (202-227)

என வருகின்றது. இந்த அடிகளில் பதந்தோறும் அழகு ஒழுகுகின்றது. ஆனால் நூற்பொருளையும் காதையின் பொருளையும் நோக்குமிடத்து இவைகள் அலங்கார வாசக மெனவே கொள்ளத் தக்கன. இவ்வகை வாசகமேயன்றி வருணனைப் பகுதிகளும் காவியங்களில் மிகுதியாக உள்ளன. சிலப்பதிகாரத்தில் நாடு காண்காதை, காடு காண்காதை, ஊர்காண்காதை முதலியவற்றில் வரும்

வருணனைகள் மேற்கூறியதற்குச் சான்று. சிந்தாமணியில், மகளிர் வருணனை தொட்ட தொட்ட இடந்தோறும் உள்ளது. உதாரணங் காட்டவேண்டும் அவசியமேயில்லை.

இவ்வாறு வருணனை செய்யும் காவியங்களில் உண்மையான இயற்கையுணர்ச்சியைக் காணமுடியாது. உணர்ச்சிகளும் அலங்காரப் போர்வை போர்த்துப் பகட்டாகத் தோன்றி அலங்கார நடை நடக்கின்றன. உதாரணமாகக் காதலுணர்ச்சியை யெடுத்துக்கொள்க. இதனை உறுப்பினமுகு மாத்திரமாகக் கொண்டு சிந்தாமணியாசிரியர் அலங்காரந் தோன்ற வருணிக்கின்றனர்.

பண்ணுலாங் கிளவி நன் பரவை யேந்தல்குல்
வண்ணமே கலையிவை வாய்ந்த பூந்துகில்
உண்ணிலாய்ப் பசுங்கதிர் உமிழ்வ பாவியேன்
கண்ணையு மனத்தையுங் களங்கொண்டிட்டவே

(சிந்தா. 1481)

முதலிய செய்யுட்களை நோக்குக. இங்ஙனமே பிறவுணர்ச்சிகளை வருணிக்குமிடத்தும் அதிசயோக்தியால் போலித் தன்மையும் ஆடம்பரத் தன்மையும் விளைந்துவிடுகின்றன.

மேற்கூறிய அலங்கார வாசகங்களோடு இக்காவியங்கள் அமைந்துவிடுவதில்லை. பல துறையிலும் இவற்றின் ஆசிரியர்கள் எய்தியுள்ள பாண்டித்தியமும் இவற்றில் பல விடங்களில் தலைகாட்டுகின்றது. ஒரு நாயகியைப் பாம்பு கடித்துவிட்டதென்றால், பாம்பின் சாதி வகைகள், அவற்றின் விடத்தை தீர்க்கும் முறைகள் முதலியவற்றை யெல்லாங் குறித்து விவரங்கள் காவியத்தில் காணப்படும். சீவக சிந்தாமணியில் (1286)

பொழிந்து நஞ்சுகுத்தல் அச்சம் இரைபெரு வெகுளி போகம்
கழிந்துமீ தாடல் காலம் பிழைப்பென எட்டி னாகும்
பிழிந்துயி ருண்ணுந் தட்டம் அதட்டமாம் பிளிற்றி னும்பர்
ஒழிந்தெயி றூனஞ் செய்யுங் கோளென மற்றுஞ் சொன்னான்

எனவருஞ் செய்யுள் முதலியவற்றில் இவ்விவரங்கள் கூறப்பட்டுள்ளன. திருடனைக் குறித்துச்சொல்ல நேர்ந்தால், எவ்வாறெல்லாம் திருட்டு நிகழும் எனக் களவு நூற் கருக்கமொன்று காணப்படும். சிலப்பதிகார காவியம்,

மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தம்
தந்திர மிடனே காலங் கருவியென்று
எட்டுட னன்றே இழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்கள் துணையெனத் திரிவது

எனக் கூறி இவ் எட்டில் ஒவ்வொன்றும் திருடர்களுக்குப் பயன்படும் விதத்தைத் தெளிவிக்கின்றது. மணிகள் விற்கும் வீதிகளைக் குறிக்க நேர்ந்தால், இரத்தின பரீக்ஷை சுருக்கமாக உரைக்கப்படும்.

காக பாதமுங் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி யியல்பிற் குன்று
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்
ஏகையு மாலேயும் இருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்
பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்
பூச வுருவிற் பொலந்தெளித் தனையவும்
தீதறு கதிரொளித் தெண்மட் டுருவவும்
ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பின்
இலங்குகதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்...
வகை தெரி மாக்கள் தொகை பெற்றோங்கிப்
பகைதெற லறியாப் பயங்கெழு வீதியும் (ஊர்காண். 180-200)

என்பது சிலப்பதிகாரம். இக்காவியத்துள்ள அரங் கேற்று காதை பரதநாட்டிய சாஸ்திரத்தில் இதன் ஆசிரியர் பாண்டித்தியம் வாய்ந்தவரென்பதைப் புலப் படுத்துகிறது. இதுபோன்ற பாண்டித்தியப் பகுதிகள் பல.

மேற்கூறியனவெல்லாம் காவியங்களிற் கல்வித் துறைகள் பல புலப்படுமென்பதை உணர்த்துகின்றன. கற்போருக்கு இன்பம் விளைக்கும் வகைகளுள் இவையும் ஒருவகையைச் சார்ந்தன. வேமுெரு வகையாலும் காவியங்கள் இன்பமூட்ட முயன்றன. சாதாரணமாக மக்களது அனுபவத்தில் வரக்கூடிய நிகழ்ச்சிகளை அடிக்கடி கைவிட்டு, அனுபவத்தில் வரக்கூடாத பலவற்றைநூலில் இவை அமைத்துவிடுகின்றன. இவ்வாறுள்ள விநோத நிகழ்ச்சிகளிலும் அற்புத நிகழ்ச்சிகளிலும் மனத்தைச் செலுத்தி மகிழும்படி இக் காவியங்கள் செய்கின்றன. கதையின் உண்மைத்தன்மையும், பாத்திரங்களின் குண அமைதியையும் இவை பொருட்படுத்தவில்லை. உண்மை முதலியவற்ருேடு இயைபில்லாத நிகழ்ச்சிகளில், நமது வியப்புணர்ச்சியைத் தூண்டுவிக்கும் அதிசயநிகழ்ச்சிகளில் நமது மனம் ரமிக்கிறது. இந் நிகழ்ச்சிகளைக் கூறுதலிலே, காவிய ஆசிரியனது மனுேபாவனை யாதொரு நியதியுமின்றிச் சஞ்சரிக்கிறது. இயற்கை யுலகிலே, கண்முகப்பிலே காணும் நிகழ்ச்சிகள் மனித-இருதயத்தை நொறுக்கிவிடக்கூடியவை. இவற்றை நோக்காது தூய அமைதியான பாவனை யுலகில் கவிஞன் புகுகின்முன். பாவனையுலகின் சிருஷ்டிகர்த்தா அவனே; அதில் சர்வ சக்திமானுய் ஆட்சிபுரிபவனும் அவனே. அற்புதவுணர்ச்சியை விளைவிக்க வேண்டுமென்ற ஒரு முயற்சியே அவனிடம் காணப்படுகிறது. இம் முயற்சியை நிறைவேற்றுவதற்கு மந்திரங்கள், மாயைகள், தந்திரங்கள் முதலியன கையாளப்படுகின்றன. லளிதமான கருத்து நுட்பங்கள் நிகழ்கின்றன. அலங்கார வாசகங்கள் மிதமிஞ்சி அணிசெய்கின்றன. இங்குக் கூறியவற்றையெல்லாம் சீவக சிந்தாமணியிலுள்ள காந்தருவ தத்தையார் இலம்பகம் நன்கு தெளிவுறுத்துகிறது. தரன் என்ற வித்தியாதரனது செயல்கள், நிமித்திகன் கூற்றுக்கள்,

அவன் சொற்படி காந்தருவதத்தையை வீணாபதி யென்ற சேடியுடன் விமானத்தில் ஏற்றி ஸ்ரீதத்தனது நகருக்கு அனுப்புதல், கடலிற் கவிழ்ந்த பொருள்களையும் தோழரை யும் தரன் தனது வித்தையின் மகிமையால் ஸ்ரீதத்தனிடம் சேர்ப்பித்தல் முதலியன நாம் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன.

இவ் இலம்பகத்தில் சீவகனுக்கும் காந்தருவதத்தைக் கும் நிகழ்ந்த யாழ்ப்போரில், சீவகன் வெற்றிபெற்றுத் தத்தையை மணம் புரிகின்றான். இவன் பகைவனை கட்டியங்காரன் தூண்ட, சுயம்வர மண்டபத்திற் கூடி யிருந்த மன்னர்கள் இவன்மீது பகைத்தெழுந்து போர் புரிகின்றனர். இப்போரும் காவியங்களில் அடிக்கடி காணும் ஒரு செய்தியைத் தெரிவிக்கிறது. வீரயுகத்தில் நிகழ்ந்த போருக்கும் இப்போருக்கும் உள்ள வேற்றுமை நோக்கத்தக்கது. இப்போர் பின்னணி சங்கீதம்போலப் பின்தங்கி அமிழ்ந்துவிடுகிறது. இது வேட்டையாடுதல் முதலியனபோல, வினோதார்த்தமாக மேற்கொண்ட ஒரு செயலேயன்றி, ஆத்ம சக்தி முழுதும் வேண்டப்படும் ஒரு வாழ்க்கை நெறியன்று. காதல்பற்றிய நிகழ்ச்சிகள் மேற்பட்டு, போர் அதற்கு அனுகூலவர்த்தியாய் நடை பெறுகின்றது.

மேற்கூறியவற்றால் ஒரு முக்கியமான காவிய-இயல்பு வெளிப்படுகிறது. காவிய நிகழ்ச்சிகளின் நிலைக்களம், கேந்திரஸ்தானம், செய்கை-யுலகு அன்று; கருத்து - உலகு ஆகும். செய்கை யுலகினின்று கருத்துலகிற்குக் கேந்திரஸ்தானம் மாறிவிடுகின்றது. நீல விதானம்போல் அமைந்திருக்கும் விண்மண்டலத்தின் கீழாக, பரந்த வெளியிடங்களிலே செயல்கள் நிகழாதபடி, மனமாகிய அரண்மனையிலே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. யாது செய்வது என்று துணிதலைவிட்டு, எவ்வாறு, எம்முறை களைப் பின்பற்றிச் செய்வது என்று உபாயங்களை

ஆராய்வதில் பொழுது கழிகின்றது. சரீரபலத்தால், அனுபவ விளைவாக வந்த அறிவு வன்மையால் துணிகரச் செயல்கள் ஆற்றிப் போர்புரிந்து ஒழுகுதல் கைவிடப் பட்டு, மனச்சாக்ஷியை துணைக்கொண்டு மனத்தைத் துழாவி வாழ்க்கைக்கு வேண்டும் சூழ்ச்சிகளில் முயற்சி நிகழ்கின்றது. இவ்வேறுபாட்டை ஆர்.எல். ஸ்டீவென்ஸன் தமது காவியம் பற்றிய நூலொன்றில் (ஏ காசிப் ஆப் ரொமான்ஸ்) விளக்கமாகத் தந்திருக்கின்றார். இவரைப் பின்பற்றி டிக்ஸன் ஆசிரியரும் எழுதியுள்ளார் (பக். 112).

இவ்வாறாக, காவியம் செயலைவிடுத்துக் கருத்திற் புகுகிறது. பாத்திரங்களின் குணங்கள் செயலால் வெளிப்படுதலைக் காட்டாது, குணங்களை வர்ணிப்பதிலே முயற்சிகொள்ளுகிறது. நிகழ்ச்சிகளிற் காட்டினும் அவற்றிற்கு அடிப்டையாகவுள்ள நோக்கங்களிலும் கருத்துக்களிலும் ஈடுபடுகிறது. ஊனக் கண்ணால் நோக்கக் கூடியவற்றை ஒதுக்கிவிட்டு, மானஸிகக் கண்ணாற் புலப் படக்கூடியவற்றில் ஆழ்ந்து விடுகிறது. எனவே கதை நிகழ்ச்சி நம்மைக் கவர்ந்துவிடுந் தன்மையை இழந்து விடுகிறது. இராமன் தன் பேராற்றலால் வில்லொடித்தது, அவன் சித்திர கூடத்தில் சீதையுடன் தங்குதற்கு இலக்குமணன் பர்ணசாலை அமைத்தது, இலக்குமணன் இரவும் பகலும் உறக்கமின்றி அவர்களைக் காத்து நின்றது, குகன் பரதனைச் சந்தித்து அவனது உண்மை நிலையை அறிந்தது, சுக்கிரீவனை அழைத்துவரச் சென்ற இலக்குமணன் தாரையையும் அவளைச் சூழ்ந்துவந்த வானர மங்கையரையும் கண்டு நாணி நின்றது, மானைப் பிடித்துவரச் சென்ற இராமனைத் தேடிவர இலக்குமணனைச் சீதை கடுஞ்சொற் சொல்லி அனுப்பியது, சீதையின் தூயதன்மையை அநுமன் கண்டு மகிழ்ந்தது, பரதன் இராமனைக்கண்டு நகரத்திற்கு மீளும்படி சொல்ல, அவன் மறுக்க, அவனது பாதுகையைப் பெற்று மீண்டு அரசு

பிடத்தில் வைத்துப் பிரதிநிதியாக அயோத்தியில் இருந்தது, கும்பகர்ணனை விபிஷணன் போர்க்களத்தில் சந்தித்தது, இந்திரசித்துக் கடைசி முறையாக இராவணனைப் பிரிந்து போர்க்குச் சென்றது முதலிய நிகழ்ச்சிகள் நமது கண்ணையும் கருத்தையும் விட்டு அகலாத வசீகர சக்தி வாய்ந்தன. பிற செயல்களை நாம் மறந்துவிடலாம். இங்குக் கூறிய செயல்களை எடுத்துக்கூறும் அழகுமிக்க செஞ்சொற்களையும் நாம் மறந்துவிடலாம். கவிஞன் இச் செயல்கள் பற்றி எழுதும் விவரங்கள் நம் மனத்தை விட்டுச் சென்றுவிடலாம். ஆனால் மேற்குறித்த காட்சிகள் கதையின் கவித்வவுண்மையை நமக்குப் புலப்படுத்தி, அவற்றில் நம் உள்ளம் ஈடுபட்டு இன்புறும்படிசெய்து விடுகின்றன. காலம் இடமுதலியவற்றால் இக்காட்சிகள் நம் மனத்தை' விட்டு மறைந்துவிடுவனவல்ல. ஒருவனது குண முழுவதையும், கருத்து முழுவதையும்,உணர்ச்சி முழுவதையும் ஒரு சிறுசெயலால் நமது மனக்கண் முன்னே என்றென்றும் நிறுத்திவிடும் அற்புதசக்தி கவித்வவுலகத்துப் பேரரசுகளுக்கே வாய்ப்பது. இங்ஙனம் அமைந்த செயல்கள் இளைஞர்களையும் முதியோர்களையும் ஒருங்கே இன்புறுத்துந்தகையன. இவை பெரும்பாலும் இதிகாசங்களிலே தான் காணப்படும். சிலப்பதிகார காவியத்தில் இத்தகைய செயல்கள் ஒரு சில உள்ளமை இளங்கோவடிகளின் கவித்வப்பெருமைக்கு ஒரு சான்றாகும். சிந்தாமணி முதலிய பிற தமிழ்க் காவியங்களில் இவ்வகைச் செயல்கள் காணப்படமாட்டா.

செயல் நிகழும் புறவுலகை நீத்துக் கருத்து நிகழும் அகவுலகில் காவியம் சஞ்சரிக்கின்றது எனக் கூறினேன். இதனாலும் ஓர் இயல்பு நமக்குப்புலப்படுகின்றது. அகவுலகிலே காதலுணர்ச்சிகள் நிகழ்தல் முற்றும் இயற்கையோடு பொருந்தியதேயாம். வெளியுலகில் புறத்துநிகழும் செயல்களினின்று தன்னை

ஒடுக்கிக்கொண்ட மனத்திற்கு இக்காதலுணர்ச்சி ஏற்படுதல் முற்றும் இயற்கை நெறியென்றே சொல்லலாம். காவியத்தில் இவ்வுணர்ச்சியே பிரதானமாகவுள்ளது. போர் நிகழ்ச்சி புறக்கணிக்கப்பட்டு, காதல் நிகழ்ச்சி மேம்பட்டுவிடுகிறது என நான் முன்னே கூறியது இதற்கு ஒரு சான்றாகும். சங்க காலத்தில் காதல் நிகழ்ச்சிகள் எதேச்சையாய்ப் பெரும்பாலும் தடைகளின்றி நடை பெற்று வந்தன. பின்னர் சமயங்கள் செழித்தோங்கின. ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தே பெண்கள் ஆன்ம வளர்ச்சிக்கும் முக்தி நெறிக்கும் இடையூறாக வுள்ளார்கள் என்னும் கருத்துப் பிறந்து வரவர வலிமைபெற்று வந்தது.

தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே (மந்தரை சூழ்ச்சி. 21)

என்றனன் கம்பன்.

'மகளிரிழிவு' என்பது நமது நீதி நூலாசிரியர்களில் ஒருசிலர் ஓயாது வற்புறுத்திவந்த ஒருபொருளாகும். ஆனால் காதலுணர்ச்சி இயற்கை யன்னையால் ஊன்றப்பட்ட ஒரு வித்து அல்லவா? அதனை நசித்து முற்றும் ஒழித்து விடுதல் யார்க்கும் இயலாததாம். எவ்வளவுக்கெவ்வளவு அதனைத் தடுத்துச் சிறைப்படுத்துகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அது வேறு வழிகளில் மறைமுகமாய்க் கிளம்பி விடுகிறது.

தேர்விடத் தென் னுள்ள நிறை
தெள்ளமுதே உன்னிலைமை தேரா திங்ஙன்
ஊர் விடுத்தும் போர் தொடுத்தும்
உனையகல நினைத்தது மென் ஊழே ஊழே

எனத் தன் கனவுக் காதலியை நினைந்து புருஷோத்தமன் புலம்புவதாக ஆசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுவது மிகவும்

உண்மையாம். சமயக் கொடுங்கோன்மையால் அடக்கப் பட்ட இக்காதலுணர்ச்சி, சமயக்கிளர்ச்சிக் காலத்துக்குப் பின்பு வந்த காவியகாலத்தில் பலவாறாக வெளிப்படத் தொடங்கிற்று. ஆகவே, காவியங்களில் இக்காதலுணர்ச்சி களும் நிகழ்ச்சிகளும் மிகுதியாய்க் காணப்படுவனவாயின. இதற்கு உதயணன் பெருங்கதை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். நமது நாட்டில் இக்காதலுணர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடைய சமய உணர்ச்சியும் காவியங் களில் மிக்குள்ளன. இதுபற்றிப் பின்னர் நோக்குவோம்.

பெண்கள் மெல்லியலார். அவர்கள் காரணமாக எழும் காதலும் மென்மைத் தன்மை பொருந்தியது. வள்ளுவரும்,

> மலரினும் மெல்லிது காமம்; சிலர் அதன்
> செவ்வி தலைப்படு வார்

என்று காதலின் இயல்பைத் தெரிவித்துள்ளார். இப் பெண்களையும் பெண்கள்பற்றிய காதலையும் பொரு ளாக்கிக் கதை நிகழ்த்தும் காவியமும் மென்மைத் தன்மை அடைந்துவிடுகிறது. காவியத்தைப் பெண்ணியல்பு உடையதென்றே கூறிவிடலாம். லளிதவுணர்ச்சியும் அலங்காரப்பிரியமும் காவியங்களிற் காணப்படுகின்றன. 'நாணுவார் போன்று நாணற்று நிற்கும்' நிலையும் இக்காவி யங்களில் உள்ளன. காவியத்தின் கதியும் விருத்த பேதங்களால் மெல்லியலார் நடையை ஒத்து இயல்கின்றது. இதற்கு மாறாக, இதிகாசங்களிற் காணப்படுவது வீரப் பெருமித நடை. அஞ்சாமை, ஆண்மை முதலிய பௌருஷ லட்சணங்கள் இதிகாசங்களில் பிரதிபலிக் கின்றன.

மேலே விவரித்தனவற்றை நோக்கினால், காவியங் களின் பொது-இயல்புகள் சில தெளிவாகின்றன. காவி யங்கள், சார்பில் தோன்றும் இலக்கியங்கள். அவைகள்

பல துறைகளிலும் கல்வி மிகுந்தகாலத்தே பிறந்தன. கலையுணர்ச்சி அவற்றில் மிகுதியாய்க் காணப்படும். எனவே அலங்கார வாசகங்களும், வர்ணனைகளும், பாண்டித்தியமும் அவற்றில் மிக்கு விளங்கும். மக்களது சாதாரண அனுபவ விஷயங்களை முக்கியப் பொருளாகக் கொள்ளாது, புதுமையை நாடிச் சென்று அற்புத விஷயங்களைப் பொருளாகக்கொண்டு நமது வியப் புணர்ச்சியை இக்காவியங்கள் தூண்டும். போர் நிகழ்ச்சி களை அப்பிரதானமாக்கி, காதல் நிகழ்ச்சிகளை முக்கிய மாகக் கொள்ளும்; எனவே சிருங்கார ரஸம் பிரதானமா யிருக்கும். புறத்தே நிகழும் செயல்களிற் காட்டிலும், அகத்தே நிகழும் கருத் துலகில் அது சஞ்சரித்து வரும். காவியம் பெண்ணியல்பு மிக்கது என்று கூறுதல் பொருத்த மாகும்.

உலகிலுள்ள இதிகாசங்களிலும் காவியங்களிலும் பெரும்பாலானவற்றை ஆராய்ந்து வீர சரிதங்கள் நான்கு வகைப்பட்ட நிலைகளைப் படிப்படியாய் அடைந்து வந் துள்ளன என்று ஆசிரியர் சாட்விக் தமது 'ஹிரோயிக் ஏஜ்' என்ற நூலில் முடிபுகட்டினர். இந்நிலைகளை இனி நோக்குவோம்.

இந்நிலைகளுள் முதலாவது வீரயுகத்தில்தானே வீரத் திற் சிறந்து விளங்கிய அரசரைப் பற்றிப் பாடல்கள் தோன்றிய நிலை. இம்முதல் நிலைக்கு அரசர்களது வீரத் தையும் வெற்றியையும் புகழ்ந்து பாடிய பாடல்கள் உரியன. இப்பாடல்களை அரசவாகையில் புறப்பொரு ளிலக்கண நூலார் அடக்குவர். அரசர்கள் இறந்தவுடன் பாடிய இரங்கற் பாடல்களும் இம் முதல்-நிலையின்பாற் பட்டனவே. இவ் இரங்கற் பாடல்களைக் கையறுநிலை என்னும் துறையில் இலக்கண நூலார் அமைப்பர். அரச வாகையைக் கீழ்வரும் செய்யுள் நன்கு விளக்கும்:

கையது வேலே; காலன புனைகழல்;
மெய்யது வியரே, மிடற்றது பசும் புண்;
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட வூசி வெண்தோட்டு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரை இச்
சுரிபிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாருது சினனே; அன்னே
உய்ந்தன ரல்லர் இவன் உடற்றியோரே
செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பானுவே (புறம். 100)

கையறு நிலையைக் கிழ்வரும் செய்யுள் சோகச் சுவையுடன் புலப்படுத்தும்:

இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே (புறம். 242)

இச்செய்யுட்கள் வீர யுகத்திற்கு உரியனவென்பதில் சிலர் உடன்படாமலிருத்தல் கூடும். ஆசிரியர் சாட்விக் 'வீர யுகத்தின் இம்முதல் நிலையிலிருந்து யாதொரு பாடலும் நமக்குக் கிடைக்கவில்லை யென்றே தோன்றுகிறது' என்று எழுதினர். மிகமிகப் பூர்வகாலத்தே இம்முதல் நிலை நிகழ்ந்தது என்னும் கருத்தால் இவ்வாறெழுதினர் என்று நாம் நினைக்க இடமுண்டு. புறநானூற்றுச் செய்யுட்கள் பல்வேறு காலத்தில் இயற்றப்பட்டன. இவற்றைத் தொகுத்துப் புறநானூறு எனப்பெயரிட்ட காலம் பிற்பட்டதென்பது உறுதி. ஆனல் ஒரு சில செய்யுட்களேனும் கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டன என்று கொள்ளலாம். எவ்வாருயினும், இச்செய்யுட்கள்

இம்முதல்-நிலையிற் செய்யுட்கள் இன்ன நெறியில் அமைந்திருந்தன என்பதை நமக்கு உணர்த்துகின்றன. இதில் சிறிதும் ஐயப்பாடு வேண்டாததாம்.

இரண்டாவது நிலையில், இதிகாசங்களும் இவற்றில், வரும் சரிதங்களைக் குறித்த செய்யுள் நூல்களும் தோன்றின. இவை அரசரது அரண்மனை வாழ்க்கையின் விளைவு என்பர். இலியத், ஒதிஸ்ஸி என்பனவும், ப்யோவல்ப்வ் முதலியனவும் இவ் இரண்டாம் நிலைக்கு உரியன. நமது தேசத்தில் வடமொழியில் வழங்கும் மகாபாரதமும் இராமாயணமும் இந்நிலைக்கு உரியனவே. இதிகாசங்களை முன்முறை-இதிகாசம், பின்முறை-இதிகாசம், என நான் பகுத்துக் காட்டியது மனங்கொள்ளற் பாலது. தமிழ் மொழியில் இந்நிலைக்கு உரியதாக யாதோர் இலக்கியமும் இல்லை. தொகை நூல்களில் மிகப் பழையன வாகிய பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் மகா பாரதச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. இதனால் வடமொழியில் இவ் இதிகாசங்கள் தோன்றி ஒரு சில நூற்றாண்டு கட்குப் பின்னரே, இச்செய்திகளைக் குறிப்பிடும் தமிழ்ச் செய்யுட்கள் இயற்றப்பட்டன என்று நாம் கொள்ளலாம். அறிஞர் ஒரு சிலர் மகாபாரதப் போர் நிகழ்ந்த காலத்தே புறநானூற்றுச் செய்யுளொன்று (புறம். 2) தோன்றியதென்று கட்டுரைப்பர். இதனை உண்மையென்று கருதும் ஆராய்ச்சியாளர் யாரும் இல்லை.

மூன்றாவது நிலையில், கதைப் பாட்டுக்கள் சில பொது மக்களிடையே தோன்றின. சிலப்பதிகாரக் கதையை இதற்கு உதாரணமாகக்கூறலாம். இவ்வழகிய காவியம் பழங்காலத்து வழங்கிய ஓர் கதையைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டதாம். 'தொன்மை' என்பதற்கு உதாரணமாக இக்காவியத்தை உரைகாரர்கள் காட்டுதலால், இதன் உண்மை புலப்படும். பாட்டுவடிவில் இக்கதை வழங்கிவந்த தென்பதற்கும் தக்க சான்றுகள்

உள. இம் மூன்ருவது நிலையில் தோன்றியகதைப் பாட்டுக்களைக் குறித்து ஆசிரியர் சாட்விக் கூறுவது நோக்கத்தக்கது. 'நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளால் சில முடிபுகள் துணியத்தக்கன. பல கூறுகள் ஒன்ருேடொன்று பின்னிச் சிக்கலாயமைந்த கதைகள் அப்பிரதானமான பாத்திரங்களை நீக்குதலினுலே சுருக்கமும் எளிமையும் எய்தின. ஆதியில் ஒன்ருேடொன்று தொடர்பற்றிருந்த பல கதைகள் தொடர்பு அமைந்து கலந்து ஒன்றுபட்டன. அன்றியும், இக் கதைகள் வாழ்க்கை வரலாறுகளாக அமைதற்கு மிகவும் பொருந்தியன என்று தோன்றுகிறது. இவற்றிற்கு மாருக, அரண்மனை வாழ்க்கை பற்றிய கதைகள் சில நாட்களே நடைபெற்ற ஏதேனும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டிருந்தன. மேலும் முற்கூறிய கதைகளில் அரண்மனை வாழ்க்கையின் ஆழ்ந்த அனுபவங்கள் காணப்படுதலில்லை. பொதுமக்களிடை வழங்கும் கதைகளுக்குரிய இயல்புகளை இவை பொதுவே பின்பற்றி அமைந்துள்ளன. பெயரும் புகழுமற்றவர்களும், (அரசர் முதலியோரை விடத்) தாழ்ந்தபடியிலுள்ளவர்களும் ஆகிய பாத்திரங்கள் இக்கதைகளில் அமைக்கப்பெறுகின்ருர்கள்.'

இங்குக் கூறியவற்றில் பெரும்பாலன சிலப்பதிகாரக் கதைக்குப் பொருந்துதல் எளிதில் உணரலாம். 'பிராம்மிணியும் கீரிப்பிள்ளையும்' பற்றிய கதைகள் முதலியன முக்கியமான கோவலன் கதையோடு இணைக்கப்பட்டுள்ளன. கோவலன், கண்ணகி என்ற முக்கிய பாத்திரங்களின் சரிதம் பிறப்புத் தொடங்கி இறுதிவரை கூறப்படுதலால் வாழ்க்கை வரலாற்று நெறியைச் சிலப்பதிகாரம் மேற்கொண்டுள்ளது. கரிகாலனது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு சிலப்பதிகாரக் கதைக்கு இல்லாமை உணரத்தக்கது. நூலினகத்து

முதலிரண்டு காண்டங்களில் ஓரிடமே இங்குக் குறிக்கத் தக்கது.

> விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
> தண்பதங் கொள்ளும் தலைநாட் போல (6, கடலாடு, 159-160)

என்ற அடிகளில் கரிகால் வளவன் புதுப்புனல் விழவு கொண்டாடுந் தலைநாள் உணர்த்தப்படுகின்றது. இதனை அச் சோழனது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டதெனத் துணிதல் பொருந்தாது. வேறு சில இடங்களும் இங்ஙனம் உள. வஞ்சிக் காண்டத்தில் சேரன் செங்குட்டுவனது வாழ்க்கைப் பகுதியெனக் கொள்ளுதற்குரிய சில அம்சங்கள் உள்ளன. ஆனால் இக்காண்டம் பிற்சேர்வென்பது ஆராய்ச்சியாளர் சிலரது கொள்கை. எங்ஙனமாயினும் கோவலன் கதையைச் சார்ந்த பின்வரலாறு என்றே இக்காண்டத்துக் கதையைக் கொள்ளுதல் வேண்டும். கதாநாயகனும் நாயகியுமாகிய கோவலன் கண்ணகி என்ற இருவரும் அரச குலத்திற்குத் தாழ்ந்த வருணத்தவராயிருப்பதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

இம் மூன்றும் நிலையிலுள்ள கதைப் பாட்டுக்கள் கி. பி. 8-ம் நூற்றாண்டிலும் அதற்குப் பிற்பட்ட காலத்தும் தோன்றின என்பர் ஆசிரியர் சாட்விக். இக்கால வரையறையும் சிலப்பதிகாரக் கதைக்குப் பொருந்துமாறு இக் காவியத்தின் காலம்பற்றி நான் எழுதியுள்ளனவற்றால் விளங்கும்.

இறுதியாக, நான்காம் நிலை தோன்றுகிறது. இதில் வீர புருஷசரிதம் மீண்டும் அரசர்களாலும் வள்ளல்கள் முதலிய உயர்குடிப் பிறப்பினராலும் விரும்பிப் போற்றப் படுகிறது. இந்நிலையின் காலம் 12-ம் நூற்றாண்டும் அதற்குப் பிற்பட்ட காலமுமாம் என்பர் சாட்விக். நமது நாட்டில் 12-ம் நூற்றாண்டில் தோன்றிய

கம்பராமாயணம் இந்த நான்காம் நிலைக்கு உரியதென்பதில் சந்தேகமில்லை. இப்பேரிலக்கியம் இராமசரிதம் பற்றியது. இராமன் ஒரு வீர புருஷன் என்பது பிரசித்தமே. வால்மீகி பல இடங்களிலும் இராமனை 'வீரன்' என்றே குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக.

புகஸ்தம் பரிபப்ரச்ச ப்ராஞ்ஜலி: ப்ரணதோ ந்ருப
இமௌ குமாரௌ பத்ரம்தே தேவதுல்ய பராக்ரமௌ
கஜஸிம்ஹ கதி வீரௌ சார்த் தூல வ்ருஷபோமபௌ
பத்ம பத்ர விசாலாக்ஷௌ கட்க தூணீத நுர்தரௌ

(பால. 50, 17-18)

என இராம லட்சுமணர்கள் வருணிக்கப்படுகிறார்கள். முதல் ஸர்க்கத்தில் நாரத வாக்யத்தில் 'வீர்யவான்' (2) எனவும், 'மஹா வீர்ய,' (8) எனவும் 'ஸுவிக்ரம:' எனவும் 'விஷ்ணுநா ஸத்ருஸ வீர்யே' (18) எனவும் இராமன் கூறப்படுகிறான். வால்மீகியைப் பின்பற்றி, கம்பனும்,

நோக்கினான் நெடிது நின்றான் நொடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய வுலகமெல்லாம் அன்று தொட்டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவமாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த என்பான்

(மராமரப். 56)

என இராம லட்சுமணரை வருணிக்கிறான். வீரன் (பரசுராமப். 35, நகர் நீங்கு. 235) எனவும் 'விற்பெருந் தடந்தோள் வீர' எனவும் இராமனைக் குறிப்பிடுகிறான். இராமனது வீரச்செயல் நிரம்பியுள்ள இப்பேரிலக்கியங்களில் இவனை 'வீரன்' எனக்குறிப்பிடுதலில் சிறிதும் வியத்தற்கில்லை. இவன் எத்துணைத்தெய்வத் தன்மையெய்தியபோதிலும், தெய்வமாகவே பரிணமித்து விட்டபோதிலும், வீர புருஷன் என்ற இயல்பு மறைந்து விடவில்லை. இவன் சரிதத்தைச் சோழ அரசர்கள்

பெரிதும் போற்றினார்கள். கம்பராமாயணமும் இவர்கள் காலத்தே தோன்றி இவர்களாலும் பொதுமக்களாலும் பெரிதும் போற்றப்பட்டது.

இங்ஙனமாக ஆசிரியர் சாட்விக் கூறிய நான்கு நிலைகளும் நமது தேசத்துள்ள இதிகாச காவிய சரித்திரங்களுக்கும் பொருந்துவனவாயுள்ளன. பிற நாடுகளிலுள்ள இலக்கியங்களையும் நமது இலக்கியங்களையும் ஒப்பிட்டுக் கற்கவேண்டுமென்பதை இங்குக்கூறிய நிலைகள் வற்புறுத்துகின்றன.

5. காவியங்களின் ஒடுங்கு தசை

இதுகாறும் காவியங்களின் பொது வியல்புகளை நோக்கினோம். இனி அவற்றின் ஒடுங்கு தசையை கவனிப்போம்.

நாம் ஆராய்ந்து வந்த காவியத்தின் கதியை இரண்டு பெருஞ் சக்திகள் இயக்கிவந்தன. ஒன்று சமயம் அல்லது மதம்; மற்றொன்று அற்புதக்கதை மோகம் (ரொமான்ஸ்). பிறநாட்டு இலக்கிய சரித்திரங்களிலும் இவ் இரு பெருஞ்சக்திகளும் இலக்கியங்களை நெறிப் படுத்தியுள்ளமை இங்கு அறியத்தக்கது. உதாரணமாக, ஆங்கில இலக்கிய வரலாற்றில் நார்மன் வெற்றிக் காலந் தொடங்கிச் சுமார் 450 ஆண்டுகளாக (கி. பி. 1066-1500) ஆங்கில இலக்கியத்தை இவை நெறிப்படுத்தின என்றுஅறிகின்றோம்(க்ராஷா: திமேக்கிங் ஆப் இங்கிலிஷ் லிட்டெரேச்சர், பக். 35-37). உலகப்பற்று மிக்கவர் களாய் வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையே சமயப்பற்று மிகுந்த ஆரிய மக்களின் வரவு தமிழ் மக்களையும் சமய வுணர்ச்சியில் ஈடுபடும்படி செய்தது. நாளடைவில் ஆரிய மக்களும் தமிழ்மக்களும் இரண்டறக்கலந்து விட்டனர். இதன்பின் சமயவுணர்ச்சி சுமார் கி. பி. 5-ம் நூற்றாண்டி லிருந்து சிறிது சிறிதாக வளரத்தொடங்கியதென்று கொள்ளலாம். பின்னர் சுமார் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இவ்வுணர்ச்சி மிகச் செழிப்புற்று ஓங்கித் தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் பெரிதும் இடம் பெற்றது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் இவ் வுணர்ச்சி பெருகி நாடுமுழுதும் பரவுவதற்குக் காரண மாயிருந்தார்கள். சமயவுணர்ச்சியோடு பௌராணிகக்

கதைகளையும் அக்காலத்து மக்கள் கற்று மகிழ்ந்து வந்தனர். பின்னர், இவர்களது உள்ளம் பௌராணிகக் கதைகளினின்று அற்புதக்கதைகளில் செல்லுவதாயிற்று. இங்ஙனமாக, சமயப்பற்றும் அற்புதக் கதை மோகமும் தமிழ்நாட்டு மக்களை ஆட்டுவித்து வந்தன. எனவே அக்காலத்தே இவ் இரு பெருஞ்சக்திகளும் காவியமாகிய சரீரத்திற்கு உயிராக அமைந்தன.

ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் அற்புத விளைவுக் கதையாகவே பெரும்பாலும் உள்ளது. மணிமேகலையும் சிந்தாமணியும் சமயப்பற்று, அற்புதக் கதை மோகம் என்ற இரண்டு சக்திகளாலும் இயக்க மெய்திச் செல்லுகின்றன. குண்டலகேசி சமயவுணர்ச்சி மீதூரப் பெற்று இயல்கின்றது. சிலப்பதிகாரத்திற்கு முன்னர்த் தோன்றிய உதயணன் பெருங் கதையில் அற்புதக் கதை மோகமே காணப்படுகிறது. சிந்தாமணிக்குச் சற்றுப் பின் தோன்றிய சூளாமணியும் தன்மையில் அந்தப் பெருங் காப்பியத்தைப் போன்றுள்ளதே. இவற்றிற்கு மாறாக, 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய பெரிய புராணம் சமயப்பற்று மேம்பட்டு, அற்புதக் கதைக்குரிய கலையுணர்ச்சி குன்றி, அற்புதங்கள் மட்டும் மிகுந்து, சமநிலை தவிர்ந்து சமய நூலாகவே பரிணமித்துவிட்டது. இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய கம்பராமாயணம் சமயப் பற்றினை அடிநாதமாக்கி, கலையுணர்ச்சி மேம்பட்டு இன்னிசை ததும்ப அமைந்துள்ளது. ஆனால் பெரிய புராணம் காட்டிய நெறியையே தமிழ்நாட்டு மக்களது உள்ளம் பின்பற்றுவதாயிற்று. எனவே சமயவுணர்ச்சி மேம்பட்ட புராணங்களே தோன்றுவனவாயின. கலையுணர்ச்சி குன்றி அல்லது அறவே மாய்ந்து, அவ்வுணர்ச்சியோடு கலந்த அற்புத வளைவுகளுமின்றி, காவியம் விளைதற்குறிய நன்னிலமே களைநிரம்பி வளரலாயிற்று.

சமயவுணர்ச்சியில் மனத்தைப் பறிகொடுத்தவர்கள் இலக்கியங்களைச் சிறிதும் பொருட்படுத்தமாட்டார்கள். இதற்குச் சான்ருக, சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்தில் கூறுவதைக் காட்டலாம். அது வருமாறு:—

பாணிக்கவாசகர் அறிவாற்சிவனே யென்பது திண்ணம்: அன்றியும், அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமை திருக்கையால் எழுதினர். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை[1] சங்கப் பாட்டு, கொங்கு வேண்மாக் கதை முதலியவற்ருேடு சேர்த்து அச்செய்யுட் களோடு ஒன்ருக்குவர்...அவர் அதுமட்டோ, இறையனு ரகப்பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப் பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும், ஓர் பொருளாக எண்ணுது, நன்னூல், சின்னூல் அகப்பொருள், காரிகை, அலங்கார முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, இராமன் கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணி வாளுள் வீணுள் கழிப்பர். அவர் இவைகளிருக்கவே அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழு மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போல அவரது இயற்கை யென்க.

இவ்வகைப்பட்ட மனப்பான்மை காவியங்களைப் போற்றுதல் செய்யாது என்பது தெளிவு. ஜைனர் களுக்கும் வைதிக சமயத்தவர்களுக்கும் இருந்த உட்பகை

1 சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கப் பாட்டில் அடங்காதன என்று எண்ணப் பட்டுள்ளமை கருதத்தக்கது.

மையால் இம்மனப்பான்மை பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்ததேயன்றிக் குறைவுபடவில்லை. வைதிக சமயங்களுள்ளும், சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் இருந்த உட்பகைமையும் இம்மனப் பான்மையை வளர்த்து வந்ததென்பது பிரசித்தம். எனவே, சமயவுணர்ச்சி செவ்விதாக அன்றிச் சீர்கேடுற்றமை காவியத்தின் ஒடுங்கு தசையின் ஒரு முக்கிய காரணமாகும்.

அன்றியும் காவியங்கட்குரிய பொருள்களை நமது முன்னோர்கள் பெரும்பாலும் வடமொழியிலக்கியங்களி னின்றும் பெற்று வந்தார்கள். இது முற்கூறிய காவிய வரலாற்றினால் நன்கு தெளியப்படும். இராமாயணம் தமிழ் மொழியில் இயற்றப்பெற்றாய் விட்டது. மகாபார தமும் பலமுறை பலரால் மொழி பெயர்த்தும் பிறவாறும் தமிழில் அமைக்கப் பெற்றுவிட்டது. இவையேயன்றி ஜைன சரித்திரங்கள் சிலவும் தமிழில் ஆக்கப்பட்டு முடிந்தன. இந்த சமயம் க்ஷீணித்து விட்டமையால், இது பற்றிய பிற சரித்திரங்கள் தமிழில் அமைக்கப்படாமற் போயின. இங்ஙனமாக காவியத்திற்குரிய புதிய வட மொழி மூலங்கள் இலக்கிய கர்த்தர்களுக்குக் கிடைக்க வில்லை. இக்காரணத்தாலும் காவியங்கள் ஒடுங்கு தசையை அடைந்தமை தெளிவாம்.

மேலும், 13-ம் நூற்றாண்டுக்குப் பிற்பாடு, நமது தமிழ்நாட்டு மக்கள் வடமொழி யிலக்கியங்களையும் பிற மொழி யிலக்கியங்களையும் கற்று, அவற்றினின்றும் மொழிபெயர்ப்பு முதலியன செய்து, நமது இலக்கிய வளத்தைப் பெருக்க முயன்றார்கள் எனக் கூற முடி யாது. இவ் விஷயங்களில் பெரும்பாலர்க்குப் பரந்து பட்ட அறிவு இல்லை. ஒரு சிலர்க்கு இருந்த போதி லும், அவர்கள் தங்கள் கல்வியறிவை விக்கியா யானங்களும் உரைகளும் எழுதுவதில் பயன்படுத்தினார் களேயன்றி, இலக்கியவளத்தைப் பெருக்குவதில் பயன்

படுத்தவில்லை. பொதுவாகக் கூறுமிடத்து, பிறமொழி இலக்கிய அறிவு வரவரச் சுருங்கியே வந்ததாகும். இதுவும் காவியங்கள் இயற்றப் பெருமைக்கு ஒரு காரணமாகும். ஒரு மொழியிலுள்ள இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அந்நிய மொழிகளின் உணர்ச்சி பெரிதும் உதவி வந்துள்ளமைக்கு ஆங்கில இலக்கிய வரலாறு ஒரு சிறந்த உதாரணமாம். கிரேக்க, லத்தின் மொழிகளிலுள்ள இலக்கிய அறிவை நாம் நீக்கிவிட்டால், ஆங்கில இலக்கியம் எத்துணை சுருங்கி விடுமென்பதை நாம் ஞாபகத்தில் வைத்தல் வேண்டும். ப்ரெஞ்சு மொழியிலுள்ள கதைப் பாட்டுக்கள் ஆங்கிலக் கதைப் பாட்டுக்களுக்கு மூலமாய் நின்று ஆங்கில இலக்கிய கர்த்தர்களை ஊக்கி வந்தன. இங்ஙனமே இத்தாலி மொழியிலுள்ள இலக்கியங்களும் சாஸர், ஷேக்ஸ்பியர், முதலிய முதல்—தரக் கவிஞர்களுக்கும் நாடகாசிரியர்களுக்கும் இலக்கியப் பொருள்களை உதவி நின்று, ஆங்கில இலக்கியத்தைச் செழிப்பும் சிறப்பும் உறச் செய்துள்ளன. இவைகளையெல்லாம் நோக்கினுல், அந்நிய மொழி இலக்கியங்களைக் கல்லாததனுல் நமது இலக்கியவளம் குறைவு பட்டு விட்டதென்பது விளங்கும்.

அந்நிய மொழி மூலங்கள் நம் முன்னேர்களுக்கு உதவாமற்போயின. ஆனுல் இலக்கிய முயற்சிகள் அறவே தடைப்பட்டு விடவில்லை. இவர்களது சமயப்பற்று இரண்டு வகை இலக்கியங்களுக்குக் காரணமாய் நின்றது. எங்கும் கோயில்கள் நிருமிக்கப் பெற்றன. அவற்றிற்கு நிபந்தங்கள் ஏற்படுத்தப் பட்டமைக்கு எண்ணிறந்த சாசனங்கள் சான்று பகர்கின்றன. இக்கோயில்களிலே நித்திய நைமித்திக பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. எனினும், இவற்றின் மகத்துவத்தை மிகுதிப் படுத்துவதற்கு, இக் கோயில்களை அமைத்துள்ள ஸ்தலங்களைப் பற்றிப் புண்ணிய கதைகள் வேண்டும் அவசியமிருந்தது. இதனுல் ஸ்தல புராணங்கள் மிகுதி

யாய்த் தோன்றத் தொடங்கின. புராணங்களைக் கற்பார்க்கு இலக்கியச் சுவை விளையும்படி காவியநயங்களும் இவற்றில் இடம் பெற்றன. கோயிற்புராணம், குற்றாலத்தல புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் முதலியன இவ்வாறு காவிய நயம் பொருந்தியனவாம். ஆனால் உண்மையான காவியவுணர்ச்சியை இவை அறவே நசித்து விட்டன. சிறிதும் நயமில்லாத கதைகள் இப் புராணங்களில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டன. பயனற்ற போலியலங்காரங்கள் இப்புராணங்களில் நிரம்பி அரு வருப்பு மேலிடச்செய்தன. உண்மையான கவித்துவம் இருந்த இடம் தெரியாமல் ஓடி விட்டது. உயர்தரக் காவியங்களுக்கு முன்பு காரணமாயிருந்த சமயப் பற்று இப்பொழுது க்ஷீண தசையுற்று வெறுக்கத்தக்க போலிக் காவியங்களுக்கும் காரணமாகி விட்டது. இதனாலும் காவியம் ஒடுங்கு தசை அடைந்து விட்டது.

ஸ்தலமகாத்மியத்தோடு சேர்ந்த பிறிதொரு வகை இலக்கிய முயற்சியை இங்கே குறிப்பிடுதல் அவசியமாகும். ஓரளவு கவித்வ சக்தி வாய்ந்தவர்கள் ஸ்தலத்து மூர்த்தி களைக் குறித்துப் பல சிறு பிரபந்தங்கள் இயற்றினர். கோவை, உலா, அந்தாதி, இரட்டைமணி மாலை, மும்மணிக் கோவை, நான் மணி மாலை முதலியன உதாரணங்களாம். இவற்றில் ஏகதேசமாகக் கவித்வ நயமும் காணப்பட்டன. இங்ஙனமாகச் சிறு முயற்சிகளில் கவிஞர்கள் ஈடு பட்டனர். பொதுமக்களும் இவற்றையே விரும்பிக் கற்பாராயினர். எனவே, புதிதாகக் காவியம் தோன்று மாயின், அவற்றைக் கற்கும் மனப்பான்மையே பொது மக்களுக்கு இல்லையாயிற்று. காவியம் தோன்றுதற்குரிய சூழ்நிலை தானும் மறைந்து விட்டது.

சமயப் பற்றினால் விளைந்த மற்றோர் இலக்கிய முயற்சி தத்துவம் பற்றியது. நுணுக்கமான தத்துவ விஷயங்களை ஆராய்ந்து அவற்றைக் குறித்துப் பல நூல்களை ஆசிரியர்

கள் எழுதினர். உதாரணமாக, சைவ சாஸ்திரங்களை எடுத்துக் கூறலாம். சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலியவற்றைக் காண்க. தத்துவ சாஸ்திர நுட்ப விசாரணைக்கும் கவித்வவுணர்ச்சிக்கும் வெகுதூரம். காவியம் கதைபற்றித் தோன்றுவது. கற்பனைக் கதை என்று சொன்ன மாத்திரையிலேயே இந்தச் சாஸ்திர விற்பன்னர்கள் அதனை எள்ளி நகையாடி ஒதுக்கிவிடுவார்கள். ஆகவே இவர்களாலும் காவியம் தோன்றுதற்குப் பிரதிகூலமான சூழ்நிலை அமைந்து விடுவதாயிற்று.

இதுகாறும் சமயவுணர்ச்சி சீர்கேடுற்ற சூழ்நிலையிலே, காவியம் செழித்துப் பெருகுதற்கு இடமின்றி ஒடுக்கமுற்ற வரலாற்றை விளக்கினேன். நாட்டில் வழங்கிய அரசியல் நிலையும் காவியம் இயற்றுதற்குத் தக்க சூழ்நிலையைத் தரவில்லை. சோழப்பேரரசுகள் ஆட்சி புரிந்த காலத்தில் தமிழ்நாடு உட்கலகமின்றி அமைதியாய் அனைத்துவகைச் செழிப்புமுற்று விளங்கியது. இவர்களால் வென்று கொள்ளப்பட்ட நாடுகள் பல. இங்ஙனம் சோழரது ஆதிக்கியத்திற்கு உட்பட்ட நாடுகள் கலிங்கம், ஈழம், கடாரம், சாவகம் முதலியனவாம். பிறநாடுகளிலிருந்து செல்வங்கள் வந்து குவிந்தன.

இதனை,

புவிபுகழ் சென்னிபேரமலன் றேள் புகழ்
கவிகள்த மனையெனக் கனக ராசியும்
சவியுடைத் தூசு மென் சாந்து மாலையும்
அவிரிழைக் குப்பையும் அளவிலாதன (பிலம் நீங்கு. 35)

என்று கம்பன் கூறுவது கொண்டு உணரலாம்.

செல்வச் செழிப்புடன், சிற்பச் செல்வங்களும் இவர்கள் காலத்தில் மிகுந்தன. திருக்கோயில்களும் சமய ஸ்தாபனங்களும் பல்கின. கோயில்கள் கல்வி நிலயங்

களாகவும் கலா நிலயங்களாகவும் திகழ்ந்தன. சிறந்த கவிஞர்கள் பலர் தோன்றி, இலக்கிய வளத்தைச் செழிப்புறச் செய்தனர். தமிழ்க் கவிஞர்களுள் ஈடும் எடுப்புமின்றிச் சிறந்தவனும் உலக மகாகவிகளுள் ஒருவனுமாகிய கம்பன் தனது தெய்விகக் கவித்திறத்தால் இராமாவதாரம் என்னும் அற்புத மகாகாவியத்தை இயற்றி, தனது புகழொளியால் தமிழகத்தை விளக்கிய காலமும் இச் சோழப்பேரரசுகளின் காலமேயாம். பொது மக்களும் சடையப்பர் போன்ற வள்ளல்களும் அரச குடும்பத்தினரும் கலையையும் கவிதையையும் கற்றுணர்ந்து அனுபவித்து வந்தனர். இவ்வாறு அனுபவித்தற்கு வேண்டும் வசதியும் சாவகாசமும் இருந்தன. சோழர்கள் காலத்திற்குப் பின், தமிழ்நாடு பல அரச வமிசத்தினரின் கைவசப்பட்டு, அடிக்கடி ஆட்சிகள் கைம்மாறி நிகழ்ந்து, நாட்டில் அமைதி குறையலாயிற்று. ஏதேனும் ஓர் அரச வமிசம் மேம்பட்டு நின்று நாடு முழுவதையும் அடக்கியாண்டபோதிலும், அவ் வமிசம் அந்நிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தமையாலே, தமிழ் இலக்கிய முயற்சிக்கு அரசாங்கத்தின் ஆதரவு மிகுதியும் இல்லாமற் போயிற்று, அவ் அரச வமிசத்தினர் பிரதிநிதிகளின் மூலமாகவும் பல பிரதேசங்களை ஆண்டு வந்தனர். இப் பிரதிநிதிகள் சிற்றரசர்களின் நிலையிலுள்ளவர்களானதாலும், தாம் செய்யும் காரியங்களுக்கு உத்தரவாதம் செய்யவேண்டும் நிலையிலிருந்தபடியாலும், நாட்டில் அமைதி குன்றியிருந்தமையாலும் இலக்கியப் பெரு முயற்சிகட்குரிய சூழ்நிலை அவர்களால் அமைதல் அரிதாயிற்று. கவிஞர்கள் அங்கங்கேயுள்ள சிற்றரசர்களையும் வள்ளலாக விளங்கவேண்டுமென்று அவாக் கொண்டவர்களையும் ஆதரவாளர்களாகக் கருதி வந்தனர். இவர்கள் பெரும்பாலும் தோத்திரப் பிரியர்களாக இருந்தனர். தம்மைப் பற்றிப் புகழ்ந்து பாடிப் பிரபந்தங்

கள் முதலியன இயற்றிய கவிஞர்களையே இவர்கள் போற்றி வந்தனர். இவ்வகைப் பாடல்களைக் குறித்து :

கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே

என்று ஒரு புலவர் இரங்குகின்றார். இப்பாடலிற் குறிக்கப் பெற்றோரைப் போன்றுள்ளவர்கள் மீது தூது, மடல், நொண்டி, காதல் முதலிய பிரபந்தங்கள் உண்டாயின. இப்பிரபந்தங்கள் உண்டாகும் சூழ்நிலை, காவியம் தோன்றுதற்குச் சிறிதும் இடந்தரமாட்டாது என்பது வெளிப்படை.

முடிவுரை

மேற்குறித்த பல காரணங்களாலும் காவியம் ஒடுங்கு தசை அடைந்துவிட்டது. காளமேகப்புலவர்,

தூதஞ்சு நாழிகையில் ஆறு நாழிகை தனில்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்
தொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல் கோவை பத்துநாழிகை தனில்
பரணி யொரு நாள் முழுவதும்
பார காவிய மெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிக் கட்டினேன்

என வீரவாதஞ் செய்தனர் என்பர்! இவ்வாறு பாடிய 'வாய்ச்சொல்லில் வீரர்'களையன்றி, காவியம் இயற்றவல்ல புலவர்கள் மிகமிக அருகிவிட்டனர்.

இறுதியாகக் கூறவேண்டுவது ஒன்று உண்டு. பெருங் காவியங்களைப் பொறுமையுடன் கேட்டு இன்புறுதற்குரிய மனப்பான்மை தற்காலத்தார்களிடம் இல்லை. அதற்கு வேண்டும் அவகாசமும் இல்லை. பழம்பெருங் காவியங் களைத் தமிழ் மாணவர்களும், தமிழ்க் கல்வியாளர் என்ற நிலையை எய்துதற்கு விரும்புபவர்களும், தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர்களும் தவிர, ஏனைப் பொதுமக்கள் கற்ப தில்லை. பழங் காவியங்கள் இங்ஙனமாக, புதுக் காவியங்கள் இயற்றப்பெறுமானால் அவற்றை ஒருவரும் தொடுதல் தானும் செய்யார். உதாரணமாக, சுமார் 150 ஆண்டு கட்கு முன்னர், கட்டபொம்மு நாயக்கரின் காலத்தில் அவர் ஆங்கிலேயரோடு புரிந்த யுத்ததைக் குறித்து ஒரு பெருங் காவியம் இயற்றப்பட்டது. அந்நூலின் பெயர்

'கலியுகப் பெருங் காவியம்' என்பது. இக் காவியத்தைக் கற்பாரின்றி, இப்போது இதன்பெயர்போலும் மறைந்து வருகிறது. ஆனால் 'இராவண காவியம்' எனவொன்று இப்பொழுது தோன்றவில்லையா? அதனைப் பலரும் பெற்றுக் கற்கவில்லையா? இங்ஙனம் சிலர் வினவுதல் கூடும். காவியம் அல்லது இலக்கியம் என்ற முறையில் இதனை ஒருவரும் கற்கவில்லையென்றே கூறுவேன். நம்மிடையே தற்காலத்துள்ள ஆரிய திராவிடப் போருக்கும் 'சுயமரியாதை'ப்போருக்கும் இதனை ஒரு கருவியெனக் கொண்டு சிலர் கற்பாராகக் கருதப்படுகின்றனர். உண்மையில் இதனைக் கற்பார் மிகமிக அரியர்.

மேலே குறித்த மனப்பான்மை வேரூன்றி நிற்கும் தற்காலத்தில், காவியம் சிறிதும் போற்றப்படமாட்டாது. நமது கவிஞர்கள் இதனை யுணர்ந்து வேறுபல கவிதைத் துறைகளில் முயன்று வருகின்றனர். இவ்வகை இலக்கிய முயற்சிகளே இனிச் சிறந்து விளங்குமென்று கருதலாம்.

தமிழகத்தில் திருமணம்

மக்களது நாகரிக வாழ்விலே திருமணத்தைப் போல அத்தனை முக்கியமான நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை. இக் கருத்துப் பற்றியே ஸம்ஸ்காரங்களுள் மிக முக்கிய மானது திருமணம் என்று வட மொழியாளர் கூறி யுள்ளார். இத் திருமண நிகழ்ச்சியில் பல்வேறு சடங்கு களும் காணப்படுகின்றன. காலந்தோறும் இடந்தோறும் சடங்குகள் வேறுபட்டு வந்துள்ளன. முதலாவதாக, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் எவ்வகையான திருமணச்சடங்குகள் நிகழ்ந்தன என்பதை இலக்கியங்களின் மூலமாக அறிய முயலுவோம்.

மேலே மக்களது நாகரிக வாழ்க்கை என்று கூறினேன். நாகரிக வாழ்க்கைக்கு முற்பட்ட அநாகரிக வாழ்க்கையில் திருமணம் என்ற ஸம்ஸ்காரமும் அதனைப் பற்றியுள்ள சடங்குகளும் காணுதற்கிடமில்லை. ஆணும் பெண்ணும் தம்மில் எதிர்ப்பட்டுக் காம வசத்தராய் நின்று ஒழுகும் ஒழுக்கமே இந்த அநாகரிக வாழ்வில் நிகழ்ந்தது. மிருகப் பிராயமாயிருந்த கூட்டம் நமது பாரத தேசத்தில் என்றுமே இருந்ததில்லை என்று மகாமகோபாத்தியாய பி. வி. காணே முதலிய சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் சமூக இயல் நூலில் வல்லவர்கள் இதனை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது உலகெங்குமிருந்த அநாகரிக காலம் நமது தேசத்தில்மட்டும் எக்காலத்தும் இருந்த தில்லையென்று கூறுவதனோடு ஒக்கும். அன்றியும் தொல் காப்பியம் என்ற பழைய நூலில் அநாகரிக வாழ்க்கை இருந்தது என்பதற்குச் சான்று காணப்படுகிறது. தொல் காப்பியர்,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என ஒரு சூத்திரம் இயற்றியிருக்கிறார். விவாகச் சடங்கு இல்லாத மணம் மிகப்பூர்வ காலத்தில் நிகழ்ந்தது என்றும், அதற்குப் பிற்பாடு பொய் முதலியன தோன்றிவிட்டமையால் சடங்கு முதலிய கட்டுப்பாடுகள் மணத்தில் இடம் பெற்றன என்றும் இச்சூத்திரம் உணர்த்துகிறது. ஆகவே, அநாகரிக மணம் நிகழ்ந்த காலம் ஒன்று உண்டு என்பது இதனால் விளங்குகின்றது. வேறொரு சான்றும் இங்கே காட்டத்தக்கது. வடமொழியாளர் வகுத்த எண் வகை மணத்தில் காந்தருவ மணம் என்பதும் ஒன்று. இதுவும் ஆணும் பெண்ணும் இச்சைவழிச் சென்றுகூடும் கூட்டமேயாகும். ஒரு காலத்தில் இச்சைவழி கூட்டமான இவ்வகை அநாகரிக மணம் நிகழ்ந்தது என்பதற்கு இக் காந்தர்வமும் ஒரு சான்றாகும்.

நாகரிக வாழ்க்கையில் புகுந்துள்ள தமிழ் மக்களிடையே சடங்குகள் கால அடைவில் வரவரப் பெருகிக் கொண்டே வந்தன. இவ்வாறு பெருகுதற்கு ஒரு காரணமாயிருந்தவர்கள் ஸ்மிருதி நூல்கள் இயற்றிய ஆசிரியர்களாவர். சடங்குகளால் திருமணம் தூய தன்மை அடைகிறது என்று இவர்கள் கருதினர். மணமகனும் மணமகளும் இத் தூய தன்மையை உணர்ந்து, தமது பொறுப்பையும் உணர்ந்து, பரஸ்பரம் இருக்கவேண்டும் அன்பு நிலையையும் உணர்ந்து, குடும்ப வாழ்க்கையில் செம்மையாக ஒழுகுதற்கு இச்சடங்குகள் உதவின. இதனால் சடங்குகள் எவ்வளவுக் கெவ்வளவு விரிவுபட்டு நிகழ்ந்தனவோ அவ்வளவுக் கவ்வளவு மணவினையின் முக்கியத்துவத்தை மணமக்கள் உணர்வார்கள் என்று கருதப்பட்டது. ஸ்மிருதி ஆசிரியர்கள் இக்கருத்திற்கு இணங்கத் தங்கள் தங்கள் ஸ்மிருதிகளில் சடங்குகள் பற்றி வரவர விரிவாக எழுதி வைக்கலாயினர்.

ஸ்மிருதிகள் பலவற்றையும் நோக்கினல் அவற்றில் கூறப்பட்டுள்ள சடங்குகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதியைப் பூர்வாங்க நிகழ்ச்சிகள் அல்லது தொடக்க நிகழ்ச்சிகள் என்று பெயரிட்டுக் கொள்ளலாம். இதில் பெண் கேட்டுச் செல்லுதல், பெற்றோர் இசைதல், மணநாள் குறிப்பிடுதல், பந்தர்க்கால் நடுதல், சுற்றத்தார் முதலியவர்களை அழைத்து விருந்திடுதல் முதலியவை அடங்கின. இரண்டாவது பகுதியில்தான் மணவினை சடங்குகளுடன் நிகழ்வது. இதுவே மிக முக்கியமான பகுதி. இதில் பாணிக்கிரகணம், ஓமம் வளர்த்தல், திவலம் வருதல், சப்தபதி என்பன மிக முக்கியமானவை. சப்தபதி என்பது அக்னிக்கு வடக்காகச் செய்வது. ஏழுசோற்றுத் திரளை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். மணமகளை மேற்குத் திசையிலிருந்து தொடங்கி இச் சோற்றுத் திரளைகளின் மீது ஏழு அடியெடுத்து வைக்கும் படியாக மணமகன் நடத்திச் செல்லுவன். இந்தப் பகுதிக்குப் பின்னர் வேறு சில அபரச் சடங்குகளும் நிகழும். அவற்றுள் அம்மி மிதித்தல், அருந்ததி காணுதல் முதலியவை அடங்கும்.

இம்மூன்று பகுதிகளைச் சார்ந்தனவாக எந்த எந்தச் சடங்குகள் பண்டைக்காலத்தில் தமிழகத்தில் நிகழ்ந்தன? இவற்றைத் தெரிந்துகொள்வதற்கு இரண்டு செய்யுட்கள் உதவுகின்றன. இவை முறையே அகநானூற்றில் வரும் 86, 136-ம் செய்யுட்களாகும். 86-ம் செய்யுளை இயற்றியவர் நல்லாவூர் கிழார் என்பவர். கிழார் என்பது வேளாள மக்களுக்குப் பண்டைக்காலத்து வழங்கிய பெயர். ஆதலால் அவர்களிடையே வழங்கி வந்த மண நிகழ்ச்சிகளை இச் செய்யுளிற் குறிப்பிடுகிருர் என்று கொள்ளுதல் தகும். 136-ம்செய்யுளை இயற்றியவர் விற்றூற்று மூதெயினனர் என்பவர். இப்பெயரிலிருந்து இவர் ஆரியவகுப்பைச் சார்ந்தவர் அல்லர் என்பதும், தமிழ் நாட்டுப் பழங்குடி-

மக்களுள் ஒருவர் என்பதும் விளங்கும். ஆகவே, தமிழ் மக்களில் ஒரு சாராரிடத்து வழங்கிய மணச்சடங்குகளை இவர் குறிக்கின்ருர் என்று நாம் கொள்ளலாம்.

86-ம் செய்யுளில், முதலாவதாக விருந்தினர்க்கு உண்டி அளித்தல் கூறப்படுகிறது. இவ் உண்டி அளித்தலுக்குப் பெருஞ் சோற்றமலை என்று பெயர். உளுந்து கலந்து வேவித்துப் பக்குவப் படுத்திய சோற்றையே இச்செய்யுள் குறிப்பிடுவதனுல் இவ்வகை உணவே மணவினைக் காலத்தில் அளித்தற் குரியது எனப் பண்டைத் தமிழ் மக்கள் கருதினுர்களாதல் வேண்டும். இங்ஙனம் உண்டி அளித்தல் இடையருது நிகழ்ந்து கொண்டிருக்குமாம். பின்னர் பெரிய பந்தர் அமைத்து அதன் அடியில் மணலைப் பரப்பி, மனை விளக்கு நிறுத்தி, பூமாலைகளைத் தொடர்ந்து தொங்கவிடுதல் சொல்லப் படுகிறது. இதன்பின் மண வினைக்கு எனக்குறித்த நாள் விளக்கப்படுகிறது. இந்நாள் பூர்வ பக்ஷத்தில் இருக்க வேண்டுமாம். சமயம் அதிகாலை. அசுபகிரகங்கள் யாதும் இல்லா திருக்கவேண்டும். சந்திரன் சுப நட்சத்திரங்களோடு கூடியிருக்க வேண்டுமாம். பின்னர், மணமகளை நீராட்டுதல் கூறப்படுகிறது. இந் நீராட்டினை 'வதுவை நன்மணம், என்று இச் செய்யுள் குறிப்பிகிறது. நீராட்டுவோர் புத்திரப்பேறுடைய நான்கு மகளிர்கள். இவர்கள் 'கற்பில் வழுவாதபடி கணவனைப் பேணும் சிறந்த மனைவியாக விளங்குக' என்று வாழ்த்தி நீராட்டுவர். நீராட்டுதற்குரிய மஞ்சன நீர் முதலியவற்றையும் வேறு திரவியங்களையும் சுமங்கலிகளான முது பெண்டிர்கள் குரவை முதலிய ஆரவாரத்தோடு முறையே கொடுத்து உதவுவார்கள். இம்மஞ்சன நீரிலே பூவும் நெல்லும் கலந்து காணப்படும். இங்ஙனம் அமைந்த வதுவை மணத்திற்குப் பிற்பாடு மணமகளின் பெற்ருேர் கள். 'பெருமனைக்கு உரிமையுடையவளாக விளங்குக' என்று வாழ்த்தி ஆரவாரத்தோடு விரைந்து புகுந்து

மணமகளை மணமகனுக்கு அளிப்பர். பின்னர் இரவில் இவர்கள் ஓர் அறையில் உடனுறைந்து இன்புறுவர்.

அகம் 136–ல் சில புதிய விவரங்கள் தரப்படுகின்றன. உளுத்தஞ் சோறேயன்றி, இறைச்சியொடு கலந்த வெண் சோறும் அளிக்கப்படுவதுண்டு. இவையே யன்றி உயர்ந் தோர்களை வணங்குதலும் முற்படச் சொல்லப்படுகிறது. ஆனால், இப்பெரியோர்கள் இன்னர் என்பது விளக்கப் படவில்லை. நற்சகுனம் பார்த்தலும் இச் செய்யுளில் தரப்படுகின்ற ஒரு புதிய செய்தியாம். சந்திரன் ரோகிணி யோடு கூடியிருக்கும் நாள் மணத்திற்குப் பொருந்தி யது என்பதும் இங்கே தெளிவாகக் கூறப்படுகிறது. பௌதாயன கிருஹ்ய சூத்திரத்திலும் (I, 1, 18-19) மானவ கிருஹ்ய சூத்திரம் (I 7 , 5) முதலியவற்றிலும் இந்த ரோகிணி மணவினைக் குரிய நட்சத்திரங்களுள் முதலாவ தாக வைக்கப்பட்டுள்ளது. மணவினை நிகழும் இல்லத்தை அலங்கரித்தல் தவிர தெய்வத்தைப் பேணுதலும், மண முரசு ஒலிப்பித்தலும் இச்செய்யுளில் சேர்க்கப்பட்டுள்ளன. வதுவைக் கலியாணமாகிய நீராடுதலின் பின் மணமகளை ஆபரணம், மாலை முதலியவற்றால் அலங்கரித்தல் கூறப்படு கிறது. இம்மாலை வாகையிலையும், அறுகங் கிழங்கும், மலர் மொட்டும் வெண் நூலில் கட்டியதாய் உள்ளது. இதனைச் சூட்டித் தூய உடையை அணிவித்து மணமகளை அழைத்து வருவர். பின்னர் மணல் நிரப்பிய பந்தலிலே அவளை மணமகனுக்குக் கொடுப்பர்.

பிறிதொரு செய்யுளில் (அகம். 221) ஓர் அரிய செய்தி உணர்த்தப்படுகிறது. மணமகளின் பெற்றோர்கள் மதுபானம் அருந்தி, வீட்டினை அலங்கரித்து, மணலைக் குவித்து 'எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித் துள்ளோம்.' எனக்கூறி மணம் பற்றிய ஒரு விழாவைப் பூர்வாங்கமாக இயற்றுவர். ஸ்மிருதிகளிற் கூறப்படும் வாக்கு நிச்சயத்தோடு இதனை ஒப்பிடலாம்.

பழங்காலத்தில் மணவினை நிகழ்ந்த முறை இதுவேயாம். பாணிக்கிரகணம், ஓமம், தீ வலம் வருதல், சப்தபதி முதலியன சங்க காலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்கள் மந்திரம் ஓதுதலும் மணவினையில் இல்லை என்றே கூறலாம். தாலிகட்டும் சடங்கும் காணப்படவில்லை. மிகப் பிற்பட்டுச் சுமார் 6, 7-ம் நூற்றாண்டுகளில் இவைகளில் பலவற்றையும் தமிழ் மக்கள் கைக்கொண்டனர். உதாரணமாக சிலப்பதிகாரத்தைக் காட்டலாம். இதில் கோவலன், கண்ணகி என்ற இருவரது மணமும் சிறிது விரிவாகத் தரப்பட்டுள்ளது. பெண்களை யானையின் பிடரியில் ஏற்றி ஊரார்க்கு மணவினைச் செய்தியை அறிவித்தனர். முரசும் மத்தளமும், சங்கும் ஒலிக்க, மாங்கலிய சூத்திரத்தை ஊர்வலமாகக் கொண்டு வந்தனர்.[1] மாலைகளைத் தொங்கவிட்ட தூண்களுக்கு மேலாக நீல விதானமும் முத்துப் பந்தரும் அமைத்தனர். சந்திரன் ரோகிணியோடு கூடியிருக்கும் நாளில், வேதாங்கம் ஆறனுள் ஜோதிஷத்தில் வணிகர்க்குக் கூறிய நெறியிலே புரோகிதன் சடங்குகளைச் செய்விக்க, இருவரும் தீவலம் செய்தனர்.

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது ... ...'

என்று இக்காவியம் கூறுவது நோக்கத் தக்கது. முளைப் பாலிகையைப் பெண்கள் ஏந்தி நின்றனர் என்ற செய்தியும் இக்காவியத்தில் புலப்படுகின்றது. இம்மண வினை நிகழ்ச்சியைப் பெருங் கதை என்ற தமிழ் நூல் இன்னும் மிக விரிவாக எடுத்துச் சொல்லுகின்றது. (உஞ்சை 48, 84, 100. இலாவாண 3, 1-167.)

இங்ஙனமே நாச்சியார் திருமொழியில் 'வாரணமாயிரம்' என்ற பகுதி மிக விரிவாக மணவினைச் சடங்கு

---

1. 'மங்கல அணி பெழுந்தது' என்ற மூலத் தொடருக்கு இவ்வாறு அரும்பதவுரைகாரர் பொருள் கொள்ளுவர்.

களை உணர்த்துகிறது. பூரண பொற்குடம் வைத்தல், தோரணம் நாட்டுதல், நாள் நிச்சயித்தல், மணமகன் வருதல், மணமகளை மந்திர பூர்வம் கோடிப் புடைவை உடுத்தி மணமாலை அணிவித்தல், தீர்த்தங்களால் நீராட்டு தல், பார்ப்பனப் பெரியோர்கள் இருவருக்கும் காப்பு நாண் கட்டுதல், மணமகன் பாதரக்ஷை அணிந்து, பெண்கள் தீபம், கலசம் முதலியவற்றை ஏந்தி நிற்க, மண மகள் இல்லம் புகுதல், மத்தளம் கொட்டவும் சங்கு ஊதவும் முத்துப் பந்தரின் கீழாக மணமகன் பாணிக் கிரகணம் செய்தல், வேத மந்திரங்கள் கோஷிக்க நாணலை வட்டமாகப் பரப்பிய இடத்திலே மணமக்கள் இருவரும் தீவலம் செய்தல், அம்மி மிதித்தல், பொரி முகந்து அட்டு தல், இருவரையும் வீதிவலம் செய்வித்து, யானை மேற் கொண்டு சென்று மஞ்சனமாட்டிவைத்தல்; இம்மண வினைகளை யெல்லாம் நாச்சியார் கனவிற் கண்டதாக அருளிச் செய்திருக்கின்றார். கம்ப ராமாயணம் (பால. கடிமணப். 86–93) முதலிய பிற்காலத்துக் காவியங் களிலும் மணச்சடங்குகள் ஸ்மிருதிகளை அனுசரித்துக் கூறப்பட்டுள்ளன.

இவற்றை யெல்லாம் நோக்குமிடத்து ஆதியில் ஆரியர் கலப்பு மிகுதியாக இல்லாத காலத்தே மணச்சடங்கு ஒரு சிலவே இருந்தமையும், பின்னர் அவர்களுடைய கூட்டுறவு தமிழ் நாட்டில் பெருகப் பெருக, மணச்சடங்குகளும் பெருகிவிட்டமையும் நன்கு புலப்படும்.

மறைந்து போன ஒரு காவியம்

நமது தாய்மொழியாகிய தமிழில் தோன்றிய நூல்களுள் பல அருமையான நூல்கள் இப்போது நமக்கு அகப்படவில்லை. அவை இவ்வாறு மறைந்து போனதற்கு நாம் கூறி வரும் காரணங்கள் பல. நெருப்பினலும், நீரினலும், கடற் பெருக்காலும் அழிந்து போயின என்று பொதுவாகச் சொல்லுவார்கள். இதற்கு,

ஏரணம் உருவம் யோகம் இசை கணக் கிரதம் சாலம்
தாரணம் அறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ வழி வழிப்பெயரும் மாள

என்ற செய்யுளையும் சான்ருகக் கூறுவதுண்டு. ஆனல், கடல்கோளால் அழிந்தொழிந்தவற்றைக் காட்டிலும், நம்மவர்களது கவனக் குறைவாலும், அறிவீனத்தினலும் மிக அதிகமான நூல்கள் அழிந்துவிட்டன என்று சொல்லவேண்டும். நூல்களைக் கற்பதும், பிரதி செய்வதும், பேணுவதும், நிலையங்களில் வைத்துக் காப்பாற்றுதலும் அவைகள் அழிந்து போகாமலிருத்தற்கு நெறிகளாம். இந்த நெறிகளை நம்மவர்கள் நன்கு கைப்பற்றினர்கள் என்று சொல்ல முடியவில்லை. அச்சிடும் தொழில் நமது நாட்டில் தோன்றியதன் முன்பு இவ்வாறு இருந்தது. அதன் பின்பும் ஏட்டுப் பிரதிகளால் பயனில்லை என்று நினைத்து, அவைகளைச் சிறிதும் பேணுது நம்மவர்கள் கைவிட்டனர். இங்ஙனம் அழிந்த நூல்களும் மிகப் பலவாம். இன்றும் நம் நாட்டில் பல இடங்களில் ஏட்டுப் பிரதிகள் உள்ளன. அவற்றையேனும் திரட்டிப் பொது நிலையங்களில் தொகுத்து வைக்கவேண்டுவது நம்மவர்களது கடமையாகும். இந்தக் கடமையையும் நாம் புறக்

கவனித்து வருகிறோம். மதுரையிலுள்ள தமிழ்ச் சங்கமும், தஞ்சையிலுள்ள சரஸ்வதிமஹால் நூல் நிலையமும், சென்னையிலுள்ள அரசாங்க நூல் நிலையமும், அடையாற்றிலுள்ள நூல் நிலையமும் இம் முயற்சியைச் சிறிது மேற்கொண்டுள்ளன. ஆனால், சென்னையிலுள்ள நூல் நிலைய அதிகாரிகள் பெரும்பாலும் வடமொழி ஏட்டுப்பிரதிகளைத் தொகுப்பதிலேயே மிக்க கவனஞ் செலுத்தி வந்திருக்கிறார்கள். தமிழ்க் கல்வியில் சிறந்த வித்துவான்கள்கூட இந் நூல் நிலையங்களில் இல்லை என்பது வருத்தத்துடன் குறிப்பிடவேண்டியுள்ளது. நமது அரசாங்கத்தார்கூட இதில் வேண்டும் அளவு சிரத்தை எடுத்துள்ளார்கள் என்று கூற முடியாது. இந்த நிலைமை இன்னும் சிறிது காலம் நீடிக்குமானால் அச்சில் வெளிவராத தமிழ் நூல்கள் அனைத்தும் முற்றும் அழிந்து போக நேரிடும். நம்மவர்கள் உள்ளபடியே தமிழ் நலத்தைப் பேணுவார்களானால், ஏடுகளைப் பொதுவிடங்களில் தொகுத்துவைத்து, அவற்றைக் காப்பாற்ற முன்வருதல் வேண்டும். தமிழ் மக்கள் விழிப்புடன் இம் முயற்சியை மேற்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது; உடனே செய்யத் தக்கது.

நூல்கள் அகப்படாது ஒழிந்ததன் காரணம் எதுவாயிருப்பினும், அவ்வாறு மறைந்துபோன ஒரு நூலின் பொருளைக் குறித்துச் சமீபத்தில் நான் செய்துவந்த ஆராய்ச்சியால் சில விவரங்கள் தெரியவந்தன. தமிழ் இலக்கண உரைகளுள் யாப்பருங்கல விருத்தி ஒரு தனிப் பெருமை யுடையது. இவ்வுரையைக் காரிகையின் உரையாசிரியர் தொல்காப்பியத்தோடு ஒத்த பெருமையுடையது என நாம் கருதுமாறு ஓரிடத்தில் எழுதியுள்ளார். இவ்வுரையிற் காணும் மேற்கோட்செய்யுட்கள்மிக அருமைவாய்ந்தன. இதில் எடுத்துக்காட்டப்படும் நூல்களில்பல இப்பொழுது பெயர் மாத்திரையில்தான் நம்மால் அறியப்படு

கின்றன. பஞ்சகாவியங்கள் என்று நாம்அடிக்கடிசொல்லி வருகிறோம். அவற்றுள் வளையாபதியைக் குறித்துக் கதை போலும் நமக்குத் தெரியமாட்டாது. பிற்காலத்தார்கள் ஒரு மரபினரின் பெருமையை இக் காவியம் குறிப்பதாகக் கொண்டு பொய்யாக ஒரு கதைப் பொருளைச் சிருஷ்டித்து விட்டனர். இப் பஞ்சகாவியங்களைத் தவிர, வேறுபலஅரிய காவியங்களையும் யாப்பருங்கல உரை நமக்குத் தெரிவிக்கின்றது. இவ்வுரையில் 487-ம் பக்கத்தில், 'சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்தபதி என்றிவற்றின் முதற் பாட்டு வண்ணத்தான் வருவன' என்ற வாக்கியம் வருகின்றனது. இங்கே குறித்துள்ள அமிர்தபதி என்ற காவியத்தின் இயல்பு இதுகாறும் மறைபொருளாகவே இருந்தது. உரைகாரர் காலமாகிய கி. பி. 13-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த இந்நூல் எவ்வாறாகவோ அழிந்துவிட்டது. அங்குக்குறிப்பிட்ட நூல்களில்மற்றைய நான்கும் காவியமாக இருத்தலின் இவ்அமிர்தபதியும் காவியம் என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். மேலும், இது ஒரு ஜைன காவியம் என்றும் நாம் கருதலாம். பெயரை நோக்கிய அளவில் இது வடமொழிச் சார்பு பற்றியது எனவும் ஊகித்தல் கூடும். அமிர்தபதி என்பது கதாநாயகன் பெயராகவேனும், அல்லது கதாநாயகியின் பெயராகவேனும் இருத்தல் கூடும் எனவும் நாம் கொள்ளலாம். இப்பெயருள்ள நாயக, நாயகிகள் வடமொழி நூல்களில் எங்கேனும் வந்துளரா என்று நாம் நோக்குதல் வேண்டும்.

வடமொழியில் மிகவும் புகழ்வாய்ந்த ஆசிரியர்களுள் ஒருவர் சோமதேவர். இவர் யஸஸ் திலக சம்பு என்ற காவியத்தையும் நீதி வாக்கியாமிர்தம் என்ற அர்த்த சாஸ்திர நூலையும் இயற்றியுள்ளார். யஸஸ் திலக காவியத்தைச் சாலிவாகன சகம் 889-ல் (அதாவது கி. பி. 959) தாம் இயற்றியதாக இவரே கூறியுள்ளார். இக் காவியத்தில் வரும் ஒரு முக்கிய பாத்திரம் அமிர்தமதி

என்பது. தமிழில் ஏட்டுப்பிரதிகளில் மகரத்தைப் பகரமெனத் தவருகப் படித்துக் கொள்ளுதற்கு இட முண்டு. ஆகவே, யாப்பருங்கல உரையிற் காணும் அமிர்தபதி என்பது, இக் காவியத்தில் வரும் அமிர்த மதியாக இருத்தற்குப் பெரிதும் இயைபு உண்டு. மேற் கூறிய ஊகங்களெல்லாம் நன்கு பொருந்துகின்றன. காவியத்தின் தலைவியாய் அமைதற்குரிய தகுதி அமிர்த மதிக்கு உளதா என்று வினவலாம். யஸஸ் திலக சம்புவின் கதையை வாசித்தால் அத்தகுதி அமிர்தமதிக்குப் பெரிதும் உண்டு என்பது நன்கு புலப்படும். அக்கதை யாது?

பூர்வத்தில் அவந்தி தேசத்து அரசனுக உஜ்ஜயினி நகரத்தில் யசோர்கன், சந்திரமதி என்பவர்களின் புதல் வனுன யசோதரன் என்பவன் ஆட்சி புரிந்துவந்தான். இவனது பட்டமகிஷியாக விளங்கியவள் அமிர்தமதி. இவர்கள் திருமணம் மிக விரிவாக இக்காவியத்தின் இரண்டாம் பகுதியில் கூறப்படுகிறது. ஒரு நாள் அரசன் அந்தப்புரத்தை அடைந்து, எழு நிலை மாடத்தின் மேன் மாடியிலே அமிர்தமதியோடு இன்புற்றிருந்தான். நள்ளிர வாயிற்று. அரசன் நன்முக உறங்கி விடவில்லை. அப்பொழுது தனது மகிஷி தன் அருகிலிருந்து மெதுவாக நழுவிப்போய்த் தன்னை அடிக்கடி நோக்கிக் கொண்டு, தான் அணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றி வைத்து விட்டு, தன் பணிப்பெண் ஒருத்தியின் ஆடையை உடுத்திக்கொண்டு பள்ளியறையினின்று கடந்து செல் வதைக் கண்டான். அரசனுக்கு ஐயப்பாடு தோன்றத் தொடங்கிற்று. அவனும் உடனே எழுந்து அவளைப் பின்தொடர்ந்து சென்றனன். அமிர்தமதி அஷ்டவங்கன் என்ற யானைப்பாகனுடைய குடிசைக்குள் நுழைந்தாள். அந்த யானைப்பாகன் ஒரு குரூபி, நொண்டி. நன்முக முறுக்கிக் கட்டிய கயிற்றைத் தலையணையாக வைத்துக்

கொண்டு, கந்தைத்துணிப் படுக்கை ஒன்றின் மீது ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். அமிர்தமதி அவனருகில் உட்கார்ந்து அவன் கையைப் பிடித்தாள். உடனே அவன் விழித்து, தன்னிடம் வருவதற்குக் கால தாமதம் ஆனது பற்றி மிகவும் கோபித்து அவளது தலைமுடியை இடது கையால் பற்றி இழுத்துத் தள்ளி, வலது கையால் அவளை நன்ருகப் புடைத்தான். அரசி தன்னை மன்னிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். தான் அவன் மீதுகொண்டிருக்கும் காதலுக்கு அளவேயில்லை என்று வற்புறுத்தி, அரசனோடு தான் இருக்கும் காலத்துக்கூட அவனையே நினைத்துக் கொண்டிருந்ததாகக் கார்த்தியாயினி தெய்வத்தின் மீது ஆணையிடுகிருள். யசோதரன் இந்தக் காட்சியை எல்லாம் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். வெகுளி தாங்குதற்கு அரியதாய் இருந்தது. தன்னுடைய உடைவாளை உருவி இருவரையும் வெட்டி வீழ்த்துதற்கு மூண்டெழுந்தான். ஆனல், இக் கொலையினல் நேரிடக்கூடும் பழியையும் பாவத்தையும் நினைத்தும், தனது குமாரனுகிய யசோமதியின் கதியை நினைத்தும் தன் வெகுளியை அடக்கிக்கொண்டான். மீண்டும் தன் அரண்மனைக்குத் திரும்பினன். பின்னர் அமிர்தமதியும் கள்ளத்தனமாக வந்து இவனருகில் சந்தடி செய்யாமல், ஒன்றும் அறியாத பாவனையில் படுத்துக் கொண்டாள்.

யசோதரனுக்கு உறக்கம் வரவில்லை. துன்பமும் வெறுப்பும் அவன் மனத்தில் குடிகொண்டன. அமிர்தமதியை வெறுத்து இகழ்ந்ததோடல்லாமல் பெண்ணினத்தையே வெறுத்தான். ஓர் இழிவான யானைப்பாகனோடு அரசிக்கு மோகம் எவ்வாறு ஏற்பட்டது என்று அவனல் உணர முடியவில்லை. ஆனல், அந்தப் பாகன் நல்ல சங்கீத ஞானமுடையவன் என்பதும் பட்டுப்போன மரத்தையும் தளிர்க்கச் செய்யும் சக்தி அவனுடைய இனிய

சாரீரத்திற்கும் சங்கீதத்திற்கும் இருந்தது என்பதையும் கருதி, பாடுபவன் எவ்வளவு குரூபியாய் இருந்தாலும் அவன் பாட்டுக்களில் லயித்து அவனை மோகிக்கும் தன்மை பெண்களுக்கு இயல்பாக உள்ளது என்பதையும் கருதி, தன் ஐயத்தைத் தீர்த்துக்கொண்டான்.

அமிர்தமதியின் தீய ஒழுக்கத்தைக் குறித்து நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் பெண்களிடம் கொண்ட வெறுப்பு அரசனுக்கு அதிகரித்துவந்தது. உலக இன்பத்தையே அவன் வெறுக்கலாயினன். தன் குமாரன் யசோமதிக்குப் பட்டஞ்சூட்டி விட்டு, உலகத்தைத் துறந்துவிட வேண்டும் என்று அவன் உறுதி பூண்டான். மறுநாட் காலை அவன் ஆஸ்தான மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனன். அங்கே அவனது தாய் சந்திரமதியும் வரநேர்ந்தது. அப்பொழுது ஒரு கவிஞன் அரசனது துறவுபூணும் உள்ளக் கருத்துப் புலப்படும்படியாக ஒரு கவிதையைச் சொல்லுகிறான். மேலும், அதைத் தொடர்ந்து பெண்களைச் சிறை காத்தல் இயலாத காரியம் என்ற பொருள் படும்படி ஒரு கவிதையையும் பாடுகின்றான். இவற்றைக் கேட்டதும் முந்திய நாள் இரவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இந்தக் கவிஞன் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று அரசனுக்குப் புலப்பட்டது. சந்திரமதியும் தன்னுடைய குமாரனுடைய முகம் விகாரப் படுதலையுணர்ந்தாள். தன் மருகியான அரசிக்கு எல்லை கடந்த சுதந்திரத்தை அளித்திருப்பதால், அவள் ஒழுக்கம் பிசகி நடந்திருக்கக்கூடும் என்று ஐயுறவு கொண்டிருந்தாள். ஒரு பணிப்பெண், யானைப்பாகனை அரசிகாணும்போதெல்லாம் காதல் நோக்கு நோக்குவதைத் தனக்குத் தெரிவித்துள்ளதையும் நினைவுகூர்ந்தாள். என்றாலும், தன் புத்திரன் சோர்வுற்றிருப் பதற்கும் சஞ்சலமடைவதற்கும் காரணம் என்ன என்று அவனிடம் கேட்டனள். அவன் தான் ஒரு கனவு கண்டதாகச் சில நிகழ்ச்சிகளைக்

கூறினான். தான் தன் புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு உலகத்தைத் துறந்து வனத்திற்குச் சென்று அங்கே வாசஞ் செய்வதாகத் தன் கனவில் தோன்றிய தெனத் தெரிவிக்கிறான். அன்னையாகிய சந்திரமதி கனவில் கண்டவற்றை நம்புதல் கூடா தென்று சொல்லி அதனைச் சில கதைகளால் விளக்குகிறாள். ஓர் உபாத்தியாயன் தனது பள்ளிச்சாலை முழுதும் லட்டு முதலிய தின்பண்டங்கள் நிரம்பி யிருப்பதாகக் கனவு கண்டு, அக்கனவை நம்பி அரசனை விருந்துண்ணுதற்கு அழைத்தானும்! வசந்திகை என்ற ஒரு பணிப்பெண் தான் கூழாக மாறிவிட்டதாகவும், அந்தக் கூழ் தன்னுடைய இறந்து போன மாதாவின் சிரார்த்தத்தின் பொருட்டு அழைக்கப் பட்ட அந்தணர்களுக்கு அளிக்கப்பட்டதாகவும் கனவு கண்டு, அந்தக் கனவைச் சந்திரமதியிடம் தெரிவித்தாளாம்! இவ் வகையான உபகதைகளால் கனவு பொருளற்றது என்று அரசனுக்குத் தெரிவித்து, தீயகனவு ஏதேனும் கண்டிருந்தால், அதன் கெடுதியான விளைவைப் போக்க குலதேவதைக்கு உயிர்களை யாகத்தில் பலியிடுவதுதான் உபாயம் என்றும், கெடுதி நீங்க வழக்கமாகச் செய்யப்படும் பிற கிரியைகளையும் செய்ய வேண்டும் என்றும் அரசனுக்குக் கூறினாள்.

யசோதரன் உயிர்ப்பலி நேர்தலை நினைத்தவுடனே நடுங்கினான். தெய்வ வணக்கத்தில் ஊனை நிவேதித்தலை அவன் இதயம் சிறிதும் ஒப்புக்கொள்ள வில்லை. அவனது வெறுப்பை உணர்ந்த அன்னை, ஜைனர்களுடைய துர்ப்போதனையால் இவன் இவ்வாறு கருதுகிறான் என்று நினைத்து, அரசவையிலுள்ளோர்கள், திகம்பரர்களோடு அவன் உறவாடும்படிசெய்துவிட்டார்கள் என்று ஊகித்து, அவர்கள்மீது பழி கூறினாள். திகம்பரர்கள் மக்களை மயக்குறுத்துவதில் மிக வல்லவர்கள் என்றும் அவள் கூறினாள். இதன் மேல் தாய்க்கும் மகனுக்கும் உயிர்ப்

பலியிடும் யாகத்தைக் குறித்தும், அந்தணர்களுடைய கொள்கைகள் பிறவற்றைக் குறித்தும் விவாதம் நடைபெறுகிறது. சந்திரமதி தன் புத்திரன் சிவன் அல்லது விஷ்ணு, அல்லது சூரியனை வணங்கி வைதிகக்கிரியைகளை நடத்தவேண்டும் என்று அவனுக்கு உபதேசம் செய்கிறாள். யசோதரன் இதற்கு இணங்காது அந்தணரது சமயத்தை நிந்தித்து ஜைனசமயத்தின் தொன்மையையும் பெருமையையும் வற்புறுத்திக் கூறினான்.

விவாதத்தில் சந்திரமதி தான் தோல்வி யுற்றதாகக் கருதினாள். கருதியதும், மாவினால் செய்த கோழி என்றை உயிர்ப்பலிக்கு மாறாகக் குலதெய்வத்திற்கு நேர்ந்து அவ்வாறு பலியிட்டதனை ஊனென்று கருதி உண்டால் போதுமானது என்று கூறி மகனை இணங்கச் செய்தாள். இதன் பொருட்டுக் குலதேவதையின் கோவிலை அலங்காரம் செய்து, மாவினால் கோழி ஒன்று அமைக்க அரசன் ஆணை பிறக்கிறது. அமிர்தமதி இதனைத் தெரிந்து அரசன் கனவு கண்டதாகக் கூறியதெல்லாம் உண்மையை மறைத்தற்கு ஓர் உபாயம் என்று கருதி, தனது தீய ஒழுக்கத்தை அரசன் உணர்ந்துகொண்டான் என்றும் துணிந்தாள். தன்னை அரசன் எப்படியும் தண்டித்துவிடுவான் என்று பயங்கொண்டு அவனை ஒழித்தற்கு உபாயம் தேடினாள். கவிஷ்டிரன் என்ற ஒரு மந்திரி மூலமாக அரசனது தீக்கனவினால் நேர்ந்த விளைவைத் தடுப்பதற்குத் தன்னையே பலிகொடுத்து விடலாம் என்று செய்தி சொல்லி அனுப்பினாள். இப்படிச் செய்தால் அரசனுக்குத் தீங்கு நேராது என்றும் வற்புறுத்தினாள். மேலும், அரசன் உலகத்தைத் துறந்துவிடுவதற்கு முடிவு செய்தானானால், பூர்வ ஆசாரப்படி தானும் அவனோடு காட்டிற்குச் செல்ல அனுமதியளிக்கவேண்டும் என்றும் பிரார்த்தித்துக்கொள்ளுகிறாள். சீதை, திரௌபதி, அருந்ததி முதலான பத்தினிகளின் சரித்திரங்களை உதாரணமாகக் கூறிவிடுத்தாள். குலதெய்

வத்தை வணங்கியதன் பிற்பாடு, யசோதரனும் அவன் தாயும் தன் மாளிகைக்கு விருந்துண்ண வரவேண்டும் என்றும் அழைத்தாள். அமிர்தமதியின் வஞ்சனையையும் அவளுடைய வெளி வேஷத்தையும் நன்குணர்ந்த யசோதரன் அவளை மிக மிக இழிவாகக் கருதி வெறுத்தான் என்றாலும், இந்த அழைப்பை அவன் ஏற்று, வருவதாக வாக்குறுதி சொல்லிவிட்டான்.

சந்திரமதி தன் பரிவாரங்களோடு, செல்லும் வழியில் தேவதாசிகள் நர்த்தனம் புரிய, குலதேவதையாகிய சண்டிகா தேவியின் கோயிலுக்குச் சென்றனள். யசோதரனும் ஒரு யானைமீது ஆரோகணித்து அக்கோயிலுக்கு யாத்திரை யானான். அங்கே சென்றதும் தெய்வத்தை வணங்கி மாவினால் செய்த கோழியை உயிர்ப்பலியாகக் கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தனன். பின்பு புரோகிதர்கள் சொற்படி கோழியுருவின் தலையை வெட்டி, அந்த மாவைத் தன் அரண்மனைப் பாகசாலைக்கு அனுப்பி வைத்தனன்.

மறு நாள் தான் செய்த வாக்குறுதியின் படி யசோதரன் தனது தாய், புத்திரன், மருகி முதலியவர்களோடு அமிர்தமதியின் மாளிகைக்கு விருந்துண்ணச் சென்றான். அமிர்தமதி தனது கணவனும் மாமியும் உண்ணும் உணவில் விஷத்தைக் கலந்து பரிமாறினாள். விஷம் தலைக்கேறியது. வைத்தியர்களைக் கூப்பிட ஆட்கள் நாலுபக்கங்களிலும் ஓடினார்கள். அப்பொழுது அமிர்தமதி கூக்குரலிட்டு, துக்கத்தால் நிற்கலாற்றாது விழுபவள் போல யசோதரன் மார்பில் விழுந்து, அவன் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டாள். தாயும் விஷத்தால் இறந்தனள்.

அமிர்தமதி தான் செய்த பாவச்செயலுக்காக ஐந்தாம் நரகத்தை அடைகிறாள்; யசோதரனும் அவன் அன்னை

சந்திரமதியும் மாவினுல் செய்த கோழியைப் பலியிட்ட தற்காகப் பல வேறு பிறப்புகள் எடுக்கின்றனர். முடிவில் யசோமதி குஸுமாவலி என்றவர்களது புதல்வனும் புதல்வியுமாகப் பிறப்பெடுத்தனர். புதல்வன் பெயர் அபயருசி; புதல்வி பெயர் அபயமதி. இவ்விருவரும் தங்கள் முற்பிறப்பை உணர்ந்து எட்டு வயதிலேயே சுதத்தர் என்ற முனிவரிடம் தருமோபதேசம் கேட்டுத் துறவு பூண்டவர்கள்.

இவர்களது முற்பிறப்பு வரலாற்றை உட்கொண்டதாகவே மேற்கூறிய கதை அமைந்துள்ளது. இவ் வரலாற்றைக் கூறியவன் அபயருசி. கூறுதற்குற்ற சந்தர்ப்பம் இக்கதையின் பூர்வாங்கமாகத் தரப்பட்டுள்ளது.

யௌதேய தேசத்து ராஜபுரம் என்ற நகரில் சண்டமகாசேனனது புத்திரன் மாரதத்தன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். இவனுக்குக் குஸுமாவலி என்ற ஒரு தமக்கை இருந்தனள். வீரபைரவன் என்ற ஒரு தாந்திரிகன் சண்டமகாசேனனிடம் வந்து, பலவகை உயிர்களையும் மக்களுள் இரட்டையரையும் சண்டமாரி தேவதைக்குப் பலியிட்டால் வித்தியாதரர்களை யெல்லாம் வெல்வதற்கு உதவும் ஒரு வாளாயுதம் அவனுக்குத் தேவதை அருளுவாள் என்றும், அவன் அதன் உதவியால் அவ்வித்தியாதரர்கள் முதலியோரை வென்று பெருங்கீர்த்தியடைந்து வாழ்வான் என்றும் உரைத்தான். அரசனும் பலியிடுதலை மேற்கொண்டு சண்டமாரி தேவதையின் கோயிலுக்குப் பரிவாரங்களுடன் சென்றனன். அப்பொழுது சுதத்தர் என்னும் முனிவர் ராஜபுரத்தை அடுத்துள்ள ஒரு மலைப் பிரதேசத்திற்குத் தம் சிஷ்யர்களுடன் வந்தடைந்தார். இந்தச் சிஷ்யர்களுள் இருவர் அபயருசியும் அபயமதியும். இவர்கள் நகருக்குச் சென்று பிச்சை எடுத்து வருமாறு நியமிக்கப்

பட்டனர். இங்ஙனம் பிச்சை எடுக்கச் சென்ற இருவரையும் காவலர்கள் கண்ணுற்று, மக்களுள் இரட்டையராகப் பலியிடுதற்குத் தக்கவர்கள் என்று கருதி இவர்களைப் பிடித்துச் சென்று சண்டமகாதேவி கோவில் முன்பாக இருந்த அரசன் முன்னிலையில் நிறுத்தினர். இவ்விருவரது கம்பிரமான தோற்றத்தையும், அழகையும், இவர்கள் அஞ்சாதிருக்கும் நிலையையும் அரசன் கண்டு வியப்படைகின்றான். இவர்கள் மீது அரசனுக்கு அன்பு தோன்றுகிறது. இவர்களைத் தன் அருகில் அரசன் இருக்கச் செய்தனன். உடனே அரசனைப் புகழ்ந்து இவர்கள் பாடுகின்றனர். இவர்களை யார் என்று கேட்க, தாம் அரசனது தமக்கையாகிய குஸுமாவலியின் புதல்வனும் புதல்வியும் என விடை கூறினர். அப்பொழுது சுதத்த முனிவரும் அங்கு வருகின்றனர். அனைவருக்கும் முன்பாக முற்பிறப்பு வரலாறு உரைக்கப்படுகின்றது. அபயருசி, மாரதத்தனை யதுவம்சத்து அரசனான சண்டமகாசேனனுடைய புத்திரன் என்றும். அவன் தன் அன்னை குஸுமாவலியின் உடன் பிறந்தவன் என்றும் சுதத்த முனிவருக்கு அறிவித்து, அரசன் ஜைன சமயத்தை மேற்கொண்டு துறவியாவதற்கு விரும்புகிறான் என்பதையும் கூறினான். பின்னர் மாரதத்தன் சுதத்தரிடத்தில் தருமோபதேசம் கேட்டு உண்மையை உணர்ந்து துறவு பூணுகிறான். இறுதியில் அபயருசி, அபயமதி, மாரதத்தன், சுதத்த முனி, யசோமதி இவ்வனைவரும் முக்தி அடைந்தனர்.

பூர்வாங்கமாய் அமைந்த இச் சரித்திரம் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டது எனக் கருதுதற்கு இடமுள்ளது, ஏனெனில் சோமதேவருக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு. சுமார் கி. பி. 750-ல் ஹரிபத்திரர் என்பவரால் பிராகிருதத்தில் இயற்றப்பட்ட 'சமராய்ச்சகக' என்ற காவியத்திலே இக்கதை காணப்படுகிறது. ஆனால், அதில் இப்

பூர்வாங்கம் காணப்படவில்லை. அன்றியும் தியொழுக்கம் பூண்டு தன் கணவனையும் மாமியையும் கொலை புரிந்தவளைப் பற்றிய பின் வரலாறும் ஹரிபத்திரரது நூலில் உள்ளது வேறு சில வேறுபாடுகளும் காணலாகும். இவற்றால், கதைப் பொருள் கொலை புரிந்தவளைப் பற்றிய வரலாறே யாகும் என்பது நன்கு புலனாகிறது. எனவே, அமிர்த பதியின் சரித்திரமாகவே இக்கதை அமைந்த தாகும்.

ஹரிபத்திரரது பிராகிருத காவியமே யன்றி, பிரபஞ்சனன் இயற்றிய யசோதர சரிதம் ஒன்றும், உளதாகக் கி. பி. 777-ல் உத்தியோதன சூரி இயற்றிய குவலயமாலை என்ற பிராகிருத காவியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. இந்த யசோதர சரிதத்தைக் குறித்து நமக்கு யாதும் தெரியமாட்டாது.

தமிழில் யசோதர காவியம் என்ற நூல் ஒன்று உள்ளது. இதுவும் அமிர்தமதியின் சரித்திரத்தைக் கூறுவதே. ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றெனை இதனைக் கூறுவர். ஆனால், இது மிகப் பிற்பட்ட காலத்துத் தோன்றியது. சிற்சில அம்சங்களில் யஸஸ்திலக சம்பு வினோடும், ஹரிபத்திரரது நூலினோடும் வேறுபடுகின்றது. இதன் முதற்செய்யுள் வண்ணத்தால் வரவில்லை. எனவே, இதனை அமிர்தமதி என்ற காவியமாக நாம் நினைத்தற் கில்லை. இலக்கிய நயத்திலும் அத்தனை சிறந்ததாக இதனைக் கருத முடியாது. இந்த நூல் மூலமாகக் கதைப் பொருள்[1] தமிழறிஞர்களுக்குத் தெரிந்துள்ளதே யாயினும் அமிர்தமதி என்ற காவியத்தின் கதைப் பொருளும் இதுவேயாம் என்பது இப்பொழுதுதான் தெரிய வருகின்றது.

1. இக்கதைப் பொருள் 'தமிழறியும் பெருமாள் கதை' என்ற ஒரு வசன நூலிலும் காணப்படுகின்றது.

வர்ணனை மரபுகள்

பண்டைத் தமிழாசிரியர்கள் தங்கள் இலக்கியங்களிலே பல வகையான மரபுகளைக் கையாண்டுள்ளார்கள். கோவைப் பிரபந்தத்தைக் கலித்துறையிலும், உலாவைக் கலிவெண்பாவிலும், அந்தாதியை 30 அல்லது 100 செய்யுட்களிலும் பாடினர். இந்நியமங்களெல்லாம் மரபுகளாக முதிர்ந்துவிட்டன. ஒருபொருள்பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட மரபுகள் வருதலும் காணலாம். அந்தாதியில் இடையிடையே அகப்பொருட் கருத்துக்கள் வருதல் மரபின் மேல் மரபு. இவ்வாறே இலக்கியம்பற்றிப் பலபல மரபுகள் உண்டென்பதை எளிதில் உணரலாம். இம் மரபுகளை மாற்றியமைக்க இலக்கிய ஆசிரியர்கள் பெரும்பாலும் துணியமாட்டார்கள்.

ஆனால், இதினின்று, ஒரு காலத்தில் ஏதேனும் ஒரு காரணத்தால் உண்டாகிய மரபு, பின் எக்காலத்தும் மாறாமல் ஒருபடித்தாய் இருக்குமென்று கொள்ளுதல் சரியன்று. மாறிக்கொண்டே செல்வதுதான் உலக இயல்பு. இலக்கியமரபும் மாறத்தான் செய்யும். தற்காலத்தில் நமது கண்ணெதிரே மரபுமாற்றம் நிகழ்கிறது. பழைய செய்யுள்வகைகள் மறைந்துவருகின்றன. மறுமலர்ச்சிக் கவிஞர்கள் சிந்துவகைகளை இயற்றித் தமது கவித்வத்தைப் புலப்படுத்தி வருகின்றனா. இவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய தேசியகவி பாரதியும், சிந்துவகைகளையே பெரும்பாலும் பேணியிருக்கின்றனர். இப்பொழுதும் காதற் பொருள்களைக் கலித்துறைமுதலியவற்றிற் பாடும் மரபு நின்றுபோய்விட்டது. கண்ணன்பாட்டு முதலியவற்றிற் போன்று சிந்துவகைகளிற் பாடும் மரபு தோன்றிவிட்டது.

இலக்கியங்களில்வரும் வர்ணனைகளில் இங்கே கூறியன போன்ற மரபுகள் எவையேனும் உளவா? வர்ணனையின் இயல்பைச் சிறிது நோக்குவோம்.

யாதேனும் ஒருபொருளை, அதன் பலதிறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற்பற்றுமாறு, அழகும் சுவையும்பட விவரித்துக் கூறுவதுதான் வர்ணனை. வர்ணம் என்றால் நிறம் அல்லவா? இதிலிருந்து விவரிக்கப்படும் பொருள் அழகுற்றுச் சோபிக்கும்படி வர்ணனை அமைதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இப்படி வர்ணித்தற்குரிய பொருள் எத்தனைவகைப்படுமென்று நாம் தெரிந்துகொண்டால், மரபுகளைப்பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாவோம். மரபுகளும் அப்பொருள் வகையைப் பற்றித்தானே இருத்தல் கூடும் ?

வர்ணனைப்பொருள் இயற்கையைக் கடந்ததாகவேனும், இயற்கையில் அடங்கியுள்ள தாகவேனும் இருக்கலாம். இயற்கையைக் கடந்த பொருள்வகையில் சிவன் விஷ்ணு முதலிய தெய்வங்களும், பூத பைசாசங்களும் உட்படும். இயற்கையில் அடங்கிய பொருள்வகையில் சூரியன் சந்திரன் முதலிய தெய்வமாகக்கருதும் இயற்கைப் பொருளும், விலங்குகள் பறவைகள் முதலிய உயிருள்ளனவும், மலை மரம் முதலிய உயிரில்லனவும், காலதேச வர்த்தமானமும், மக்களினமும் அமையும். மக்களினத்தில் உருவம்பற்றியும் மனம்பற்றியும் வர்ணனைகள் நிகழலாம். காலதேசவர்த்தமானமும் வர்ணனைப்பொருள்களே யென்று 'மலை கடல் நாடு வளநகர் பருவம்' எனப் பெருங் காப்பியத்தின் இயல்பைக்கூறும் தண்டியலங்காரமும் உணர்த்தும்.

எப்பொருள்பற்றிநிகழ்ந்தாலும், வர்ணனை அப்பொருளை வியக்தமாய் வரையறைப்படுத்தி உணர்த்துவதற்கும், அதனைச் சித்திரித்து மனத்தில் நிறுத்துவதற்கும்

உதவுதல்வேண்டும்: இங்ஙனம் செய்தற்குரிய பலவகைச் சூழ்நிலைகளையும் ஆசிரியன் அமைத்தல் இன்றியமையாதது. காலம், இடம், வடிவு, நிறம், மனநிலை, இங்கிதம், இயக்கம், செய்கை முதலியவற்றால் இச் சூழ்நிலை அமையும்.

இனி, வர்ணனைப்பொருள்களை நோக்குவோம். இவற்றுள், இயற்கையைக் கடந்த பொருள்களாகிய தெய்வம், பூத பைசாசம் முதலியவற்றை வர்ணிப்பதில், மரபு ஒரு முக்கியவிஷயமாக அமைந்துவிடுகிறது. ஒரு தலைவன் ஒரு தலைவியை ஒரு சோலையிலே எதிர்ப்படுகிறான். தலைவி அழகிலே மிகச் சிறந்துவிளங்குபவள். அவள் தெய்வப்பிறப்பினளோ மானுடப்பிறப்பினளோ என்று தலைமகன் ஐயுறுகிறான். பின்னர்த் தெய்வமாயின் இன்னின்ன இயல்புகள் இருத்தல்வேண்டும்; அவை இல்லாமையால் மக்களினத்தாளே என்று துணிகிறான். இங்கே தெய்வவர்ணனையிலே சில மரபுகளைத் தொல்காப்பியர் தந்துள்ளார். அவை சூடிய பூவில் வண்டு மொய்த்தல், கண் இமைத்தல், அஞ்சுதல் முதலியவை. கால் நிலந்தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் முதலியவற்றையும் உரைகாரர் சேர்த்துக்கூறுவர். இது தெய்வப் பிறப்பிற்குரிய பொதுவியல்பு. இவ்வியல்புகள் கோவைப் பிரபந்தங்கள் அனைத்திலும் புகுந்து, அவை மரபுவழிப் பட்டன என்பதை உணர்த்துகின்றன.

இனி, தெய்வகணத்தினரை நோக்குவோம். உதாரணம்: கந்தர்வர்கள். இவர்கள் ஆணும் பெண்ணுமாக இருவர் இருவராய்த் திரிவரென்றும், எப்பொழுதும் வீணையைத் தரித்திருப்பரென்றும், இவர்களுள் ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல்வசமாய்க் கலந்து கூடுவரென்றும் கூறுதல் மரபு. இம் மரபுகளைக்கொண்டே தொல்காப்பியர் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே' என்றனர். சங்ககாலத்துச் செய்யுளிற் காணும்

இயற்கைக் காதல்நிகழ்ச்சிகளைக் கந்தர்வமணத்தோடு இயைத்துப் பின் அவர்களுக்குரிய மரபுகளைக்கொண்டு அக் காதற்செய்யுட்களை விளக்க முற்பட்டு அவற்றைச் செயற்கைமயமாய் நெறிப்படுத்தினர் சில ஆசிரியர்கள். இவ்வாறு முதன்முதற் செய்தவர்களுள் ஒருவர் தொல்காப்பியர்.

இனி, தெய்வங்களைத் தனித்தனி நோக்குவோம். இத்தெய்வங்களை வர்ணிக்கும்பொழுதும், மரபுபற்றிச் சில விவரங்கள் தருதல் வழக்கமாயிற்று. உதாரணமாக, சரஸ்வதிதேவியை அவள் வெள்ளைவஸ்திரம் தரித்து, ஒள்ளிய ஆபரணங்களையணிந்து, கையில் வீணை, புஸ்தகம் முதலியவற்றைத் தாங்கி, வெள்ளைத் தாமரையில் அமர்ந்திருப்பதாக வர்ணிப்பது மரபு. இங்ஙனமே ஒவ்வொரு தெய்வத்தைப்பற்றியும் வர்ணனைகள் மரபு தவருமல் இலக்கியங்களில் வருகின்றன.

தெய்வங்கள்போலவே இயற்கையைக் கடந்த பிற பொருள்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும். அரக்கர்கள் வக்ரதந்தம், செங்கண், செம்பட்டைமயிர் முதலியன உடையராய்க் கொடிய இயல்புகொண்டவராய் வர்ணிக்கப்படுவார்கள். இவ்வாறே சுவர்க்கம், நரகம் முதலிய கற்பனைப் பிரதேசங்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும்.

இயற்கையில் அடங்கிய பொருள்களை ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ளனவாகக்கொண்டு வர்ணிப்பர். தொல்காப்பியர் இப் பாகுபாட்டினைத் தந்துள்ளார். புல்லும் மரமும் ஓரறிவின. நந்து ஈரறிவுயிர். சிதல் எறும்பு மூவறிவின. நண்டு தும்பி நாலறிவின. விலங்கும் பறவைகளும் ஐயறிவின. மக்கள் ஆறறிவினர். இம் மரபிற் பிழையாமல் வர்ணனைகள் நிகழவேண்டுமென்பது தொல்காப்பியர் கருத்து.

மரபுபற்றி நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டுவது மக்களினமாம். நமது தேசத்தில் மக்களை நாற்பெருஞ் சாதிகளாகப் பண்டைக்காலத்தவர் வகுத்தனர். ஒவ்வொரு சாதியாருக்கும் சிற்சில இயல்புகள் சிறப்பாக உரியன என்று கொண்டார்கள். இவ்வியல்புகளிற் பிறழாமல் மக்கள்-வகுப்பினரை வருணித்தலே மரபு. அந்தணர், பூணூல் கரகம் முதலியவை உடையரென்றும், அரசர் செங்கோல், குடை, முரசு, கிரீடம் முதலியவை உடையரென்றும், வைசியர் வாணிகம் செய்பவரென்றும், வேளாளர் உழுதொழில் செய்பவரென்றும் தொல்காப்பியர் மரபு வகுத்துள்ளார். இவர் விதித்துள்ளபடியே மரபுகளைப் பிற்காலத்தவர்களிற் பெரும்பாலோர் வழங்குவர்.

சாதி இங்ஙனமாக, மக்களுள் ஆண்பாலரிற் சிறந்தார் பெருமையும் அறிவாற்றலும் உடையரென வருணிப்பது மரபு; பெண்பாலரிற் சிறந்தார் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் உடையரென வருணித்தல் மரபு. தொல்காப்பியரே இம்மரபினைத் தமது நூலிற் குறித்துள்ளார்.

பெண்பாலர்பற்றிய வர்ணனை தமிழிலக்கியத்தில் மிக அதிகமாகப் பயின்றுவருகிறது. உலாப்பிரபந்தங்களில் இவ்வர்ணனைகள் விரிவாக முதன்முதலில் வந்தனபோலும். சேரமான்பெருமானது ஆதியுலா உதாரணம். பின்பு காவியங்களிலும், விறலிவிடுதூது முதலிய பிரபந்தவகைகளிலும் வழங்கத் தலைப்பட்டன. இவற்றுள்ளும் உறுப்பு வர்ணனை முறையாயன்றிக் கவிஞனது மனோபாவனை சென்றபடி நிகழ்ந்தது. பிற்பட்ட நூல்கள் ஒரு மரபினை மேற்கொண்டு உறுப்புக்களனைத்தையும் முறையே வருணித்தன. சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில் விசயமாதேவியின் வர்ணனை இங்கே குறிப்பிடத்தக்கது. இராமாயணத்திற்கூட இம்முறைபற்றிய வர்ணனையைக் காணலாம். நாடவிட்ட படலத்தில் இராமன் அனுமா

னுக்குச் சீதையை அடிமுதல் முடிவரை வர்ணித்துக்கூறும் பகுதியே உதாரணமாகும். மிகப் பிற்பட்ட காலத்தில் இவ்வாறு அடிமுதல் முடிவரையும், முடிமுதல் அடிவரையும் வர்ணிக்கும் தனிப் பிரபந்தங்களே தோன்றிவிட்டன. இவற்றை முறையே பாதாதிகேசமெனவும், கேசாதிபாதமெனவும் பெயரிட்டு ஆசிரியர்கள் வழங்கினர். பதின்மூன்றும் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப்பாட்டியலில் இரண்டு பிரபந்தங்களும் விளக்கப்பட்டுள்ளன. இம் மரபு தற்காலத்தில் ஒழிந்துவிட்டது. இதை ஒரு பெரிய நன்மையென்றே சொல்லவேண்டும்.

உறுப்புப்பற்றிய வர்ணனை இவ்வாறாக, மனம்பற்றிய வர்ணனையை இனிக் கவனிப்போம்.

மனநிகழ்ச்சிகளை அவற்றிற்குரிய சொற்களாலேயே வர்ணித்தல் முதலாவது கூறத்தக்கது. மதுரைக்காஞ்சியில் அறங்கூறும் அவையத்தைப்பற்றி,

> அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
> செற்றமும் உவகையும் செய்யாது காத்து

என வருகின்றது. இங்கே மனநிகழ்ச்சிகள் அவற்றிற்குரிய சொற்களாலேயே கூறப்படுதல் காணலாம்.

இரண்டாவது: மனநிகழ்ச்சிகளை அவற்றின் குறியாகச் சரீரத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளால் வர்ணித்தல். பேகனது மலையைப் பாடினவிடத்து அவன்மனைவியாகிய கண்ணகி வருந்திக் கண்ணீர்விட்டு விம்மி அழுதாள் என்று சொல்லப்படுகின்றது. கண்ணீர்விடுதல் முதலியன மெய்ப்பாடுகளாகும். இம் மெய்ப்பாடுகளாற் கண்ணகியினது துன்பநிலை உணர்த்தப்படுகிறது. மெய்ப்பாடுகள்பற்றிப் பல நாடக மரபுகள் பண்டை யுரைகளில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. இலக்கிய ஆசிரியர்கள், மரபுவழிப்பட்ட இம்மெய்ப்பாடுகளின் மூலமாய்,

மன நிகழ்ச்சிகளை உணர்த்தி வந்தனர். ஆனால் இவ்வகை மெய்ப்பாடுகளில் மனநிகழ்ச்சிகள் அனைத்தும் அமைந்து விடுமென்று நினைத்தல் தவறாகும்.

மூன்றாவது : மனநிகழ்ச்சிக்குக் காரணமானவற்றைக் கூறுதலால் அந்நிகழ்ச்சிகளை வர்ணித்தல். அதிகமான் நெடுமானஞ்சி இறந்தபொழுது, அவன் தமக்குச்செய்துவந்த அன்புச்செயல்களை நினைந்து நினைந்து ஔவையார் வருந்துகிறார். துன்பமாகிய மன நிகழ்ச்சியை மிகுதிப்படுத்தும் அன்புச் செயல்களின்மூலமாய் அந் நிகழ்ச்சி உணர்த்தப் படுகிறது.

நான்காவது : மனநிகழ்ச்சியின்விளைவாகக் கதருப்படுவனவற்றின் மூலமாய் அந்நிகழ்ச்சியை வர்ணித்தல். ஒல்லையூர்ச் சாத்தன் மாய்ந்தபின் அவன்பொருட்டு இரங்கிப்பாடும் புலவர் ஒரு சில விளைவுகள் நிகழலாமென்று தமது மனத்துன்பத்தால் கருதுகிறார். இவ்விளைவின்மூலமாக மனநிகழ்ச்சியை வர்ணித்து 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என இரங்குகிறார்.

ஐந்தாவது : இயற்கையே மனநிலைக்கு ஒத்துநிகழ்வது போலக்கூறி மனநிலையை உணர்த்தல். இது கவித்வ இயல்புகள் சிறந்து வளர்ந்த பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததெனவே கொள்ளுதல்வேண்டும். சிலப்பதிகாரத்தில் துன்பமாலையில் கண்ணகி,

பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி :
காய்கதிர்ச் செல்வனே ! கள்வனோ என்கணவன் ?

என்று சூரியனை வினவ,

கள்வனோ! அல்லன் ; கருங்கயற்கண் மாதராய் !
ஒள்ளெரி யுண்ணும்இவ் வூரென்ற தொருகுரல்

இராமாயணத்தில் வஞ்சகக்கருத்தோடு இராவணன் முனிவேடங்கொண்டு சிதையிருக்கும் பர்ணசாலையில் வந்து இருந்தபொழுது,

நடுங்கின மலைகளும் மரனும் ; நாஅவிந்து
அடங்கின பறவையும் ; விலங்கும் அஞ்சின ;
படங்குறைந் தொதுங்கின பாம்பும் ; பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணும் கண்ணினே

என்று இயற்கை பரிதபிக்கின்றது. இவை மரபிற்குத் தக்க உதாரணங்களாம்.

இவைபோன்ற வர்ணனை-மரபுகள் தமிழிலக்கியத்திலே பல உள்ளன. சில மரபுகள் ஒழிக்கத்தக்கன. புது மரபுகள் அமைத்துக்கொள்ளற்பாலன. இந்நெறியிலே தமிழிலக்கிய ஆசிரியர்கள் முயலவேண்டுவது அவசியமாகும்.

காப்பிய உவமை

காப்பியமாவது யாது? கவிஞன் இயற்றிய கவிதை நூல்களை எல்லாம் நாம் காப்பியம் என்று சொல்வதில்லை. குறிப்பிட்ட ஒரு செய்யுளிலக்கிய வகையையே காப்பியம் என்கிறோம். உதாரணமாக, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலியன காப்பியங்கள்.

உவமை என்பது யாது? ஒரு பொருளை வேறொன்றி னோடு ஏதேனும் ஒரு வகையில் ஒப்பிட்டுக் கூறுவதுதான் உவமை. பொன்போல் மேனி (நற்றிணை 324) என்பதில் மேனியைப் பொன்னோடு ஒப்பிடுதல் உதாரணமாம்.

இவ்வுவமையைக் குறித்து நம் பண்டை ஆசிரியர்களுள் தொல்காப்பியர் ஓர் இயல் தனிப்பட அமைத்திருக்கிறார். இவர் கூறிய உவமையியல்புகள் அதன் அடிப்படையான உண்மைகளை நன்றாகப் பாகுபடுத்தி உணர்த்துகின்றன. இந்த இயல்புகள் காப்பியங்கள் உள்பட எல்லாக் கவிதை களிலும் காணப்படுவனவே-எனினும் இவைகள் சங்கச் செய்யுட்களில் மிகத் தெளிவாக விளங்குகின்றன. அக்காலத்துப் புலவர்களது உள்ளம் அதியுக்தியால் மலினமடையவில்லை. ஆகவே, இயற்கைப் பொருள்களை நேரிற்கண்டு அநுபவித்துத் தம் கவிதைகளில் அமைத் தனர்.

சில இடங்களில் சாதாரண இயற்கைப் பொருளை மற்றொரு சாதாரண இயற்கைப் பொருளோடு ஒப்பிட் டனர். மழை நீரால் மாசு நீங்கத் தூயதாய்க் கிடக்கும் பாறை 'மாசறக் கழீஇய யானைபோல' (குறுந்-13) உள்ளதாம்.

வேறு சில இடங்களில் சாதாரண இயற்கைக் காட்சியால் அரிய உண்மை விளக்கப்படுகிறது. சிறிய

மரக்கிளையிலே பெரிய பழங்கள் தொங்கிக் கிடப்பது நாம் தினசரி அனுபவத்தில் காண்பதே. இக்காட்சியைப் போல, தலைவியின் உயிரானது மிகச் சிறியதாம்; அதனிடத்திலே முதிர்ந்து பழுத்துத் தொங்கும் காதற் கனியானது தாங்க முடியாத பாரத்தையுடையதாய்ப் பெரிதாயுள்ளதாம்.

மற்றும் சில இடங்களில் சாதாரணமாய்க் கவனிக்கப் படாத இயற்கையைப் புலவர்கள் கூர்ந்து அறிந்து தம் கவிதைகளில் அமைத்துள்ளார்கள். உதாரணமாக, நீர் முள்ளியின் முள் அணிலின் பல்லை ஒத்துள்ளதென்று கூறப்படுகிறது (குறுந்-49).

இன்னும் சில இடங்களில் உவமானமும் உவமேயமும் பலரும் கண்டுள்ள பொருள்களே யாயினும், ஒப்புமை காணுதற்கு அரியதாயிருக்கும். மனத்தேயுள்ள உணர்ச்சி யொற்றுமையால் புலவர்கள் ஒப்புமையைக் கற்பித் துள்ளார்கள். 'வஞ்சியன்ன என் நலந்தந்து சென்மே' (அகம்-396) என்பது உதாரணம்.

'நீ கவர்ந்து கொண்ட எனது அழகு வஞ்சிமாநகரின் பேரழகு போன்றது. அதனை எனக்கு மீண்டும் தந்து விட்டுப் பின் செல்வாயாக' என்பது பொருள்.

பூவுலகத்துப் பொருள்களையேயன்றி, யாவர்க்கும் விளங்கி விண்ணுலகத்தில் தோன்றும் பொருளும் உவமத் திற்கு உரியதாகவே இப்புலவர்களால் கொள்ளப் பட்டது.

'அரசே, உனது பகைவர்க்குச் சூரியனைப் போலக் காய்ந்து தகித்தும், உனது நிழலில் வாழும் எங்கள் போல் வாருக்குச் சந்திரனைப்போலக் குளிர்ந்தும் நீ உள்ளாய்!' என்னும் கருத்துப்பட வரும் செய்யுள் உதாரணமாம்.

இங்கே கூறியன கவிஞனது நேரடியான அனுபவத் தினின்றும் பிறந்தன. இங்ஙனம் பிறவாது மரபு வழிப்

பட்ட உவமைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. 'குவளை யுண்கண்' (அகம் 138, நற்-77), 'முத்தேர் வெண்பல்' (ஐங்குறு-380) என்பவை உதாரணங்கள்.

அனுபவத்தில் உட்பட்ட பொருள்களேயன்றி கதைகளிற் கேட்கப்பட்ட பொருள்களையும் உவமாக எடுத்தாளுதலில் இச் சங்க காலத்துப் புலவர்கள் பின்வாங்கியதில்லை.

மேலே விவரித்த உவமை வகைகளை ஆண்ட முற்சங்க காலத்திற்குப்பின், உவமைகளின் இயல்பு சிறிது விரிவு பெறலாயிற்று. இதிகாசம் முதலியவற்றினின்று வரலாறுகளை உவமப் பொருள்களாகக் கொண்டு, ஒப்புமைக் குணங்களைத் தொடர்ந்துகூறி, உவமேயத்தை மனத்தில் பதிய வைப்பதற்குக் கவிஞர்கள் முயன்றார்கள். கலித்தொகையில் வேங்கை மரத்தின் அடி மூலத்தை மதயானை தன் கொம்புகளால் குத்திப் பெயர்க்க முயன்றதில், அதன் கொம்பு ஆழத்தில் பாய்ந்து மீண்டும் அதனால் எடுக்க முடியாத துன்ப நிலைக்கு, இராவணன் இமயமலையை அடியோடு பெயர்த்தெடுக்க எண்ணி, அம்மலையின் கீழாகப் புகவிட்ட கரங்களை மீண்டும் எடுக்க முயன்று வருந்தி நிற்கும் நிலை ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. இது போன்ற உவமைகள் பல. இங்குக் குறித்தது உத்தர காண்டத்திற்காணும் வரலாறு. இக்காண்டம் மிகப் பிற்பட்டதென்பது அனைவர்க்கும் ஒத்த முடிபு. இதன் கண்வரும் கதையைக் குறித்து முற்சங்க நூல்களில் யாதும் காண இயலாது. ஆகவே, கலித்தொகை பிற்சங்க காலத்தது என்பதற்கு இவ் உவமையும் ஒரு சான்றாம். பரிபாடலிலும் இவ்வகை உவமை விரிவுகள் பல பயின்று வருகின்றன.

இந் நிலையிலே நாம் காவிய உலகில் பிரவேசித்து விடுகிறோம். காவியம் என்ற அளவிலே கதை என்ற

நூற்பொருளும், கலையுணர்ச்சி என்ற கதையை நிகழ்த்தும் அழகு நெறியும் மேம்பட்டு விடுகின்றன. இதனால் பௌராணிக உவமையை அமைக்கும் பொழுது இடத்திற்குத் தக்கபடி சுருக்கிக் கூறவேண்டும் அவசியம் ஏற்பட்டது. உதயணன் பெருங்கதையில் (உஞ்சை-53,14-17) மலையினின்றும் சிவபிரான் உமையோடு பூமியில் இழிந்தது போல என்பது ஓர் உவமை. பௌராணிக உவமையைச் சுருக்கிய போதிலும், பல உவமைகள் தொடர்ந்து நிகழ்தலை இக்காவியக் கவிஞரும் விரும்பினர். ஓர் இடத்து யானை விழும்போது நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தொடர்ந்து வர்ணனை தரப்படுகிறது. உவமான உவமேயங் கட்குரிய ஒப்புமைக் குணங்களைப் பலபட விரித்துக் கூறுதலும் முற்பட்ட காவியங்களில் காணப்படுகின்றது. பெருங்கதையில் ஓரிடத்து, தூண்டிலிட்டு மீன் பிடிக்கும் செயல் விவரங்களுடன் உவமையாகத் தொடர்ந்து அமைந்துள்ளது. தனித்தனி உவமைகளை அடுக்கிக் கூறுதலும் பெருங்கதையிற் காணலாம்.

இக்காவியத்திற்குப் பிற்பட வந்தது சிலப்பதிகாரம். இப்பெரு நூலின் ஆசிரியரான இளங்கோவடிகள் பெருங்கதை ஆசிரியரைக் காட்டிலும் சிறந்த கவிஞர். இவ் அழகிய காவியத்தில் உவமைகள் மிக்க அழகு பெறு கின்றன. பௌராணிக உவமைகள் ஒவ்வொன்றும் உள்ளத்தைக் கனிவிக்கும் அழகிய சித்திரமாக அமைந்து அவற்றின் நலன்களைப் பன்மடங்கு மிகுதிப்படச் செய்கிறது. உவமேயங்களின் நலன்கள் மனோபாவனையால் அழகு கனிந்து துளும்புகின்றன.

குழவித் திங்கள் இமையவ ரேத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்

முதலிய அடிகளில் பௌராணிகச் செய்தி சித்திரிக்கப் பட்டு ஒப்புமைப் பொருளாகிறது.

'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!'

முதலிய அடிகளில் காதல் உவமையாகக் கனிந்துவிடுகிறது. இவ் அடிகளிற் கண்டவைகளை முறையே 'புகழ் உவமை' யெனவும், 'தெரிதருதேற்ற உவமை' யெனவும் அடியார்க்கு நல்லார் தமது உரையில் குறித்தனர். இக்காப்பியத்திற் காணும் உருவகத்திலும் அழகும் இனிமையும் ஒன்றோ டொன்று போட்டியிடுவதைக் காணலாம்.

இதில் வரும் உவமைகள் பெருங்கதையிற் காட்டிலும் மிக விரிவாக வர்ணிக்கப்படுகின்றன.

காதலனை மாலைப் பொழுதில் பிரிந்தவர்கள் படுந் துன்பத்தைக் கூற வந்த ஆசிரியர், மாலைக் காலத்தையும், துன்ப நிலையையும் முறையே உருவகத்தாலும் உவமை யாலும் வர்ணித்துத் தனிப்பட்ட சித்திரமாக அமைத்து விடுகின்றார். உவமையை மாட்டிவைத்தற் குரிய ஒரு முளையாணியாகத்தான் காதலனைப் பிரிந்த துன்பச் செய்தி உதவுகிறது. இவ்வாறு, அழகான உவமையை விரித்துக் கூறுதலே பிரதான நோக்கமாய்க் கதை நிகழ்ச்சியி னிடையே அமைந்தால், அவ் உவமையை இதிகாசவுவமை (Epic Simile) என்று மேனாட்டு அறிஞர்கள் தனிப்படச் சிறப்பித்துக் கூறுவார்கள்.

சிலப்பதிகாரத்திற்குச் சுமார் ஒரு நாற்றாண்டுக்குப் பிற்பட்டு, 9-ம் நூற்றாண்டளவில் காவியங்களை விருத்தத் தில் பாடும் வழக்கம் நிலைபெற்றுவிட்டது. சிந்தாமணிக் காவியம் இவ்வாறு விருத்தத்தால் இயன்றது. இவ்வகைச் செய்யுள் நான்கு அடிகள் கொண்டது. சில விருத்தங்கள் மிகச் சிறியவை. இக்காரணங்களால் உவமைகளை விரிவாக அமைத்தல் இயலாததாயிற்று. மிகச் சிறிய வடிவில் உவமையைக் கூறவேண்டும் அவசியமும் ஏற்பட்டது.

'மாரி மொக்குளின் மாய்ந்து' என்பது போன்ற உவமைகளைப் பல இடங்களிலும் காணலாம். விருத்தங்களில் எதுகை மோனை முதலிய கட்டுப்பாடுகள் மிக இருந்தமையால், உவமைகள் சில இடங்களில் மோனையில் அமைந்து அடிகளை நிரப்பியும், சில இடங்களில் எதுகையில் அமைந்து பொருளை மயக்குறுத்தியும் வந்தன.

இவ்விளைவுகள் இக்காவியம் கையாண்ட விருத்தங்களின் இயல்பினால் தோன்றின. இங்ஙன மன்றி, இதன் ஆசிரியரது ஆற்றல் வகையினாலும், இவர் மேற்கொண்ட நியதிகளாலும் நேர்ந்த விளைவுகள் வேறு சிலவும் உள. அலங்கார நடையையே இவர் தமது காப்பியத்தில் அமைத்துள்ளார். இதனால் இவரது உவமைகள் இயற்கையில் அமைந்தனவல்ல; செயற்கைத் தன்மை இவற்றில் பெரிதும் காணப்படுகின்றது. உள்ளத்துணர்ச்சியின் மேலீட்டினால் பிறவாதபடி உவமைகள் வலிந்து அமைக்கப்படுகின்றன.

மேலும் இவரது உவமைகளில் இவரது முந்துநூற் கல்வி புலப்பட்டுக்கொண்டே இருக்கிறது. முன்னோர் மொழிகளைப் பொன்னே போல் போற்றுதலில் இவர் பெரிதும் ஈடுபட்டவர். அன்றியும் மரபு வழிப்பட்ட உவமைகளை இவர் அடிக்கடி எடுத்தாளுகிறார். இன்னும், இவர் பலதிறப்பட்ட உவமைகளையும் அடிக்கடி கையாளுகின்றார். நாற்றைப் பரக்க நட்டால்தான் பயிர் நன்றாக விளையும்; நெருங்க நட்டால் பயிர் செழித்து வளர்வதில்லை. இது போலவே, உவமைகளை நெருக்கியமைத்தால் சுவை விளையமாட்டாது. ஒரு சில இடங்களில் உவமைகள் மிகை நடிப்பாகக் காட்சி தருகின்றன. 'பசு நிரைகளைக் கவர்ந்து சென்றமையால் ஆய்க்குலப் பெண்கள் வருத்த முற்றனர்' என்ற செய்தியைக் கூறுமிடத்து இது காணப்படுகிறது. உவமையைப் பலபட விரித்துக் கூறுதலும் இக்காப்பியம் கைக்கொண்ட ஒரு முறையே. ஆனால் அழகிய ஓர் மங்கையைக் கூறு கூறாக அங்கச் சேதம்

செய்து பரப்பி வைத்தது போன்ற உணர்ச்சியையே இவ் விரிவுகள் நம் மனத்தில் உண்டாக்குகின்றன. மிக்க நயம்பட இவைகளை அமைத்த இடங்களையும் அங்கங்கே காணலாம்.

இறுதியாக, இப்பெருங் கவிஞரது உவமைகள் பல இடங்களில் இழிந்த உணர்ச்சிகளை எழுப்புவனவாய், சுவை கெட அமைந்துள்ளன.

இவற்றையெல்லாம் நோக்கினுல், உவமையும் உருவகமும் பற்றிய அளவில், சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் சிந்தாமணி ஓர் உயர்ந்த படியை யெய்தாது, தாழ்ந்த படியில் விழுந்துவிட்டது என்றுதான் நாம் துணிதல் வேண்டும்.

சிந்தாமணி தோன்றிய இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பின், கம்பன் பிறந்து, தான் காவிய நலன்களின் சிகரத்தை எய்தியது போலவே, உவமை நலன்களின் சிகரத்தையும் எய்திவிட்டான். இவனது உவமை நலன்களை இனி நோக்குவோம்.

உவமேயத்தின் சிறப்புக்களை விளக்குதலே உவமையின் அடிப்பட்ட கருத்தாகும். ஆனுல், கவிஞர்கள் இவ்வாறு விளக்குதலோடு மட்டும் நின்றுவிடவில்லை. இவர்களுடைய வழக்காற்றில் பற்பல புதுக் கருத்துக்களையும் உவமை பற்றி மேற்கொண்டனர். இவ் வழக்காறுகள் இவர்கள் இயற்றியுள்ள கவிதைகளிலிருந்து தான் தெரிந்துகொள்ளக் கூடியன.

முதலாவது, உவமானம் உவமேயத்திற்குத் தகுதியுடையதாக இருத்தல் வேண்டும். ஒரு பொருளுக்குப் பல உவமானங்கள் கையாளப்படுமாயின், அவற்றுள் ஒவ்வொன்றும் அப்பொருளுக்குப் பொருந்தியிருத்தலோடு, அவைகள் தம்மிலும் ஒரு தகுதிச் சேர்க்கை இருத்தல்

வேண்டும். அன்றியும் காவியத்தில் மற்ற இடங்களில் அமைந்து கிடக்கும் அப்பொருளின் இயல்புடன் உவமானம் நன்கு பொருத்தமுறுதலும் வேண்டும். உதாரணமாக, இராமன் என்ற உவமேயப் பொருளை எடுத்துக் கொள்வோம். இவனது இயல்பு கம்பனது இராமாயணத்தில் பல இடங்களிலும் வெளியாகின்றது. அவ்வாறு வெளியாகும் இயல்பிற்குத் தக்கபடியே உவமானமும் அமைதல் வேண்டும். இராமன் அனைவருக்கும் உயிர் போன்றவன். இக்கருத்திற்கு இயையவே, இராமனைப் பற்றிய உவமைகளைக் கம்பன் பல இடங்களில் வழங்குகிருன்.

இரண்டாவதாக, உவமைகள் உள்ளத்தின் உணர்ச்சியில் ஊறி வெளிவருதல் வேண்டும்; அப்பொழுதுதான் உவமேயக் காட்சியை அழகுறுத்தி, அதற்கு அனுகூலமான அடி நிலமாக அமைந்து நிற்கும். இவ்வாறு உணர்ச்சியில் ஊறிவந்த உவமானங்களைக் கம்பனது பெருங் காவியத்தில் பல இடங்களில் காணலாம்.

மூன்ருவதாக, உண்மையை நன்கு முற்றும் தெரிதற்கே உவமைகள் கையாளப்படுதல் வேண்டும். இவ்வாறு தெரிதற்கு அனுகூலமாகவே உவமைகள் அமைதல் வேண்டும். ஓர் உவமையினுல் முழுதும் அறியக் கூடாதிருக்குமானுல், பல உவமைகளையும் அடுத்தடுத்து ஆண்டு, பொருளின் உண்மையியல்பை உயர்ந்த கவிஞர்கள் நமக்குத் தெரிவிப்பார்கள். இவ்வுவமைகள் அழகின் மீது அழகாய் அமைந்து, பெரியதோர் இன்பம் பயக்கும் இவ்வகை ஆட்சியும், அழகும் கம்பனது காவியத்தில் உள்ளன.

இங்ஙனமாகப் பல நியதிகளையும் கம்பன் தனது கவித்வ திருஷ்டியால் கண்டு தனது மகா காவியத்தில்

கையாண்டுள்ளான். இப்பெருங் கவிஞனது உவமைகளை மட்டும் தனிப்பட நாம் ஆராய்ந்தால், எத்தனையோ அரிய உண்மைகள் நமக்குப் புலப்படும். 'உவமை கவிதையின் அந்தராத்மா' என்று சொல்ல முடியாது. ஆனால் அவ் அந்தராத்மா இயங்கி உலவும் வளமிக்க சோலையாக அது கருதத் தக்கது. இச்சிறப்பு கம்பன் ஆளும் உவமைகளில் நன்கு விளங்குகிறது.

காலமுறைப்படி காவியங்களின் அட்டவணை

கி. பி. 500—600

தொல்காப்பியம்

கி. பி. 600—700

திருக்குறள், மகாபாரதம் (சின்னமனூர்ச் சாசனம்)

கி. பி. 700—

இராமசரிதம் (யாப். வி.)
இராமசரிதம் (ஆசிரியமாலை, நச்.)
உதயணன் கதை—750

கி. பி. 800—

மணிமேகலை; சிலப்பதிகாரம்; இராமசரிதம் (திவாகரம்) பாரதம் (திவாகரம்)—850

கி. பி. 900—

தகடூர் யாத்திரை; சிந்தாமணி—930; சூளாமணி—950; குண்டலகேசி—;வளையாபதி—950

கி. பி. 1000—

நீலகேசித்தெருட்டு-1000; ராஜராஜ விஜயம்—1040; ராஜராஜேஸ்வர நாடகம்—வீரணுக்கவிஜயம் - குலோத்துங்க சோழன் சரிதை—1080; அஷ்டாதச புராணம்; கன்னிவனப்புராணம்; இராமாயண வெண்பா(வீரசோழியஉரை)

கி. பி. 1100—

பெரிய புராணம்—1140; கம்பராமாயணம்—1178

கி. பி. 1200—

புராணசாகரம்-1225 அருணிலை விசாகன் பாரதம்—1225
பாரத வெண்பா—1250

கி. பி. 1300—

மேரு மந்திர புராணம்—1380

கி. பி. 1400—

அரிச்சந்திர வெண்பா; நளவெண்பா; வில்லி பாரதம்; யசோதரகாவியம்

கி. பி. 1500—

அரிச்சந்திர புராணம்1446+78—1524

கந்தபுராணம் 700+825—1525
ரகுவம்சம்—பாகவதம் (வரத

ராஜ ஐயங்கார்) 1465+78—1543; சிதம்பர புராணம்—1430+78—1508; உபதேச காண்டம் (ஞானவரோதய பண்டாரம்); நைடதம்; குரு காமான்மியம்

இ. பி. 1600—

புரூரவ சரிதை, (அய்யம் பெருமாள் சிவந்த கவிராயர்) செந்தமிழ் தொகுதி 6 பக். 81, 82—1600

பிரபுலிங்க லீலை 1574+78—1652

பாகவதம் (செவ்வைச்சூடுவார்); சிறுப்புராணம்; வேம்பத்தூரார் திருவிளையாடல்

இ. பி. 1700—

பரஞ்சோதி திருவிளையாடல்—1700; மச்சபுராணம் 882+825—1707

நல்லாப்பிள்ளை பாரதம்—1725; தேம்பாவணி—1733; குற்றாலத்தல புராணம்—

இ. பி. 1800—

கலியுகப்பெருங்காவியம்—1800

இ. பி. 1900—

பக்தமான்மியம், கலி—5030—1928; புலவர் புராணம்; சாவித்திரி வெண்பா; நளாயினி வெண்பா—

ஆசிரியர் பெயர் அகராதி

நூற்பெயர் அகராதி